36211

# இலக்கிய வகை விளக்க அகராதி

முனைவர் கி.இராசா

பாரதிதாசன் பல்கலைக்கழக
முன்னைத் துணை வேந்தர்
'தமிழ்த்திரு' முனைவர் ச. முத்துக்குமரனார்
அவர்களுக்கு
மிகுந்த அன்போடு

12/3/08

# இலக்கிய வகை விளக்க அகராதி

முனைவர் கி. இராசா
தமிழ்ப்பேராசிரியர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பார்த்திபன் பதிப்பகம்
திருச்சிராப்பள்ளி
2007

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title | : | Ilakkiya Vakai Vilakka Akarathi<br>(Descriptive Dictionary of Tamil Genr'es) |
| Author | : | K. RAJA, Ph.D.,<br>Professor of Tamil,<br>Bharathidasan University,<br>Tiruchirapalli-620 024.<br>kraja_bdu@gmail.com |
| Copyright | : | S.Rajeswari Raja |
| Year of Publication | : | December 2007 |
| Edition | : | First |
| Language | : | Tamil |
| Price | : | Rs.150/- |
| Paper | : | 18.6 N.S. Maplitho |
| Size | : | 1/8 Demy |
| Pages | : | 224 |
| Publisher | : | Parthibban Pathippagam,<br>A-12, LIC Colony,<br>Tiruchirapalli-620 021. |
| Printed by | : | Printech India,<br>Chennai-5. |

# இலக்கியவகை விளக்கஅகராதி
## - சில விளக்கங்கள்

### இலக்கிய வகை என்றால் என்ன?

ஓரினச்சாயல் கொண்ட இலக்கியத் தொகுதிகளே 'இலக்கிய வகைகள்' என்றழைக்கப்படுகின்றன. இரண்டு, மூன்று தலைமுறைகட்கு முந்தைய மூதாதையரின் சாயலும், பழக்க வழக்கமும், உடல் உறுப்பு அமைப்புகளும், அங்க அடையாளங்களும் பின்வரும் சந்ததியினரிடம் படிவதுண்டு. அப்படிப்பட்டோரை 'இவர் இன்ன பரம்பரையைச் சார்ந்தவர்' என்றோ, 'இன்ன குடிவழித் தோன்றியவர்' என்றோ அடையாளம் காண்கிறோம். இவ்வாறு ஓர் இலக்கியத்தை, அதன் பாடுபொருளும், பாவடிவமும், பாடுமுறையும், கருத்தலகு அமைப்புகளும் நோக்கி அது 'இன்ன வகையைச் சார்ந்தது' என்று அடையாளம் காணவியலும். இவ்வாறு அடையாளப் படுத்துவதன் வாயிலாக அவ்விலக்கியத்தினுள் நுழையாமலேயே அதன் 'நோக்கும் போக்கும்' இன்னவாறு அமைந்திருக்கும் என்று நம்மால் ஊகித்தறிய இயலும். 'பிள்ளைத் தமிழ்' என்று சொன்ன அளவில் அதன் இலக்கியப் போக்கு என்னவாறு இருக்கும் என்பதை நம்மால் ஊகித்திட இயலும். இதேபோன்று ஆற்றுப்படை, பரணி போன்ற பல இலக்கியவகைகளின் பெயர்களைக் கேள்விப்பட்ட அளவிலேயே அவற்றின் பாடுபொருளையும், பாடல் முறையையும் உணர்ந்து கொள்கிறோம்.

இத்தகைய எதிர்பார்ப்புக்களோடு அந்தந்த இலக்கியத்தை வாசகன் அணுகிப் பார்க்கும் போது, 'மரபோடு கலந்து மிடைந்த புதுமையை' அவன் உணர்ந்து மகிழ்கிறான். இது இலக்கிய வளர்ச்சிக்கு இட்ட இயற்கை உரமாக அமைகிறது. இதனால் இலக்கியம் தொடர்ந்த வாழ்வைப் பெறுகிறது. இதுவே இலக்கிய வகையின் பண்பும் பயனும் ஆகும்.

### 'பிரபந்தம்' என அழைக்கலாமா?

'செம்மையாகச் செய்யப்பட்ட நூல்' எனப் பொருள்படுமாறு இயற்றப்பட்ட தனித்தனி இலக்கியங்கள், வடமொழிச் சார்பு மிகுந்த

பிற்காலத்தில் 'பிரபந்தங்கள்' என்று அழைக்கப்பட்டன. 'பந்தம்' என்பது 'கயிறு', 'கட்டு', 'உறவு' எனப் பொருள்படுவதாகும். வீட்டின் முன் கட்டப்படுவதைப் 'பந்தல்' என்பதும், நூல்களால் உருண்டையாகக் கட்டப்படுவதைப் 'பந்து' என்று அழைப்பதும் அறிக. 'ப்ர' என்பது 'செம்மை' எனப் பொருள்படும் வடமொழி முன்னொட்டாகும். இவ்வாறு 'ப்ர', 'பந்தம்' ஆகிய சொற்கள் இணைந்து 'பிரபந்தம்' என்ற சொல் உருவானது.

பிரபந்தம் என்ற சொல்லாட்சி முதன்முதலில் சிலப்பதிகார அரும்பத உரையிலும், அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகிறது. 'பதினோராடலும் பாட்டும் கொட்டும்' (சிலப்.அரங். 16) எனும் தொடரில் இடம்பெறும் 'பாட்டு' எனும் சொல்லிற்கு 'கந்த முதலாகப் பிரபந்தம் ஈறாக 28 உரு' என்று அரும்பத உரைகாரர் பொருள் சொல்கிறார். அடியார்க்கு நல்லார் 'அக நாடகங்கட்கும் புற நாடகங்கட்கும் உரிய உருக்கள்' என்று உரை எழுதியுள்ளார். இவ்வுரையை அவர் மேலும் விரித்து, 'நாடக உருக்கள்' 'கந்த முதலாகப் பிரபந்த மீறாகவுள்ள இருபத்தெட்டும்' என்றும், 'கந்தம் என்பது அடிவரையறையுடைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது; பிரபந்தம் அடிவரையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது' என்றும் விளக்கம் தந்துள்ளார். இதனால் அடிவரையறை உள்ளன; அடிவரை இல்லாதன என்று பாட்டிலக்கியத்தை இரண்டாக வகைப் படுத்தும் நிலை அடியார்க்குநல்லார் காலத்திலேயே அரும்பிவிட்டதை அறியலாம்.

ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்கள், அவை தொகுக்கப்படுவதற்கு முன்னர் 'பெரியாழ்வார் திருமொழி', 'நாச்சியார் திருமொழி' 'பெருமாள் திருமொழி', 'திருவாய் மொழி' என்று தனித்தனிப் பெயரில் வழங்கப்பட்டு வந்தன. கி.பி.9ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாதமுனிகள், ஆழ்வார்களின் அருளிச் செயல்களான சற்றேறக் குறைய நான்காயிரம் பாசுரங்களைத் தேடிச் சேகரித்து 'நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்' என்ற ஒரு தொகுதியாக்கினார். இவர் போன்று 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நம்பியாண்டார் நம்பி, பதினோரு சிவனடியார்கள் பாடிய இலக்கியப் பாமாலைகளைத் தொகுத்துப் 'பிரபந்தமாலை' எனப் பெயரிட்டார். இப்பிரபந்தமாலை பின்னர் பதினோராம் திருமுறையாக வைத்தெண்ணப்பட்டது.

## 'சிற்றிலக்கியம்' என்றழைக்கலாமா?

'பிரபந்தங்கள்' என்பது வடசொல்லாகக் கருதப்படுவதால் அதனைச் 'சிற்றிலக்கியங்கள்' என்று தமிழ்ப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த வழக்கை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் இன்னாரென அறியக் கூடவில்லையென சிற்றிலக்கிய ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர். பிரபந்தங்கள் என்பதற்குப் பதிலியாகச் ' 'சிற்றிலக்கியங்கள்' என்ற சொல் வழக்கில் பின்பற்றப்பட்டாலும், இது பற்றிய ஐயங்களை அறிஞர்கள் தோற்றுவித்துள்ளனர். 'சிற்றிலக்கியம்' என்ற சொல், அது சுட்டும் இலக்கியங்களின் பொருண்மையை உள்ளபடி உணர்த்தாமல் நிற்பதே இதற்குக் காரணம் எனலாம். 'சிற்றிலக்கியம்' என்ற சொல்லாட்சி எவ்வாறு வழக்கிற்கு வந்திருக்கலாம் என்று அறிஞர்கள் சிந்தித்துரைத்துள்ளனர். 'காப்பியங்களைப் பேரிலக்கியங்கள் என்று கருதி, இதனால் பிரபந்தத்தைச் சிற்றிலக்கியம் என்று சொல்கின்ற மரபு புதிதாகப் படைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் 'இப்புதுச்சொல் அவ்வளவு பொருள் பொதிந்ததாக இல்லை' என்று பிரபந்தம் என்பதற்கு இணையாகச் சிற்றிலக்கியம் எனும் சொல்லாட்சியைத் தயக்கத்துடன் ஏற்றுக் கொள்கின்றனர். 'சிற்றிலக்கியம்' என்ற சொல் 'சிறுகதை' என்ற சொல்லை அடியொற்றி எழுந்ததாகலாம். பேரிலக்கியம் (காப்பியம்), சிற்றிலக்கியம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு இக்கால இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை இவற்றிற்கிடையே காணும் வேறுபாட்டைப் போன்றது என்று அளவின் அடிப்படையில் 'சிற்றிலக்கியம்' எனும் சொல் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கலாம் என்பார் முத்துச்சண்முகன் (நொண்டி நாடகம் - முன்னுரை).

'சிற்றிலக்கியம்' எனும் சொல்லின் பொருத்தப்பாடு குறித்து மேலும் சில ஐயங்கள் எழுகின்றன. அவற்றுள் முதலாவது, சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களைக் கூறும் பாட்டியல் நூல்கள், பேரிலக்கிய வகைகளாகக் கருதத்தகும் காப்பியம், புராணம், பெருங்காப்பியம் போன்ற இலக்கிய வகைகளுக்கும் இலக்கணங்களைக் கூறுகின்றன. இதனால் 'சிற்றிலக்கியங்கள்' என்ற பட்டியலில் காப்பியம், புராணம், பெருங்காப்பியம் என்பவையும் அடங்குகின்றன. இது பொருந்துமா?

சிற்றிலக்கியங்கள் என அழைக்கப்படுகின்ற பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள், உலா இலக்கியங்கள், அந்தாதி இலக்கியங்கள், தூது

இலக்கியங்கள் போன்றவை இலக்கியச் சுவையை அள்ளித் தருவதில் காப்பியங்களுக்கு இணையாகக் காணப்படுகின்றன. எனவே, அளவை மட்டுமே அடிப்படையாக வைத்து இவற்றைச் சிற்றிலக்கியம் எனலாமா?

சிற்றிலக்கியங்களாக இன்று சுட்டப்பெறும் பல இலக்கியங்களின் முதல் நூல்கள் பக்தி இலக்கியங்களாகவே அரும்பியுள்ளன. உலா (ஆதியுலா), கோவை (திருக்கோவையார்), பள்ளியெழுச்சி (திருப்பள்ளியெழுச்சி), தசாங்கம் (திருத்தசாங்கம்), அந்தாதி (அற்புதத்திருவந்தாதி), பதிகம் (மூத்த திருப்பதிகம்), சீட்டுக்கவி (திருமுகப் பாசுரம்), பல்லாண்டு (திருப்பல்லாண்டு) போன்று இன்னும் பல இலக்கிய வகைளுக்கு முதல் நூல்கள் பக்தி இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. இவ்வாறு பேரின்பப் பொருளைப் பெருமைபடப் பாடவகைசெய்த இலக்கியங்களைச் சிற்றிலக்கியங்கள் என்றழைப்பது தகுமா?

சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை 96 என்று இலக்கணங்கள் வரையறை செய்திருந்தாலும் இவற்றின் எண்ணிக்கை 150 என்றும், 300க்கு மேற்பட்டும் மிக விரிந்து செல்கின்றது என்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். 'பாட்டியல் நூல்களில் கூறப்படாத 35 சிற்றிலக்கியங்கள் பிற்காலத்து எழுந்துள்ளன' என்று நவநீதப்பாட்டியலுக்கு எழுதிய அரியதொரு ஆராய்ச்சியுரையில் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார் (ப.121). 'இலக்கியச் சான்றுகளுடன் 186 (41+145) வகைகளைத் தெளிவாகச் சுட்ட இயலும்' என்று முத்துச்சண்முகன் கருதுகிறார். (சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.115-138). '300க்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் தமிழில் உள்ளன' என்று மு.சண்முகம் பிள்ளை (சிற்றிலக்கிய வளர்ச்சி, ப.4) கணக்கிடுகிறார். 'இத்தொகை 331 ஆக விரிகிறது' என்று ந.வீ.செயராமன் (சிற்றிலக்கியத் திறனாய்வு, பக்.163-165) சுட்டிக் காட்டுவார். இவையனைத்தையும் சிற்றிலக்கிய வகைகள் என்று எண்ணிக் கொண்டே சென்றால், இன்று வாழ்ந்து வருகின்ற நாவல், குறுநாவல், சிறுகதை, புதுக்கவிதை, ஹைகூ கவிதைகள், சென்ரியோ கவிதைகள், லிம்ரிக்கூ, வசன கவிதைகள், உரை வீச்சு, பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், கடித இலக்கியம், ஓரங்க நாடகம் போன்ற பல்வேறு இலக்கியங்களையும் சிற்றிலக்கிய வகைகளாகக் கருதுவது பொருத்தப்பாடு ஆகுமா?

### 'இலக்கிய வகை' எனலாமா?

'பிரபந்தம்', 'சிற்றிலக்கியம்' ஆகியவற்றுக்கு மாற்றாக 'இலக்கிய வகை' என்ற சொல் இன்று புழக்கத்திற்கு வந்துள்ளது. இச்சொல்லை முதன்முதலாகத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை ஆவார். 1943இல் சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நிலையத்தின் ஏட்டுப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு நவநீதப் பாட்டியலைப் பதிப்பித்த அவர், 'பாட்டியல் நூல்களில் கூறப்படும் இலக்கிய வகைளேயன்றி' என்று குறிப்பிட்டுள்ளார். 'சிற்றிலக்கியம்' என்ற பெயருக்கு இணையாக 'இலக்கிய வகை' என்று அவர் பெயர் சூட்டிய் பான்மையை இதன் வழி அறியலாம். 'தமிழ் இலக்கிய வகையும் வடிவும்' என்ற பெயரில் ச.வே. சுப்பிரமணியனார் பெருநூல் ஒன்றைத் தந்துள்ளார். சிற்றிலக்கியங்களைப் பற்றிய திறனாய்வு நூலொன்றைப் 'பாட்டியலும் இலக்கிய வகைகளும்' என்ற பெயரில் ந.வீ. செயராமன் வெளியிட்டுள்ளார். இலக்கிய வகைகளின் பட்டியலைத் தரும் இலக்கிய வகைக்கான முதல் அகராதி ஒன்றை புலவர் இரா.இளங்குமரனார் வழங்கியுள்ளார். இந்நிலையில் இன்று 'சிற்றிலக்கியம்' என்ற பெயர் வழக்கிழந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் 'தமிழ் இலக்கிய வகைகள்' என்ற பெயரில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன; ஆய்வுகளும் இலக்கியவகை நோக்கிலேயே நிகழ்த்தப்படுகின்றன.

இன்னொன்றையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இன்று இலக்கியங்கள் உலகப் பொது நோக்கில் அணுகப்படுகின்றன. இலக்கியங்களுக்கிடையே பொது உறவுகள் ஊடாடுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன. இந்நிலையில் 'பிரபந்தம்', 'சிற்றிலக்கியம்' என்ற சொற்களைக் காட்டிலும், உலகம் முழுவதும் எற்புடைய, ஒப்பிலக்கியப் பார்வையைத் தருகின்ற 'இலக்கிய வகைகள்' என்ற சொல் தற்கால இலக்கியச் சூழலுக்குப் பெரிதும் பொருந்துவது எனலாம். 'சிற்றிலக்கியம்' என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் 'பலபொருள் குறித்துப் பல இலக்கியங்கள்' தோன்றிய ஒருகாலகட்டத்தைச் 'சிற்றிலக்கியக் காலம்' என அடையாளப்படுத்துவதற்கு உதவும்.

### எந்த வகைப்பாடு ஏற்றது?

காலந்தோறும் இலக்கியங்கள் பலவாறு வகைப்படுத் தப்பட்டுள்ளன. வகைப்பாட்டின் நோக்கம் என்ன? சீர்மையும்

எளிமையும் தானே! ஆனால் இலக்கிய வகைப்பாட்டு முறைகள் பலவாறு பின்பற்றப்படுவதால் ‘இலக்கிய வகைப்பாடு குழப்பம் மிகுந்தது’ என்ற தவறான கருத்து உருவாகியுள்ளது. ஆனால் உண்மை அதுவன்று. வகைப்படுத்துவோரின் சிந்தனை விரிவு, வகைப்பாட்டில் வந்து படிகிறது. இவ்வகைப்பாட்டு முறைகளை ஒருங்கிணைத்து ஏற்புடையதொரு பொது வகைப்பாட்டு முறையை அறிமுகம் செய்தல் இன்றைய நிலையில் மிகவும் தேவைப்படுவதாகும். அதுபற்றிச் சிறிது காண்போம்.

பொருள் அடிப்படையிலான வகைப்பாடே மிகவும் பழமையானது என்று கருதப்படுகிறது, இதனோடு புறவடிவம், அமைப்பு முறை போன்றவற்றின் அடிப்படையில் ச.வே.சுப்பிரமணியம் அவர்கள் இலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார் (தமிழ் இலக்கியவகையும் வடிவும், ப.21):

1. பொருள் - ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ் போன்றன.
2. வடிவம் - அகவல், ஆசிரியம், வண்ணம் போன்றன.
3. அமைப்பு (Pattern) - இரட்டைமணி மாலை, மும்மணிக் கோவை.
4. எண் அடிப்படை - சட்டகம், சதகம் போன்றவை.
5. நாட்டுப்புற வகைகள் - அம்மானை, காதல், ஊசல் போன்றன.
6. எழுத்தடிப்படை வகைகள் - உயிர் வருக்கமாலை, வருக்கக் கோவை போன்றன.
7. முதல் தொடரால் பெயர் பெறுவன - ஆத்திசூடி போன்றன.
8. தன்மையில் பெயர் பெறுவன - தேவாரம், அனுபூதி போன்றன.
9. ஒன்றற்கு மேற்பட்ட அமைப்பால் பெயர் பெறுவன.
10. பொருண்மையும் வடிவமும் இணைந்தவை - சிந்து போன்றன.

பொருள், வடிவம் என்ற அடிப்படை அமைப்பிலிருந்து விலகி, பிற வகைப்பாட்டு முயற்சிகளையும் சுட்டியுள்ளனர். அவை வருமாறு:

1. பாவகையால் பெயர் பெறுபவை.
2. பாடல் எண்ணிக்கையால் பெயர் பெறுபவை.
3. பாடல் அமைப்பு வகையால் பெயர் பெறுபவை.
4. விளையாட்டால் பெயர் பெறுபவை.
5. தொழில் அடிப்படையால் பெயர் பெறுபவை.
6. சந்த வகையால் பெயர் பெறுபவை.

7. நிகழ்ச்சிப் பொருள் வகையால் பெயர் பெறுபவை.

8. துதிப்பாடற் பொருள் / தத்துவப் பொருள் உணர்த்துபவையாக இருப்பவை.

பாட்டியல் நூல்களிலும் ஆய்வு நூல்களிலும் ஓலைச் சுவடிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் இலக்கணம் கூறப்பட்டுள்ள இலக்கிய வகைகளைக் கண்டறிந்து ஏறத்தாழ 377 வகைகளைப் பட்டியலிட்டுத் தந்துள்ள புலவர் இரா. இளங்குமரன், இவற்றைப் பின்வரும் அடிப்படைகளில் பிரித்துக் காண்கிறார் (இலக்கியவகை அகராதி, முன்னுரை):

1. அரசு இயல் - சின்னப்பூ, தசாங்கம், பவனிக்காதல், போன்றவை.
2. இறைஇயல் - விண்ணப்பம், திருப்பல்லாண்டு, உற்பவமாலை போன்றவை.
3. யாப்பியல் - குறுந்தொகை, எழுகூற்றிருக்கை, பழமொழி போன்றவை.
4. பொருளியல் - உலாமடல், அகப்பொருட்கோவை போன்றவை.
5. வாழ்வியல் - பிள்ளைத்தமிழ், குழமகன். துனிவிசித்திரம் போன்றவை.
7. தொழிலியல் - வள்ளைப்பாட்டு, பள்ளு, கப்பற்சிந்து போன்றவை.
8. ஆட்டவியல் - பந்தடி, ஊசல், அம்மானை போன்றவை.
9. மெய்ப்பாட்டியல்- புலம்பல், கோபப்பிரசாதம், திருமணம் போன்றவை.
10. மெய்யியல் - ஆற்றுப்படை, செவியறிவுறூஉ போன்றவை.

இவ்வாறு சற்றேறக்குறைய 377 வகைகளைத் தொகுத்துத் தந்த சிற்றிலக்கியப் புலமையாளர் இரா.இளங்குமரனார், ‘இலக்கிய வகைகளை எண்ணிக்‘கை’ விட்டார். ‘எண்ணிக்கை விட்டார்’ என்கிறார். காலந்தோறும் புதிய புதிய இலக்கிய வகைகள் தோன்றிய வண்ணம் உள்ளன என்பதை ‘நாளும் வளரும் ஒன்றன் வளர்ச்சியை நாளெண்ணி வாழும் மாந்தர் அளவிட்டுரைக்க இயல்வதோ?’ என்று அவர் நயம்பட உரைப்பது நனி சிறப்புடையதாகும்!

பன்னூறு வகைகளாகப் பல்கிப் பெருகியுள்ள இலக்கிய வகைகளைச் சில பொதுவான / அடிப்படையான பிரிவுகளாகத் தொகுத்தறியும் முயற்சி மிகவும் இன்றியமையாததாகும். அப்போது தான் இலக்கியவகைகளைப் பற்றிய அறிதலும் புரிதலும் வசப்படும். அதற்கான தொரு முயற்சியைப் பின்வருமாறு மேற்கொள்ளலாம்:

1. பாடுபொருட் தொகுதி

(அ) அகப்பொருள் வகைகள்

(எ.டு) அகப்பொருட் கோவை, உலா, உலாமடல்.

(ஆ) புறப் பொருள் வகைகள்

(எ.டு) அமர்க்களவஞ்சி, ஆனைத் தொழில், தும்பைமாலை.

(இ) அறப் பொருள் வகைகள்

(எ.டு) ஆற்றுப்படை, சூடாமணி, தருமவிசேடம்

2. வடிவ நோக்கிலான தொகுதி

(அ) பொது வடிவம்

(எ.டு) கண்ணி, கலம்பகம், காப்பியம், குறள், குறுந்தொகை, சித்திரகவி.

(ஆ) வடிவமும் எண்ணிக்கையும் இணைந்தவை.

(எ.டு) நவமணிமாலை, அட்டமங்கலம், நான்மணிமாலை.

(இ) வடிவமும் எழுத்தும் இணைந்தவை.

(எ.டு) உயிர் வருக்கமாலை, வருக்கக்கோவை

(ஈ) வடிவமும் பக்தியும் இணைந்தவை.

(எ.டு) எழுகூற்றிருக்கை, ஏகபாத நூற்றந்தாதி, சக்கரமாற்று, கோமூத்திரி.

3. எண்ணிக்கை நோக்கிலான தொகுதி.

(எ.டு) நானாற்பது, பஞ்சகம், பதிகச் சதகம், பதிகப் பஞ்சகம்.

4. உத்தி நோக்கிலான தொகுதி.

(எ.டு) அக்கரமாலை, இதழகலந்தாதி, ஒலியந்தாதி.

5. பக்தி நெறியிலான தொகுதி.

(அ) பக்தி வகைகள்

(எ.டு) அரிபிறப்பு; ஆறெழுத்தலங்காரம்.

(ஆ) பக்தி + அகம்

(எ.டு) இங்கிதம், கோவை

6. அரசர் நோக்கிலான தொகுதி.

(அ) அரசர் முதன்மையான வகை.

(எ.டு) பெயர்நேரிசை, பெயரின்னிசை, பெருமங்கலம், கண்படைநிலை

(ஆ) அரசச் சின்னம் முதன்மையான வகை.

(எ.டு) தசாங்கம், சின்னப்பூ, ஊர் நேரிசை, ஊரின்னிசை.

7. வாழ்க்கை நோக்கிலான தொகுதி.
(அ) வாழ்க்கை
(ஆ) வாழ்த்து
(எ.டு) இயன்மொழி, வாயுறை, பாடாண்பாட்டு
3. திருமணம்
(எ.டு) இலட்சுமி விலாசம், இலாலி, சோபனம்
4. இல்லறம்
(எ.டு) இல்லறவள்ளை
5. நீதி / அறம்
(எ.டு) செவியறிவுறூஉ, முதுகாஞ்சி, முதுமொழி வெண்பா.
6. தத்துவம் / மெய்ப்பொருள்
(எ.டு) ஆனந்தக் களிப்பு, புலம்பல், ஞானம்
7. காப்பு
(எ.டு) கவசம், காப்புமாலை, ஐம்படை விருத்தம்

8. பொதுநோக்கிலான தொகுதி.
சமுக்தி, தாமரை நோன்பு, நட்சத்திரமாலை, நகர்விருத்தம், நாட்டு விருத்தம், நாமக் கோவை, நாமமாலை, நாழிகைக்கவி போன்றவை.

9. நாட்டுப்புற இலக்கியவகைத் தொகுதி.
1. பொருள் : (எ.டு) பள்ளு, நொண்டி நாடகம், தென் பாங்கு.
2. வடிவம் : (எ.டு) கும்மி, கீர்த்தனம், சிந்து.
3. விளையாட்டு : (எ.டு) சாழல், அம்மானை, பாவை, தோணோக்கம், பந்தடி.

இலக்கியப் பரிணாமத்தின் பல்வேறு பதிவுகளாகப் பரந்தும் விரிந்தும் செல்லும் இலக்கிய வகைகளை இவ்வாறு சிற்சில ஒன்றுபடு கூறுகளின் அடிப்படையில் இனத் தொகுதிகளாகப் பகுத்தும் வகுத்தும் காண்பதே இலக்கிய வகையின் அறிதலுக்கும் புரிதலுக்கும் துணை செய்யும் எனலாம்.

### எதற்கு இந்த அகராதி?

இந்த அகராதிக்கு 'இலக்கிய வகை விளக்க அகராதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவது இதன் பணியன்று. மாறாக இலக்கிய வகையின் பொருள், நோக்கம், பாடப்பட்ட திறம், பாட்டியல் இலக்கணம், முதற்சான்று, அதற்கான எடுத்துக்காட்டு, பிற சான்றுகள், சான்றுகளின் பதிவுகள் என்பன போன்ற இன்றியமையாத செய்திகள் எடுத்தியம்பப் பட்டுள்ளன. ஓர் இலக்கிய வகைக்கான விளக்கம் முழுமையாக

இதில் கிடைப்பதால், இந்நூலுக்கு 'இலக்கிய வகை விளக்க அகராதி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலுள் அகரவரிசைப்படி 220 இலக்கிய வகைகள் விளக்கப்பட்டுள்ளன. இங்குப் பதிவு செய்யப்பட்ட இலக்கிய வகைகள் பாட்டியல் நூல்களில் குறிப்பிடப்படுகின்றவை மட்டுமன்று; வேறு பல திறனாய்வு நூல்களிலும், நூற்றொகுதிகளிலும், நிறுவனப் பதிப்புகளிலும் இருந்து தேர்ந்தெடுத்துப் பதிவு செய்யப் பெற்றவை. பெரும்பாலும் இலக்கியச்சான்றுகளுடன்கூடிய இலக்கிய வகைகளே இங்குப்பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியச் சான்றில்லாது, இலக்கணக் குறிப்பாக மட்டும் உள்ள பல இலக்கிய வகைகள் இவ் அகாரதியில் பதிவு செய்யப்படவில்லை. அதேபோன்று சான்றிலக்கியம் இல்லாமல் பெயரளவில் அறியப்படும் இலக்கிய வகைகளும் இங்குப் பதிவு செய்யப்படவில்லை. இலக்கியமே இல்லாமல் இலக்கணக் குறிப்பை மட்டும் வைத்து அவ்விலக்கியத்தைப் பற்றி எழுதுவது 'அரங்கின்றி வட்டாடியது' போல் ஆகும். அனைத்தையும் பதிவு செய்வதாயின் இளங்குமரனார் சுட்டியது போல 'எண்ணிக்கை விட்டார்' என்பது போல ஆகும். எனவே இந்நிலை தவிர்க்கப்பட்டது. இந்நூலில் பதிவு செய்யப்படாமல் விடுபட்டுப் போன பழைய இலக்கிய வகைகளும் இருத்தல் கூடும். அவற்றை அன்பர்கள் தெரிவிப்பார்களாயின் அவை பற்றிய விளக்கங்கள் அடுத்தடுத்த பதிப்புக்களில் இடம்பெறும்.

இவ் அகராதியை உருவாக்குவதற்கான சான்று நூல்கள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலும், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலும், சென்னை உலகத்தமிழராய்ச்சி நிறுவனத்திலும், மதுரைத் தமிழ்ச் சங்க நூலகத்திலும் பார்வையிடப் பெற்றுப் பதிவு செய்யப்பட்டன. மேற்சுட்டிய நூலகப் பொறுப்பாளர்களுக்கு நன்றி உரைப்பது நம் கடப்பாடாகும்.

## அகராதி அமைப்பு

1. *இலக்கிய வகையின் சொற்பொருள்*

2. *இலக்கிய வகையின் பாடுபொருள்*

3. *அதன் இலக்கணம் கூறும் பாட்டியல் நூற்பா எண்கள்*

4. *அதன் பாடுபொருளையும் பாவடிவையும் சுட்டும் பாட்டியல் இலக்கணம் (சான்று)*

5. *அதன் முதற் சான்று நூல் / அதன் விவரங்கள்*

6. *இவ் இலக்கிய வகையின் பிற நூல்கள்*

7. *இலக்கிய வகையின் பாடுபொருளையும் பாவடிவையும் எடுத்துக் காட்டும் சான்றுப் பாடல் / பாடல்கள்.*

## 1. அகவல்/ஆசிரியம்

1. கூவுதல்.

2. அகவல் யாப்பினைக் கொண்டு பாடப்படும் இலக்கியவகை. எனவே 'அகவல்' என அழைக்கப்பட்டது. சங்ககாலத்தில் தலைமை தாங்கிய பா இனம். எனவே 'ஆசிரியம்' எனப்பட்டது. 'அகவுதல்' என்றால் கூவி அழைத்தல் எனப் பொருள்படும். உரத்தத் தொனியில் - செம்மாந்த நிலையில் - பாடுவது அகவற்பா. சங்ககாலத்தில் ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் இவ்வாறு உரத்தக் குரலில் கூவி அழைப்பது போலச் செம்மாந்த நிலையில் பாடினர். "அகவன் மகளே அகவன் மகளே" எனும் ஔவையாரின் குறுந்தொகைப் பாட்டு (23) இதற்குச்சான்று. இவர்கள் 'அகவன் மகளிர்' என அழைக்கப்பட்டனர்.

அகவ லென்ப தாசிரி யம்மே - செய் 81

என்பது இவ்யாப்பினைக் குறிக்கும் தொல்காப்பிய நூற்பாவாகும். அகவற்பா, பல பாடுபொருட்களைக் கொண்டு பல இலக்கிய வகைகளுக்கு யாப்பாக அமைந்தாலும், 'அகவல்' என்ற பெயரிலும் 'ஆசிரியம்' என்ற பெயரிலும் இலக்கியங்கள் செய்யப்பட்டன.

3. ----

4. ----

5. மாணிக்கவாசகரின் (9 நூற்) அகவற்பாக்கள் இதன் முதற் சான்றாக அமைகின்றன. இவர் போற்றித் திருவகவலும் கீர்த்தித் திருவகவலும் பாடியுள்ளார். இதே காலப்பகுதியில் நம்மாழ்வார் திருவாசிரியம் பாடியுள்ளார்.

6. பதினோராம் திருமுறையில் நக்கீரதேவ நாயனார் பாடிய 'அகவல்', பிற்கால ஔவையார் (12 நூற்) பாடிய விநாயகர் அகவல், காமாட்சியம்மன் அகவல், பட்டினத்தடிகள் பாடிய (10 நூற்) கச்சித் திருஅகவல், கோயில் திரு அகவல், இராமலிங்க அடிகளார் பாடிய அருட்பெருஞ்சோதி அகவல், திருமுக அகவல் ஆகியவை இவ் இலக்கிய வகையின் குறிப்பிடத்தகுந்த நூற்களாகும். கபிலரகவல் என்ற நூல் வேகமும் உணர்ச்சியும் மிக்கது என்பர்.

எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டு
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழை எனப் படாது

*சிறப்பும் சீலமும் அல்லது*
*பிறப்பு நலம் தருமோ பேதையீரே?* — *கபிலரகவல்*

இவ்வகையில் பிற சான்றுகள்

அகத்தியர் அகவல் - ஞானசித்தர்.

இராமாயண அகவல் - நாராயணசாமி ஐயர்.

திருவாவடுதுறை ஆதீனத்துக்
குருபரம்பரை அகவல் - மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

போற்றித் திருஅகவல் - கிருஷ்ணப் பிள்ளை.

நூற்றெட்டுத் திருப்பதி அகவல் - ரா. நரசிம்மாச்சாரியார்.

7.

ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் அடிபோற்றி
இன்று எனக்கு ஆர்அமுது ஆனாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி

போற்றித் திருவகவல் (திருவாசகம்)(90-94)

## 2. அகலக்கவி/வித்தார கவி

1. *விரிவான கவிதை.*
2. *இது வித்தார கவி (விஸ்தாரம்) என்றும் அழைக்கப்படும். ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனும் நால்வகைக் கவிதையாக்க முறைகளுள் இதுவும் ஒன்று. எனவே, இதனை* S ¹ ÷r Ì z ¼ @ (Genre) *என்று கருதுவதைக் காட்டிலும் கவிதை பாடும் முறை* (mode) *என்று கருதுவதே பொருத்தமுடையது.*
3. *இதன் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் விரிவாகச் சொல்லுகின்றன. வெ.பா (செ.5), ந.பா.(செ.9), இ.வி, (767), தொ.வி. (299), மு.வீ (யா.ஒ.55, 59).*
4.

. . . . . . . .
*தொடர்நிலை, தொகைநிலை தொகுத்த ஒரு பாவும்*
*தொடை பலவாகத் தொகுத்த ஒருபாவும்*
*வித்தார கவியென விளம்பினர் புலவர்* (*தொ.வி.*)

### 3. அக்கமாலை

1. எழுத்து மாலை.

2. எழுத்துக்களால் (அட்சரம்) தொடுக்கப்பட்ட மாலை எனும் பொருளமைய இவ்இலக்கிய வகை 'அக்கமாலை' எனப்பட்டது. மொழிக்கு முதலாக வரும் உயிர் எழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள் இவை பாடலடிகளின் முதல் எழுத்தாக வருமாறு இயற்றப்படும் கவிதைகள். (எ.கா) ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போல்வன. 'ஆத்தி சூடி' என்பது ஓர் இலக்கிய வகையன்று. 'அக்கமாலை' எனும் இலக்கிய வகையில் இயற்றப்பட்ட ஒரு நூலே 'ஆத்திசூடி' யாகும். 'ஆத்திசூடி' என்று சிவபெருமானைத் துதித்து இந்நூல் தொடங்குவதால் இதற்கு 'ஆத்திசூடி' என்று பெயரிடப்பட்டது. பின்னால் இந்நூலின் புகழ் காரணமாக இதனை அடியொற்றி எழுதப்பட்ட இதுபோன்ற நூல்கள் இயற்றியவர் பெயரையும், பாடுபொருளையும் முன்வைத்து 'ஆத்திசூடி' என்றே அழைக்கப்பட்டன.

   (எ.கா.) அறிவியல் சூடி, ஆய்வு சூடி, புதிய ஆத்திசூடி.

3. ----

4. ----

5. இவ்வகையின் முதல் சான்று பிற்கால ஔவையார் (12 நூற்) பாடிய ஆத்திசூடி எனும் அறிவுரை நூலாகும்.

### 4. அங்கமாலை

1. உறுப்பு மாலை.

2. ஆண், பெண் - இருபாலாருடைய உடல் உறுப்புக்களை அந்தாதித் தொடையில் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை. பாதாதி கேசம், கேசாதி பாதம், நயனப்பத்து, பயோதரப்பத்து ஆகிய இலக்கிய வகைகள் உடல் உறுப்புக்களைப் பாடுவன. ஆயினும் அங்கமாலை, வெண்பா விருத்தத்தில் பாடுவது என்பதாலும் இன்ன உறுப்பை மட்டும் பாடுவது என்ற வரையறை இல்லாததாலும், உடல் உறுப்புக்களை வரிசை முறைப்படிப் பாடுவது என்ற அமைப்பு இல்லாததாலும் இது அவற்றினின்றும் வேறுபட்டது.

3. இதன் இலக்கணத்தை வெ.பா.(செ.29), ந.பா.(செ.18:4,19), பிர.ம (12), சி.பா. (ம.8:4), இ.வி. (835), தொ.வி (262), மு.வீ. (யா.ஒ.85); பி.தீ (9) ஆகிய பாட்டியல் நூல்கள் சொல்கின்றன.

4.

*மிக்க உறுப்பை வெண்பா விருத்தம்*
*தொக்க ஒருமுறையால் தொடர்புறப் பாடுதல்*
*அங்கமாலை யாம்எனப் பகவர்வர்* (இ.வி.)

5. அப்பர் பாடிய திருவங்கமாலை இவ்வகையின் முதற்சான்றாக அமைகிறது.

## 5. அட்டகம்

1. எட்டு வகை.
2. ஒரே வகை யாப்பில் எட்டுப்பாடல்களாக அமைந்த இலக்கிய வகை அல்லது குறிப்பிட்ட பாடுபொருளை எட்டு வகைகளாகப் பாடும் இலக்கிய வகை என்று பொருள் கொள்ளப்படுகிறது.
3. ----
4. ----
5. 17 ஆம் நூற்றாண்டில் தமிழாகர முனிவர் பாடிய ஞானசம்பந்த குருராய அட்டகம் எனும் நூல் இவ்வகையின் முதற்சான்றாக அமைகிறது.
6. இராமலிங்க அடிகளாரின் அருட்பெருஞ்சோதி அட்டகம், ஞானசிகாமணி திருச்சீர் அட்டகம், தொழுவூர் வேலாயுத முதலியாரின் வடிவுடையம்மன் சவுந்திரி அட்டகம். சண்முக சரணாட்டகம் ஆகியவை இவ்வகையில் இயற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

   'எட்டு' எனும் பெயரிலமைந்த இலக்கிய வகையாகவும் இதனைக் குறிப்பதுண்டு (எ-டு) நக்கீர தேவநாயனாரின் 'கார் எட்டு'. கார்காலத்தில் தோன்றும் கார்முகில், மின்னல், இடிமுழக்கம், பூக்கள் ஆகியவை சிவனோடு தொடர்புபடுத்தப்பட்டு உவமைகளாகச் சொல்லப்பட்டுள்ளன.

## 6. அட்டமங்கலம்

1. எட்டு அகவல் விருத்தங்களால் பாடப்படும் இலக்கிய வகை.
2. பாடல் தலைவனைக் 'கடவுள் காக்க' என்று பாடப்பெறும். அந்தாதியாக அமைவது.
3. இதன் இலக்கணத்தை ப.பா(இ.105), வெ.பா (செ.24:1), ந.பா. (செ.27:1-2), பிர.ம. (11), சி.பா (ம.7:2,3) இ.வி.(843), தொ.வி

*(274:1,2), மு.வீ. (யா.ஒ.86), பி,தீ.(9) ஆகிய பாட்டியல் நூல்கள் சொல்கின்றன.*

4.

*கடவுளைப் பாடி அக்கடவுள் தானே*
*காக்க வென்று அகவல் விருத்தம் இருநான்கு*
*அந்தாதித்து அறைகுவது அட்ட மங்கலமே* (மு.வீ)

5. -----

## 7. அட்டவணை

1. தொகுப்பு.
2. *சமய உண்மைகளைத் தொகுத்து எளிய உரைநடையில் எழுதப்படும் சிறுநூல்.*
3. -----
4. -----
5. *முதற்சான்று, 16 ஆம் நூற்றாண்டில் கண்ணுடைய வள்ளல் இயற்றிய 'அதிகாரப் பிள்ளை அட்டவணை'.*
6. *பிற சான்றுகள்: அம்பலவாண தேசிகரின் சீடர் இயற்றிய பதிபசுபாச அட்டவணை, துறைசை அம்பலவாண தேசிகரின் (17 நூற்.) உயிர் அட்டவணை.*

## 8. அண்டகோசம்

1. உலகம் பற்றிய தொகுப்பு.
2. உலகத் தோற்றம் பற்றிய சமயத் தொகுப்பு நூல்.
3. -----
4. -----
5. -----

## 9. அந்தாதி

1. இறுதியும் முதலும் (அந்தமும் ஆதியும்).
2. *பாடலின் இறுதிச் சொல்லோ, தொடரோ அதை அடுத்து வரும் பாடலின் முதற் சொல்லாகவோ, தொடராகவோ அமையும் இலக்கிய வகை.*

3. இதற்கு யா.க(52), யா.கா (17.1), இ.வி (725:4-6), தொ.வி. (217:1), மு.வீ (யா.2.29) ஆகியவை இலக்கணம் சொல்கின்றன.

4.

*அடியும் சீரும் அசையும் எழுத்தும்*
*முடிவு முதலாச் செய்யுள் மொழியின்*
*அந்தாதித் தொடை என்று அறிதல் வேண்டும்* (இ.வி)

5. காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி இதன் முதல் முழு இலக்கியச்சான்றாக அமைகிறது.

6. பிற இலக்கிய வகைகளில் ஒரு கூறாகவும், பாஇனம், உத்தி ஆகியவற்றில் வேறுபாடுகளைத் தாங்கியும் பல இலக்கிய வகைகளாக அந்தாதி செழித்து வளர்ந்துள்ளது.

கலம்பகம், நான்மணிமாலை, மும்மணிக்கோவை போன்ற இலக்கிய வகைகளில் அந்தாதி ஒரு கூறாக இடம்பெற்றுள்ளது. பா அமைப்பாலும், பாடல் எண்ணிக்கையாலும், எழுத்துக்களாலும், அடியமைப்பாலும், பாடலின் முதற்றொட்ராலும், தலப்பெயராலும், இறைப் பெயராலும், தலைவன் பெயராலும் அந்தாதி வேறுபாடுகளைப் பெற்றுள்ளது.

(எ.கா)

| | | |
|---|---|---|
| பா அமைப்பு | : | வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி |
| பாடல் எண்ணிக்கை | : | பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, |
| எழுத்து அடிப்படை | : | உயிரெழுத்தந்தாதி, ஓரெழுத்தந்தாதி பஞ்சாட்சர அந்தாதி, சடாட்சர அந்தாதி, |
| அடியமைப்பு | : | ஏகபாத அந்தாதி |
| முதற்சொல் | : | ஆத்திசூடி அந்தாதி |
| முதற்றொடர் | : | பொன்வண்ணத் தந்தாதி |
| பொருண்மை | : | சிலேடையந்தாதி |
| உத்திகள் | : | யமக அந்தாதி, நிரோட்டகயமக அந்தாதி, திரிபந்தாதி, ஒலியந்தாதி |
| தலம் | : | திருமதீனத்து அந்தாதி (பிச்சை இபுறாகீம் புலவர்) திருக்கழுக்குன்றத்து அந்தாதி (எ.நாராயணசாமி நாயகர்) |

| | | |
|---|---|---|
| இறைவன் | : | கணபதி அந்தாதி (கந்தசாமி சுவாமிகள்)<br>திருமாலந்தாதி (தண்டபாணி சுவாமிகள்)<br>திருவேகம்பரந்தாதி (சிவஞான சுவாமிகள்) |
| இறைவி | : | சரசுவதியந்தாதி (கம்பர்)<br>திருமகளந்தாதி (தண்டபாணி சுவாமிகள்) |
| தலைவர் | : | காந்தியந்தாதி (ராய.சொ)<br>திருக்குருகூர் மாறனந்தாதி (அட்டாவதானம் பெரிய திருவடி கவிராயர்) |
| பொது | : | ஆங்கிலியர் அந்தாதி |

தொடக்க காலப் பகுதி இலக்கியங்களில் அந்தாதி இலக்கிய வகை செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. பக்தி இலக்கியத்திற்கான முதல் சிற்றிலக்கியம் அந்தாதியாகவே அமைகிறது. முதல் அந்தாதி கி.பி.5 ஆம் நூற்றாண்டில் காரைக் காலம்மையார் பாடிய 'அற்புதத் திருவந்தாதியாகும்'. தொடர்ந்து பூதத்தாழ்வார். பேயாழ்வார், பொய்கையார் மூவரும் அந்தாதியாகப் பாடித் திருமாலை வழிபட்டுள்ளனர். இது 'திருவந்தாதி' எனப்படுகிறது. இவர்களைத் தொடர்ந்து நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் (8 நூற்.) 'பெரிய திருவந்தாதி' பாடினர். நக்கீரதேவ நாயனாரின் -(8 நூற்.) 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. நம்பியாண்டார் நம்பி (10 நூற்) 'ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி' யும், 'திருத்தொண்டர் திருவந்தாதி' யும் பாடினார். அபிராமி பட்டர் (18 நூற்) பாடிய 'அபிராமி அந்தாதி' புகழ் பெற்றது. 11 ஆம் திருமுறையில் எட்டு அந்தாதிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அந்தாதியின் வேறுபடு வகைகளில் தம் ஆற்றலை நாட்டியவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். இவர் இயற்றிய அந்தாதிகள். ஆங்கிலியர் அந்தாதி, இதழ கலந்தாதி, ஏகபாத அந்தாதி, ஒலியந்தாதி, சந்தக் கலித்துறையந்தாதி, கலிவிருந்த அந்தாதி, சதகத் தந்தாதி, பல சந்தவந்தாதி,

*சிலேடையந்தாதி, திரிபந்தாதி, நூற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, யமகவந்தாதி, இருசொல் யமக வந்தாதி, தலைச் செய்யுள் அந்தாதி, வெண்பா அந்தாதி, திரிபுவெண்பா அந்தர்தி, நூற்றெட்டு வெண்பா அந்தாதி ஆகியன.*

*பிற சான்றுகள்*

| | |
|---|---|
| *நெல்லை அந்தாதி* | - *தையல்நாயகம் பிள்ளை* |
| *திருமுல்லைவாயில் கொடியிடை நாயகி அந்தாதி* | - *மனோன்மணி அம்மாள்* |
| *திருவானைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி* | - *மனோன்மணி அம்மாள்* |
| *பூவராகர் அந்தாதி* | - *சீனிவாசதாத்தாச்சாரியார்* |
| *மதீனத்தந்தாதி* | - *சர்க்கரைப்புலவர்* |
| *தேவமாதா அந்தாதி* | - *மாயூரம் வேதநாயகம் பிள்ளை* |

*அழகிய மணவாள தாசரின் அஷ்டப் பிரபந்தத்தில் அடங்கிய எட்டு நூல்களில் நான்கு அந்தாதி இலக்கியங்களால் ஆனது. அவை, திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி (பிற இலக்கியங்கள், திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்க நாயகர் ஊசல், திருவேங்கட மாலை).*

*அவிரோதிநாதர் எனும் ஜைன முனிவர் திருநூற்றந்தாதி பாடியுள்ளார். இவரை அவிரோதியாழ்வார் என்பர் (14 நூற்). இவர்பெயரில் அவிரோதியந்தாதி என்ற நூல் பாடப்பட்டுள்ளது.*

7. *ஆங்கிலியர் அந்தாதி*

பொருளண்மை தன்னைச் சிலவாறறிந்து பொருவிலுண்மை
அருளாண்மை சற்றும் அறியார் களாவார் ஆங்கிலேயர்
இருளாண்மை முற்றும் அழிவுறக் காண்பதென் இச்சை கண்டாய்
தெருளாண்மை யோர்க்கொரு தஞ்சமென் றோங்கும் திருத்தெய்வமே
(9)

திருமாதென் றுள்ள கொடியான்பல ஆன்நிணம் தின்பவர்க்கும்
பெருமாண் பளித்துநல் போர்க்கின்னல் ஈந்து பிணங்குகின்றாள்
அருமாந்த பேதநெறி பிறழாமல் அவட்டி ருத்தற்கு
ஒருமா தவன்பிறந் தானில்லை யேஇவ் வுலகத்தில் (10)

*அறம்வளர்க் குஞ்சீதக் காதிமுன் னாளில் அவனிமிசை*
*இரவலர் தங்களுக் கீந்துமகிழ்ந்து மிகத்தைவிட்டுப்*
*பரமதைச் சேர்ந்துஞ் சமாதியில் நின்றும் பரிசளித்தான்*
*விரைவினில் மெய்த்துணை யாகவுஞ்செய்ய விரும்பிடுமே*

*- ஆத்திசூடி அந்தாதி (1)*

### 9.1. இதழகலந்தாதி

1. *இதழ்கள் ஒட்டாமல் பாடப்படும் இலக்கிய வகை. நிரோட்டக அந்தாதி என்றும் அழைக்கப்படும்.*

*இதழ்கள் > நிரோஷ்டம் (சமஸ்) > நிரோட்டம்*

*நிர் : தொடர்பின்மை ; ஒஷ்டம் : உதடு*

*உதடுகளின் தொடர்பின்மையால் பெயர் பெற்ற இலக்கிய வகை.*

2. *இதழ்கள் இணையும்படியான ப, ம, வ ஆகிய எழுத்துக்கள் இல்லாமல் பாடப்படும் அந்தாதி இலக்கியம்.*
3. *தண்டியலங்கார உரை இதற்கு இலக்கணம் சொல்கிறது.*
4. 

*உ ஊ ஒ ஓ ஔ ப ம வ விவற்றியைபு*
*சேரா நிரோட்டத் திறத்து*

5. *தில்லை இதழகலந்தாதி - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

*சென்னை கந்தரிதழகலந்தாதி - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

*கச்சி இதழகலந்தாதி - திருமாகறல் கார்த்திகேய முதலியார் (1901)*

### 9.2. எட்டெட்டந்தாதி

*எட்டுப் பாடல்களால் அமைந்த எட்டுப் பகுதிகளைக் (8X8 : 64) கொண்ட அந்தாதி இலக்கியம்.*

### 9.3. ஏகபாத அந்தாதி

1. *ஒரேவிதமான (ஏக) பாதத்து (நான்கு) அடிகளைக் கொண்ட அந்தாதி.*

2. நான்கு அடிகளும் ஒன்று போல இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு பொருளைத் தருதல் வேண்டும். ஒரு சொல்லுக்கு ஒரு தடவை கொண்ட பொருள், மறுபடியும் அந்தப் பாடலில் அந்தச் சொல்லுக்கு வரக்கூடாது. இவ்வாறு ஒரு கடவுள் குறித்த அந்தாதி இலக்கிய வகையாக இது அமைகிறது.
3. -----
4. -----
5. அரி ஏகபாத அந்தாதி - வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

முருகப் பெருமான் ஏகபாதத்து இதழகலந்தாதி - தண்டபாணி சுவாமிகள்.

முருகப் பெருமான் ஏகபாதத்து இதழகலந்தாதியில்,

சிவன் ஏகபாதம் (ஒருகால்) - முதலில்

அரி ஏகபாதம் (மறுகால்) - முடிவில்

முருகன் ஏகபாதத்து இதழகல் (உடல்) - இடையில்

## 9.4. ஒலியந்தாதி / ஒலியலந்தாதி

1. ஒலி மாறுபாடுடைய அந்தாதி.
2. வெண்பா, அகவல், கலித்துறை ஆகியவற்றில் பத்துப்பத்துச் செய்யுட்களாக முப்பது செய்யுட்கள் அந்தாதித்துத் தொடரும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. (எ.டு) பாம்பன் சுவாமிகளின் கந்தரொலியலந்தாதி,

இதன் பிற வகைகள் - முதலொலியல் அந்தாதி<br>பேரொலியல் அந்தாதி

## 9.5. கலித்துறையந்தாதி/ கட்டளைக் கலித்துறையந்தாதி

1. கலித்துறை யாப்பில்அமைந்த அந்தாதி இலக்கியம்.
2. நெடிலடி நான்கால் அமையும் கலிப்பா, கலித்துறை எனப்படும். இத்தகுக் கட்டளைக் கலித்துறையால் இயன்ற நூறு பாடல்களால் ஆன இலக்கிய வகை.
3. -----
4. -----

5. அதிவீரராம பாண்டியனின் ‘திருக்கருவை கலித்துறை அந்தாதி’ (கருவை : கரிவலம்வந்த நல்லூர்)
6. நமச்சிவாயக் கவிராயரின் ‘சிங்கை உலகம்மை கலித்துறையந்தாதி’
   தண்டபாணி சுவாமிகளின் தில்லைத் திருவாயிரத்தில் உள்ள ‘கட்டளைக் கலித்துறையந்தாதி’
7.

பாடுவ துன்திரு நாமங்கள், நாடொறும் பத்தி செய்து
சூடுவ துன்பொற் றிருவடித் தாமரை தொண்டு செய்து

கூடுவ துன்னடி யார்திருக் கூட்டம். அக்கூட்டத்துடன்
ஆடுவ துன்னிலை காண் கருவாபுரி நாயகமே

– திருக்கருவை கலித்துறையந்தாதி

## 9.6. திரிபந்தாதி

1. பாடல்கள் தொடக்கத்தில் திரிபு கொள்வது.
2. கட்டளைக் கலித்துறையில் அமையும் நூறு பாடல்கள். இப்பாடல்களின் முதல் எழுத்துத் தவிர பிற எழுத்துக்கள் ஒன்றுபடும் வண்ணம் பாடலின் தொடக்கம் அமைவது.
3. -----
4. -----
5. திருக்குடந்தைத் திரிபந்தாதி — மகாவித்துவான்
   திருவிடை மருதூர் திரிபந்தாதி - மீனாட்சி சுந்தரம் பிள்ளை
   திருப்பைஞ்ஞீலி திரிபந்தாதி

   திருப்புல்லை திரிபந்தாதி
   திருவெவ்வுளூர் திரிபந்தாதி - கிருஷ்ணமாச்சார்யர் (1902)
   திருநாகை திரிபந்தாதி
   திரு அரியக்குடி திரிபந்தாதி

   திருவாரூர் திரிபந்தாதி - சிவப்பிரகாச உபாத்தியாயர்
   மயூரமென்று வழங்குகின்ற
   திருமயிலைத் திரிபந்தாதி - இராமையா

## 9.7. யமகவந்தாதி

1. மடக்கணியாக அமைந்த அந்தாதி.
2. வந்த எழுத்துக்களே பொருள் வேறுபடுமாறு பாடலின்சீர் அல்லது அடிகளில் தொடர்ந்து வந்து அந்தாதித் தொடையில் பாடப்படும் நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள்.
3. -----
4. -----
5. திருக்குற்றால யமகவந்தாதி - திரிகூடராசப்பக் கவிராயர்
திருமலையமக வந்தாதி - நெல்லையப்பகவிராச பண்டாரம்
6. சிவகிரி யமகவந்தாதி - மாம்பழக் கவிராயர்
நெல்லை யமகவந்தாதி - தண்டபாணி சுவாமிகள்
திருத்தில்லை யமக வந்தாதி     மகாவித்துவான்
துறைசை யமக வந்தாதி     - மீனாட்சிசுந்தரம் பிள்ளை
திருசிரமலை யமக வந்தாதி
திருக்குருகூர்மாறன்யமகவந்தாதி -தெய்வநாயகப்பெருமாள்

7.

பறவைச் சரப வடிவா யொர்சீயப் பகவன்றனார்ப்
பறவைச் சரபணி செய்த தெண்ணாதரும் பண்பனென்றூழ்ப்
பறவைச் சரபக் களிப்பை வெவ்வேள்வியற் பார்த்தவன் வெம்
பறவைச் சரபப் பயனீவான் நான்கானவனைப் பாடினர்க்கே

## 9.8. நிரோட்டக யமகவந்தாதி

1. நிரோட்டமும் மடக்குமாக அமைந்த அந்தாதி
2. இதழகலான நிரோட்டம், மடக்கணியான யமகம் இரண்டையும் இணைத்துப் பாடப்படும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. திருத்தில்லை நிரோட்டக யமக அந்தாதி - சு.வேலுசாமிப் பிள்ளை. குன்று தோறாடும் சண்முகப் பெருமாள் பேரில் பாடிய நிரோட்டக யமக அந்தாதி - சௌந்திர பாரதி.

*திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி - இருவர் பாடியது.*

***துறைமங்கலம் சிவப்பிரசாகர் 1-35 பாடல்கள்; புலவர் கன்னையன் 36-100 பாடல்கள்.***

6.

தென்னயன் மாறகரி யின்றே நானெனுஞ் செந்திலார்க்குச்
சொன்னையன் நேருஞ் சிவப்பிரகாசன் றொடர்நிலைப் பாதத்
தன்னையன் பாக நிரோட்டத்தைந் தேழ் செய்யுட் டானுரைத்தான்
கன்னையன் முன்னவன் தாள்போற்றி மற்றதுஞ் செப்பினானே
- திருச்செந்தில் நிரோட்ட

## 9.9. பதிற்றுப் பத்தந்தாதி

1. *பத்துப் பத்தாகப் பாடப்படும் அந்தாதி*
2. *பத்துப்பாடலுக்கு ஒரு சந்தம் வீதம் பத்து சந்த பேதமுடைய நூறு செய்யுட்களால் அந்தாதியாகப் பாடப்படும் இலக்கியவகை.*
3. -----
4. -----
5. *கச்சி ஆனந்த ருத்ரேசரர் பதிற்றுப் பத்தந்தாதி*
6. *திருத்தணிகை பதிற்றுப்பத்தந்தாதி*

*பிரமீசர் பதிற்றுப் பத்தந்தாதி - கச்சியப்ப முனிவர்*

*தாயுமானவர் பதிற்றுப்பத்தந்தாதி - திருச்சிராப்பள்ளி நாகமுத்துப் புலவர்.*

*இளசை பதிற்றுப் பத்தந்தாதி*
*(இளசை : ஒட்டப்பிடாரம்) - ஸ்ரீசிவஞானசுவாமிகள்*

*குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி*

*கலசை பதிற்றுப் பத்தந்தாதி*

*திருமதீனத்துப் பதிற்றுப் பத்தந்தாதி - பிச்சை இபுறாகீம் புலவர்*

*அதிவீரராமர் பாடிய திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதி 'குட்டித் திருவாசகம்' எனப் போற்றப்படும் சிறப்பினை உடையது.*

7.

சிந்தனை உனக்குத் தந்தேன், திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன், மலரடி எனக்குத் தந்தாய்;
பைந்துணர் உனக்குத் தந்தேன், பரகதி எனக்குத் தந்தாய்;
கந்தனை பயந்த நாதா கருவையி லிருக்கும் தாயே.

இறக்கத் தக்கது கருவையின் திருவடிநேயம்
மறக்கத் தக்கது மற்றுள சமயத்தின் மயக்கம்
துறக்கத் தக்கது இவ்வுடம்பை யானென்றுறு தொடர்பு
பிறக்கத் தக்கது சிவானந்த வாரியின் பெருக்கே

- திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி

## 9.10. வெண்பா அந்தாதி

1. *அந்தாதியாக அமையும் வெண்பாக்கள்.*
2. *நூறு நேரிசை வெண்பாக்களால் ஆனது.*
3. -----
4. -----
5. *திருக்கருவை வெண்பா அந்தாதி.*
6. *பிற சான்றுகள்: திருப்பேரூர் வெண்பா அந்தாதி.*

## 10. அநுபூதி

1. *அனுபவம்.*
2. *இறையனுபவத்தைச் சொல்லும் இலக்கிய வகை.*
3. -----
4. -----
5. *முதல் நூல் : கந்தரனுபூதி - அருணகிரிநாதர்*
   *பிறநூல்கள் : தியானுபூதி - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*
   *நிஷ்டானுபூதி - ஆறுமுக சுவாமிகள்*
   *ஸ்ரீரமணானுபூதி - முகவை கண்ணப்ப முருகனார்*
   *கடவுள் அனுபூதி - அ.கு.ஆதித்தர்*
   *தியானுபூதி - பு.அச்சுதானந்த அடிகள்.*

*இந்நூல் பரமகுரு வணக்கம், மரபு வணக்கம், குருவருட்பேறு, திருச்சாழல், அன்னைப்பத்து, குயிற்பத்து உள்ளிட்ட 183 பகுதிகளை உடையது.*

## 11.அம்மானை

1. மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று.

2. மகளிர் ஓரிடத்தில் அமர்ந்து அம்மானைக் காய்களை உயரே தூக்கி எறிந்து புறங்கையை நீட்டி அவற்றை ஏற்று விளையாடும் விளையாட்டு அம்மானை எனப்படுகிறது. அம்மானை விளையாடும் இருவர் தம்முடைய விளையாட்டின் போது ஒருவர் வினாத் தொடுக்க, மற்றவர் விடை சொல்வார். வினாவும் விடையுமாக இவ்விலக்கியம் பாடப்பெறும்.

(எ.கா)

இருவருக்கும் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர் காண் அம்மானை;
விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனரே யாமாகில்;
அருமையுடம் பென்றிருகூ றாவதேன் அம்மானை;
ஆனாலும் காயமிலை ஐயரவர்க் கம்மானை;

– மதுரைக் கலம்பகம்,14.

அம்மானைப் பாடல்கள் கலம்பகத்தில் ஓர் உறுப்பாகவும், பிள்ளைத் தமிழில் (பெண் பாற்.) ஒரு பருவமாகவும், உலாவில் மகளிர் விளையாட்டுக்களில் ஒன்றாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. எனவே இது மகளிரிடையே பெரு வழக்கிலிருந்த பாட்டிலக்கியம் எனலாம்.

3. -----

4. -----

5. முதற்சான்று: மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ள திருவம்மானை

6. பிற சான்றுகள்

| | | |
|---|---|---|
| கித்தேரியம்மன் அம்மானை | - | வீரமாமுனிவர் |
| தருமர் அசுவமேத அம்மானை | - | அருணாசலம் செட்டியார் |
| சீறா அம்மானை | - | பேகம்பூர் அப்துல்காதர் |
| தாசீதாசன் அம்மானை | - | உவின்பிரட் ஐயர் |
| யவதார அம்மானை | - | கவிக் களஞ்சியப் புலவர் |
| பப்பாத்தியார் அம்மானை | - | சையது மீறாப் புலவர் |
| மூவர் அம்மானை | - | குலாம் காதிறு நாவலர் |
| புவனேந்திரன் அம்மானை | - | சரவணப் பெருமாள் கவிராயர் |

ஞானசௌந்தரி அம்மானை - சூசைப் பிள்ளை
அர்ச் அலிசம்மானை - சாந்த குருசு புலவர்
மாதபுராண அம்மானை - தெ.பொ.மீ.(பதிப்.1956)
சிவகங்கை சரித்திர அம்மானை
சீவகசிந்தாமணி அம்மானை
வைகுந்த அம்மானை

மாதபுராண அம்மானை, மாத ஸ்நான புராண அம்மானை என்றும் அழைக்கப்படுகிறது. இது 1870இல் வீரபத்திர கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. பேச்சு வழக்குச் சொற்கள் அதிகம் உள்ளன. கார்த்திகை. மார்கழி, தை ஆகிய மூன்று மாதங்களின் பெருமைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இம்மாதங்கள் திருவிழாக்கள் நிறைந்த மாதங்களாகும். ஏகாதசி. திருக்கார்த்திகை. திருவாதிரை, பொங்கல், தைப்பூசம் சிவராத்திரி. மாசிமகம் ஆகிய திருநாட்கள் இம்மாதங்களிலேயே வருகின்றன. 'அல்லியரசாணிமாலை முதலிய நூல்கள் மக்கள் மனத்தினைக் கவர்ந்ததுபோல, இந்த நூலும் தென்னாட்டில் பொதுமக்களிடை மிகப் பயின்று வழங்கியது போலும்' என்று இந்நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக அம்மானைப் பாடல்களின் பொருளையும் அமைப்பையும் நோக்குமிடத்து இதனை ஒரு நாட்டுப்புற இலக்கிய வகையாகக் கருதலாம். வந்த சொல்லே மீண்டும் வருவதும், ஒரு பொருளையே பலவிதமாகப் பலமுறை அடுக்கிக் கூறுவதும் போன்ற வாய்மொழி இலக்கியக் கூறுகள் அம்மானைப் பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன. இரட்டைப் புலவர்கள் பாடிய மூவர் அம்மானை சிலேடை நயம் மிக்கதாகும். ஒவ்வொரு பாடலும் ஐந்தடிகளாய் அமைய 108க்கும் மேற்பட்ட பாடல்கள் இதில் உள்ளன.

7.

பண்சுமந்த பாடல் பரிசு படைத் தருளும்
பெண் சுமந்த பாகத்தான் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் களமதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவில் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்

- திருவா.திருஅம். (8)

### 12. அரசன் விருத்தம்

1. அரசனது சிறப்புக்களைக் கலிவிருத்தத்தால் பாடுவது.
2. அரசனது சிறப்புக்களாக மலை, நாடு. நகர் வருணனையும், வாள் மங்கலம், தோள் மங்கலம் ஆகியவற்றையும் பாடும் இலக்கிய வகை.
3. இதன் இலக்கணத்தை ந.பா (செ.26) மு.வீ (யா3:142). பி.தீ (24) ஆகியவை சொல்கின்றன.
4.

கலித்துறை பத்தும் கலித்தாழிசையும்
விருத்தம் முப்பதும் வெற்பு நீர்நாடு
வருணனையொடு நிலவருணனை தாமும்
வாள் மங்கலமும் தோள் மங்கலமும்
அறைகுவது அரசன் விருத்தம் ஆகும் (மு.வீ)

5. -----

### 13. அலங்கல்

1. பாடல் தொகுப்பு.
2. பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு யாப்புக்களில் வெளிப்படுத்தும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. தனித்திரு அலங்கல் — இராமலிங்க சுவாமிகள்
   கவி அலங்கல் — சூ.இன்னாசி (பதிப்) தமிழாசிரியன் பதிப்பகம், பாளையங்கோட்டை (1973)

### 14. அலங்காரம்

1. ஒரு பொருளைப் பற்றி விரிவாகப் பாடுவது.
2. இறைவனுக்கு அழகு செய்து அணிவிக்கப்படும் மாலை போல நூறு கட்டளைக் கலித்துறைகளால் இறைவன் புகழ் பாடுவது.
3. -----
4. -----
5. முதற்சான்று: அருணகிரிநாதரின் கந்தரலங்காரம்.

6. *பிறசான்றுகள்:*

| | | |
|---|---|---|
| *திருவெங்கை அலங்காரம்* | - | *துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்* |
| *திருப்பரங்கிரி அலங்காரம்* | - | *மு.ரா.அருணாசலக் கவிராயர்.* |
| *வரதரலங்காரம்* | - | *கொங்குப்பிள்ளை.* |
| *தொழுகை ரஞ்சித அலங்காரம்* | - | *முகமதுமீர் யாவத், முகமது உசன் இபின் இஸ்மாயில்(இருவர் பாடியது)* |
| *திருநடைவழியலங்காரம்* | - | *அகமது இபின் காதிர் முகையதீன்* |

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அலங்கார இலக்கியவகையில் புதுமைகள் பல செய்துள்ளார். இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம், ஆறெழுத்தலங்காரம், தமிழலங்காரம் ஆகியன இயற்றியுள்ளார்.*

*சொல் அடிப்படையில் இருகருத்துக்களை இணையாகத் தருவது இருசொல் அலங்காரம் (எ.கா. அரசனில்லாத நாடு; புருஷனில்லாத வீடு). தமிழின் பெருமைகளைப் பாடுவது தமிழலங்காரம்.*

7. 'கோயிற் கடவுளர் குடிவிட்டேகல்' என்ற தலைப்பிலமைந்த *பாடல்:*

கணி வண்ண னென்றொரு மன்னவன் சிந்தை கலங்கக்கச்சி
மணிவண்ணன் தன்திருக் கோயில்விட் டேகிவரச் செய்ததும்
பணிவண்ணச் செஞ்சடைச் சொக்கர்முன் போய்வரப் பண்ணியது.
அணிவண்ணம் எட்டொடு தென்றல் வெற்(பு) என்ற அருந்தமிழே

- தமிழலங்காரம் (9)

*பிற வகைகளோடு இணைந்தும் அலங்கார இலக்கியம் வளர்ந்தது. அவை: அலங்கார ஒயிற்கும்மி: ஸ்ரீரங்கம் வழிநடை அலங்கார ஒயிற்கும்மி.*

*அலங்காரச் சிந்து: ஸ்ரீகிருஷ்ண பகவான் அலங்காரச் சிந்து*

## 15. அலங்கார சட்கம்

1. அறுமணிமாலை.
2. இறைவனுக்கு அழகுபெற சூட்டப்படும் ஆறுவகைப் பாக்களால் அமைந்த மாலையெனப் பொருள்படும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் 'திருநெல்வேலி திருப்பணி ஆறுமுகநாய்னார் அலங்காரசட்கம்' பாடியுள்ளார்.

## 16. அலங்கார பஞ்சகம்

1. ஐவகை மாலை
2. இறைவனுக்கு அழகு செய்து ஐவகை யாப்புக்களால் பாடப்படும் இலக்கிய வகை. இதில வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், வண்ணம் ஆகியவை மாறிமாறி அந்தாதியாகத் தொடுக்கப்படும்.
3. இதற்கு வெ.பா.(செ.22) ந.பா (செ.17), பி.ம. (15), சி.பா (ம.7), இ.வி (844), தொ.வி.(282), மு.வீ (யா.ஒ.147). பி.தீ (24) சுவாமி, (169) ஆகியவை இலக்கணம் செய்துள்ளன.
4.

> வெண்பா அகவல் கலித்துறை அகவல்
> விருத்தம் சந்த விருத்தம் இவ்வகையே
> மாறிமாறி அந்தாதித் தொடையாய்ப்
> பாடுவது அலங்கார பஞ்சகம் ஆகும் (மு.வீ)

5. தண்டபாணி சுவாமிகளின் தில்லைத் திருவாயிரத்தில் உள்ள அலங்காரப் பஞ்சகம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

## 17. அலைசல்

1. அலைச்சல், நிலையில்லாதது.
2. உயிர் ஒரு நிலையில் இல்லாமல் அலைப்புண்டு வருந்துவதற்கு இரங்கிப் பாடும் இலக்கிய வகை.
3. -----
4. -----

5. இவ்விலக்கிய வகையை அறிமுகம் செய்தவர் இராமலிங்க சுவாமிகள் ஆவார். இவற்றை இவர் பதிகங்களாகப் பாடியுள்ளார். எனவே இவை அலைசல் பதிகங்கள் எனப்படுகின்றன.

(எ.டு)

அவத் தொழிலுக்கு அலைசல்

அருட்டிறத்து அலைசல்

## 18.அனுராக மாலை

1. சிற்றின்ப மாலை.
2. கனவில் ஒருத்தியைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இன்புற்றதைத் தலைவன் ஒருவன் தன் உயிர்த் தோழனிடம் உரைத்ததைக் கூறும் இலக்கிய வகை.
3. இதற்கு பிர(15), சி.பா(6.11), இ.வி(864), மு.வீ (யா.ஒ.87) பி.தீ(9), சுவாமி (168) ஆகியவை இலக்கணம் செய்துள்ளன.
4. 

கனவில் ஒருத்தியைக் கண்டுகேட்டு உண்டு உயிர்த்து
இனிமையுறப் புணர்ந்ததைத் தன் இன்னுயிர்ப்
பாங்கற்குத் தலைமகன் பகர்ந்ததாக
நேரிசைக் கலிவெண்பாவான் நிகழ்த்துவது
அனுராக மாலையாம் ஆயுங்காலே! (மு.வீ)

5. ‘விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு’ எனும் நூலில் ‘வீரபாண்டியன் அனுராக மாலை’ என்றொரு இலக்கியம் பற்றிய குறிப்பை சிலம்புச்செல்வர் ம.பொ.சி. (ப.13) தந்துள்ளார்.

## 19. அறுபது

1. அறுபது பாடல்கள்.
2. பலவகை யாப்புக்களை அமைத்து ஒரு பொருள் குறித்து அறுபது பாடல்களாகப் பாடப்பெறும் பிற்கால இலக்கிய வகை.
3. -----
4. -----
5. ஜெகவீர பாண்டியனார் வெண்பாக்களால் பாடிய ‘அணி அறுபது’

அண்ணாவின் வாழ்க்கையைத் தமிழ்மாறன் பாடிய ‘அண்ணா அறுபது’

## 20. ஆயிரம்

1. ஆயிரம் பாடல்கள்.
2. பலவகை யாப்புக்களையும், பல பிரபந்தங்களையும் உள்ளடக்கிய பல்சுவைத் தொகுப்பு இலக்கிய வகை.
3. -----
4. -----
5. இவ்விலக்கிய வகையை அறிமுகம் செய்தவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். இவர் திருவரங்கத் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் ஆகிய தொகுப்புக்களை இயற்றியுள்ளார்.

## 21. ஆத்திசூடி

1. ஆத்தி மாலையைச் சூடியவன்; சிவபெருமான்.
2. ஔவையாரின் 'ஆத்திசூடி' சிவபெருமானை வாழ்த்தி 'ஆத்திசூடி' என்று தொடங்குவதால் இதற்கு 'ஆத்திசூடி' எனப் பெயரிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இதே நோக்கிலும் போக்கிலும் எழுதப்பட்ட இலக்கியங்கள் ஆத்திசூடி என அழைக்கப்பட்டன. எழுத்தை முதலாகக் கொண்டு அகரவரிசைப்படி இவ்விலக்கியம் அமைவதால் இதனை 'அட்சரமாலை' என்றும் (பார்க்க ப.19) அழைக்கலாம். ஆனால் ஆத்திசூடி என்ற பெயரே நிலைத்துவிட்டது. இதற்கான மூல இலக்கியமாக 5 ஆம் திருமுறையின் 97 ஆம் பதிகம் திகழ்கிறது. இதில் அண்டம், ஆகி, இட்ட, ஈறில், உச்சி, ஊரிலா, எந்தை, ஏன, ஐயன், ஒருவனாகி, ஓத, ஔவதன் என்று பாடல்களின் முதல் எழுத்துக்கள் உள்ளன.
3. -----
4. -----
5. ஔவையாரின் ஆத்திசூடியே இவ்விலக்கிய வகையின் முதல் இலக்கியமாகும். (12 ஆம் நூற்.) இதனைத் தொடர்ந்து பல ஆத்திசூடிகள் பாடப்பட்டன. ஆத்திசூடி இன்றும் பாடப்படும் இலக்கிய வகையாகத் திகழ்கிறது.
6. பாரதியார் - புதிய ஆத்திசூடி

   பாரதிதாசன் - ஆத்திசூடி

ஆத்திசூடி இலக்கியம் எந்த நோக்கத்திற்காகப் பாடப்படுகிறதோ, அந்த நோக்கத்திற்கேற்பப் பெயர்பெறும் தன்மை தற்காலத்தில் காணப்படுகிறது.

(எ.கா)

| | | |
|---|---|---|
| தமிழ்சூடி | - | வ.சுப.மாணிக்கனார் |
| ஆய்வுசூடி | - | இராம.பெரியகருப்பன் |
| நெறிசூடி | - | நாரா.நாச்சியப்பன் |
| அறிவியல் சூடி | - | ச.மெய்யப்பன் |
| நீதிசூடி | - | சோம.இளவரசு |

## 22. ஆற்றுப்படை

1. வழிப்படுத்துதல்.
2. ஒருவன் ஒன்றை அடைந்த வழி, அதனை அடையப்பெறாத மற்றொருவனுக்கு, அதன் பெருமையையும், அதனை அடையும் முறையையும் கூறி வழிப்படுத்தும் நோக்கில் பாடப்படும் இலக்கிய வகை. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் பொதுமை நோக்குடைய இலக்கிய வகை.

   சங்க காலத்திலேயே செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாகத் திகழ்ந்த இதன் இலக்கணம் தொல்காப்பியத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

   கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
   ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
   பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
   சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும் - தொல்.1037

3. பிற்காலப் பாட்டியல் நூல்கள் பல இதற்கு இலக்கணம் சொல்கின்றன. ப.பா.(இ.118-20), வெ.பா (செ.30), ந.பா.(செ.28) பிர (12), சி.பா (ம.8:2.3). இ.வி(873), தொ.வி(266) மு.வீ. (யா.ஒ.129), பி.தீ(21) ஆகியவற்றில் ஆற்றுப்படை இலக்கணம் சொல்லப்படுகிறது.
4. 

   அகவற் பாவால் விறலி பாணர்
   கூத்தர் பொருநர் நால்வருள் ஒருவர்

பரிசிற்குப் போவாரைப் பரிசு
பெற்று வருவார் ஆற்றிடைக் கண்டு
தலைவன் கீர்த்தியும் கொடையும் கொற்றரிடம்
அறைவது ஆற்றுப்படை யாகும்மே (மு.வீ)

5. சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படைத் துறையமைந்த பாடல்கள் வருமாறு:

புலவராற்றுப்படை - புற.48, 49, 141

விறலியாற்றுப்படை - புற 64, 105, 103; பதிற் 40, 49, 57, 60, 78, 87

பாணாற்றுப்படை - புற 68, 69, 70, 138, 141, 155, பதிற் 67.

பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), திருமுருகாற்றுப் படை ஆகிய ஐந்து ஆற்றுப்படை நூல்கள் உள்ளன.

ஆற்றுப்படை இலக்கியம் இன்றும் வாழும் இலக்கியவகையாக வளம் பெற்றுள்ளது.

6.

சான்றோரிடம் ஆற்றுப்படுத்தல் - ஸ்ரீ ஞானியார் ஆற்றுப்படை
மொழி கற்க ஆற்றுப் படுத்தல் - செந்தமிழ் ஆற்றுப்படை
ஊர் நோக்கி ஆற்றுப் படுத்தல் - பூம்புகார் ஆற்றுப்படை
மாணவர்களை ஆற்றுப்படுத்தல் - மாணவராற்றுப்படை
நூலாசிரியர்களை ஆற்றுப்படுத்தல் - அச்சக ஆற்றுப்படை
இரவலர்களை ஆற்றுப் படுத்தல் - இரவலராற்றுப்படை
தலம் செல்ல ஆற்றுப்படுத்ததல் - திருத்தணிகை ஆற்றுப்படை

பிற சான்றுகள்:

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்
புலவர் ஆற்றுப்படை - குலாம் காதிறு நாவலர்
நெஞ்சாற்றுப் படை - தொழுவூர் வேலாயுத முதலியார்
மாணாக்கராற்றுப்படை - நாராயணசாமி ஐயர், கருவூர்கன்னல்
திருப்போரூர் ஆற்றுப்படை - ஏ.முனுசாமி பிள்ளை
புலவராற்றுப்படை - கிருஷ்ணமாச்சாரியார்
இறையனாராற்றுப்படை - நாராயணசாமி ஐயர்
அச்சக ஆற்றுப்படை - மு.இளங்கோவன்

*மக்கள் திலகம் பற்றிய மாணவர் ஆற்றுப்படை* - *மாருதிதாசன்*

*7.*

பழியறு சிறப்பின் குழித்தலை ஆகும்
மேற்கில் கருவூர் கிழக்கில் திருச்சி
ஏற்புடன் இவ்விரு நகரிடை நிலந்தனில்
குழிந்து கிடக்கு மிடமாய் இருந்தலின்
குழித்தலை யாமெனச் சேது செப்புவர்

– மாணாக்கராற்றுப்படை (கருவூர் மணிமாறன்)

புரிவையுங் துடியுமிப் பொலிமலி இல்லம்
போந்து முற்றம் புக்கீராயின்
கடந்து, போந்தும் வறிமுகம் கண்டு
அடங்க லாகா அன்பொடு தழீஇ
முகமன் கூறி. முன்றில் நீங்கி;
அகமகிழ் வுடனே அகநகர் எய்தித்
தகவுடை இருக்கை தன்னுடன் அளித்து
வெகுசுவைப் பொருட்கள் உண்ணத் தருவார்

- இரவலர் 220-228 (கோபெரு.திருவரங்கன்)

## 23. ஆனந்தக் களிப்பு

*1.* பெருமகிழ்ச்சி.

*2.* இறைவன் மீது கொண்ட பக்தியால் பெருமகிழ்வுடன் பாடப்படும் இலக்கிய வகை.

*3.* -----

*4.* -----

5. திருவாசகத்தின் திருவம்மானைப் பகுதிக்கு ‘ஆனந்தக் களிப்பு’ என்று மற்றொரு பெயரும் உண்டு. ‘ஆனந்தக்களிப்பு’ - அதாவது ‘அகமேலீடு’ என்று இதனைக் குறிப்பர். மாணிக்கவாசகரின் ‘ஆனந்தக் களிப்பு’ பின்வரும் பாடலில் புலனாதல் காண்க:

சூடுவேன், பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன், கூடி முயங்கி முயங்கி நின்று
ஊடுவேன், செவ்வாய்க்கு உருகுவேன்; உள் உருகித்
தேடுவேன். தேடிசிவன் கழலே சிந்திப்பேன்

ஊடுவேன். போத்தும் மலர்வேன், அனல் ஏந்தி
ஆடுவான். சேவடியே பாடுதும்காண், அம்மானாய்

- திருவா. திருவம் (17)

*பின்னால் தாயுமானவர் இதைத் தனியொரு இலக்கிய வகையாகக் கருதுமாறு தனிவடிவம் தந்தார். இவை இரண்டடிப் பாக்கள்; ஒரெதுகை உடையவை. ஒவ்வோர் அடியும் மூன்று சீர்களையும், தனிச்சொல்லையும் கொண்டு அமையும். நான்கு சீர் கொண்டும் சிந்துப்பாவினம் அமையப் பாடப்படுவதுண்டு.*

6. *பிறசான்றுகள்:*

*தொட்டிக்கலை மதுரகவி ஸ்ரீ சுப்பிரமணியரின் ஸ்ரீ அம்பலவாண தேசிகரின் ஆனந்தக் களிப்பு.*

*மௌனம் சிவானந்த சுப்பிரமணிய சுவாமிகளின் சிவானந்தக் களிப்பு.*

*மாதவச் சிவஞான யோகிகளின் திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு.*

*மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் திருஞானசம்பந்த சுவாமிகளின் ஆனந்தக் களிப்பு.*

*மஸ்தான் சாகிபு பாடிய ஆனந்தக் களிப்புப் பாடல்கள்.*

*பீர்முகம்மது அப்பாவின் ஞானானந்தக் களிப்பு.*

*கடுவெளிச் சித்தரின் ஆனந்தக் களிப்புப் பாடல்கள்.*

*கல்போது பிச்சுவையரின் திருப்பரங்குன்றம் ஆனந்தக் களிப்பு.*

*திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை பாடிய முருகைய பங்கஜாக்ஷியின் ஆனந்தக் களிப்புப் பாடல்கள்.*

## 24. இங்கித மாலை

1. *நய மாலை*
2. *இறைவனை எண்ணி மனங்குளிருமாறு இனிமையாகப் பாடப்படும் மாலை இலக்கிய வகை. நயமாகப் பேசுவதை இங்கிதமாகப் பேசுபவர் என்பது உலக வழக்கு. 'கடவுளிடத்து மானிடப் பெண்டியர் நயந்த பக்கம்' என்ற முறையில் பாடப்படுவது என்பர். இதற்கு வெளிப்படை பொருள், உட்பொருள் என இருபொருள்கள் உள்ளன.*
3. -----
4. -----

5. இராமலிங்க அடிகளாரின் 'இங்கித மாலை' இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

## 25. இரகசியம்

1. மறைபொருள்.
2. இறைவனையும், இறையருள் தன்மையையும் பாடும் தத்துவ இலக்கிய வகை.
3. -----
4. -----
5. முதற்சான்று:

   போக ரகசியம் - நாத முனிகள் (9:10நூற்)
6. பிறசான்றுகள்

| | | |
|---|---|---|
| திருக்கோட்டியூர் நம்பி இரகசியம் | - | திருக்கோட்டியூர்நம்பி (12 நூற்) |
| திருக்கோளூர்பெண்பிள்ளை-இரகசியம் | | திருக்கோட்டியூர்நம்பி (12 நூற்) |
| பெரியவாச்சான்பிள்ளை இரகசியம் | - | பெரியவாச்சான் பிள்ளை |
| பிரபந்த இரகசியம் | - | பெரியவாச்சான் பிள்ளை |
| திரயக்கட்டு இரகசியம் | - | பெரியவாச்சான் பிள்ளை |
| அட்டாதச இரகசியம் | - | பிள்ளைலோகாசரியார் (15. நூற்) |
| அருளிச் செயல் இரகசியம் | - | அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் (15.நூற்) |
| பஞ்சார்த்த இரகசியம் | - | பின்பழகிய பெருமாள் ஜீயர் (15.நூற்) |
| சிவ இரகசியம் | - | ஒப்பிலாமணி தேசிகர் (17 நூற்) |
| தகராலய இரகசியம் | - | பாம்பன் சுவாமிகள் |

தகராலய ரகசியம் எனும் நூல் முதலாங்காண்டம், இரண்டாங்காண்டம் எனும் இருகாண்டங்களை உடையது.

முதலாம் காண்டம் நூல் வரலாற்றியல், பிண்ட தகர வித்தையியல், அண்ட தகர வித்தையியல் ஆகிய பகுதிகளைக் கொண்டது. இரண்டாம் காண்டம். ஐயமறுத்தருளியல், தோத்திரவியல், முடிவியல் ஆகிய பகுதிகளைக் கொண்டது.

## 26. இணை மணிமாலை

1. இருபா இணையும் இலக்கியம்.
2. வெண்பாவும் கலித்துறையும் இரண்டிரண்டாக மாறிமாறி அந்தாதித் தொடையில் நூறு பாடல்கள் தொகுக்கப்பட்டு அமையும் இலக்கிய வகை.
3. இதன் இலக்கணத்தை ப.பா (இ.66), வெ.பா (செ.17), ந.பா (செ.2), பிர.ம.(8), சி.பா (ம.4:1,2), இ.வி (818), தொ.வி (282:1.2) மு.வீ (யா.ஒ.89) பி,தீ (10) ஆகிய பாட்டியல் நூல்கள் சொல்கின்றன.
4.

வெண்பா அகவல் வெண்பாக் கலித்துறை
பண்பான் ஈ ரைம்பது அந்தாதி
இயலின் வகுப்பது இணைமணிமாலை (இ.வி)

## 27. இயன்மொழி

1. இயல்பை மொழிதல்.
2. பாடல் தலைவனுடைய இயல்பைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை. புறநானூற்றில் இயன்மொழித் துறையில் அமைந்த பாடல்கள் பல உள்ளன.
3. பிற்காலப் பாட்டியல் நூல்களுள் முத்துவீரியத்தில் மட்டும் இதற்கான இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது.
4.

இக்குடிப் பிறந்தோர்க்கு எல்லாம் இக்குணம்
இயல்பு என்றும் நீயும் அவற்றை உடையை
என்றும் இன்னோர் போல நீயும் இயல்பாக
வீயென்றும் உயர்ந்தோர் எழுத்துமற்று அவனை
வாழ்த்துவதாக வழுத்தல் இயன்மொழி
வாழ்த்தாம் என்ன வழுத்தினார் புலவர் (மு.வீ.யா.ஒ.167)

5. இயன்மொழி வாழ்த்து - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
இயன்மொழி வாழ்த்து - மணிவாசக சரணாலய அடிகள்

## 28. இரங்கல்

1. வருந்ததுல்.
2. பிரிவு அல்லது மறைவு குறித்து வருந்திப்பாடும் கையறு நிலைப்பாடல் வகை. சங்க இலக்கியத்தில் இரங்கற் பாடல்களின் ஆட்சி மிகுதி. தலைவன் பிரிவு உணர்ந்து தலைவி இரங்கும் பாடல்கள். பருவ வரவு கண்டு இரங்கும் பாடல்கள், மகள் பிரிவு கண்டு நற்றாய் இரங்கும் பாடல்கள், தலைவன் இறந்தமை கண்டு பரிசிலர் பாடிய கையறு நிலைப்பாடல்கள், புலவர்கள் பாடிய புலம்பற் பாடல்கள் என இரங்கற் பொருண்மை குறித்த பாடல்கள் சங்க இலக்கியத்தில் ஆட்சி பெற்றுள்ளன.

   பக்தி இலக்கியத்தில் திருமங்கை யாழ்வார் பாடியவற்றுள் பிரிவு கண்டு இரங்கும் பாடல்கள் சங்க அகப்பாடல்களைத் தழுவி அமைந்தவை. பெரிய திருமொழியில் உள்ள 'தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கல்' (2:7) தலைவனைப் பிரிந்த தலைவி வண்டு முதலியவற்றை விளித்து இரங்கல் (3:6), உடன்போக்கில் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கல் (3:7), திருமாலிடம் ஈடுபாடு கொண்ட தலைமகளது செயல்கண்டு நற்றாய் இரங்கல் (4:8), பிரிவாற்றாது வருந்தும் தலைவியை நினைத்து தாய் இரங்கல் (5:5) போன்று பல பாடல்கள் உள்ளன. நம்மாழ்வாரும் இரங்கற் பொருண்மையில் பல பாடல்கள் (4:2, 6:6, 7:5 9:2) பாடியுள்ளார். பிற்காலத்தில் இரங்கல் இலக்கிய வகையில் தம் திறமையை நாட்டியவர் இராமலிங்க சுவாமிகள் ஆவார்.

3. -----
4. -----
5. புறநானூற்றிலுள்ள கையறுநிலைப் பாடல்களே இவற்றிற்கான முதல் இலக்கியச் சான்றுகள் எனலாம்.
6. பிறசான்றுகள்:

   பட்டினத்தாரின் 'இறந்த காலத்திரங்கல்'.

   இராமலிங்க அடிகளாரின் 'அச்சத்திரங்கல்', 'திருவருட்கிரங்கல்'.

   சிற்றம்பல நாடிகளின் 'திரிகாலத்திரங்கல்'.

சௌந்தரராஜ உடையாரின் துரோபதையம்மன் இரங்கல்.

மனோன்மணி அம்மையாரின் பழனி இரங்கல்.

சிற்றம்பல நாடிகளின் திரிகாலத்திரங்கல், செல்காலத்திரங்கல் (54 கண்ணிகள்), நிகழ்காலத்திரங்கல் (50 கண்ணிகள்), வருங்காலத்திற்கிரங்கல் (49 கண்ணிகள்) ஆகிய மூன்று பகுதிகளை உடையது.

## 29. இரட்டைமணிமாலை

1. இரு பாக்களால் தொடுக்கப்படுவது.
2. வெண்பாவும் கலிப்பாவுமாக மாற்றி மாற்றி இணைத்து அந்தாதித் தொடையில் இருபது பாடல்களால் பாடப்படும் இலக்கியவகை. இணைமணி மாலையுடன் (30) இணைத்து நோக்கத்தக்கது.
3. இதன் இலக்கணத்தை ப.பா (இ 67), வெ.பா (செ.17:1,2; 36:1,2), ந.பா. (செ.12:1,2), பிர.ம. (8), சி.பா (ம 4:1), இ.வி (819), தொ.வி (278), மு.வீ (யா.ஒ.88), பி.தீ (10), சுவாமி. (169) ஆகிய பாட்டியல் நூல்கள் மொழிகின்றன.
4.

   இருபஃது அந்தாதித்து வெண்பாவும்
   கட்டளைக் கலித்துறையும் கலந்து உரைத்தல்
   இரட்டை மணிமாலை என்மனார் புலவர் (மு.வீ)

5. இதன் முதற்சான்றிலக்கியம் காரைக்காலம்மையாரின் திருவிரட்டை மணிமாலை (5 நூற்). பதினோராம் திருமுறையில் கபிலதேவநாயனார் (8 நூற்) பாடிய சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை ஆகிய இருநூல்கள் உள்ளன.
6. பிற சான்றுகள்

| | | |
|---|---|---|
| மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை | - | குமரகுருபரர் |
| கொடியிடையம்மை இரட்டை மணிமாலை | - | குமரகுருபரர் |
| கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை | - | தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| சரவணதேசிகர் இரட்டைமணிமாலை | - | சிதம்பர சுவாமிகள் |

| | |
|---|---|
| புதுவை வேதபுரீசர் முருகக்கடவுள் மீது இரட்டை மணிமலை | புதுவை பு.சு.பொன்னுசாமி பிள்ளை. |

## 30. இரட்டைச்சொல் யமக மாலை

1. ஒரு சொல் இருமுறை மடக்கி வருவது.
2. ஒரு சொல் இருமுறை மடக்கி நான்கடியிலும் வந்து பொருள் வேறுபடப் புனையப்படும் பாவகை.
3. -----
4. -----
5. புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரின் 'திருத்தணிகை இரட்டைச்சொல் யமக மாலை' இதற்கான சான்று நூலாகும்.

## 31.இரத்தினமாலை

1. இரத்தினம் போன்ற உயர் கருத்துக்களைக் கூறுவது.
2. உயர்ந்த கருத்துக்களை மாலையாகத் தொகுத்துக் கூறும் இலக்கிய வகை. இரத்தினாவளி, இரத்தினாகாரம் என்றும் அழைக்கப்படுகிறது.
3. -----
4. -----
5. 

| | | |
|---|---|---|
| உபதேச இரத்தினமாலை | - | மணவாள மாமுனிகள் (14. நூற்) |
| குரு இரத்தினாவளி | - | வேதாந்த தேசிகர் (13-14 நூற்) |
| தத்துவ இரத்தினாவளி | - | வேதாந்த தேசிகர் (13-14 நூற்) |

## 32. இருதயம்

1. உள்ளத்தை வெளிப்படுத்துதல்.
2. -----
3. -----

4. -----

5. ஆசாரிய இருதயம் - அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் (15 நாள்)

6. இராமஹிருதயம் - வரதராஜுலு நாயுடு.

## 33. இருபா இருபஃது

1. இருபாவடிவில் இருபது பாடல்கள்.

2. வெண்பாவும், அகவலுமாக இருபது பாடல்கள் அந்தாதித் தொடை பெற்று அமையும் இலக்கியவகை. (வெண்பா, கலித்துறை மாறிமாறி இணையும் இருபது பாடல்களால் ஆனது இணைமணி மாலை).

3. இதற்கு ப.பா (இ.136), வெ.பா (செ.17:1), ந.பா (செ.11:2) பிர (8), சி.பா. (ம.4:3,4) இ.வி (822), தொ.வி (265), மு.வீ. (பா.ஏ.128), பி.தீ (21) ஆகிய பாட்டியல் நூல்கள் இலக்கணம் சொல்கின்றன.

4.

அகவல் வெண்பாவும் அந்தாதித் தொடையாய்
இருபது இணைந்துவர எடுத்துரைப்பது
இருபா இருபஃது என்மனார் புலவர் (மு.வீ)

5. முதற்சான்று: அருள் நந்தி சிவாச்சாரியாரின் இருபா இருபஃது (13.நூற்)

6. பிறசான்றுகள்:

இராசிபுரம் பெரிய விநாயகர் இருபா இருபஃது - எஸ்.பொன்னுசாமி செட்டியார்.

தியாகராஜ சுவாமி இருபா இருபஃது - ப.சோமசுந்தரதேசிகர்

பொய்யா விநாயகர் இருபா இருபஃது - முத்துதாண்டவராய பிள்ளை.

## 34. இலகரி

1. பேரலை, வெள்ளம்.

2. மனம் மயங்கும் வகையில் பாடப்படுகின்ற இனிய பாக்களால் ஆகிய இலக்கியம்.

3. -----

4. -----

5. சங்கரரின் சௌந்தர்யலகரி. இதனை வீரை. கவிராஜ பண்டிதர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் (16. நூற்)

இது ஆனந்த லகரி (ஆனந்த வெள்ளம்), சௌந்தர்ய லகரி (அழகு வெள்ளம்) என்ற இரு பகுதிகளை உடையது.

6. இராமலிங்க அடிகள் 'சல்லாப லகரி' பாடியுள்ளார். சங்கரரின் சௌந்தர்ய லகரியை அ.வெ.கிருட்டிணசாமி ரெட்டியாரும் மொழிபெயர்த்துள்ளார். கண்ணதாசன், 'அம்பிகை அழகின் அலைகள்' என்ற பெயரில் இதைத் தந்துள்ளார். தண்டபாணி சுவாமிகள் முருகானந்த லகரி பாடியுள்ளார்.

7.

*உளமகிழ் மகிழ்நர் சென்னி*
*உறுநதி விளக்க மாயோன்*
*கிளர்முடிப் பதும ராகக்*
*கேகுழாளிச் செம்பஞ் சேய்க்கும்*
*முளரிநின் பதங்கள் வேத*
*குழவுறப் பதித்த தவ்வாறு*
*எளியஎன் தலைமேல் வைக்க*
*இரங்குவ தென்று தாயே*

*– சௌந்தர்ய. திருவடிப்புகழ் (வீரை.கவிராச)*

## 35. இல்லற வெள்ளை

1. இல்லற மாண்பு.

2. இல்லறத்தின் மாண்பு குறித்து வண்ணமும் வெண்பாவுமாக ஒன்பது பாடல்களால் பாடப்பெறும் இலக்கியம்.

3. இதன் இலக்கணத்தை ப.பா (இ.106, 107) குறிப்பிடுகிறது.

4.

*கலைதரு வண்ணமும் வெள்ளையும் ஒன்பான்*
*நிலைபெறப் புணர்ப்பின் அஃது இல்லற வெள்ளை — ப.பா*

5. -----

## 36. இலாலி

1. இன்சொல்

2. இன்சொல்லால் வாழ்த்தும் இலக்கிய வகை.

'லால்' என்பது வடமொழியில், சிவந்த, செம்மையான, இனிய என்று பொருள்படும். லாலா கடை, இலட்டு என்ற பெயர்கள் அறிக. திருச்சி அருகில் 'இலால்குடி' எனும் ஊர் உள்ளது. இதன் பண்டைய பெயர் திருத்தவத்துறை என்பதாகும். இஸ்லாமியர்கள் வணிகத்தின் பொருட்டு இங்கு வந்தபோது நிலம் சிவந்த மண்ணாக இருந்ததால் இதனை 'லால்குடி' என்றழைத்தனர் என்பது செவிவழிச் செய்தி. வடமொழியாளர் கூட்டுறவினால் தமிழில் இணைந்த இ[illegible] இது.

3. -----

4. -----

5. சுப்பிரமணியர் லாலி - குமாரசுவாமி முதலியார்.

   நல்லூர் விசுவநாதர் - விசாலாட்சி ஊஞ்சல் லாலி - வேங்கட ரமணி ஐயங்கார்.

   செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் மயிலை நாதரின் லாலி.

   கோவிந்த ராஜு முதலியார் பாடிய ஸ்ரீ கிருஷ்ணலாலி.

   ஸ்ரீ செங்கல்வராய முதலியாரின் 'பூவிருந்தவல்லி கணபதி பேரில் லாலி'.

   முத்துக்குமார கவிராயரின் சுன்னாகம் ஐயனார் லாலி.

## 37. இலாவணி

1. எதிர்ப்பாட்டு
2. அம்மானை பாடுவது போல, ஒருவர் வினாத் தொடுக்க, மற்றவர் விடைதரும் போக்கில் அமைந்த இலக்கிய வகை. மகாராட்டிர இசைப்பாட்டு இலக்கியம். இதனை 'எரிந்த கட்சி; எரியாத கட்சி' என்று அழைப்பது பொதுவழக்கு. எனவே மன்மதனைச் சிவபெருமான் எரித்ததாக வரும் புராணக் கதையை இது மையமாகக் கொண்டது என்பர்.
3. -----
4. -----
5. உறையூர் சித்திரகவி சையத் இமாம் புலவர் இதில் தேர்ச்சி பெற்றவர். இவர் 'எரியாத கட்சி சிங்காரக் கேள்வி இலாவணி' என்ற நூல் இயற்றியுள்ளார். 'காமதகனக் கண்டனக் கட்சிக் கவிக் கேசரி தஞ்சை முத்தமிழ் வித்துவ பாப்புதாசரும், இலாவணி பாடுவதில் வல்லவர் என்பர்.

இதனை இல் + ஆ + அணி எனப் பிரித்து 'உள்ளமெனும் வீட்டில் குடிபுகுந்த ஆன்மாவுக்கு அழகு சேர்ப்பது' என்று பொருள் உரைப்பர். ஆனாலும் 'எதிர்ப்பாட்டு' என்பதே இதன் பொருளமைப்புக்குப் பொருந்தி வருகிறது.

## 38. இலீலை

1. திருவிளையாட்டல்
2. இறைவனின் திருவிளையாடல்களைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. முதற்சான்று: நவலிங்க லீலை (15 நூற்)

பிறசான்றுகள்

துறை மங்கலம் சிவப்பிரகாசரின் பிரபுலிங்கலீலை

பாம்பன் சுவாமிகளின் அட்டாட்ட விக்கிரக லீலை

வேலைய தேசிகரின் குருநமசிவாயர் லீலை

மீனாட்சி சுந்தரய்யரின் திருவாரூர் தியாகராச லீலை

## 39. இன்னிசைத் தொகை

1. இனிய பாடல்களின் தொகுப்பு.
2. இன்னிசை வெண்பாக்கள் எழுபது அல்லது தொண்ணூறு தொகுத்துப் பாடப்படும் இலக்கியம்.
3. இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் (இ.93) சொல்கிறது.
4.

தொண்ணூறேனும் எழுபதேனும்
இன்னிசை தொகுப்பின் இன்னிசைத் தொகையே (பன்.பாட்)

5. -----

## 40. உடற்கூறு

1. தாயின் வயிற்றில் கருவின் வளர்ச்சியைக் கூறுவது.
2. வண்ணப் பாடல்களில் ஒருவகை. இது உடற்கூற்று வண்ணம் என்றும் பெயர்பெறும். (எ.டு) பட்டினத்துப் பிள்ளையார் பாடல் தொகுதியில் உள்ள 'உடற்கூற்று வண்ணம்'.
3. -----

4. -----

5. பட்டினத்துப்பிள்ளையாரின் உடற்கூற்று வண்ணம்.

6. காளை ஹசன் அலிப் புலவரின் பஞ்சரத்தினத் தாலாட்டின் முதற்பகுதி 'உடற் கூறறியும் தாலாட்டு' எனப் பெயர் பெற்றுள்ளது.

உடலின் நிலையாமை பற்றி 'ஞான உடற்கூறு' எனும் எட்டுப் பாடல்கள் கொண்ட நூல் உள்ளது (இரத்தின நாயகர் சன்ஸ், 1953). வாலையானந்த சுவாமிகள் பழனியாண்டவர் பேரில் தத்துவப்பிரம்மயம் உடற்கூறு பாடியுள்ளார்.

## 41. உண்மை

1. தத்துவம்.

2. எடுத்துக்கொண்ட பொருளின் உண்மையைக் (தத்துவத்தை) கூறும் நூல்.

3. -----

4. -----

5. அத்துவித உண்மை - குமாரதேவர் (17. நூ)
உபதேசஉண்மை - மதுரை சிதம்பர சுவாமிகள் (17-18)
ஆறெழுத்துண்மை - இராமலிங்கர்
ஈமானுண்மை - அப்துல்காதர்

## 42. உபதேசம்

1. அறிவுரை.

2. அறிவுரை கூறும் இலக்கிய வகை. பண்டைக் காலத்து செவியறிவுறூஉ பாடல்கள் இப்பொருண்மையைக் கொண்டிருந்தன எனக் கருதலாம்.

3. -----

4. -----

5. தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் பண்டார சாத்திரத்தில் இடம்பெற்றுள்ள உபதேசப் பஃறொடை.

மணவாளமாமுனிகளின் உபதேசரத்தினமாலை.

அம்பலவாண தேசிகரின் உபதேச வெண்பா.

## 43. உபாக்யானம்

1. கிளைக்கதை.
2. இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் கிளைக் கதைகள் (உப + ஆக்யானம்) உபாக்யானம் என்ற பெயரில் பிற்காலத்தில் இலக்கியங்களாகச் செய்யப்பட்டன.
3. -----
4. -----
5. நளோபாக்யானம், குசேலோபாக்யானம் ஆகியவற்றை தேவராஜ பிள்ளை (17 நூ) பாடியுள்ளார். சடகோபர் உபாக் கியானத்தை வரதராசுலு நாயுடு (20 நூ) இயற்றியுள்ளார்.

## 44. உந்தியார்

1. மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று.
2. இருகைகளையும் இருமருங்கும் நேராக நீட்டிக் கால் விரல்களை மட்டும் தரையில் தாங்கிப் பாடிக் கொண்டே சுழன்று ஆடும் விளையாட்டு. இவ்வாறு உந்திக் குதித்து விளையாடும்போது பாடப்படுவது உந்தியார்.
3. -----
4. -----
5. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடிய 'திருவுந்தியார்' இந்த இலக்கிய வகையின் முதற்சான்றிலக்கியம் (9 நூற்).
6. பிற சான்றுகள்

| | | |
|---|---|---|
| திரு உந்தியார் | - | உய்ய வந்த தேவர் (12 நூ)<br>இராமலிங்க அடிகளார் |
| அவிரோத உந்தியார் | - | தவத்திரு சாந்தலிங்க<br>அடிகளார் (17-18) |
| சித்தாந்த உந்தியார் | - | சோமசுந்தர நாயகர் |
| உந்திப் பத்து | - | தண்டபாணி சுவாமிகள் |
| உபதேச உந்தியார் | - | ரமண மகரிஷி |
| திருவுந்தியார் | - | முருகைய பங்கஜாட்சி |
| சதக உந்தி, பதிக உந்தி | - | தண்டபாணி சுவாமிகள் |

7. பொதுவாக இவ்விலக்கியவகை சமய தத்துவங்களை எடுத்துரைப்பதாகவும், அது மகளிர் கூற்றாக வெளிப்படுவதாகவும் அமைந்துள்ளது. இத்தன்மை சிறப்பாக நோக்கத்தக்கது.

## 45. உயிர் வருக்கச் செய்யுள்

1. உயிரெழுத்துக்களை மட்டும் முதல் எழுத்துக்களாகக் கொண்ட செய்யுள்.
2. உயிர் எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாடலாக அமைந்த இலக்கிய வகை. விருத்தம் என்பது இனம், எழுத்து என்று பொருள்படும்.
3. கட்டளைக் கலித்துறையில் பன்னிரண்டு பாடல்களால் அமைவது.
4. -----
5. குறுக்குத்துறை முருகக் கடவுள் உயிர் வருக்கச் செய்யுள் கவிராஜ நெல்லையப்ப பிள்ளை. (திருநெல்வேலியில் உள்ள குறுக்குத்துறையில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள் மீது பாடப்பட்டது).

   மதுரை மீனாட்சியம்மை உயிர் வருக்க மாலை.

## 46. உலா

1. ஊர்வலம்.
2. பாட்டுடைத் தலைவன் உலா வரும் சிறப்பைக் கூறுவது. உலாப்போகும் தலைவனைக் கண்டு எழுபருவ மகளிர் தங்களை இழந்ததையும் தலைவன் சிறப்புக்களையும் பாடுவது.
3. உலா இலக்கியத்திற்கான வித்து தொல்காப்பியப் பாடாண்திணையில் உள்ளது.

   ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப (தொல்.1029)

   தேவாரத்தில் திருவாதிரைத் திருநாளில் திரு ஆரூர்ப் பெருமான் திருவீதி உலா வருவதை அப்பர் பாடியுள்ளார் (4:21-3). திருக்குருகை வீரட்டானத்தில் பெருமான் வீதி உலாச் சென்றதையும் அவர் பாடுகிறார். (4: 50-52)

   இதற்கான விரிவான இலக்கணத்தைப் பின்வரும் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன:

   ப.பா(இ. 47-54), வெ.பா(செ.26, 27), ந.பா (செ.20-21) பிர.14, சி.பா (6-10), இ.வி (858-63), தொ.வி (260), மு.வீ (யா.ஒ.124), பி.தீ.19, சுவாமி, 167.

4.

   இளமைப் பருவத் தலைமகன் குலனும்
   குடியும் பிறப்பு மங்கலம் பரம்பரை
   இவற்றான் இன்னான் என்பது தோன்ற

மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன்
பவனிவரப் பேதை முதலிய ஏழு
பருவப் பெண்களும் பார்த்து வணங்க
உலா வந்ததாக உன்னி நேரசைக்
கலி வெண்பாவால் கழறுவது உலாவே (மு.வீ)

5. முதற்சான்றிலக்கியம் ஆதியுலா எனப்படும் திருக்கயிலாய ஞானஉலா (கி.பி.9). பாடியவர் சேரமான் பெருமாள் நாயனார்.

6. பிறசான்றுகள்

| | | |
|---|---|---|
| மன்னர்கள் மீது பாடப்பட்டது | - | மூவருலா |
| இறைவன் மீது பாடப்பட்டது | - | திருக்குற்றாலநாதருலா, மதுரைச் சொக்கநாதருலா ஏகாம்பரநாதருலா |
| தலத்தின் மீது பாடப்பட்டது | - | திருவாரூருலா, பேரூருலா, தேவையுலா, அவிநாசியுலா |

பிற உலாக்கள்

| | | |
|---|---|---|
| சிலேடையுலா | - | தத்துவராயர் |
| ஞானஉலா | - | வேதநாயகம் சாஸ்திரியார் |
| குன்றத்து சண்முகநாதர் உலா | - | கல்போது பிச்சுவையர் |
| கோடீச்சுர உலா | - | சிவக்கொழுந்து தேசிகர் |
| திருச்செந்தூர் உலா | - | தண்டபாணி சுவாமிகள் |
| மதுரைச் சொக்கநாதருலா | - | புராணத்திருமலைநாதர் (16 நூ) |
| திருக்காளத்தி நாதருலா | - | சேறை கவிராசபிள்ளை (16 நூ) |
| இரத்தினகிரியுலா | - | சேறை கவிராசபிள்ளை |
| சேயூர் முருகன் உலா | - | சேறை கவிராசபிள்ளை |

பாட்டுடைத் தலைவனின் ஊரொடு பெயர் பெறும் உலா நூல்கள்:
திருவாரூர் உலா, தேவையுலா, அவிநாசியுலா

பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரைப் பெற்ற உலாக்கள்:
விக்கிரம சோழனுலா, ஏகாம்பர நாதருலா

ஊர்ப்பெயரோடும், இயற்பெயரோடும் வழங்கப்படும் உலாக்கள்:
மதுரைச் சொக்கநாதருலா, தஞ்சைப் பெருவுடையார் உலா

கடவுள் மீது பாடப்பட்ட உலா:

திருவிலஞ்சி முருகன் உலா

தம் ஆசிரியர் மீது பாடப்பட்ட உலா:

ஞானவிநோதனுலா

வள்ளல்கள் மீது பாடப்பட்ட உலா நூல்கள்:

கயத்தாற்றரசன் உலா. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா (படிக்காசுப் புலவர் : 17 நூ) கீழ் வேளூருலா, திருவாரூருலா, (அந்தகக்கவிவீரராகவ முதலியார் 17 நூ). தஞ்சைப் பெருவுடையார் உலா (கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்)

தற்கால உலா

காமராசர் உலா (அ.கு.ஆதித்தர்)

உலா நூல் முன்னிலை, பின்னிலை என்ற இரு அமைப்பினை உடையது. முன்னிலையில் பாட்டுடைத் தலைவனின் குலச்சிறப்பு, மரபு, கொடைச்சிறப்பு, நீராடல், அணிபூணல், நகர் வலம் முதலியவை இடம்பெறும். பின்னிலையில் தலைவன் உலாக்கண்ட எழு பருவ மகளிர் நிலை, தலைவனின் தசாங்கம் சிறப்பிக்கப்படும். மகளிர் விளையாட்டுக்களான சிற்றில் இழைத்தல், பாவையாடல், கழங்காடல், அம்மானையாடல், ஊசல் , கிளிக்குச் சொல் பயிற்றல், யாழ்மீட்டல், புனலாடல், பொழிலாடல் முதலியவை சொல்லப்படும்.

பருவ வயது வரையறை: பேதை (5-7 வயது), பெதும்பை (8-11), மங்கை (12-13), மடந்தை (14-19), அரிவை (20-25) தெரிவை (26-32), பேரிளம்பெண் (33-40)

'இறைவன் உலா வரும்போது ஏழு பருவ மகளிரும் காதல் கொள்கிறார்கள் என்றால் அங்கு தொனிப்பது நாயக-நாயகி பாவம். ஆன்மாக்களாகிய நாயகிகள் தெய்வமாகிய தங்கள் நாயகன் மீது காதல் கொள்கிறார்கள். ஆதி உலாவாகிய சேரமான் பெருமாள் செய்த உலா இந்த நிலையை உள்ளடக்கி இருக்கிறது. ஆகவே தான் அது ஞானஉலா எனவும் பெற்றது ... இதைக் 'கடவுள் மாட்டு மானிடர் நயந்த பக்கம்' என்று சொல்லலாம். இறைவனுக்குச் சொல்லிய உலாவை வேந்தர் 'மாந்தருக்கு ஏற்றும் போது பெரும்பிழை நேருகிறது ... இவ்வாறு காதல் கொண்டு அவசம் உறுபவர்கள் பொது மகளிர் என்ற புதுக் கருத்தைச் சொன்னார்கள். இது நேர்ந்துவிட்ட ஒரு பிழைக்கு அமைதி காணுகின்ற முயற்சியே' என்பார் அறிஞர் மு.அருணாசலம் (த.இ.வ.12 நூற் ப.27-28).

7. *பேதைப் பருவத்தாள்:*

பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால் தூதைச்
சிறுசோறு அருதொழிலாள்
ஒன்றுரைத் தொன்றுன்னி ஒன்று செய்தொன்றின்கட்
சென்ற மனத்தளாம் சேயிழையாள் (ஆதியுலா)

*அரிவைப் பருவத்தாள்:*

என்னுயிர் காப்பமே என்றால் இறந்தமதன்
தன்னுயிர் மீட்டும் தருவாரோ? - முன் நெடியோன்
பெய்போதில் ஒன்று குறைத்தார் பெறுஞ்சிறுவன்
கொய்போதில் ஒன்று குறையாரோ? - தெய்வீகக்
கல் வேழம் உண்ணக் கடிவேழந் தந்தமையின்
வில் வேழ முந்தருகை வேண்டாரோ (திருவாரூருலா)

மாதர் மடலேற மானிடர்கள் ஈடேற
பூதவகை ஐந்தும் போந்தேற - நீதத்
திருமுரு காற்றுப் படையான் செய்யூரான் வெவ்வேள்
ஒரு முருகன் போந்தான் உலா (சேயூர் முருகன் உலா)

*இறைவன் உலாவைக் கண்டோர்:*

விரிந்த சடை அண்ணல் உலா மேவுவார் உள்ளம்
புரிந்து நெகிழ்வது போலத் - தெரிந்த
இரவிச் சுடர்கண்டு இதழ் அவிழ்ந்து சேந்த
பருவக் கமல முகை பாராய் (மதுரைச் சொக்கநாதருலா)

*திருமணத்தின்போது தோழியர் இறைவியிடம் வஞ்சப் புகழ்ச்சியாகச் சொல்லியவை:*

மாமியார் உண்டோ மலையில் பெருநீலி
யாம் அவளும் சக்களத்தி ஆகாளோ - காமிக்கை
தோல்சேனைக் கோபிச்சைச் சோற்றுக்கோ - ஓட்டுண்கோ
மேல் சாம்பற் கோசுடலை வீட்டிற்கோ - நாற்சந்தி
அம்பலத்துக்கோ எலும்பின் ஆபரணம் பூணுகைக்கோ
வெம்பனைமா லைக்கோபேய் வேலைக்கோ - சம்பந்தம்
நல்லிடத்தில் சோதித்தாய் நம்போ லியருக்கும்
இல்லறத்திற்கு இத்தனையும் ஏற்குமோ- (திருக்காளத்தி நாதருலா)

## 47. உலாமாலை

1. மாலை வடிவில் பாடப்படும் உலாப் பொருண்மையுடைய இலக்கியம்
2. ----
3. ----
4. ----
5. ஆளுடைப் பிள்ளையார் திருஉலா மாலை - நம்பியாண்டார் நம்பி.

## 48. ஊசல்

1. மகளிர் ஆடும் ஊஞ்சல் விளையாட்டு
2. கலம்பகத்தில் ஓர் உறுப்பாக உள்ளது. உலா இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகளில் ஒன்றாகப் பாடப்படுகிறது. சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் ஊசல் பாடல்கள் காணப்படுகின்றன. ஊசல் வரிப்பாடல்கள் சிலம்பில் இடம்பெற்றுள்ளன.

   தலைவனை வாழ்த்தும் இலக்கியமாகத் தோன்றிய இது, காலப்போக்கில் சமய இலக்கிய வகையாக மாற்றம் பெற்று இறைவனையும் இறைவியையும் வாழ்த்துவதாக வளர்ச்சி பெற்றுள்ளது.
3. வெ.பா.செ (23), ந.பா.செ (25), பிர (10), சி.பா.ம (6), இ.வி (845), தொ.வி (276), மு.வீ (யா.ஒ.161).
4. 

   வரன்முறை சுற்றத்து அளவாம் பொன்னூசல் வடிவுதுற்றே
   உரைசெய் கலித்தாழிசையே பொன்னூசல் என்று ஓதுவாரே

   (ந.பா.செ.25)
5. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடிய 'திருப்பொன்னூசல்' முதற்சான்றிலக்கியம்
6. பிற சான்றுகள்

   பிள்ளைப் பெருமாளையங்காரின் 'சீரங்க நாயகர் ஊசல் திருநாமம்': அஷ்டப் பிரபந்தங்களுள் ஒன்று.

   செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் பிற்கால மயிலைநாதர் பாடிய 'ஊசல் இலக்கியம்'.

1950இல் முலைப்பால் சுவாமிகள் பாடிய நூதனக் கல்யாணப் பாட்டுத் திரட்டில் உள்ள பிள்ளை ஊசல், கன்னி ஊசல்.

சிங்கார வேலு முதலியார் பாடிய திருப்போரூர் இன்னிசைப்பா ஊசல்.

சிதம்பரநாத சுவாமிகள் பாடிய திருப்போரூர் சந்நிதிமுறை ஊசல்.

சோணாசல பாரதி பாடிய கம்பை சந்நிதி முறை ஊசல்.

அனந்த கிருஷ்ண ஐயங்கார் பாடிய 'மணவாள மாமுனிகள்' 'ஊசல் திருநாமம்'

டி.எஸ்.இராஜகோபாலனின் 'திருவல்லிக்கேணிப் பெருமான் பொன்னூசல்'.

ஆவணப் பெரும்புலவர் வேலாயுதனார் பாடிய திருவான் குளத்தீசர் திருவூசல்.

7.

மண்ணுண்டாய் எனச்சீறும் அன்னை காண
வணங்கொண்ட நெறிவாயை ஆந்து காட்ட
விண்கண்ட சோதீதனை அதனுட் கண்டு
வியன்ஞால முதலாவீர் என்று நிற்றாள்?
பண்கொண்ட உயர்கானம் மாடந்தோறும்
பரவவுயர் திருவல்லிக் கேணி வந்தீர்
கண்கொண்ட அருளாலே நோக்கி என்றன்
கடுவினைகள் காய்தகையீர் ஆடீருசல்

–திருவல்லிக்கேணி பெருமான் பொன்னூசல்

8. இறைவனை ஊசலில் வைத்து ஆடல் நிகழ்த்தும்போது பாடப்பெறும் இலக்கிய வகை, பிள்ளைத்தமிழில் ஒரு பருவமாகவும், கலம்பகத்தில் ஓர் உறுப்பாகவும் இடம்பெற்றது. பின் தனி வகையாக உருப்பெற்றது.

மக்கள் ஆடலோடு தொடர்புடைய இலக்கிய வகை, இறைவனைப் பாடும் இலக்கியமாக வளர்ச்சி பெற்றது எனலாம்.

### 49. ஊர் இன்னிசை

1. தலைவன் ஊரைப் புகழ்ந்து பாடும் பாடல் வகை.
2. பாட்டுடைத் தலைவன் ஊரை 50, 70, 90 ஆகிய எண்ணிக்கையிலான இன்னிசை வெண்பாக்களால் பாடுவது.
3. வெ.பா.செ(14), இ.வி (825), இ.வி (யா.ஒ, 132), பி,தீ (22) ஆகிய பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் சொல்கின்றன.

4.

*பாட்டுடைத் தலைவன் ஊரைச் சார*
*இன்னிசை வெண்பா எழுபா னிருபஃது*
*ஏனும் எழுபானேனும் ஐம்பஃது*
*ஏனும் இயம்புவது ஊர் இன்னிசையே* (மு.வீ)

5. ----

6. ----

## 50. ஊர்நேரிசை / பேர் நேரிசை

1. தலைவன் ஊரை / பெயரைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை.
2. பாட்டுடைத் தலைவன் ஊரை/பெயரை 50, 70, 90 ஆகிய எண்ணிக்கையில் அமைந்த நேரிசை வெண்பாக்களால் சிறப்பித்துப் பாடுவது.
3. வெ.பா. (செ.14), இ.வி. 830, மு.வீ (யா.ஒ) (133, 134), பி.தீ(23)
4.

*இன்னிசை போல இறைவன் பெயர் ஊர்*
*தன்னின் இயல்வதுதான் நேரிசையே* (இ.வி.)

5. -----
6. -----

## 51. ஊர் வெண்பா

1. ஊரைச் சிறப்பித்துப் பாடும் இலக்கிய வகை.
2. பாட்டுடைத் தலைவன் ஊரைப் பத்து வெண்பாக்களால் சிறப்பித்துப் பாடுவது.
3. வெ.பா. செ.(22.1), ந.பா.செ.(16:4), மு.வீ (யா.ஒ.135) பி.தீ.23.
4.

*வெண்பாவால் சிறப்பித்து ஊர் ஒருபான்*
*பா விரித்துரைப்பது ஊர் வெண்பா ஆகும்* - மு.வீ.

5. பதினோராம் திருமுறையில் ஐயடிகள் காடவர் கோனின் க்ஷேத்திரத் திருவெண்பா (கி.பி.9 நூற்)
6. பிற சான்றுகள்

பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா (17நூற்)

துறை மங்கலம் சிவப்பிரகாசரின் துறைசை வெண்பா (17.நூற்)
பகழிக் கூத்தரின் திருச்செந்தூர் வெண்பா (18 நூற்)
குகை நமசிவாயரின் திருவருணை வெண்பா
திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றால நன்னகர் வெண்பா (18 நூற்)

## 52. எச்சரிக்கை

1. முன்னறிவிப்பு.
2. இறைவன் முன் அறிவித்துப் பாடுதல். அரசன் திருவோலக்கத்திற்கு வரும்போது அல்லது நகருலா வரும்போது அரசனை முன்னிலைப்படுத்தி அவையோர்க்கு அவன் வருகையைத் தெரியப்படுத்தி எச்சரிக்கை செய்வது எனும் வழக்கம் பின்னர் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் இலக்கிய வகையாக வளர்ந்தது.
3. ----
4. ----
5. செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் உள்ள மயிலைநாதர் இயற்றிய 'எச்சரிக்கை'

   திருப்போரூர் சந்நிதி முறை எச்சரிக்கை.

   பூவை வைத்தீஸ்வரர் பேரில் எச்சரிக்கை.

   பூவை முருகன் பேரில் எச்சரிக்கை.

   ஸ்ரீ கண்ணபிரான் எச்சரிக்கை.

   சௌந்தரராஜ உடையாரின் துரோபதையம்மன் எச்சரிக்கை.

   சோணாசல பாரதியின் கம்பை சந்நிதிமுறை எச்சரிக்கை.
6. -----

## 53. எட்டெட்டந்தாதி

1. எட்டுவகை யாப்பில் அமைந்த இலக்கியம்.
2. எட்டு வகை யாப்பில், யாப்பிற்கு எட்டுப்பாடலாக அறுபத்தி நான்கு பாடல்களால் அமையும் அந்தாதி இலக்கிய வகை.
3. ----
4. ----
5. காஞ்சி காமாட்சி எட்டெட்டந்தாதி.

## 54. எண் செய்யுள்

1. பாடல் எண்ணிக்கை

2. பாடலின் எண்ணிக்கையைப் பெயராகக் கொண்டு அமையும் இலக்கியத் தொகுதி.

பாட்டுடைத் தலைவனின் ஊர், பெயர் ஆகியவற்றைச்சிறப்பித்து பத்து முதல் ஆயிரம் பாடல்கள் வரை பாடுவது. இதனை இலக்கிய வகை என்பதைக் காட்டிலும் இலக்கியத் தொகுதி எனக் கருதுவதே பொருந்தும். பண்டைக் காலந்தொட்டே ஒரு பொருள் நுதலிய பாடல்களைத் தொகுத்து எண்ணிடும்முறை வழக்கில் இருந்தமை அறியத்தக்கது.

3. *இ.வி. (848), மு.வீ. (யா.ஒ.119), பி.தீ. (15).*

4.

*பாட்டுடைத் தலைவன் ஊரும் பெயரும்*
*பத்து முதல் ஆயிரம் அளவும் பாடி*
*எண்ணால் பெயர் பெறல் எண் செய்யுள் ஆகும்* (மு.வீ)

5.

| | | |
|---|---|---|
| 8 | : | கார் எட்டு |
| 40 | : | இன்னா நாற்பது, இனியவை நாற்பது |
| 50 | : | ஐந்திணை ஐம்பது |
| 66 | : | பாரதி அறுபத்தாறு |
| 70 | : | ஈட்டி எழுபது, ஏரெழுபது |
| 200 | : | இன்னிசை இருநூறு (அரசஞ் சண்முகனார்) |
| 900 | : | அரும்பைத் தொள்ளாயிரம் (ஒட்டக்கூத்தர்) |
| 1000 | : | தில்லைத் திருவாயிரம் |

6. -----

7.

*உருச்சிறிய அச்சாணி உருள்விக் கும்பெருந்தேரை*
*உருச்சிறிய ஊற்றங்கால் உண்பிக் கும்உலகோரை*
*உருச்சிறிய அணுப்பிளவே உண்டாக்கும் உயராற்றல்*
*உருக்குறிய நம்மண்ணா உயர்ந்துவிட் டார்இமயம் போல்*

*- அண்ணா நாற்பது (புலவர் சுந்தர சண்முகனார்)*

## 55. எண்ணெழுத்து மாலை

1. எண்ணும் எழுத்தும் தொடர்ந்து மாலையாகத் தொடுக்கப்படுவது.
2. முதற்பாடல் எண்முறையிலும் அதைத் தொடரும்பாடல் எழுத்து முறையிலும் மாறி மாறித் தொடர்ந்து வருவது. இருவர் இணைந்து பாடுவதும் உண்டு. ஒருவர் எண்முறையில் அமைந்த பாடல்களைப் பாட, அடுத்தவர் எழுத்து முறையில் அமையும் பாடலைப் பாடுவார்.
3. ----
4. ----
5. (எ.டு) மதுரை பரிபூரண விநாயகர் எண்ணெழுத்து மாலை இளம்புலவர் வேங்கடராமன் எண்முறை பாட அருட்பாவலர் சேதுராமன் எழுத்துமுறை பாடியுள்ளார்.

## 56. எழுகூற்றிருக்கை

1. ஒன்று முதல் ஏழுவரை எண்கள் முறையே ஒவ்வொன்றாக ஏறியும் இறங்கியும் வருவது.
2. சிறுவர்கள் விளையாட்டு வகையை அடியொற்றி எழுந்தது. ஏழு கட்டங்களாக வகுத்துக்கொண்ட சதுரங்களில் சிறுவர்கள் உள் நுழைந்தும் வெளியேறியும் வரும் விளையாட்டு இதற்கு அடிப்படையானது.
3. 'எழுகூற்றிருக்கையாவது ஏழு அறை ஆக்கி முறையானே குறு மக்கள் முன்நின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியான் வருவாரை ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது' என்று யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் (96:2) இதனை விளக்குகிறார்.
4.

*கோதில் ஏழறை ஆக்கிக் குறுமக்கள்*
*முன்நின்றும் புக்கும் போந்தும் விளையாடும்*
*பெற்றியால் வழுவாமை ஒன்று*
*முதல் ஏழீறாய் முறையானே*
*இயம்புவது எழுகூற்றிருக்கை ஆகும்* (மு.வீ. யா.ஏ.162)

இது இருவகையாகப் பாடப்பெறும். ஒன்று முதல் ஏழு முடிய ஏறி ஏறி, இறங்கி இறங்கி ஏழில் நிற்பது ஒருவகை. ஒன்று முதல்

ஏழு முடிய ஏறி ஏறி, இறங்கி இறங்கி ஒன்றில் நிற்பது வேறொரு வகை. இது இக்காலச் சிறுமியர் ஆடும் பாண்டி(ல்) ஆட்டத்துடன் ஒத்துள்ளது.

5. திருஞானசம்பந்தர், நக்கீரதேவ நாயனார், திருமங்கையாழ்வார், அருணகிரிநாதர், தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் திருவெழுகூற்றிருக்கைப் பாடல்கள் பாடியுள்ளனர்.

## 57. எழுபது

1. எழுபது பாடல்கள்
2. பாடல்களின் தொகுப்பாக அமையும் இலக்கியம்.
3. ----
4. ----
5. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் இடம்பெற்ற பழைய இலக்கிய வகை. (எ.டு) ஐந்திணை எழுபது.
6. திருவீங்கோய்மலை எழுபது - நக்கீர தேவநாயனார் (11 ஆம் திருமுறை).

   இது சாதி அடிப்படையிலான இலக்கியவகையாகப் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றது எனக் கருத இடமுண்டு.

   ஏரெழுபது (ஏரின் பெருமை)

   சிலையெழுபது

   கம்பர் பாடிய இந்நூல்கள் காராளர் (வேளாளர்) பெருமையைச் சொல்கின்றன.

   ஈட்டியெழுபது - செங்குந்தர் சிறப்பு

   எழுப்பெழுபது - இறந்த செங்குந்தர் மீண்டெழுந்த சிறப்பு

   ஊர் எழுபது - ஐந்து கோட்டை நாட்டு மறவர் பெருமையைச் சொல்வது.

## 58. எழுபா எழுபது

1. எழுவித யாப்புக்களில் பாடப்படும் எழுபது பாடல்கள்.
2. ஏழு வகையான யாப்புக்களில் அந்தாதித் தொடர்புடன் ஒவ்வொரு யாப்பிலும் பத்துப் பாடல்களாக எழுபது பாடல்களில் அமையும் இலக்கியம்.

3. ---

4. ----

5. இன்னின்ன கடவுளரை இன்னின்ன பாவால் வாழ்த்த வேண்டும் என்று இந்நூல் கருதுவது ஒரு சிறப்பாகும்.

கடவுள் வாழ்த்து

| | | |
|---|---|---|
| சூரியன் | : | வெண்பா |
| சிவன் | : | கட்டளைக் கலித்துறை |
| சக்தி | : | வெண்டளைக் கலிப்பா |
| திருமால் | : | கட்டளைக் கலிப்பா |
| கணபதி | : | அறுசீர்விருத்தம் |
| முருகன் | : | எண்சீர் சந்தக்கலி |
| குரு | : | அகவற்பா |

## 59. ஏகபாதம்

1. ஓரடி

2. பாடலின் ஓர் அடியே நான்கு அடிகளிலும் மடங்கி வந்து வெவ்வேறு பொருள்தரும் இலக்கிய வகை.

3. ----

4. ----

5. திருஞானசம்பந்தரின் ஏகபாதப் பதிகம்.

6. பிறசான்றுகள்
தண்டபாணி சுவாமிகளின் திருவரங்கத் திருவாயிரத்தில் உள்ள ஏகபாதப் பாடல்கள்.

## 60. ஏகபாத நூற்றந்தாதி

1. பாடலின் ஓர் அடியே நான்கு அடிகளிலும் மடங்கி வந்து வெவ்வேறு பொருள் தருமாறு அந்தாதித் தொடையால் அமைந்த நூறு பாடல்கள் கொண்ட இலக்கிய வகை.

2. ----

3. ----

4. ----

5. அரசஞ்சண்முகனாரின் ஏகபாத நூற்றந்தாதி

## 61. ஏகாதசமாலை

1. பதினோரு பாடல்கள்
2. ஏகம் = 1;  தசம் 10

   பதினோரு பாடல்களை மாலைபோல் தொடுத்து அகவல் விருத்தத்தால் பாடப்படும் இலக்கியம்.
3. ----
4. ----
5. திருநாவுக்கரசர் மீது நம்பியாண்டார் நம்பி (10 நூற்) பாடிய திருநாவுக்கரசுத் தேவர் திருவேகாதச மாலை.

## 62. ஏசல்

1. ஒருவர் மற்றவரை ஏசுதல்
2. பள்ளு இலக்கியத்தில் மூத்த பள்ளி ஏசல், இளைய பள்ளி ஏசல் என்று முக்கிய கூறாக அமைந்த இது பிற்காலத்தில் தனி இலக்கிய வகையாக ஏற்றம் பெற்றது.
3. சிந்துப்பா வடிவம். கண்ணிகளாகப் பாடப்படுவது. கண்ணியின் முதலடி கேள்வியாகவும், இரண்டாமடி பதிலாகவும் அமைவது. இதனால் அம்மானையுடன் இது அமைப்பு ஒற்றுமை உடையது. பாடுபொருள், பாவடிவம், அமைப்பு, பாடும்முறை ஆகியவை இதனை ஒரு வாய்மொழி இலக்கியமாகக் காட்டுகின்றன. இதன் வேறுபெயர்கள் : சம்வாதம், வாக்குவாதம், தர்க்கம், சம்பிரதம்.
4. ----
5. வள்ளி தெய்வானை ஏசல்

   வீராசாமி செட்டியார் பாடிய கல்யாண ஏசல்

   எட்டுக்குடி ஏசல்

   திருப்பரங்கிரி முருகக் கடவுள் பேரில் தாய் மகளேசல்

   அகமது லெப்பை அலிம் சாகிப் (18 நூற்) பாடிய தாய்மகளேசல்
   பாவநாசம் ஏசற் பிரபந்தம்

   ஸ்ரீரெங்கநாயகி அம்மாள் பாடிய கல்யாண சம்பிரதம் என்னும் சம்பந்தி மாப்பிள்ளை ஏசல்

   ஸ்ரீ ரெங்கநாயகிக்கும் நாச்சியாருக்கும் சம்வாதம்

   சித்திராங்கிக்கும் சாரங்கனுக்கும் தர்க்கம்

   மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்குவாதம்.

## 63. ஏலப்பாட்டு

1. ஏலேலோ என்று முடியும் பாட்டு.
2. ----
3. ----
4. ----
5. இராமாயண ஏலப்பாட்டு - சீனிவாச ஐயங்கார்.

புகைவண்டி ஏலப்பாட்டு

பலசரக்கு ஏலப்பாட்டு - கோ.சி.சுப்புராயர்

கலப்பிரளய ஏலப்பாட்டு

சேதுபதி ஏலப்பாட்டு

## 64. ஏற்றம்

1. ஏற்றத்தில் நீர் இறைப்போர் வேலை செய்யும்போது களைப்பை மறக்கப் பாடுவது.
2. இரு சீரடிகளால் அமைந்த இலக்கியம். நாட்டுப்புறப்பாடல் வகை.

பாடும் பொழுதே 1, 2, 3 என்று 8 வரை எண்ணி, நீர் இறைத்த பின்னர் 10, 20, 30 என்று பத்தின் மடங்குகளாக எண் வரப்பாடுவது வழக்கம். பல பொருண்மைகளிலும் பலபுராணக் கதைகளையும் சேர்த்துப் பாடுவது. காதலும் காமப் பொருளும் இடையிடையே விரவி வரும். மழை வேண்டிப் பாடுவதும் உண்டு.

3. -----
4. -----
5. ஞான ஏற்றப்பாட்டு - வேதநாயகம் சாஸ்திரியார்

விராட பர்வ ஏற்றப்பாட்டு

அரிச்சந்திரன் ஏற்றப்பாட்டு

இராமாயண ஏற்றப்பாட்டு

குசேலர் ஏற்றப்பாட்டு - இராமச்சந்திர குருசாமிதாசர்

(1500 அடிகள்)

பாரதிதாசன் ஏற்றப்பாட்டு பாடியுள்ளார்.

குற்ற மற்ற கொள்கை - தம்பி
கொண்ட திந்த நாடு
கற்ற வருக் கெல்லாம் - தம்பி

*கல்வி தந்த நாடு*
*வெற்றி மறவர்கள் - தம்பி*
*வேல் மறவர் நாடு*
*மற்ற வரும் வாழத் - தம்பி*
*வழி வகுத்த நாடு*

## 65. ஐம்படை விருத்தம்

1. சக்கரம், வில், வாள், சங்கு, தண்டு ஆகிய திருமாலின் ஐந்து படைக்கலங்களை ஆசிரிய விருத்தத்தால் போற்றும் இலக்கிய வகை.
2. ----
3. ப.பா (இ.45) மட்டும் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளது.
4.

*சககரம் தனு வாள் சங்கொடு தண்டு இவை*
*ஐம்படை விருத்தம் ஆகும்* -ப.பா.

## 66. ஐம்பது / ஐந்திணைச் செய்யுள் / ஐந்திணைப்பா

1. ஐம்பது வெண்பாக்கள்
2. அகப்பொருள் பாடுவதற்கேற்ற பழைய இலக்கிய வகையான ஐந்திணைச் செய்யுள், ஐங்குறுநூறு ஆகியவற்றை அடியொற்றி இது வளர்ந்திருக்கலாம்.
3. ஐந்திணைகளை வெண்பா, வஞ்சி, கலி, வண்ணம், அகவல் ஆகியவற்றால் பாடுகின்றது. இதற்கான இலக்கணத்தை இ.வி (849), மு.வீ. (யா.ஒ.82), பி.தீ.8 ஆகிய பாட்டியல் நூல்கள் சொல்கின்றன.
4.

*புணர்தல் முதலிய ஐந்து உரிப்பொருளும்*
*அணிபெறக் குறிஞ்சி முதலிய ஐந்திணை*
*யினையும் இயம்புவது ஐந்திணைப் பாவே* - (மு.வீ.)

5. ஐந்திணை ஐம்பது - மாறன் பொறையனார் (3-5 நூற்)
திணைமாலை நூற்றைம்பது - கணி மேதாவியார் (3-5 நூற்)
ஐந்திணை எழுபது - மூவாதியார்

## 67. ஒப்பாரி

1. இறந்தவர்களுக்காக இரங்கிப்பாடுவது

2. மக்களின் வாய்மொழி இலக்கியத்தில் ஒப்பாரிப் பாடல்களாகத் தோற்றம் பெற்ற இவை ஏட்டிலக்கியத்தில் இழந்ததற்காக வருந்தும் நிலையில் வரிவடிவம் பெற்றன.

3. ----

4. ----

5. -----

6. சிலப்பதிகாரத்தில் கோவலனின் வெட்டுண்ட உடலை மடியில் கிடத்தி கண்ணகி புலம்புவது, இராமாயணத்தில் கணவன், வாலியின் உடலை அணைத்துத் தாரை அரற்றுவது, தசரதன் இறப்பு கண்டு கைகேயி துயரம் மேலிட்டு அழுவது, தம்பி கும்பகருணன் போரில் மடிந்தபின் அவனை நினைத்து இராவணன் கண்ணீர் வடிப்பது, தாய் மண்டோதரி புலம்புவது, லோகிதாசன் பாம்பு தீண்டப்பட்டு இறந்தது கண்டு சந்திரமதி கதறுவது ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டுக்களாகும். இந்நாளில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் ஆசிய ஜோதி கவிதையில் இடம்பெற்றுள்ள மகன் இறப்புக்கு யசோதையின் புலம்பல் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

பிரலாப ஒப்பாரி - வேதநாயக சாஸ்திரிகள்

அன்னை அழுங்கல் ஒப்பாரி - அத்திரி சுப்பிள்ளை

ஏகதிருப்பாட்டுமேல் ஒப்பாரி - முத்துத் தம்பிப்புலவர்

மாதர்கள் ஒப்பாரிக் கண்ணி

7. கோவலன் வெட்டுண்ட உடல்கண்டு கண்ணகி புலம்பல்:

*பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ*
*மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு*
*என்னுறு வினைகாணா இதுவென உரையாரோ*
*யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்*
*தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ!*

- சிலப். ஊர்சூழ். 40-44

வாலியை இழந்த தாரையின் புலம்பல்:

*துயராலே தொலையாத என்னையும்*
*பயிராயோ? பகையாத பண்பினாய்!*

*செயிர்தீரா விதிஆன தெய்வமே*
*உயிர்போனால் உடலாரும் உய்வரோ?*

*- கம்ப. கிட்கிந்தா. 4099*

*மகனை இழந்த சந்திரமதியின் புலம்பல்:*

*பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து*
*பசியால் அலைந்தும் உலவா*
*அனியாய வெங்கண் அரவால் இறந்த*
*அதிபாவம் என்கொல் அறியேன்!*
*தனியே கிடந்து விடநோய் செறிந்து*
*தரைமீ துருண்ட மகனே*
*இனியாரைநம்பி உயிர்வாழ்வ மென்றன்*
*இறையோனும் யானும் அவமே*

*- அரிச்சந்திரபுராணம், ப.490*

## 68. ஒயிற்கும்மி

1. ஒயிற்பாட்டும் கும்மிப்பாட்டும் இணைந்த நாட்டுப்புற இலக்கிய வகை.

2. ஒயிலாட்டத்தின்போது பாடப்படும் கும்மிப்பாட்டு, கும்மி என்ற வகை; பெண்கள் பாடுவது. ஒயிற்கும்மி என்பது ஒயிலாட்டம் ஆடுகின்ற ஆண்கள் பாடுவது.

   வண்ணக் கைக் குட்டைகளைக் கட்டி வட்டமாகக் கூடி நின்று ஒயிலாக இடுப்பில் ஒருகை வைத்து வளைந்தும் நெளிந்தும் குனிந்தும் நிமிர்ந்தும் ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம்.

3. ----

4. ----

5. முருகர் ஒயிற்கும்மி

   ஸ்ரீரங்கம் வழிநடை அலங்கார ஒயிற்கும்மி என்னும் பெரிய மோட்டார்கார் கும்மி.

## 69. ஒருதிணைமாலை

1. ஒரு திணையால் பாடப்படும் பா வரிசை.

2. ஐந்திணைகளுள் ஒரு திணையிலும், ஒரு துறையிலும் பாடல் தலைவனைப் போற்றும் இலக்கியவகை.

3. ----

4. ----

5. திருமங்கை ஒரு திணைமாலை

## 70. ஒருபா ஒருபஃது

1. ஒரு பா இனத்தில் பத்துப் பாடல்கள்.
2. ஒரு பா வகையில் ஒரு பொருள் பற்றி பத்துப் பாடல்களாகப் பாடப்படும் இலக்கிய வகை. இவ்விலக்கியம் அகவல், வெண்பா, கலித்துறையில் அமையும். அந்தாதியாகப் பாடுவதும் உண்டு. எனவே அகவல் அந்தாதி என்றும் இதனை அழைப்பர்.
3. ப.பா (இ.138), வெ.பா (செ 18:1, 2), பிர (11), இ.பா (ம.7:3,4) ,/ இ.வி. (23), தொ.வி (264), மு.வீ (யா.ஒ.127), பி.தீ.(21) ஆகிய பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் சொல்கின்றன.
4. 

   அகவல் வெண்பாக் கலித்துறை ஆகிய
   இவற்றுள் ஒன்றினால் அந்தாதித் தொடையாய்
   ஒருபஃது உரைப்பது ஒருபா ஒருபது (மு.வீ.)

5. முதற்சான்று

   திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது (பட்டினத்தடிகள் 10 நூற்)

6. பிறசான்றுகள்

   கல்லல் ஸ்ரீ மணிவாசக சரணாலய சுவாமிகள் மீது ஸ்ரீ அன்னபூரணியம்மாள் அஷ்டப் பிரபந்ததில் பாடிய ஒருபா ஒருபஃது, தண்டபாணி சுவாமிகள் பாடிய பழனி ஒருபா ஒருபஃது , சென்னை ஒருபா ஒருபஃது, சிதம்பரசுவாமிகள் பாடிய சரவண ஞானியர் ஒருபா ஒருபஃது

## 71. ஒலியந்தாதி

1. பல்வேறு ஒலி நயங்களில் அமையும் அந்தாதி
2. யாப்புக்குப் பத்துப் பாடலாக அந்தாதித் தொடையில் முப்பது பாடல்களாகப் பாடப்படும் இலக்கிய வகை. இது வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய யாப்புக்களில் யாப்புக்குப் பத்துப் பாடல்களாக அமையும். கட்டளைச் செய்யுட்களாக அமையும்.

(குறில், நெடில், வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் ஒன்றையொன்று அடுத்துத் தொடர்ந்து வரும் அமைப்பு கட்டளை எனப்படும்). அடிக்கு 16 கலையும், நான்கடிக்கு 64 கலையுமாக 30 பாடல்களால் பாடப்படுவது. முதலொலியல் அந்தாதி, பேரொலியல் அந்தாதி இதன் கிளை வகைகள்.

3. ப.பா (இ.75-77) வெ.பா (செ.13:1, 2), ந.பா (செ.14)பிர(8), சி.பா (ம.4:3), இ.வி (824), மு.வீ (யா.ஒ.196), பி.தீ. (18) ஆகிய பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளன.

4.

ஈண்டிய வண்ணம் ஈரெண்கலை முப்பான்
ஆண்டது ஒலியந்தாதி ஆகும் (இ.வி)

## 72. ஒருவருக்கப்பா

1. ஓரெழுத்து, அதன் பல உயிர்மெய் வடிவங்களுடன் ஒரு பொருள் நுதலிய முழுப்பாடலாக வருவது.
2. எந்த வருக்கம் (எழுத்து) பாடலில் மையப்படுத்தப்படுகிறதோ, அவ்வருக்கத்தின் பெயரால் இவ்வகை பெயர் பெறுகிறது.

தகர வருக்கம் : தகர வருக்கப்பா

சகர வருக்கம் : சகர வருக்கப்பா

3. தண்டியலங்காரம், யாப்பருங்கல விருத்தி ஆகிய நூல்கள் ஒரு வருக்கப்பாவுக்கு இலக்கணம் சொல்கின்றன.
4. ------
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருவரங்கத் திருவாயிரத்தில் ஒரு வருக்கப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

## 73. ஒடுக்கம்

1. ஒடுங்குவது, அடங்குவது.
2. இறைவன் தத்துவங்களை விளக்கி ஆசைகள் அடங்குவதையும், வாழ்வு ஒடுங்கும் தன்மையையும் உணர்த்துவது.
3. ----
4. ----
5. ஒழிவிலொடுக்கம் - கண்ணுடைய வள்ளல் (1375-1425)

ஒழிவிலொடுக்கம் - திருச்சிற்றம்பல நாடிகள் (1325-1350)

பரம உபதேச ஒடுக்கம் - ஆறுமுக மெய்ஞான சிவாசாரியார்

பழுத்துச் செத்தாலும் பிறந்து செத்தாலும்இப் பாழுடலம்
கொழுத்துச் செத்தாலும் மெலிந்து செத்தாலும் கொலைப்படினும்
புழுத்துச் செத்தாலும் புதைத்தாலும் காலில் புரியைக்கட்டி
இழுத்துச் செத்தாலும் சிதம்பரத் தேசென் றிறத்தல் நன்றே

என்பது இரட்டையர்கள் பாடிய ஒடுக்கப்பாடலாகும்.

## 74. ஓடம்

1. ஓடப்பாட்டு.
2. ஓடத்தை மையமாகக் கொண்டு கூறக் கருதிய பொருளைப் பாட்டாக வடிக்கும் இலக்கிய வகை.

   'ஏற்றப்பாட்டு' ஏற்றம் என்றும், ஊசற்பாட்டு 'ஊசல்' என்றும் பெயர்பெறுவது போல, ஓடப்பாட்டு 'ஓடம்' எனப் பெயர் பெற்றது. இது படகுப்பாட்டு, கப்பற்பாட்டு, கப்பற்சிந்து, கப்பல் ஏலப்பாட்டு என்றும் அழைக்கப்படும்.

   பொதுவாக ஒரு பயணத்தை மையமாகக் கொண்டு பாடப்படுவது ஓடப்பாட்டு என்று கருதிவிட முடியாது. மலையாள இலக்கியத்தில் ஓடப்பாட்டு, கப்பற்பாட்டு என்பவை பயணத்தை மையமாகக் கொண்டு பாடப்பட்டாலும் தமிழில் இது ஒரு உத்தியாகவே வைத்துப் பாடப்படுகிறது.
3. ----
4. ----
5. (எ.டு) நவராத்திரி ஓடம்: நவராத்திரிக் கால உற்சவ நிகழ்ச்சிகளை சொல்வது.

   இங்கிலீஷ் ஓடம் என்ற காலேஜ் ஓடம்: அக்கால ஆங்கில முறைக் கல்வியை ஏளனம் செய்வது, திருமணக் காட்சி ஓடம், திருமணத்தின் போது பாடப்படுவது.

   தூத்துக்குடி ஸ்ரீசங்கர ராமேசுவரர் ஸ்ரீபாகம்பிரியாவம்மை பேரில் கப்பற் சிந்து - மு.சுப்பராயபிள்ளை பாடியது

   முத்துக்குமாரசாமி கப்பல் ஏலப்பாட்டு - இராஜப்ப முதலியார் பாடியது

   சுண்ணாகம் ஐயனார் கப்பற்பாட்டு - முத்துக்குமார கவிராயர் பாடியது.
6. கப்பற்பாட்டு எனும் இலக்கியவகையும் இதனோடு வைத்து எண்ணத்தக்கது. இது கப்பலில் செல்வோர் பாடுவது

*போலமைந்த பாட்டு. இதனைக் கப்பற் சிந்து என்றும் கப்பற்கோவை என்றும் சொல்வர்.*

*(எ-டு)*

*கருமாணிக்கன் பாடிய கப்பற்கோவை*

*இராமலிங்கக் குருக்களின் மதுரை மீனாட்சி கப்பற்சிந்து*

*அரங்காசாரியாரின் ஞானக் கப்பல்*

*கணபதி ஐயர் பாடிய கப்பற் பாட்டு*

*பாவேந்தர் பாரதிதாசன் பாடிய 'மகாபலிபுரச் செலவு' பாடலை ஓடப்பாட்டாகக் கருதலாம்.*

7. *கப்பல் கொண்டு வரும் பொருட்கள்:*

திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்
செம்பஞ்சு திருநாமத் தாசிலாப் பொடியும்
கொங்கு வங்காளத்தில் விளைநலம் பேசி
குமரவேள் கப்பல் கொண்டுவருது அய்யா

*(கப்பற்பாட்டு - கணபதி ஐயர்)*

## 75. கட்டளை

1. *சமயத் தத்துவம்*
2. *'கட்டளை' என்பது 'வரையறை' எனப் பொருள்படும். சமயத்தத்துவங்களை வரையறுத்துச் சொல்வதால் இது 'கட்டளை' எனப் பெயர் பெற்றது. உரைநடையும் செய்யுளும் விரவி வரும் இலக்கியம்.*
3. ----
4. ----
5. *சிற்றம்பல நாடிக் கட்டளை - சிற்றம்பல சுவாமிகள் (14 நூற்)*

*தத்துவாமிர்தக் கட்டளை - தத்துவராயர் (15 நூற்)*

*அத்துவாக் கட்டளை - கமலை ஞானப் பிரகாசர் (16 நூற்)*

*உபதேச உண்மைக் கட்டளை - மதுரை சிதம்பரசுவாமிகள் (17 நூற்)*

*பிரம்மோபதேசக் கட்டளை - சண்முகசுவாமிகள்*

*சிவப்பிரகாசக் கட்டளை - புன்கூர் சிவப்பிரகாசர்*

சித்தாந்த சாதனக் கட்டளை - பூவை கலியாணசுந்தர முதலியார்

மெய்கண்ட சாஸ்திரக் கட்டளை - மு.அருணாசலம்

## 76. கட்டளைக் கலித்துறை

1. பா இனத்தின் பெயர்
2. நெடிலடி நான்கால் அமையும் கலித்துறைச் செய்யுள்
3. தொ.வி.236.
4.

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை -யா.கா.88

5. கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் பல உள்ளன

பெரியநாயகி அம்மன் கட்டளைக் கலித்துறை என்ற இலக்கியத்தை துறைமங்கலம் சிவப்பிரகாசர் செய்துள்ளார்.

காளத்திநாதர் கட்டளைக் கலித்துறை எனும் நூலை கவிராசபிள்ளை இயற்றியுள்ளார்.

கட்டளைக் கலித்துறை என்ற பெயரில் அல்லா பிச்சை புலவர் நூல் செய்துள்ளார்.

## 77. கட்டியம்

1. முன்னறிவிப்பு, சுருக்கம்
2. விரிந்த பொருளைச் சுருங்க உரைக்கும் இலக்கியவகை. தலைவன், இறைவன் புகும்போது எதிரேற்பதாகக் கூறுகின்ற சொற்களால் அமையும் இலக்கிய வகை. அரசன் புகழை அவையில் உள்ளோர் கேட்டு மகிழுமாறு கட்டியம் கூறுவோன் கூறுவது போல் பாடுவது.
3. பிர.திரட்டு 484
4. ----
5. திருப்போரூர் முருகன் சின்னகட்டியம் - மதுரை சிதம்பர சுவாமிகள்

திருப்போரூர் முருகன் பெரிய கட்டியம் - மதுரை சிதம்பர சுவாமிகள்

| | |
|---|---|
| திருக்கலசை சிதம்பரேசர் கட்டியம் | - தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| ஸ்ரீ ஞானமா நடராஜர் கட்டியம் | - தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| பெரிய கட்டியம், சின்ன கட்டியம் | - மயிலை நாதர் |

### 78. கண்ணி

1. இரண்டிரண்டாகக் கட்டுவது.
2. ஈரடித் தாழிசை வடிவம் நாளடைவில் இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. ஈரடித் தாழிசை வடிவமாக வரும்போது இரண்டாமடியின் ஈற்றுச் சொல் எல்லாத் தாழிசையிலும் ஒன்றாக வரும் இலக்கியம்.
3. ----
4. ----
5. கண்ணி எனும் வடிவம் பெற்று புலம்பல், கிளத்தல், முறையீடு போன்ற வகைகளாகப் பெயர் பெற்றது.

முதல்வன் முறையீடு (72 கண்ணிகள்)
அருட் புலம்பல் (117 கண்ணிகள்) - பட்டினத்தார்
இறந்த காலத்திரங்கல் (14 கண்ணிகள்)
நெஞ்சொடு புலம்பல் (37 கண்ணிகள்)

பலரொடு கிளத்தல் (10 கண்ணிகள்)
நெஞ்சொடு கிளத்தல் (10 கண்ணிகள்) - இடைக்காட்டுச் சித்தர்
அறிவொடு கிளத்தல் (10 கண்ணிகள்)

கண்ணிப் பாவடிவைத் திறம்படக் கையாண்டு அதற்கு இலக்கிய வகை என்னும் ஏற்றத்தைத் தந்தவர் தாயுமானவர் ஆவார்.

பராபரக்கண்ணி, எந்நாட்கண்ணி, பைங்கிளிக்கண்ணி போன்று 9 பகுதிகளாக அமைந்த 777 பாடல்களைத் தாயுமானவர் கண்ணி இலக்கிய வகையாகப் பாடினார். இந்த இலக்கிய வகையின் செல்வாக்கினால் கண்ணி இலக்கிய வகைகள் பல தோன்றின.

| | | |
|---|---|---|
| எக்காலக்கண்ணி | - | மஸ்தான் சாகிபு |
| ரகுமான் கண்ணி | - | மஸ்தான் சாகிபு |
| பாங்கிமார் கண்ணி | - | இராமலிங்க வள்ளலார் |
| முறையீட்டுக் கண்ணி | - | இராமலிங்க வள்ளலார் |
| திருவருட்கண்ணி | - | தண்டபாணி சுவாமிகள் |
| கிளிக்கண்ணி | - | நாமக்கல் கவிஞர் |
| கற்கண்டு மிட்டாய் கண்ணி | - | இராமலிங்கம்பிள்ளை |
| புலம்பற் கண்ணி | - | ச.மு.கந்தசாமிபிள்ளை |
| மதுரைச்சொக்கேசர்வந்தி | | |
| புட்டுக்கு மண்சுமந்த கண்ணி | - | பழனியப்ப செட்டியார். |
| மன்மதன் சரித்திரக் கண்ணி | - | வே.கி.நாராயணசாமிப் பிள்ளை |

## 79. கலம்பகம்

1. அகப் பொருண்மையும், புறப்பொருண்மையும் கலந்தது.
கலம் + பகம்; கலம் - 12; பகம் - 6; கலம்பகம் - 12+6:18
2. அகப்பொருண்மையும், புறப்பொருண்மையும் கலந்து 18 உறுப்புக்களால் ஆன இலக்கிய வகை.
3. ப.பா. இ 45.46, வெ.பா.செ. 10, 11, 12, ந.ப.செ.8-10, பிர.4,5.6, சி.பா.ம.2,3:1-2; இ.வி.812, 8,3, தொ.வி.258, மு.வீ.யா.ஒ.80, பி.தீ.7, சுவாமி 170. என அனைத்துப் பாட்டியல் நூல்களும் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளன.
4.

சொல்லிய கலம்பகம் சொல்லில், ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மனை ஊசல் யமகம் களிமறம்
சித்துக் காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள் சம்பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதியாக வரும் என மொழிப ப.பா.இ.45

தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற்றைந்து தொண்ணூறே
ஒப்பில் எழுபது அமைச்சியலோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளாளர்க்கென விளம்பினர் செய்யுள் ப.பா.இ.46

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் 'விருந்து' என்ற இலக்கிய வகை, கலம்பகம் போன்ற புதுமை இலக்கியங்களைக் குறிக்கும் என்பர்.

5. "களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்" - தொண்டரடிப். திருப்பள்ளி 5

என்று முதன்முதலாகக் கலம்பகம் என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

'பல்பூ மிடைந்த படலைக் கண்ணி' - பெரும் 174

எனும் பெரும்பாணாற்றுப்படைத் தொடருக்குப் 'பலபூக்கள். நெருங்கிய கலம்பகமாகிய மாலை' என்று நச்சினார்க்கினியர் உரை செய்துள்ளார்.

பிற்காலப் பாட்டியல் நூல்கள் இவ்விலக்கிய வகைக்கு விரிவான இலக்கணங்களைச் சொல்லியுள்ளன. கலம்பகத்தில் ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், ஒருபோகு, கலித்தாழிசை, கலித்துறை, கலிப்பா, கலிவிருந்தம், மருட்பா, யமகம் (மடக்கு) வகுப்பகவல், விருத்தம், வஞ்சித்துறை, வஞ்சிப்பா, வஞ்சி விருத்தம், வெண்டுறை, வெண்பா ஆகியவற்றால் பாடல்கள் யாக்கப்பெறும்.

இவ்விலக்கியத்தில் புயம், சித்து, காலம், மதங்கி, வண்டு, ஊசல், பொன்னூசல், களி, மறம், காலம், மதங்கி, வண்டு, கொண்டல் (கார்), மருள், சம்பிரதம், தவம், பாண், கைக்கிளை, ஊர், தழை, இரங்கல், தூது, குறம், சாற்று ஆகிய துறைகளில் பாடல்கள் அமையும்.

பாட்டியல் நூல்கள், பாடல் தலைவரின் தகுதிக்கும் சாதிக்கும் ஏற்ப செய்யுள் எண்ணிக்கையை வரையறுக்கின்றன. தேவர்க்கு 100, முனிவர்க்கு 95, அரசர்க்கு 90, அமைச்சர்க்கு 70, வணிகர்க்கு 50, வேளாளர்க்கு 30 இது பாட்டியல் நூல்கள் வருணப்பாகுபாட்டிற்குத் தந்த முக்கியத்துவத்தைச் சுட்டும். தண்டபாணி சுவாமிகள், தம்முடைய திருமயிலாசலக் கலம்பகத்தில் கலம்பக உறுப்புக்களைக் குறித்துள்ளார்.

மயங்கி சைக்கொச் சக்கலிப்பாப் புயவகுப்பு அம்மானை
மறங்களிசித் தூசல்தழை வாழுமூர் மருட்பா
வயங்கெழிற்சம் பிரதமதாங் கிரங்ககழல்கட்டு மடக்கி
வண்குறம்பாண் கைக்கிளை பலவாறாய்த் தூது
தயங்குகழிக்கரைப் புலம்பல் காலமுதலாகத்
தமிழ்ப்புலவர்க் கருத்திலவர் தக்கதுறையெல்லாம்
இலங்குகலம் பகத்தினுக்கா மானாலுமொருவர்
நீரொன்ப தெனச்சிலநூ லியம்புதலுமுளவே (4)

*இவ்விலக்கிய வகையின் முதற்சான்று நந்திக் கலம்பகம் (9 நூற்). நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைப்பிள்ளையார் திருக்கலம்பகம் (10 நூற்)*

6. *புகழேந்திப் புலவரின் கொற்றந்தைக கலம்பகம் (13 நூற்)*

*தொல்காப்பியத் தேவரின் தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர் கலம்பகம் (15 நூற்)*

*குமரகுருபரரின் மதுரைக் கலம்பகம்.*

*தத்துவராயர் பாடிய ஞானவிநோதன் கலம்பகம் (16 நூற்)*

*துறை மங்கலம் சிவப்பிரகாசர் பாடிய திருவெங்கைக் கலம்பகம் (17 நூற்)*

*பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய திருவரங்க்க் கலம்பகம் (17 நூற்)*

*சைவ எல்லப்ப நாவலர் பாடிய திருவருணைக் கலம்பகம் (18 நூற்)*

*பூண்டி அரங்கநாத முதலியார் பாடிய கச்சிக் கலம்பகம்.*

*தண்டபாணி சுவாமிகள் பாடிய குன்றக்குடி முருகன் கலம்பகம்.*

*மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய வாட் போக்கிக் கலம்பகம்.*

*வீ.துரைசாமி முதலியாரின் கண்ணப்பநாயனார் கலம்பகம்.*

*தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய திருத்தணிகைக் கலம்பகம்.*

*குலாம் காதிறு நாவலர் பாடிய மதினாக் கலம்பகம்.*

*மருத்துவர் மறையரசன் பாடிய திரு.வி.க.கலம்பகம் முதலியவை குறிப்பிடத்தக்க கலம்பக நூல்கள் ஆகும்.*

*கலம்பக இலக்கியம், ஒரு புதுமை இலக்கியம் என்பதற்கு இதன் பாட்டியல் வரையறைகள் மீறப்பட்டுள்ளதே சான்றாகும். பதினெட்டு உறுப்புக்களைப் பாட்டியல் நூல்கள் கூற, பிச்சியார்,*

கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார், மோகினியார், கீரையார், திருவடிவகுப்பு போன்ற புதிய உறுப்புக்கள் இடம்பெற்றன. பாடல்களின் எண்ணிக்கையும் வேறுபட்டன.

## 80. கலம்பகமாலை

1. பல உறுப்புக்களும் பல பாவினங்களும் கலந்த பாமாலை
2. பன்மணிமாலை என்றும் அழைக்கப்படும். கலம்பகத்தின் சில உறுப்புகளும், சில பாவினங்களும் நீக்கிப் பாடினால் அது கலம்பக மாலை ஆகும் என்பர்.
3. ப.பா.இ.71, வெ.பா.செ.18, ந.பா.செ.14, பிர.மர.7, சி.பா.ம (3:2.3). இ.வி 814, தொ.வி.280, மு.வீ.யா.ஒ.94, பி.தீ.12, சுவாமி, 170 ஆகிய பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணத்தைச் சொல்கின்றன.
4.

*முற்கூறிய கலம்பகத்துள் வரும் ஒரு*
*போகும் அம்மனை ஊசலும் போக்கி*
*ஏனைய உறுப்புக்கள் எல்லாம் அமையப்*
*பாடுவதுதான் பன்மணிமாலை* (மு.வீ.)

5. -----
6. -----

## 81. கலித்துறை

1. கலித்துறை யாப்பால் பாடுவது
2. யாப்பால் பெயர்பெற்ற இலக்கிய வகை.
3. சி.பா (2:1.2)
4.

*சீர்மாங்கனி கூவிளங் கூவிளங் கொற்ற தேமா*
*நேர்மா விரண்டிற் றனியேகுறி னிற்கு மென்றால்*
*ஓர்மா புளியொடு குறுமாபுளி மாங்க னிச்சீர்*
*சேர்மா விரண்டு மதனக்கொடி தேர்கு வாயே* (சி.பா.)

5. சிதம்பர தேசிகரின் சரவணதேசிகர் கலித்துறை

ஞானசம்பந்த தேசிகரின் பண்டாரக் கலித்துறை, சொக்கநாதக் கலித்துறை.

சிற்றம்பல நாடிகள் சீடரின் சிற்றம்பல நாடியார் கலித்துறை

அருணாசலம் பிள்ளையின் வீட்டுநெறிக் கலித்துறை

வேலுச்சாமிப் பிள்ளையின் தேவார வைப்புத் தலக் கட்டளைக் கலித்துறை.

## 82. கலிப்பா

1. யாப்பால் பெயர் பெற்ற இலக்கிய வகை.
2. ----
3. கலிப்பாவைப் பற்றிய விரிவான இலக்கணம் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. ஒத்தாழிசைக்கலி, கலி வெண்பாட்டு, கொச்சகம், உறழ் என்று இது பின்னாளில் விரிவடைந்துள்ளது.
4. ----
5. திரிகூடராசப்பக் கவிராயரின் குழல்வாய் மொழியம்மை கலிப்பா (18 நூற்), ஆறுமுக மெய்ஞான சிவாசாரியாரின் வீரட்டேசுவர தோத்திரக் கலிப்பா ஆகியன இதற்கான சான்று நூல்களாகும்.

## 83. கலிவெண்பா

1. கலிவெண்பாவால் பாடப்படுவது.
2. யாப்பு அடிப்படையில் ஒரு பொருள் பற்றிக் கலிவெண்பாவால் ஆகிய இலக்கியவகை.
3. -----
4. -----
5. நக்கீர தேவ நாயனாரின் போற்றிக் கலிவெண்பா (8 நூற்)

   உமாபதி சிவாசாரியாரின் சிவத்தல சிவநாமக் கலிவெண்பா (14 நூற்).

   பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா (16 நூற்).

   குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பா (17 நூற்).

   கூழங்கைத் தம்பிரானின் நெல்லைக் கலிவெண்பா (18 நூற்).

*மதுரை சிதம்பர சுவாமிகளின் மீனாட்சியம்மை கலிவெண்பா (18 நூற்)*

*வ.சு.செங்கல்வராய பிள்ளையின் தணிகைக் கலிவெண்பா.*

*கி.வேங்கடசாமி ரெட்டியாரின் மாதர் நீதிக் கலிவெண்பா (1933)*

*ஆகியவை இவ்விலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.*

*'மாதர் நீதிகளைக் கலிவெண்பாவில் கூறும் நூல். இந்நூலைத் தாய் மகளுக்குரைத்து முறையாகப் பல நூல்களிலிருந்தும் திரட்டிய நீதிகளைச் சேர்த்துக் கூறியிருக்கிறேன்' என்று மாதர் நீதிக்கலிவெண்பாவின் முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.*

7.

சிறுவாரிக் குறுநோயைத் தேர்ந்துடனே நீக்க
உறுமுயற்சி செய்தே யுணவின் - மறுவின்றிக்
கையாள நன்கறிந்து கற்புவழி நின்றிடுவாய்
மையாரும் வேல்விழிசேர் மானனையாய் - வெய்யதொரு
பேய்பிடித்த தென்னப் பிதற்றிவரு மானிடர்தம்
தாயருத்த தென்னத் தனித்துறுவாள் (58-60)

## 84. கலியந்தாதி

1. *கலிப்பாடல்கள் அந்தாதித்து வருவது.*
2. *முப்பது கட்டளைக்கலி செய்யுட்கள் அந்தாதியாகப் பாடப்படும் இலக்கிய வகை.*
3. *ப.பா.இ.73, 74.*
4.

*வல்லின மெல்லின இடையின எழுத்துப்*
*புல்லி மருங்கு போகாது ஒன்றிக்*
*குறில் எனில் குறிலே நெடில் எனில் நெடிலே*
*பொருந்தி நாற்கலை கொண்டு ஓர் அடியாய்த்*
*திருந்தும் இவ்வகை நான்கு அடி ஆகியும்*
*ஓரொலி ஆகியும் எண்ணான்கு ஆகிய*
*கலையொடு பொருந்தியும் குறிலும் நெடிலும்*
*மறைமுதல் வரினும் அவ்வெழுத்து ஆகியும்*
*இப்பரிசு இயன்ற முப்பது கட்டளை*
*மிக்கது கலி அந்தாதி ஆகும் (ப.பா.)*

5. அதிவீரராம பாண்டியனின் திருக்கருவை கலித்துறை அந்தாதி, நமச்சிவாயக் கவிராயரின் சிங்கை உலகம்மை கலித்துறை அந்தாதி.

## 85. கவசம்

1. காப்பு.
2. உடலையும் உள்ளத்தையும் பாதுகாப்பதற்கு இறைவனை வேண்டுவதாக அமையும் இலக்கிய வகை. ஒவ்வொரு அங்கத்தையும் பாதுகாக்க வேண்டுவது இதன் சிறப்பாகும்.
3. ----
4. ----
5. வரதுங்க ராம பாண்டியனின் பிரம்மோத்தர காண்டத்தில் உள்ள சிவகவசம் (20 பாடல்கள்) இவ்விலக்கிய வகையின் முதற்சான்று (16 நூற்).
6. அதிவீரராம பாண்டியனின் காசிக் காண்டத்தில் உள்ள சக்தி கவசம் (13 பாடல்கள்).

   செவ்வை சூடுவார் பாகவதத்தில் உள்ள நாராயண கவசம் (25 பாடல்கள்).

   கச்சியப்ப முனிவரின் விநாயக புராணத்தில் உள்ள விநாயகக் கவசம் (9 விருத்தங்கள்).

   மற்றும் தேவராய அடிகளின் கந்த சஷ்டி கவசம், பாம்பன் சுவாமிகளின் சண்முக கவசம் ஆகியவை கவச இலக்கியத்தின் சான்றுகளாக அமைகின்றன.

   தொகுப்பு நூல்களில் ஒரு பகுதியாக இடம்பெற்ற இவை பின்னர் தனி நூல்களாகப் பாடப்பட்டன.

   'சக்தி கவசம்' என்பது 'தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருந்த துர்க்கன் என்னும் அசுரனை உமாதேவியார் சங்கரித்து அவ்விடரை நீக்கியது கண்டு அத்தேவியை வணங்கித் துதி செய்தது' என்று முன்னுரையில் குறிப்பிடப்படுகிறது.
7.

அங்கையிற் காகந் தாங்கும் பிரமாணி அருளினோடும்
துங்கமென் சென்னிகாக்க வயிணவி துகளிலாகம்
எங்கணும் காக்க. செய்ய செந்தொழில் உருத்திராணி
தங்குமெண் திசையும் அன்பு தழைத்திட இனிது காக்க

- சக்தி கவசம்

விநாயக கவசம்:

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்ந்த சென்னி
அளவுபடா சவுந்தர தேகம் மாதோற்கடர்தாம் அமர்ந்துகாக்க
விளவற நெற்றியை யென்றும் விளங்கிய காசியபர் காக்க
புருவந்தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க; தடவிழிகள் பாலச் சந்திரனார்
காக்க!

*240 அடிகள் கொண்ட கந்த சஷ்டி கவசம், மந்திரங்களும் அட்சரங்களும் உச்சாடணமும் அடங்கியது.*

*பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பாடிய சண்முக கவசம், அகர வரிசையில் அமைந்த 30 பாடல்களை உடையது.*

அண்டமாய் அவனிஆகி அறியானாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வம் ஆகி
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசனான
திண்திறல் சரவணத்தான் தினமுமென் சிரசைக் காக்க!

- சண்முக கவசம்

*பூவை கல்யாணசுந்தரனார் இடும்பன் கவசம் பாடியுள்ளார்.*

## 86. கற்பம்

1. *உறுதி, விரதம்.*
2. *விரதங்களைப் பின்பற்றும் விதிமுறைகளைக் கூறும் இலக்கிய வகை. மருத்துவ நூலாகவும் உள்ளது. குறட்பாக்களால் ஆனது.*
3. ----
4. ----
5. *மறை ஞான சம்பந்தர் 'கற்பம்' என்ற பெயரில் பல நூல்கள் இயற்றியுள்ளார் (12 நூற்).*
6. *மகா சிவராத்திரி கற்பம், மாத சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், சோமவார சிவராத்திரி கற்பம் போல்வன விரத முறைகளைக் கூறும் நூல்கள்.*

   *சட்டைமுனி கற்பம் 100, புலத்தியர் கற்பம் 300 போல்வன சித்த மருத்துவ நூல்கள்.*

## 87. காஞ்சி

1. நிலையாமை, எதிரூன்றல்.
2. உலகத்தில் நிலையாமை காணப்படுவதை 20 வகைத் துறைகளாகத் தொல்காப்பியம் காட்டியது. போர்க்களத்தில் பகைவர்களை எதிர்த்து நிற்கும் துறைகளாகப் புறப்பொருள் வெண்பாமாலை இதனை மாற்றியது.
3. ----
4. ----
5. தொல்காப்பியத்திலும் சங்கப் புறப் பாடல்களிலும் மறம்பாடும் திணையாகப் பல துறைகளில் (பூக்கோட் காஞ்சி, பெருங்காஞ்சி, வஞ்சினக்காஞ்சி, தொடாக்காஞ்சி, பேய்க்காஞ்சி) குறிக்கப்பட்டுள்ளது. நிலையாமையைச் சுட்டும் துறைகளாகவும் (பொருண்மொழிக்காஞ்சி, முதுகாஞ்சி, முதுமொழிக் காஞ்சி) இடம்பெற்றுள்ளது.

   புறநானூற்றில் காஞ்சிப் பாடல்கள் பல உள்ளன. பூக்கோட் காஞ்சி (293), பெருங்காஞ்சி (194, 357, 359, 360, 362-66), பேய்க்காஞ்சி (281), மகட்பாற் காஞ்சி (336-354, 356), வஞ்சினக் காஞ்சி (71-73), பொருண்மொழிக்காஞ்சி (5, 24, 75, 121, 182-183, 185-193, 195, 214), முதுமொழிக் காஞ்சி (18, 27-29, 74).

   பத்துப்பாட்டுள் ஒன்றான ‘மதுரைக் காஞ்சி’ சங்க காலத்திலேயே பாடப்பெற்ற நிலையாமை குறித்த இலக்கியமாகும்.
6. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான மதுரை கூடலூர் கிழாரின் முதுமொழிக் காஞ்சி, மறைமலையடிகளின் சோமசுந்தரக் காஞ்சி, மு.சாமிநாத பிள்ளையின் புதுமொழிக் காஞ்சி ஆகியவை குறிப்பிடத்தக்க காஞ்சி இலக்கியங்களாகும்.

## 88. காண்டம்

1. பெரும் பிரிவு.
2. அறிவுறுத்தல் குறித்த இலக்கிய வகை.
3. ----
4. ----
5. கோனேரியப்பரின் உபதேசகாண்டம் (12 நூற்.).

   அதிவீரராம பாண்டியனின் காசிக் காண்டம் (16 நூற்).

   வரதுங்க ராம பாண்டியனின் பிரமோத்தர காண்டம்.

   வீரமாமுனிவரின் வைத்திய ரச காண்டம்.

### 89. காதல்

1. இளவயதுடைய எதிர்பாலர் இருவர் உள்ளம் ஈர்த்தலால் ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பு.
2. அகப்பொருளில் அமையும் பொதுப் பிரபந்தம். கண்ணிகளாகப் பாடப்பெறுவது.
3. ----
4. ----
5. உலா, பவனிக்காதல் ஆகிய இலக்கிய வகைகளுக்குப் பின்னர், அதில் இடம்பெற்ற காதற் பாடுபொருள் குறித்து 'காதல்' என்ற பெயரில் புது இலக்கிய வகை தோன்றியது.

   சுப்ரதீபக் கவிராயர் (1707-1731) திருமலை நாயக்கரின் மைத்துனன் கூளப்ப நாயக்கன் மீது பாடிய 'கூளப்ப நாயக்கன் காதல்' இவ்வகையின் முதற்சான்றாகும்.
6. காதற் பிரபந்தங்கள் பல பாடப்பட்டுள்ளன. பழைய கோட்டை நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார் மீது வீரபத்திரக் கவிராயர் பாடிய காதல், இராசவல்லிபுர வள்ளல் முத்துசாமி பிள்ளை மீது அழகிய சொக்கநாத பிள்ளை பாடிய காதல், சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய வைரவ நாடார் காதல், பெரிய சரவணக் கவிராயர் இயற்றிய முத்திருளப்ப பிள்ளை மீது காதல், திருமலை கருப்பன் மீது அழகிய சொக்கநாதர் பாடிய காதல், முத்துவடுக நாத துரை மீது பிச்சுவையர் பாடிய காதல், சிவகங்கை இராசேந்திர பூபதி காதல், இராமலிங்க வேந்தன் காதல்.

   அரசர்கள் வள்ளல்கள் மீது காதல் பிரபந்தம் பாடியது போல தெய்வத்தின் மீதும், ஊர் மீதும் காதல் பிரபந்தங்கள் பாடப்பட்டன. வேதநாயக சாஸ்திரியாரும், அந்தோணி குட்டி அண்ணாவியாரும் பாடிய பேரின்பக் காதல், பிற புலவர்கள் பாடிய விராலிமலை வேலவர் காதல், சிவகங்கை இராசேந்திர பூபதி காதல், குமாரலிங்க வேந்தன் காதல், கருப்பண்ண சாமி பேரில் காதல், விரசை நகர் கண்ணன் காதல், வேங்கடாசலப் பெருமாள் பேரில் காதல், கொடுமணல் கந்தசுவாமி காதல், சென்னிமலையாண்டவர் பேரில் காதல் ஆகியவை. குறிப்பிடத்தக்கன.

   இராமசுவாமிக் கவிராயர், 'மதுரைக் காதல்' என்று ஊர் மீது காதல் பிரபந்தம் பாடியுள்ளார். முகையதீன் இபுறாகீம் புலவர் யானை மீது 'யானைக்காதல்' எனும் பிரபந்தம் பாடியுள்ளார்.

இப்பிரபந்தத்தில் பாடப்படும் பொருண்மை குறித்து, சிவகங்கை 'இராசேந்திர பூபதி காதல்' எனும் நூலின் முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ளதாவது:

> அரசாளும் நாளில் ஒருநாள் பாட்டுடைத் தலைவன் வேட்டைக்குப் புறப்படுகிறான். வேட்டைக்குச் செல்வோனைக் கண்டு வீதியோரத்தில் பெண்கள் வேட்கையுற்றுப் புலம்புகிறார்கள். வீரர்கள் வஞ்சினம் கூறிக் கொண்டு விரைவாகப் போகிறார்கள். உதவிக்குக் கானவர்களும் வேட்டைக் கருவிகளோடு சேர்ந்து கொள்கிறார்கள். கருடக்கொடி காற்றில் அசைவதைக் கண்டு பக்கத்து நாட்டினர் நடுங்குகிறார்கள். சகுனம் கண்டு மகிழ்ந்து வேட்டையாடுகிறார்கள். மானைத் தொடர்ந்து சென்ற மன்னன், மலர் பறிக்கவந்த பெண்ணைக் கண்டு காமுற்றுக் கூடிக் கலந்து பிரிகிறான். அவளோ பிரிவில் புலம்புகிறாள். தோழியர் கண்டு பதைத்து வீட்டிற்குக் கூட்டிச் செல்கின்றனர். தாய்க்கிழவியின் அரற்றலுக்குப் பிறகு அரசன் அனுப்பிய பல்லக்கும் வரிசையும் கண்டு மகிழ்ந்து தலைவியை அனுப்பி வைக்கின்றனர். அவர்களும் மகிழ்ச்சியாக மைந்தனைப் பெற்று வாழ்கிறார்கள் (ப.14).

திருமலைக் கருப்பன் காதல், எட்டயபுரம் வேங்கடாசல மணியக்கார் காதல், ராசவல்லிபுரம் முத்துசாமியா பிள்ளை காதல் ஆகிய காதற் பிரபந்தங்களைப் பாடிய வீரபத்திர கவிராயரே காதற் பிரபந்தத்தின் முன்னோடி என்பர்.

"எழுத்தெண்ணிப் பாடப்படும் இந்த யாப்பு, உணர்ச்சி வேகத்தையோ, கற்பனை விரிவையோ, நிகழ்ச்சியின் விறுவிறுப்பையோ வெளிப்படுத்தற்கு உதவா என்று அதை ஒதுக்கிவிட்டு வீரபத்திரக் கவிராயர் எளிதான கலிவெண்பாவைக் கருவியாகக் கொண்டு, லகுவான ஆனால் ரசபுஞ்சகமான காதல் பிரபந்தத்தைப் படைத்துத் தமிழ்த் தாய்க்கு ஒரு புதிய படையலைச் சமர்ப்பித்தார். இதைத் தழுவி கூளப்ப நாயக்கன் காதல் தோன்றியது" என்று இந்நூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. இராமலிங்க வேந்தன் காதலில் தலைவி அறிமுகம்:

> பதுமினி யிலாதி பதுமினியாஞ் சாதியிவள்
> அதிரூப ரேகை அவனிதனிற் பெண்பெருமாள்
> மந்தரமும் வாசுகியும் வானவரும் தானவரும்
> வந்து சமர்பொருத வந்துதித்த மோகினியாள்
> காம கலைவாணி காம னயிராணி
> காம னருக்காணி காமசுப கல்லியாணி

(கண்ணிகள் 112-114)

பாங்கில் ஒருவர் பார்த்தவுட னேமயங்கும்
தூங்காமல் மஞ்சமிசை தூங்கும் பசுந்தேறல்
பொங்கரவு சேர்காணில் பொய்க்கலகம் காட்டாமல்
வங்காரக் கட்டிலிலே வந்து விளையாடு மயில்
காட்டில் பரவாமல் கண்ணியிலே சிக்காமல்
கூட்டில் அடையாமல் கொஞ்சும் கிளிப்பேடு

(கண்ணிகள் 123-125)

## 90. காதை

1. *நீண்ட கதை.*
2. *நீண்ட கதைப் பொருண்மையில் அமைந்த இலக்கிய வகை.*
3. *----*
4. *----*
5. *விளாஞ்சோலைப் பிள்ளை பாடிய சப்த காதை, ரா.இராகவையங்கார் பாடிய பாரி காதை.*

## 91. காப்புமாலை

1. *காப்பதற்கான பாடல்கள் மாலை போலத் தொடுக்கப்படுவது.*
2. *'கவசம்' போன்று 'தெய்வம் காக்க' என வேண்டும் 3, 5, 7 பாடல்களால் அமையும் இலக்கியம்.*
3. *இ.வி. 832, மு.வீ.யா.ஒ. 100, பி.தீ. 13.*
4. 

*கடவுள் காத்தலாக ஒரு மூன்று*
*ஐந்து ஏழாயினும் அறைவது காப்பு*
*மாலையெனப் பெயர் வைக்கப்படுமே* - *மு.வீ.*

5. *தண்டபாணி சுவாமிகளின் காப்பு மாலை.*

## 92. கார் எட்டு

1. *கார்காலத்தைப் பற்றிய எட்டுப் பாடல்கள்.*
2. *கார்காலத்தின் தோற்றத்தையும் செயல்பாடுகளையும் இறைவனது தோற்றப் பொலிவுடனும் செயலருமையுடனும் ஒப்பிட்டு எட்டு வெண்பாக்களால் பாடப்படுவது.*
3. *----*

4. ----

5. கார் நாற்பது, ஏரெழுபது, இன்னா நாற்பது, திணைமாலை நூற்றைம்பது என்பன போன்று எண்ணிக்கை அடிப்படையில் பாடப்படும் இலக்கியம். நக்கீர தேவநாயனாரின் கார் எட்டு பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

## 93. கீர்த்தனை

1. இசைப்பாடல்.

2. நாடக வழக்கில் உரையாடலுடன் கூடிய பிற்கால இசை இலக்கிய வகை. இராகம், தாளம் முதலிய இசைக் கூறுகளுடன் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் பாடற் பகுதிகள் அமையப்பாடுவது. இது மராட்டிய மன்னர்கள் காலத்தில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வடிவமாக விளங்கியது. சிந்துப்பாடல் வகையே பின்னால் கீர்த்தனை எனும் வடிவம் பெற்றது என்பர். தெலுங்குப் பாட்டிலக்கியத்தின் சாயல் இதில் உண்டு. இதன் உறுப்புக்களின்வழி இதனை அறியலாம். இப்பாடல்வகையின் உறுப்புக்களாவன. விருத்தம், தரு, திபதை, கட்கா, தண்டகம், நொண்டிச்சிந்து, இலாவணி, கண்ணிகள், கும்மி, துக்கடா, ஏசல், ஆனந்தக் களிப்பு, அகவல், ஜாவளி முதலியன. கீர்த்தனையின் திரண்ட கருத்து, பல்லவியில் வெளிப்படும்; பல்லவிக்கான விளக்கம், அனுபல்லவியில் வெளிப்படும்.

3. -----

4. -----

5. சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனை இவ் வகையின் முதற்சான்றாகும் (1712).

> சற்றே பொறுத்துச் சென்றால் சகுன தோஷம் என்றோ நான்
> சாவேன் என்றறிவாயோ? ரகுராமா - ராமா!
> சுற்றும் அழுகைக் குரல் கேட்கிறதுக்கு முன்னே
> சுறுக்கா நடந்துவிட்டால் ரகுராமா - ராமா!

என்றிவ்வாறு மக்களிடையே பயின்று வந்த பேச்சு மொழிகளை அதிகம் பெய்து இயற்றப்பட்டதால் இது மக்கள் மிகவும் விரும்பிக்கேட்கும் இலக்கிய வகையாக செல்வாக்குப் பெற்றது.

6. கோபால கிருஷ்ண பாரதியார் கீர்த்தனை இலக்கியங்கள் பல பாடியுள்ளார். இவருடைய நந்தனார் சரித்திர கீர்த்தனை மிகப் புகழ்பெற்றதாகும். இது தவிர இயற்பகை நாயனார் சரித்திர கீர்த்தனை, நீலகண்ட நாயனார் சரித்திர கீர்த்தனை ஆகியவற்றையும் இவர் இயற்றியுள்ளார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கீர்த்தனை இலக்கியத்தில் தம் திறமையை நாட்டியுள்ளார். பதம், சிந்து ஆகியவற்றுக்கான இலக்கணங்களை இவர் தம் நூலுள் சொல்லியுள்ளார்:

பல்லவத்து இருபங்கு அனுபல் லவமும்
அதன்இரு பங்காம் சரணமும் தாளம்
பிழையாது அமைத்து அதில் பேரின்பஞ்சொலின்
கீர்த்தனை என்றும் மற்று ஏனை கிளக்கில்
பதம் எனவும் சொலல் பாவலர் வழக்கே -பதம்

இருவகை பல்லவம் இன்றி ஆடலுக்கு
இசைபுறத் தனித்தனி ஈரடி நான்கடி
காட்டியோர் பொருளைக் கருதிக்கூறி
தொகுப்பது சிந்தெனச் சொல்வது வழக்கே - சிந்து

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் கீர்த்தனை - காசிமேடு வைரக்கண் வேலாயுதப் புலவர் பாடியுள்ளார். 34 கீர்த்தனைகள் அடங்கிய 'கீர்த்தனை பாடல் திரட்டு' ஒன்றை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். இதில் 24வது கீர்த்தனை ஓரடிக் கீர்த்தனையாக உள்ளது.

கவிகுஞ்சர பாரதி 'கந்தபுராண கீர்த்தனைகள்' பாடியுள்ளார்.

அழகிய சொக்கநாத பிள்ளை, 'காந்திமதியம்பிகை பேரில் கீர்த்தனை' பாடியுள்ளார்.

திருஎவ்வூரூர் இராமசாமிச் செட்டியார் 'சிறுத்தொண்ட நாயனார் திவ்ய சரித்திர கீர்த்தனை' பாடியுள்ளார்.

முத்துவீரிய ஆசிரியர் உறையூர் முத்துவீரிய உபாத்தியாயரின் புதல்வர் முத்து வைத்தியலிங்க ஆசாரி பாடியவை அமர்நீதி நாயனார் சரித்திரக் கீர்த்தனை, குங்கிலியக்கலிய நாயனார் சரித்திரக் கீர்த்தனை, எறிபத்த நாயனார் சரித்திரக் கீர்த்தனை.

மிதிலைப்பட்டி, அழகிய சிற்றம்பலக்கவிராயர் (17 நூற்.) பாடிய 'குன்றக்குடி குமரன் பேரில் கீர்த்தனைகள்' புதிய வடிவம் உடையதாகும்:

பல்லவி

முருகையா - பன்
னிருகையா (முரு)

சரணங்கள்

வாசனே - குறத்தி
நேசனே (முரு)
ஐயனே - பழனி
மெய்யனே (முரு)
தோலனே - வடி
வேலனே (முரு)
வேதனே - குன்றை
நாதனே (முரு)

*சமய நோக்கில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை பாடிய சர்வசமய சமரச கீர்த்தனைகள் புகழ்மிக்கதாகும்.*

*ஜான்பால்மர் (நாகர்கோவில்) என்பார் பாடிய பல கீர்த்தனைப் பாடல்கள் (1812-1883) அருள்திரு.இவெப் வெளியிட்ட 'கிறிஸ்தவ கீதங்கள்' என்ற நூலில் உள்ளன.*

*பராங்குசதாச அடிகளாரின் அரிபசனை கீர்த்தனை (1887):*

7.

இராகம் சங்காராபரணம் - அடதாளம்

பல்லவி

ஐயையோ மனமே அரியென்று சொல்லு
அழிந்துயோ முனமே - (ஐயை)

அனுபல்லவி

பொய்யான வாழ்க்கையை மெய்யாகவே நம்பி
வையகந்தனிற் சும்மா வாதைப்பட்டேன் போறாய் (ஐயை)

சரணங்கள்

மூத்திரக்குழியிலே மாத்துகிற பெண்களை
நேத்திரத்தால் கண்டு நீயேன் மோசம் போறாய் (ஐயை)

தேகமா னதேநித்திய மாகையி லிந்தப்
போகத்துக் காசித்துப் புத்திகெட்டேன் போறாய் (ஐயை)

நீங்ககலச் செய்யும் பராங்கு நாமனை
பாங்குடன் நினையாமல் பாழாய் நீயேன் போறியே (ஐயே)

## 94. கிரீடை

1. விளையாட்டு.
2. இறைவன் திருவிளையாடல்கள் குறித்து எழுதப்படும் இலக்கியம்.
3. -----
4. -----
5. கண்ணன் திருவிளையாடல்கள் லீலை அல்லது கிரீடை என்று அழைக்கப்படும்.

   'கண்ணன் ஜலக்கிரீடை என்னும் கிருஷ்ணவிலாசம்' என்ற நூலை இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் 1975இல் வெளியிட்டுள்ளனர். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## 95. குடைவெண்பாட்டு

1. வெண்கொற்றக்குடையை வெண்பாக்களால் சிறப்பிப்பது.
2. வெண்கொற்றக்குடையின் இயல்பையும், தொழிலையும், மன்னன் புகழையும் பத்து வெண்பாக்களால் பாடும் இலக்கிய வகை.
3. இ.கா.34, ப.பா.இ.32-37.
4.

   முன்ஈர் அடியிலும் குடைத்தொழில் இயம்பியும்
   பின்ஈர் அடியில் தனிநிலை இரட்டியும்
   கொற்றவன் புகழ்ந்து குடைஎன முடிக்கும்
   நற்றிர நேரசைக் குடைவெண் பாட்டே. (ப.பா.)

5. -----

## 96. கும்மி

1. பெண்கள் வட்டமாக நின்று குனிந்து நிமிர்ந்து கைகளைக் கொட்டிப் பாடுவது.
2. கும்மி கொட்டிப் பாடப்படும் வாய்மொழி இலக்கிய வகை. நாட்டுப்புற இலக்கியம்.
3. -----
4. -----

5. 'கொம்மை' என்ற சொல்லிலிருந்து 'கும்மி' எனும் நூல் உருவானது. கொம்மை என்பது கை குவிந்திருக்கும் நிலை. பழமொழி நானூறில் (291) 'கொம்மை கொட்டுதல்' என்ற தொடர் காணப்படுகிறது. இதற்கு, 'கைகுவித்துக் கொட்டி விரைந்து அழைக்கும் குறிப்பு' என்று பொருள் சொல்லப்படுகிறது. இதுவே பின்னர்'கும்மி' என்றானது.

அம்மானை போன்று கும்மியும் பெண்கள் விளையாட்டுள் ஒன்று. பெரும்பாலும் நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகளின் போது கடவுளைப் பரவியும், வளம் வேண்டியும் பாடப்படும் இது, வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாடவும் பயன்பட்டது (கட்டபொம்மன் சரித்திரக்கும்மி). வாய்மொழி இலக்கியமாகிய இது ஏட்டிலக்கியமாகவும் பின்னாளில் ஏற்றம் பெற்றது. வெண்டளையில் அமைந்த ஓரெதுகையுடைய எழுசீர்க் கழிநெடிலடிகள் இரண்டு வரப்பாடுவதுண்டு என்று இதற்கு இலக்கணம் சொல்லப்படுகிறது.

6. ஏட்டிலக்கியமாக வளர்ச்சியுற்ற போது சமயம், புராணம், வரலாறு, தத்துவம், மருத்துவம், தினசரி நிகழ்வுகள் ஆகியன கும்மியில் பாடப்பட்டுள்ளன.

சமயம் :

சண்முகர் கொம்மி - இராமலிங்க வள்ளலார்.

நாகூர் மீரான் சாகிபு

அலங்காரக்கும்மி - மார்க்கண்ட முனுசாமிப் பிள்ளை.

திருப்போர்க்களம் கூத்தாண்டவர் கும்மி - பொன்னுசாமி பத்தர்.

உலகரட்சகர் வண்ணந்த ஒயிற்கும்மி - தாமஸ் புலவர்.

திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பல்சந்தக்கும்மி - சிதம்பர பாரதி.

தத்துவம் : ஞானக்கும்மி - வாலைச் சித்தர், பாலையானந்தசாமி

ஞானக்கும்மி - மாயூரம் வேதநாயகம் பிள்ளை

மெய்ஞ்ஞானக்கும்மி - மௌனம் சிவானந்த சுப்பிரமணிய சுவாமி.

ஞானக்கும்மி - வேதநாயக சாஸ்திரியார்

புராணம் : அரிச்சந்திரன் கும்மி, நளன் கும்மி.

வரலாறு : கட்டபொம்மன்கும்மி, சிவகங்கைச் சரித்திரக்கும்மி.

மருத்துவம்: அகத்தியர் வைத்தியக்கும்மி.

தலம் : சிதம்பரக்கும்மி - கோபாலகிருஷ்ணபாரதியார்.

கும்மி பாடுவதற்குப் பாடுபொருள் தடையில்லை. எந்தப் பொருளையும் தூது விடுத்துப் பாடலாம் என்பது போல கும்மி பாடுவதற்கு எல்லாப் பொருளும் ஏற்றனவே. அவற்றுள் சில வருமாறு:

பெண்கள் விடுதலைக் கும்மி (பாரதியார்), நாட்டுக்கும்மி (நாமக்கல் கவிஞர்), திரான்ஸ்வாய் யுத்த கும்மி (வேலுப்பிள்ளை), நாலுமந்திரக்கும்மி (கருணானந்த சுவாமி), பஞ்சக்கும்மி (நாகப்ப கவுண்டர்), விளரி வருசத்துக்குரிய வினோத கும்மி (எஸ்.அழகர் ஆச்சாரியார்), தென்னிந்திய புகையிரதக் கும்மி (வீரபத்திர முதலியார்), திருட்டுக்கும்மி (இராமநாதபுரம் வேலாயுதக் கவிராயர்), கோபிகா வஸ்திராபரணக் கும்மி, ஏகாதசி விரதக் கும்மி, வழிநடைக் கும்மி, நன்னெறிக்கும்மி, விலைமாதர் கும்மி, மாம்பழக் கொம்மி, தென்னமரக் கும்மி, ரெயில்வே ஸ்டேஷன் கடக்கால் கும்மி.

புலவர் குழந்தை கும்மிப் பாடல்களை இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்று பாகுபடுத்துகிறார். இயற்கும்மி என்பது பொருட்டொடர் நிலையாக அமைவது, எழுசீர் இரண்டடியாகப் பாடப்படுவது. ஒயிற்கும்மி என்பது மகளிர் வட்டமாக நின்று குனிந்து நிமிர்ந்து பாடுவது போல ஆடவர் வட்டமாக நின்று மணிக்கட்டில் வண்ணக் கைக்குட்டைகள் கட்டிக் கொண்டு குனிந்து நிமிர்ந்து பாடுவது. ஓரடிக்கும்மி என்பது எழுசீர் ஓரடியால் அமைவது.

பழனியாண்டவர் பவனிக்கொம்மி, விக்டோரியா ராணி ஒயிற்கும்மி ஆகியவற்றை பழனி வே.முத்தனாசாரியார் பாடியுள்ளார்.

இன்னும் சில கும்மிகள்:

தென்னிந்தியப் புகையிரதக் கும்மி - வீரபத்திர முதலியார்.

நாலுமந்திரக் கும்மி - கருணானந்த சுவாமி.

பஞ்சக்கும்மி - நாகப்ப கவுண்டர்.

பாட்டுத் திருவிழா யாகமண்டலச் சிங்காரக்கும்மி - பழனியப்ப செட்டியார்.

விகாரி வருஷத்துக்குரிய வினோதக்கும்மி - எஸ்.அழகர் ஆசாரியார்.

ஆரிய தேசாபிமானக்கும்மி, இராமாயணக் கும்மி - அழகிய சொக்கநாதப்பிள்ளை.

*உலகரட்சகர் வண்ணச்சந்த ஒயிற்கும்மி - தாமஸ் புலவர்.*

*உஷாகல்யாண கும்மி - திருக்குடந்தை வேம்பு அம்மாள்.*

*திருவாசகக்கும்மி - சாமுவேல்.*

*இலங்கைக்கும்மி - வேதகண்டேயர்.*

*இராவணன் கும்மி, ஏகாதசி விரதக்கும்மி - சிறுமணவூர் முனிச்சாமி முதலியார்.*

7.

ஆனைமுகனுக் கிளையனடி நம்
அம்பிகை பெற்ற பாலனடி
மீனை வெகுண்ட விழிமடவீர் - அவனை
மேவிக் கொம்மி யடியுங்கடி - உளர்
தாவிக் கொம்மி யடியுங்கடி (1)

ஞானானந்தக் கொம்மி

கெட்டோம டிகுடி கெட்டோம டிநாம்
பட்டோம டிவெகு கஷ்டமடி
முட்டத் தரித் திரம் கிட்டி முறைக்குது
மூதேவி நம்மை முறைமை கொண்டாள் - நாட்டுக்கும்மி

(நாமக்கல் கவிஞர்)

## 97. குரவை

1. *ஒலிப்பு, சத்தம் (குரவல்> குரவை).*
2. *குரவைப் பாட்டு என்றும் அழைக்கப்படும். முல்லை நிலத்திலும் குறிஞ்சி நிலத்திலும் மகளிரும், போர்க்களத்தில் மறவரும் கைகோர்த்து ஆடிப்பாடும் இலக்கிய வகை.*
3. *தொல்காப்பியப் புறத்திணை இலக்கணத்தில் முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை என்று தும்பைத் திணையின் துறைகளாகச் சொல்லப்படுகிறது.*
4. *போரில் வெற்றி பெற்ற அரசன் தேரின் முன்நின்று தன் மறவர்களோடு கைகோர்த்து வெற்றிக் களிப்பில் ஆடும் குரவைக் கூத்து முன்தேர்க் குரவையாகும். அத்தேரின் பின்னே போர்க் களத்தில் இறந்த வீரர்களின் உடலை உண்ணுதற்கு அலையும் பேய்கள் தம் சுற்றமுடன் களித்து ஆடும் குரவைக்கூத்து பின்தேர்க் குரவையாகும்.*

5. குரவைக்கூத்து பற்றிய தெளிவு சிலப்பதிகாரத்தில் கிடைக்கிறது. மதுரைக் காண்டத்தில் ஆய்ச்சியர் குரவையும், வஞ்சிக் காண்டத்தில் குன்றக் குரவையும் முதல் இலக்கியச்சான்றுகளாக அமைகின்றன. இவை இசையும் ஆடலும் இணைந்தவை. ஆய்ச்சியர் குரவை இறை வாழ்த்தாகவும், குன்றக் குரவை அகத்துறை வழித் தெய்வத்தைப் பரவுவதாகவும் அமைகின்றன.

6. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 'குரவைப்பத்து' பிற்கால இலக்கியச்சான்றாகும்.

குறிப்பு: 'குரவை' என்பதோடு பிற்காலக் 'குலவைப் பாட்டு' ஒப்புநோக்குதற்குரியது. குரவை என்பதே ஓரினமாதல் எனும் விதிப்படி (ர > ல) குலவை என்று வழங்கப்பட்டிருக்கலாம். குலவையும் குழுவாக ஓசையிட்டுப் பாடும் பாடல் என்பது குறிப்பிடத்தக்கது.

## 98. குலோதய மாலை

1. குடியில் தோன்றிய பெருமையைக் குறித்து மாலை போலப் பாடல்களைத் தொகுத்துப் பாடுவது (குல + உதயம்).
2. பாட்டுடைத் தலைவன் பிறந்த குடிவரிசையைப் புகழ்ந்து விவரிக்கும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. பரணியில் காணப்படும் இராச பாரம்பரியம், மெய்கீர்த்தி போன்ற இலக்கியப் பகுதிகள் இவ்விலக்கிய வகை தோன்ற அடிப்படையை நல்கியிருக்கும்.

## 99. குவிபா ஒருபஃது

1. உதடுகளைக் குவித்துப் பாடப்படும் பத்துப் பாடல்கள்.
2. உதடுகளைக் குவித்தலால் உருவாகும் உ, ஊ, ஒ, ஓ முதலிய எழுத்துக்களால் மட்டும் அமையும் சிற்றிலக்கியம்.
3. -----
4. -----
5. உதடுகளைக் குவித்தலால் உருவாகும் 119 எழுத்துக்களைக் கொண்ட குவிபா ஒருபஃது நூலை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ளார்.

கோவே டுவமா குருகோ வவணோ
மாவே யுணுமா மறுகோ ருருவா
கூவே குகுகூ குகுகூ நுவலும்
வீவே றுவமை வெறுமே ணுதுவே (9)

## 100. குழமகன்

1. குழந்தை.
2. குழந்தை தலைவனாக அமையும் இலக்கிய வகை. பிள்ளைத் தமிழோடு தொடர்புடையது. மகளிர் தம் கையில் அரசக்குழவியை எடுத்துப் புகழ்ந்து கூறுவது என்று இலக்கணங்கள் சொல்கின்றன.
3. வெ.பா. (செ.27), ந.பா. (செ.20), இ.வி. (270), மு.வீ.யா.3.153), பி.தீ. (26).
4. 

*கலிவெண் பாவில் தூரிகையர் தாம்*
*கண்ட இளமைத் தன்மையை உடைய*
*குழமகன் தன்னைப் புகழ்ந்து கூறுவது*
*குழமகனாம் எனக் குறிக்கப் படுமே* - *மு.வீ.*

5. -----

## 101. குளுவ நாடகம்

1. குளுவன் பற்றிய நாடக இலக்கியம்.
2. குறவஞ்சியில் குறத்தியின் சிறப்புப் பேசப்படுவது போல குளுவ நாடகத்தில் குளுவன் சிறப்புப் பேசப்படுகிறது. இங்கு குளுவன் வேட்டையாடும் சிறப்பு தலைமை பெறுகிறது. குறவஞ்சி இலக்கியம் குறவஞ்சி நாடகம் ஆவது போல, குளுவன் இலக்கியம் குளுவ நாடகமானது. வாய்மொழி இலக்கியம் ஏட்டிலக்கியமாகி, அது நாடக இலக்கியமாகும் வளர்ச்சியை இது காட்டுகிறது. குறவஞ்சி, பள்ளு போல இது மக்கள் இலக்கியமாகக் கருதத்தக்கது.
3. -----
4. -----
5. சின்ன மகிபன் குளுவ நாடகம் - முத்தாண்டிப்புலவர்.

   கோட்டூர் நயினார் குளுவ நாடகம் - வெள்ளையப்புலவர்.

## 102. குறம்

1. குறவர் கூற்று.
2. குறவர் கூற்றாகக் கலம்பகத்தில் இடம்பெற்ற ஓர் உறுப்பு, பின்னர் தனித்த இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. குறவஞ்சி, குளுவ நாடகம் ஆகிய இலக்கிய வகைகளோடு தொடர்புடையது.
3. -----
4. -----
5. முதற்சான்று: குமரகுருபரரின் 'மீனாட்சியம்மை குறம்'.
6. அல்லியரசாணி, அர்ச்சுனனுக்காகப் பல மாறுவேடங்கள் புனைந்ததைக் கூறுவது 'வித்துவான் குறம்'.

மின்னொளியாள் குறம், துரோபதை குறம் - புகழேந்திப் புலவர்.

திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்.

## 103. குறவஞ்சி

1. குறத்தி.
2. குறி சொல்லும் குறத்தியை மையமாகக் கொண்டு அமையும் இலக்கிய வகை. தலைவன் உலாவரக் கண்ட தலைவி அவனிடம் மனம் பறிகொடுத்து வருந்துவதும், குறத்தி அவள் மனநிலை அறிந்து குறி சொல்வதும், தன் நாட்டு வளம், நகர் வளம், குலப்பெருமை, சொல் வளம், தன்னைத் தேடி வரும் குறவனாகிய தன் தலைவனை அவள் சேர்தலும் ஆகிய கதைப் பின்னலைக் கொண்டு சித்திரிக்கப்படும் நாடக இலக்கிய வகை.
3. பன்னிரு பாட்டியல் மட்டும் இதற்கு இலக்கணம் சொல்கிறது. இந்நாளில் இது குறத்திப்பாட்டு என்று குறிக்கப்படுகிறது. ஆனால் குறத்திப்பாட்டு என்ற பெயரில் இலக்கியங்கள் இல்லை. ப.பா. (இ.133, 134).
4. 

இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே - ப.பா.

5. திரிகூட ராசப்பக் கவிராயர் பாடிய திருக்குற்றாலக் குறவஞ்சியே இவ்வகையின் முதற்சான்றாக அமைகிறது. குறத்திப்பாட்டு என்ற நிலையிலிருந்து குறவஞ்சி என்ற நிலைக்குச் சுவையான கதைப்

பின்னலுடன்கூடிய செல்வாக்கை இவ்வகைக்குத் தந்த பெருமை மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரையே சாரும். 'பன்னிரு பாட்டியல் இயற்றப்பட்ட காலத்தில் குறத்திப் பாட்டென்ற ஒருவகைப் பிரபந்த மட்டும் வழங்கி வந்ததென்றும், அதனைப் பின்பற்றி ஒருறுப்புக் கலம்பகத்துள்ளே அமைக்கப்பட்ட தென்றும், அவ்விரண்டையும் தழுவி இசைப்பாட்டும் கலந்து குறமென்னும் பிரபந்தம் எழுந்ததென்றும், அவற்றைப் பின்பற்றி நாடக முறையில் குறவஞ்சியென்னும் பிரபந்தம் இயற்றப்பட்ட தென்றும் தோன்றுகிறது' என்று சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகத்திற்கு எழுதப்பட்ட முன்னுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

6. பெத்தலகேம் குறவஞ்சி - வேதநாயக சாஸ்திரியார்
மெஞ்ஞானக் குறவஞ்சி - அப்துல் காதிர் புலவர்.
சாப்டூர்க் குறவஞ்சி - முத்துசாமிக் கவிராயர்
அழகர் குறவஞ்சி - கவிகுஞ்சர பாரதியார்
ஆதிமூலேசர் குறவஞ்சி - தில்லை விடங்கன் மாரிமுத்துப் பிள்ளை
கோமாசிக் குறவஞ்சி - ச.து.ச.யோகியார்
ஞான ரத்தினக் குறவஞ்சி - பீர்முகம்மது அப்பா
வைத்தியக் குறவஞ்சி - கொங்கண நாயனார்
சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் - கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.
தத்துவக் குறவஞ்சி - அணவை முருகேச பண்டிதர்
கவிகுஞ்சர பாரதியாரின் அழகர் குறவஞ்சி
தஞ்சைவாணனின் கூட்டுறவுக் குறவஞ்சி.
பாபநாச முதலியாரின் கும்பேசர் குறவஞ்சி (ஏகோஜி ஆட்சிக்காலம்).

104 குறவஞ்சி இருந்ததாக ந.வீ.செயராமன் குறிப்பிடுகிறார். குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி ஆகியவற்றை இணைக்கும் குறிப்பொன்று சரபேந்திர பூபாலக் குறவஞ்சி (நாடக)யின் பதிப்பு முன்னுரையில் காணப்படுகிறது.

7. கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தை விளக்குவது கூட்டுறவுக் குறவஞ்சி.

வீடுகட்ட விளைவு செய்ய
பனையில் வெல்லம் பாங்காய்க் காய்ச்ச

பானை முடைய பாசனம் செய்ய
விளைந்த பொருளை வெற்றியாய் விற்க
மோட்டார் ஊர்திகள் முனைந்து செலுத்த
முட்டை விற்கப் பெட்டை வளர்க்க
மரத்தால் மண்ணால் மற்றும் பலவால்
குடிசைத் தொழில்பல கோரிச் செய்ய
வகைக்கொரு சங்கம் வந்து பெருகி - கூட்டுறவுக் குறவஞ்சி

## 104. குறள்

1. *குறுகிய இலக்கியம்.*
2. *முதலடியில் 4 சீரும், இரண்டாமடியில் 3 சீரும் ஆக ஏழு சீர் கொண்டு பாடப்படும் பாவினத்தால் பெயர் பெற்ற குறுகிய வடிவம் கொண்ட இலக்கிய வகை. குறள் வெண்பா என்றும் அழைக்கப்படும்.*
3. -----
4. -----
5. *செல்வாக்கு மிக்க இலக்கிய வகையாக அறிமுகம் செய்த காலத்திலேயே இது சிறந்தது. குறட்பாக்களால் வள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் புகழ் பெற்றது. குறட்பா அமைப்பில் பல்பொருள் நோக்கில் பாடப்பட்ட இலக்கியங்கள் 'குறள்' என்றே அழைக்கப்பட்டன. பிற்கால ஔவை பாடிய ஞானக்குறள் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. பொருளாழம் மிக்கது. சீர்திருத்த நோக்கம் உடையது. தத்துவ நோக்குடைய மற்றொரு குறள் அட்டாங்க யோகக் குறள்.*

   *பிற குறள் நூல்கள் :*

| | |
|---|---|
| இரட்சணியக் குறள் | - கிருஷ்ணப் பிள்ளை |
| செபத்தியானக் குறள் | - இராயபுரம் ஞானப்பிரகாசநாத சுவாமி. |
| கிறித்து மொழிக்குறள் | - ---- |
| அருட்குறள் | - வீ.ப.கா.சுந்தரம் |
| வருக்கக் குறள் | - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். |

## 105. கைக்கிளை மாலை

1. ஒரு தலைக்காதல் உணர்வின் தொகுப்பு.
2. ஒருதலைக்காதலை இரங்கிப் பாடும் இலக்கிய வகை. பாடல்களின் எண்ணிக்கையிலும், பாடல் யாப்பிலும் பாட்டியல் நூல்கள் வேறுபடுகின்றன. 25 விருத்தங்களால் ஒருதலைக் காதலைப் பாடுவது என்று வெண்பாப் பாட்டியலும், ஐந்து

## 107. கொடிக்கவி

1. கொடியைப் பற்றிய பாடல்.
2. இறை வழிபாட்டின்போது இறைவனுக்குரிய சின்னங்களுள் ஒன்றாகிய கொடியை ஏற்றி சைவத்தின் புகழைச் சொல்லும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. உமாபதி சிவம் பாடிய சித்தாந்த அட்டகங்களுள் ஒன்று.

   மற்ற நூல்கள்: சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகியன.

   சைவ சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மையை இந்நூல் விளங்க உரைக்கிறது.
6. ----
7.

   அஞ்சு எழுத்தும் எட்டுஎழுத்தும் ஆறுஎழுத்தும் நாலுஎழுத்தும்
   பிஞ்சு எழுத்தும் மேலைப்பெருஎழுத்தும் - நெஞ்சுஅழுத்திப்
   பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
   கூசாமல் காட்டக் கொடி (5)

   (அஞ்சு எழுத்து - சி வா ய ந ம
   எட்டு எழுத்து - ஓம் ஹாம் ஹௌம் சி வா ய ந ம
   ஆறு எழுத்து - ஓம் நம சி வா ய
   நாலு எழுத்து - ஓம் சி வா ய
   பிஞ்சு எழுத்து - வா
   பெரிய எழுத்து - சி)

## 108. கொம்பில்லா வெண்பா அந்தாதி

1. கொம்பு எழுத்து இல்லாமல் வெண்பா யாப்பில் அந்தாதி முறையில் பாடப்படும் இலக்கியம்.
2. வெண்பா அந்தாதியில் பாடும் உத்தி முறையில் அமைந்த இலக்கியம்.
3. -----

4. -----
5. திருச்சுழியல் கொம்பில்லா வெண்பா அந்தாதி.

## 109. கோத்தும்பி

1. அரசவண்டு.
2. வண்டுகளுள் தலைமையாகத் திகழும் அரச வண்டினை விளித்து மகளிர் பாடும் பெண்டிர் பாடல் இலக்கிய வகை. மகளிர் விளையாடும் போது தம்முள் பாடும் பலவகைப் பாடல்களை ஊன்றி நோக்கிய மாணிக்கவாசகர், அவர்களது பல ஆட்டப் பாடல்களை இறைவனைப் பாடுவதற்கேற்ற பாடல்களாகக் கொண்டார். அவற்றுள் ஒன்று திருவாசகத்துள் அவர் பாடிய திருக்கோத்தும்பி. வண்டினை, நண்டினை, நாரையை விளித்துப் பாடலாம் என்ற தொல்காப்பிய அகமரபிற்கேற்ப, பெண்கள் வண்டினை விளித்துப் பாடும் பாடல்களை 'இறைவன் பெருமையைச் சென்றூதாய்' எனும் பொருளமைய வண்டுகளை விளித்துப் பாடும் இலக்கிய வகையாக ஆக்கிய பெருமை மாணிக்கவாசகருக்கு உரியது.
3. யாப்பருங்கல விருத்தியுரையில் தும்பிப்பாட்டு என்ற இலக்கிய வகை குறிப்பிடப்படுகிறது.
4. -----
5. முதற்சான்று: திருக்கோத்தும்பி - மாணிக்கவாசகர்
6. 'திருக்கோத்தும்பி' என விளித்துப் பாடிய பாடல்கள் திருமங்கை ஆழ்வார்.
7.

> கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
> எண்ணப்ப னென்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
> சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி - 4.

## 110. கோமூத்திரி

1. பசுவின் நீர்த்தடம்.
2. பசு நடந்து செல்லும் போது விடும் நீரால் (கோமயம்) உண்டாகும் குறுக்கும் நெடுக்குமான நீர்த்தடம் போன்ற வடிவில் யாக்கப்படும் செய்யுள். இது சித்திரகவிகளுள் ஒரு வகை.

3. -----

4. -----

5. புலவனது படைப்புத் திறனாலும், சிந்தனா சக்தியாலும் உருவானது இவ்வகை. சித்திரகவிகள் பல அமைத்துப் பாடிய திருஞானசம்பந்தர் திருக்கோமூத்திரிப் பதிகம் பாடியுள்ளார்.

    பருவ மாகவி கோகன மாலையே
    பொருபி லாவுழை மேவன கானமே
    மருவு மாசைவி டாகன மாலையே
    வெருவ லாயிழை பூவணி காலமே. - திருஞானசம்.தேவா.

## 111. கோவைச்சதகம்

1. நூறு பாடல்களின் கோவை.

2. கோவையும் சதகமும் இணைந்து பெயர் பெற்ற இலக்கிய வகை. முடிமுதல் தொடை ஈறாக நூறு பாடல்களால் பாடப்படுவது. பாதாதிகேசம், கேசாதிபாதம் போன்ற உறுப்புக்களை வருணிக்கும் இலக்கிய வகைகள் போல பிற்காலத்தில் பாடப்பட்ட இலக்கிய வகை.

3. -----

4. -----

5. புலவரின் பாடும் திறத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இலக்கியம்.

    (எ-டு) நெல்லை மாவட்டம் வடகரைக் குறுநில மன்னன் மேல் புலவர் பெரியசாமி இயற்றிய கோவைச் சதகம்.

## 112. கோயிலொழுகு

1. கோயில் நடைமுறை ஒழுங்கு.

2. கோயிலில் நாள்தோறும் நடைபெறும் பூசை, திருப்பணி முதலிய நடைமுறை ஒழுங்குகளை விளக்கிச் சொல்லும் இலக்கிய வகை.

3. -----

4. -----

5. திருவரங்கம் கோயில் நிர்வாக ஒழுங்கு கருதிப் பிற்காலத்தில் இராமானுஜர் கோயிலின் அன்றாட நடைமுறைப் பணிகளைப் பாடல்களாகப் பாடி வைத்தார். இது 'திருவரங்கக் கோயிலொழுகு' எனப் பெயர்பெற்றது.

## 113. கோபப்பிரசாதம்

1. கோபமும் அருளும் (பிரசாதம்: இறைவன் அருள்).
2. இறைவனது சினத்திற்கு ஆட்படாமல், அருளுக்கு ஆட்பட வேண்டும் எனும் நோக்கில் சினம், அருள் ஆகிய எதிர் எதிர்த் தன்மைகளை இணைத்து இறைவன் அடியவர்களை நெறிப்படுத்தும் திறம் குறித்துப் பாடப்படும் இலக்கியம்.
3. -----
4. -----
5. 11 ஆம் திருமுறையில் உள்ள நக்கீரதேவ நாயனாரின் கோபப் பிரசாதம் இவ்விலக்கிய வகையின் முதற்சான்றாக அமைகிறது.

## 114. கோலாட்டக்கும்மி

1. கோலால் கும்மி கொட்டும் ஆட்டப்பாடல்.
2. பெண்கள் வட்டமாகச் சுற்றி நின்று குனிந்து நிமிர்ந்து கைகளைக் கொட்டிப் பாடுவதற்குப் பதிலாக இரண்டு கைகளில் வண்ணக் கோல்களை ஏந்தி அவற்றைக் கொட்டிப் பாடுவது கோலாட்டக் கும்மி எனும் இலக்கிய வகை. கும்மியின் வளர்ச்சியாக இது கருதத்தக்கது. கண்ணன் வழிபாட்டில் சிறந்து விளங்கும் வடபுலத்து வைணவ வழிபாட்டு மரபுகள் தமிழகத்தில் அறிமுகமான நிலையில் இக்கோலாட்ட வளர்ச்சி கும்மியில் ஏற்பட்டிருக்கலாம்.
3. -----
4. -----
5. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர், திருவிளையாடல் கோலாட்டக் கும்மி - வையை இராமசாமி ஐயர் (1894).

## 115. (அகப்பொருட்)கோவை

1. அகநிகழ்ச்சிகளின் பொருட்தொகுப்பு.

2. அகப்பொருள் நிகழ்ச்சிகளைக் கோவையாக (கோர்வையாக) நானூறு கலித்துறையில் பாடும் இலக்கிய வகை. பண்டைய அக இலக்கிய மரபிற்கேற்ப தொடக்கம் பெற்ற இவ்வகை பின்னாளில் பல வளர்ச்சி நிலைகளைக் கண்டது.

   தொல்காப்பியரின் அகப்பொருள் துறைகள் இவ்விலக்கிய வகைக்கு அடிப்படைகளாக அமைந்தன. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்று இக்களவுத்துறைகள் கற்பு தொடங்கும் நிலைவரை தொடர்ச்சியாக அமையும். பின்னாளில் தோன்றிய நம்பியகப் பொருள் போன்ற அகப்பொருள் இலக்கணங்கள் கற்புக்குப் பின்னாலும் இத்துறைகளை வளர்த்துச் செல்கின்றன. காலம்தோறும் தோன்றிய அகப்பொருள் இலக்கணங்களுக்கு ஏற்ப புதிய துறைகளும் இதில் இணைவு பெற்றன. பாடல்கள் நானூறுக்கும் மேற்பட்டுச் செல்கின்றன. ஒருதுறைக்கோவை, ஐந்திணைக் கோவை என்பன இதன் வளர்ச்சி நிலைகளாகும். இவற்றைக் கோவை இலக்கிய வகையின் கிளை வகைகள் எனலாம்.

3. ப.பா. (இ.137), வெ.பா. (செ.15:1, 2), ந.பா. (செ.29:1, 2), பிர.ம. (7), சி.பா. (ம.374), இ.வி. (816), தொ.வி. (277), மு.வீ. (பா.ஒ.81), பி.தீ. (8), சுவாமி. (167).

4.

   முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
   களவுகற்பு எனும் வினாவு உடைத்தாகி
   நயன்உறு கலித்துறை நானூறு ஆக
   ஆறிரண்டு உறுப்பும் ஊறின்றி விளங்கக்
   கூறுவது அகப்பொருட் கோவை யாகும் (இ.வி.)

5. கோவை இலக்கிய வகையின் முதற்சான்று பாண்டிக் கோவையாகும். இது பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனைப் பாடுகிறது. முழு நூல் கிடைக்கப்பெறவில்லை. களவியற் காரிகையில் எடுத்துக்காட்டுச் செய்யுட்களாக இவை இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

   முழுமையாகக் கிடைக்கும் முதற்சான்று நூல் மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார். பாட்டுடைத் தலைவனான

சிவபெருமானைத் தலைவனாகவும் அவன்மேல் காதல் கொண்ட தலைவியாகத் தன்னுடைய மனத்தையும் அமைத்து இந்நூலை மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

பெரும்பாலான அகப்பொருட் கோவை இலக்கியங்கள், அகப்பொருள் இலக்கண நூல்களுக்கு எடுத்துக்காட்டு இலக்கியங்களாக அமைந்துள்ளன. பாண்டிக்கோவை, இறையனார் களவியலுக்கும், தஞ்சைவாணன் கோவை, நம்பியகப் பொருளுக்கும், திருப்பதிக்கோவை மாறனகப் பொருளுக்கும் சான்றிலக்கியங்களாகத் திகழ்கின்றன. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (16 நூற்.) தாம் இயற்றிய மாறனகப் பொருள் இலக்கணத்திற்கு, திருப்பதிக்கோவை என்ற இலக்கியத்தை அவரே பாடியுள்ளார். திருமால் எழுந்தருளியுள்ள 95 திவ்விய தேசங்களின் பெருமை இதில் சொல்லப்படுகிறது.

கோவை இலக்கியத்தின் வளர்ச்சியாக ஒரு துறைக் கோவை கிளைத்தது. இது ஒரு துறை மீது நானூறு பாடல்கள் பாடுவதாகும். இவ்வகையில் ‘திருவள்ளுவர் மீது நாணிக்கண் புதைத்தல்’ எனும் துறையில் இயற்றப்பட்ட ‘திருவள்ளுவர் ஒரு துறைக்கோவை’ குறிப்பிடத்தக்கதாகும் (வே.முத்துஸ்வாமி ஐயர், ஸ்ரீமகாபாரதம் அச்சகம், கும்பகோணம், 1950). ‘இந்நூல் திருவள்ளுவர் மீது நாணிக்கண் புதைத்தல்’ என்னும் ஒரே துறையில் திருக்குறளின் ஓரோர் அதிகாரப் பெயரும் ஒரு கலித்துறையில் வரும் 133 கவிகளைக் கொண்டது. முன்னிரண்டு அடிகள் ஒரு குறட்கருத்தைத் தழுவி, ‘இத்தகைய வள்ளுவர் நாட்டுத் தலைவி’ என விளிக்கும். பின்னிரண்டடிகள் தலைவி நாணி நிற்றலைக் கூறலோடு சிலேடைப் பொருள் ஒன்று பயக்கும்’ என்று நூன்முகத்தில் கூறப்பட்டுள்ளது.

(எ-டு)

> மிருகசீர் வாழ்க்கைத் துணைநலம் மங்கலம் மேவுமென
> வைக்குந் திருவள் ளுவர்வாழ் மயிலை மயிலனையாய்
> தொக்க மணிவரை தோற்றிநற் போகியாம் சூழ்நிலையில்
> அக்க மளிகைசார்ந் தியோகியும் ஆக ததிசயமே

களவில் தொடங்கி கற்பில் முடிவதே கோவை இலக்கியங்களின் பொது நியதியாக இருக்க, அம்பிகாபதி கோவையும், மாறன் வருக்கக் கோவையும் களவில் தொடங்கி, கற்பில் தொடர்ந்து, துறவறத்தில் முடிகிறது. நானூறு பாடல்கள் என்ற வரையறையை மீறி 4000 பாடல்கள் பாடப்பட்ட அகப்பொருட் கோவை, ஒட்டக்கூத்தர் பாடிய காங்கேயன் நாலாயிரக்கோவையாகும்.

ஐந்திணையையும் இணைத்துப் பாடப்பட்டது மு.ரா.அருணாசலக் கவிராயரின் பரங்கிரி ஐந்திணைக் கோவையாகும். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள துவரங்குறிச்சிப் பகுதியைச் சார்ந்த கப்பலூரை ஆட்சி செய்த கருமாணிக்கன் மீது கப்பற்கோவை பாடப்பட்டுள்ளது.

(எ-டு)

நாடாது நாடினையோ கல்விகேள்வி நலமிலர்பால்
ஊடாடி நெஞ்சந் தளர்ந்தனை யோஒள் ளலரையெல்லாம்
காடாள வைத்தவன் பால்அரு மாணிக்கக் கப்பல் வெற்பில்
வாடாது வாடினதேன் மன்னவநின் வரைப்புயமே.

மாறனகப்பொருளையும், அதற்கு இலக்கியமாகிய திருப்பதிக் கோவையையும் தழுவி நம்மாழ்வார் மீது ஆழ்வார் திருநகரி வேங்கடத் துறைவான் கவிராயர் 17 ஆம் நூற்றாண்டில் மாறன் கோவை பாடினார்.

அகப்பொருள் தவிர, தலங்களின் மீதும் கோவை நூல்கள் பாடப்பட்டுள்ளன.

(எ-டு)

சீகாழிக்கோவை - சீர்காழி அருணாசலக் கவிராயர்

மதுரகிரிக்கோவை - சாந்துப்புலவர்.

திருச்செந்தூர் கோவை - சர்க்கரைப் புலவர்.

துறைசைக் கோவை, கலசைக் கோவை - சிவஞான முனிவரின் மாணவர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார்.

பழமலைக் கோவை - சாமிநாத தேசிகர்.

திருக்கழுக்குன்ற கோவை - சிவஞான முனிவரின் மாணவர் சோமசுந்தரப் பிள்ளை.

மதுரைக்கோவை - வேம்பத்தூர் சங்கரநாராயணர் (14 நூற்) 403 பாடல்களால் ஆன இந்நூல் 25 திருவிளையாடற் புராண வரலாறுகளைச் சொல்கிறது.

இரட்டை மணிமாலை, நான்மணி மாலை என மாலை இலக்கிய வகை பல்கிப் பெருகிப் பெயர் பெற்றது போல கோவையில் அமைப்பு அடிப்படையில் மும்மணிக் கோவை பாடப்பட்டுள்ளது.

(எ-டு) நம்பெருமாள் மும்மணிக்கோவை:

காவலன்பின் யோங்க நறுசீர்த் திருவரங்கம்
காவலன்பொற் றாளாங் கமலத்தே - பாவலர்தம்

பாமாலை சூட்டாதப் பாமாலை யையெவனோ
தாமா னிடர்க்களிக்கும் சால்பு

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய திருச்செந்திற் கோவை, பன்னிரண்டு பிரபந்தங்களின் தொகுதியாக அமைந்துள்ளது. அவை: வெண்பாவந்தாதி, சிலேடை வெண்பா, திரிபந்தாதி, யமகவந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, செந்தில் நாயக சதகம், உலா, நவரச மஞ்சரி, அகப்பொருட் கோவை, தசாங்க வகுப்பு, கௌமார விஜயம், சந்த மாலிகைத் திருப்புகழ் ஆகியவை.*

*(எ-டு)*

மின்னோ டுறமும்சைவ வேற்செந் திலானருள் வேட்டு முன்னந்
சொன்னோர்வழியி லகப் பொருட்கோவை சொலத் துணிவு
முன்னோர் விதந்தெரிந் தானந் தவாறு முழப்ப தனுக்
கென்னோடு நீதுணை யாவாய் வெண்டாமரை யேந்திழையே

(பாயிரம் - சரஸ்வதி துதி : 2)

*6. பிற சான்றுகள்*

*தஞ்சை வாணன் கோவை*

*அம்பிகாபதி கோவை -*

*குலோத்துங்கச் சோழன் கோவை - ஒட்டக்கூத்தர்*

*கோடீச்சுரக் கோவை - கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.*

*ஒரு துறைக் கோவை :*

*இராமலிங்க சேதுபதி மீது நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரு துறைக் கோவை - அமிர்தகவிராயர் (1650)*

*வண்டோச்சி மருங்கணைதல் என்னும் ஒருதுறைக் கோவை (சசிவர்ணன் கோவை) - அமிர்தகவிராயர்*

*ஐயாத்துறை முதலியார் மீது நாணிப்புறங்காட்டல் என்னும் ஒருதுறைக் கோவை - துரைசாமிப் புலவர்.*

*ஒரு துறைக் கோவை - கல்போது பிச்சுவையர்*

*வெறிவிலக்கு என்னும் ஒருதுறைக் கோவை - கீழ்வேளூர் குருசாமி தேசிகர் (தியாகேசர் கோவை).*

*எட்டயபுரம் மன்னர் மீது நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக் கோவை - மார்க்கண்ட நாவலர்.*

*நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக் கோவை - சோடசாவதானம் பொன்னுங்கூடக் கவிராயர்.*

*வண்டோச்சி மருங்கணைதல் எனனும் ஒரு துறைக்கோவை, மருதூர் ஜமீன்தார் நாயகசாமி காமய நாயக்கர்.*

*முருகக் கடவுள் பேரில் நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரு துறைக்கோவை - நாகேச ஐயர் (100 பாடல்கள்)*

*7.*

பால்வாயப் யஅந் தமிழ் வீசிய வாசம் பரந்தனவகைக்
கனல்வாய்த்த வீரையர் கோனாகு நாதன் கரந்தை வெற்பின்
மேல்வாய்த் திருந்த வெழுத்தா றரிதின் விளங்கு மென்றோ
நூல்வாய்த்த நுண்ணிடை யீர்மறைத் தீரணி நோகினையே - 35

அமிர்தகவிராயர்

*கரிசல்பட்டி ஜமீன் விராப்பூர் பெருநிலக்கிழார் மீது பொன்னுசாமிக் கவிராயர் பாடிய காதற் பிரபந்தம் (1886).*

பொட்டுக்கண் டொட்டுக்கிட் கிட்டுக்கொப்
பாப்புயல் பூட்டுமிரு
வட்டுக்கொப் புற்றுக் கழித்துத் தள்
ளாடு மதுக்குடம் போல்
பட்டுக்கச் சிட்டுப்பொற் கொட்டுப்பொற்
யிரப் பணைத்த முலை
தொட்டுப்பதி தெட்டுப் பொன் னிட்டுக்கண்
டாலுஞ் சுகமெய் துமே.

## 116. கோசம்

*1.* *தொகுதி.*

*2.* *ஏதேனும் ஒரு பொருள் பற்றிய செய்திகளைத் தொகுத்துச் சொல்லும் இலக்கியம்.*

*3.* -----

*4.* -----

*5.* *வடமொழி இலக்கிய மரபில் 'கோசம்' என்ற பெயரில் தொகுப்பு நூல்கள் எழுந்துள்ளன. இதனைப் பின்பற்றித் தமிழிலும் பிற்காலத்தில் கோசம் என்ற பெயரில் இலக்கியம் செய்யப்பட்டது.*

*புவனகோசம் - வானுலகங்களும் அங்கு வாழும் தேவர்களும் பற்றிய செய்திகளை ஒரு சேரத் தரும் நூல்.*

## 117. சட்கம்

1. ஆறு.
2. ஆறு பாடல்களால் ஆன இலக்கிய வகை. கட்டளைக் கலித்துறையால் இயன்றது. சமயப் பொருள் குறித்தது.
3. -----
4. -----
5. சோடாசலப் பிரகாத சட்கம் - குருஞானசம்பந்தர்

   சமயசட்கம் - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

   கண்டலூர் குமரேச சட்கம் - தண்டபாணி சுவாமிகள்

   அலங்கார சட்கம் - திருநெல்வேலி ஆறுமுக நயினார்.

## 118. சண்டை

1. பூசல், போர்.
2. ஒரு வட்டாரத்தில் நிகழ்ந்த பூசல், சண்டை அவ்வட்டாரமக்கள் மனதில் நீங்காத நினைவாய்ப் பதிந்துவிட, அதன் காரணமாகப் பாடப்படும் மக்கள் வாய்மொழியிலான நாட்டுப்புறக் கதைப்பாடல் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. கான்சாகிபு சண்டை, பாஞ்சாலங்குறிச்சி சண்டை. கதைப்பாடலாக மட்டுமன்றி கூத்துவடிவிலான நாடகமாகவும் இந்நிகழ்ச்சிகள் நடித்துக் காட்டப்படுகின்றன.

(எ.கா)

அபிமன்னன் சண்டைநாடகம்

சயிந்தவன் சண்டை நாடகம்

மாடுபிடி சண்டை நாடகம்

மயில் ராவணன் சண்டை நாடகம்

முதல்நாள் சண்டை நாடகம்

பன்னிரண்டாநாள் சண்டை நாடகம்

பீஷ்மர் சண்டை நாடகம்

நாடகம் தவிர, வில்லுப்பாட்டாகவும் இவ்விலக்கியம் பாடப்படுகிறது.

(எ.கா)

கீசகன் சண்டை

கண்ண மகாராசன் சண்டைக் கதை

உத்திரகுமாரன் சண்டைக் கதை.

## 119. சதகம்

1. நூறு.
2. நூறு பாடல்களின் தொகுதி.
3. மு.வீ. (யா.ஒ.) 156, இ.வி.847, சுவாமி.168.
4. மு.வீ.அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஒன்றன் மீது 100 செய்யுள் பாடுவது என்று கூறுகிறது.

   அகப்பொருள் ஒன்றன் மேயாதல் புறப்பொருள்
   ஒன்றன் மேயாதல் கற்பித்து ஒருநூறு
   செய்யுள் உரைப்பது சதகமாம் என்ப — கு.வீ.யா.ஒ.116.

   இலக்கண விளக்கமும் சுவாமி நாதமும் ஒரு பொருள் மேல் நூறு பாடுவது என்று இலக்கணம் செய்துள்ளன.

   விளையும் ஒரு பொருள் மேல் ஒரு நூறு
   தழைய உரைத்தல் சதகம் என்ப — இ.வி.

   பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பதுதான் சதகம் - சுவாமி

5. முதற்சான்று: மாணிக்க வாசகர் பாடிய திருச்சதகம்.
6. நூறு பாடல்களைப் பாடுவது என்ற எண்ணிக்கையின் அடிப்படையால் பெயர் பெற்ற இவ் இலக்கிய வகை, பல பாடுபொருட்களை ஏற்றுள்ளது.

(எ.கா)

அருணாசல சதகம், குமரேச சதகம் - இறைவன்

கார்மண்டல சதகம் - இடம் (ஊர், தலம்)

தண்டலையார் சதகம் - பழமொழி

அறப்பளீசுர சதகம் - அறவுரைகள்

பணந்தான் பந்தியிலே! குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே — தண்டலையார் 72

பனால்காட்டு நதிதானும் சலசலப்புக்
கொருநாளும் பயப் படாதே — தண்டலையார் 73

அன்னநடை நடக்கப் போய்த் தன்னடையும்
கெட்டவகை ஆகுந் தானே — தண்டலையார் 78

சதக நூல்கள் பல உள்ளன.

(எ.கா)

கார் மண்டல சதகம் - ஆறை கிழார் (11 ஆம் நூற்)
குமரேச சதகம் - குரு பாத தாசர்
காந்தி சதகம் - கா.மு.சுந்தர முதலியார்
வைராக்கிய சதகம்
சிருங்கார சதகம் - ஈசான சுவாமிநாத தேசிகர் (17 ஆம் நூற்)
தொண்டை மண்டல சதகம்
தண்டலையார் சதகம் - படிக்காசுப்புலவர்
முகை தீன் சதகம் - மஸ்தான் சாகிபு
முனாஜாத்து சதகம் - சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர்
நாகூரார் சதகம் - வரகவி நாச்சி குளத்தார்

மொழி பெயர்ப்புச் சதகங்களும் உள்ளன.

(எ.கா)

பாஸ்கர சதகம் - இது தெலுங்கிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. 109 பாடல்கள் கொண்டது. உத்பல மாலா, சம்பகமாலா எனும் விருத்தநடை கொண்டது. கதிரவனை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டது.

சதக இலக்கிய வகை இந்திய மொழிகளில் பரவலாகக் காணப்படுவதாகும்.

(எ.கா)

தெலுங்கு மொழிச் சதகங்கள் : குமாரி சதகம், கிருஷ்ண சதகம், சுமரி சதகம், நரசிம்ம சதகம்.

## 120. சதுரங்க பந்தம்

1. சதுரங்கக் கட்டு.
2. ஒரு சித்திரகவி வகை. சதுரங்கக் கட்ட அமைப்பில் சதுரங்க விளையாட்டில் காய்களை நகர்த்துவது போல வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும், மேலே சென்றும் பின்னர்க் கீழிறங்கியும் பொருள் கொள்ளப்படும் உத்தி அடிப்படையிலான இலக்கிய வகை.
3. -----
4. -----
5. -----

6. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் திருவரங்கத் திருவாயிரத்திலும், பாம்பன் சுவாமிகளின் திருவலங்கல் திரட்டிலும் சதுரங்க பந்தமாக அமைந்த பாடல்கள் உள்ளன.

## 121. சந்நிதி முறை

1. இறைவன் சந்நிதியின் முன்பு நின்று முறையிடுதல்.
2. இறைவன் முன்பு குறையை முறையிடுவதாக அமையும் உணர்த்தும் முறை அடிப்படையிலான இலக்கிய வகை. விண்ணப்பம் என்ற இலக்கிய வகையோடு ஒப்ப வைத்துக் காணக் கூடிய பொருட்பாடு உடையது.
3. -----
4. -----
5. இது கலம்பகம் போல, பல்வேறு துறைகள் அமையப் பாடப்படுவதால் இதனைக் 'கலம்பகம் போன்றதொரு கலவை இலக்கியம்' என்பர். ஒரு நூலுள் பல்வேறு துறைகளும், வகைகளும் அடங்கும். சான்றாக ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பாடிய திருப்போரூர் முருகன் சந்நிதி முறையில், தாலாட்டு, பள்ளியெழுச்சி, கட்டியம், எச்சரிக்கை, தூது, ஊசல், தாழிசை, வண்ணம், சந்தம், விருத்தம், அட்டகம் உள்ளிட்ட துறைகளிலும் வடிவங்களிலும் அமைந்த 27 வகையான நூற்கள் உள்ளன.

(எ.கா)

திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை - முருகைய பங்கஜாக்ஷி (24 நூல்கள்)

கம்பை சந்நிதி முறை - சோணாசல பாரதி (10 நூல்கள்)

திருத்தணிகை சந்நிதி முறை - தி.கந்தப்ப தேசிகர்

வைஷ்ணவி சந்நிதி முறை - நரசிம்ம ஐயங்கார்

பழனிச்சந்நிதி முறை - மனோன்மணி அம்மையார்

## 122. சாழல்

1. சாடுதல், மறுத்துரைத்தல்.
2. பெண்டிர் விளையாட்டு வகை. 'சாடல்' என்பது 'சாழல்' என்றானது. பெண்கள் இருவர் கை கொட்டி ஆடும் போது

ஒருவர் வினாத் தொடுக்க (சாட)மற்றவர் அதற்குப் பதில் தருதல் அல்லது அதனை மறுத்துரைத்தல் என்ற வகையில் அமைந்தது. பாடலின் முதல் இரண்டடிகள் வினாவாகவும் (சாடலாகவும்) அடுத்த இரண்டு அடிகள் பதிலாகவும் (மறுத்துரைத்தலாகவும்) இவ்வகை அமையும். இது அம்மானைப் பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

3. -----

4. திருச்சாழல் - மாணிக்கவாசகர்
 திருச்சாழல் - திருமங்கையாழ்வார்

## 123. சாரப் பிரபந்தம்

1. சார்ந்து உரைக்கப்படும் இலக்கிய வகை.
2. இறைவனைச் சார்ந்து 'வேண்டிய முறையில்' அமைவதும், இறைவன் பக்தனைச் சார்ந்து 'இன்னின்ன பயன் இவர்க்கு விளைக' என அருளுவதும் சாரப்பிரபந்தத்தின் பொருட் பொதிவாகும்.
3. -----
4. -----
5. அருணாசலேசுவரர் சாரப் பிரபந்தம் - நமச்சிவாய சுவாமிகள்.

## 124. சிந்தனை

1. சிந்திப்பது, இடைவிடாமல் எண்ணுவது.
2. கடவுளை இடைவிடாமல் நினைந்து போற்றுவது குறித்த இலக்கிய வகை. தத்துவச் சார்புடையது.
3. -----
4. -----
5. சரஸ்வதி சிந்தனை, பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை.

## 125. சிந்து

1. ஏழு முதல் ஒன்பது எழுத்து வரும் நாற்சீரடியால் பாடப்படும் இசைப்பா.
2. இது, பலபாடு பொருட்களை ஏற்கும் நாட்டுப்புற இலக்கிய வகையாகக் கருதத்தக்கது. பொதுவாகக் களைப்பை

மறக்கப்பாடுவது, புகழ் பாடுவது, நடந்த நிகழ்ச்சியைச் சொல்வது, இகழ்ந்து உரைப்பது, அறிவுறுத்துவது, வரலாறு கூறுவது ஆகிய பல நோக்கங்களில் இது பாடப்படுகிறது.

3. இந்த வகைக்கான இலக்கணம் தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்பட்டுள்ளது.

   ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
   யீரெழுத் தேற்ற மல்வழி யான (செய்.37)

   இதற்குப் பேராசிரியர் தரும் (எ.கா) வருமாறு.

   நீர்வாய் கொண்டு நீண்ட நீல
   நீர்வாய் ஊதை வீச ஊர்வாய்
   மணியேற் றுண்டோ டொல்கி மாலை

4. -----

5. அப்பர் பாடிய 'திருஅங்க மாலை' இந்தப் பிரபந்தத்தின் முன்னோடி வடிவம் என்பர். அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச் சிந்து' புகழ் பெற்றது. சித்தர் பாடல்கள் பல சிந்து வடிவம் கொண்டவை. இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் இந்தப் பாவடிவிற்கு ஏற்றம் தந்து 'சிந்துக்குத் தந்தை' எனப் புகழ் பெற்றார்.

6. பல பாடு பொருட்களை ஏற்கும் எளிய நாட்டுப்புறச் சாயல் கொண்ட பாவகை யாதலின் மக்கள் பலரால் விரும்பிப் பாடப்படும் பாடல் வகையானது.

   ஏற்றம் இறைப்போர் தம் களைப்பை மறக்க, 'ஏற்றப்பாட்டு' பாடுவது போல, வழிநடைச் செல்வோர் தம் களைப்பை மறக்கப் பாடும் 'வழிநடைச் சிந்து'ப் பாடல்கள் பரவலாகப் பாடப்படுகின்றன. 'காவடிச் சிந்து' என்பது முருகன் மீது காவடி எடுக்கும் அன்பர்கள் பாடிச் செல்வது.

   ஓரடிச்சிந்து :

   டம்பாச்சாரி ஓரடிச் சிந்து - ஜெகந்நாத முதலியார்

   தாதுவருடப் பஞ்சத்தின் ஓரடிச் சிந்து - வரதராஜ முதலியார்.

   மதன சுந்தரி ஓரடிச்சிந்து - ஜெகந்நாத முதலியார்.

   கப்பற்சிந்து :

   தரிச்சீர் கப்பல் சிந்து - முகையதீன் பிச்சை புலவர்.

   கப்பல் பிரயாண சிந்து - காசிமேடு வைரக்கண் வேலாயுதம் புலவர்.

காவடிச்சிந்து: எட்டிக்குடி முருகன் மீது காவடிச்சிந்து - அண்ணாமலை ரெட்டியார்

குன்றக்குடிமுருகப் பெருமான் காவடிச்சிந்து - இராமநாதன் செட்டியார்.

புரோம்பு நகரில் எழுந்தருளிய சிவசுப்பிரமணியக் கடவுள் பேரில் காவடிச் சிந்து - சிவ ஞான பிள்ளை.

ஞானச்சிந்து : நபிகள் நாயகம் பேரில் மெய்ஞ்ஞானச்சிந்து : முகையதீன் புலவர்.

பிற சிந்துகள்

அனுபந்தச்சிந்து : தி.செ.முருகதாசப் பிள்ளை

இராமாயணச்சிந்து : சடகோப ஐயங்கார், கடலூர் வைத்தியலிங்க செட்டியார்.

எண்ணெய்ச்சிந்து : அப்துல் காதிர் புலவர்.

உழைப்பாளர் சிந்து, தமிழ்ச் சிந்து : சு.மா.சண்முகசுந்தரம்.

சுகாதாரச்சிந்து : ஆவுடையப்ப செட்டியார்

கண்ணாடிச்சிந்து : இராம சுவாமிப்பிள்ளை

பலதேச குஸ்திச் சிந்து : சுப்பிரமணிய உபாத்தியாயர்

மலேசியப் பஞ்சக் கொடுமை சிந்து : அருணகிரி நாத சுவாமி.

ஒலிநாயகர் அவதாரச் சிந்து : மகமத் இபுறாகீம் லெப்பை.

இன்னும் சில:

கர்னாடகப் புகைவண்டிச்சிந்து, குள்ளத் தாராச் சிந்து, கண்ணாட்டிச் சிந்து, தங்கச் சிந்து, முருகர் சிந்து, பெண்புத்தி மாலை என்னும் நீதிச்சிந்து, திருநெல்வேலி பேட்டை வீரைகவிராசர் பாடிய சின்னத் தங்கச்சிந்து, கட்டுத் தங்கச்சிந்து, பெரிய தங்கச் சிந்து.

சிந்து இலக்கியத்தின் இணை வகைகள்:

(அ) ஆத்தி சூடிச் சிந்து

அகரவரிசையில் அமையும் சிற்றிலக்கியம்

அத்திமுகத் தோனை ... ...
ஆதிசிவ மூர்த்தி அடிகள் மறவாதே
இவ்வுலகில் யாவருக்கும் இடரினைத் தேடாதே
ஈனர்தமைச் சேர எள்ளளவு நினையாதே

(ஆ) நொண்டிச்சிந்து

நொண்டி நாடக வகையோடு தொடர்புடையது.

(எ.கா)

காந்தி சரித்திர நொண்டிச்சிந்து - நாமக்கல் வெ.ராமலிங்கம் பிள்ளை. யானை மேலழகர் நொண்டிச்சிந்து - அனந்தபாரதி ஐயங்கார்.

காந்தியின் சரிதம் சொல்வேன் – நல்லோர்
காதுக் கினிப்ப (து) அதைக் காட்டிலும் முண்டோ?
மாந்தர்க் குயர்தர்ம மெல்லாம் – காந்தி
மகாத்மாவின் வாழ்க்கையிலே மலர்ந்திருக்கும்
புண்ணியக் கதையாதுவே - கேட்டால்
பூதலத்தில் மூர்க்க ருக்கும் பொறுமை வரும்

– காந்தி சரித்திர நொண்டிச்சிந்து

(இ) கொலைச்சிந்து

குறுங்கதைப்பாடல் வகை. இருவகைகள் உண்டு. ஒருவகை தந்தை-மகள், மாமனார்-மருமகள், மாமியார்-மருமகன் ஆகிய தகாத உறவுகளால் விளைந்த பாலியல் சார்ந்த கொலைச் சிந்துகள்; மற்றவகை, சமூகச் சிக்கல்கள், குடும்பத் தகராறுகள், தற்கொலைகள் காரணமாக கொலைச் சிந்துகள். முதல்வகைக்கு (எ.கா) வீரபத்திரன் கொலைச்சிந்து, வண்ணார கொலைச்சிந்து, இரண்டாம் வகைக்கு (எ.கா) ஈரோடு அங்கமுத்து முதலியார் தற்கொலைச் சிந்து, பழனி வையாபுரிக்குளத்தில் மாண்ட கௌரியம்மன் கொலைச்சிந்து.

(ஈ) காவடிச்சிந்து

நெல்லை கரிவலம் வந்த நல்லூருக்கு அருகில் உள்ள சென்னி குளத்தில் வாழ்ந்த அண்ணாமலை ரெட்டியார்தான் சிந்துப்பாவுக்கு உயிரோட்டம் தந்தவராவார். அவரது கழுகுமலை முருகன் காவடிச்சிந்து, சிந்து இலக்கியத்திற்கு இன்றுவரை நல்லதொரு சான்றாகத் திகழ்கிறது. இதில் விநாயகர் துதி, முருகன் துதி, கழுகுமலை நகர் வளம், கோயில் வளம், சுரம் போக்கு, நற்றாயிரங்கல், தலைவியிரங்கல், தலைவி ஊடல், பாங்கி தலைவியின் நிலை அறிந்து தலைவனை அழைத்தல், தலைவி பாங்கியைத் தூதுவிடல், பாங்கி தலைவியின் அவயவத்தருமை கூறல், தலைவன் வருத்தம் சாற்றல், தலைவனைக் கலந்த தலைவி பாங்கிக்குக் கூறல், தாய், மகளைப்

*பழித்தல், தலைவி தலைவனோடு கூடி உரையாடல்... போன்ற அகப் பொருட்துறைகள் அமைந்துள்ளன.*

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் தமிழ்
செப்பு மண்ணா மலைக்கனு கூலன் மிகு
செழிய புகழ் வளைத்த கழுகுமலை வளத்தைக்
தேனே சொல்லு வேனே

வெள்ளிமலை ஒத்தயப் மேடை முடி
மீதினிலே கட்டுகொடை யாடை
வெய்யவன் நடத்தி வரு துய்ய விரதப் பரியும்
விலகும் படி இலகும்

- அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

## 126. சிலேடை

1. *இரட்டுற மொழிதல்.*
2. *இரட்டுற மொழிதல் எனும் உத்தியில் அமைந்த இலக்கியவகை. ஒரு தொடர், ஒன்றற்கு மேற்பட்ட் பொருள் தருவதாக அமைவது. செம்மொழி என்பது நேர்பொருள்; பிரிந்திசை என்பது உட்பொருள். சொற்கள் வேறுபடாது பொருள் தருவது செம்மொழி; சொற்கள் வேறுபட்டுப் பொருள் தருவது பிரிந்திசை.*
3. *தண்டியலங்காரத்தில் இதற்கு இலக்கணம் காணப்படுகிறது.*

*ஒருவகைச் சொற்றொடர் பல்பொருட் பெற்றி*
*தெரிவர வருவது சிலேடை யாகும்* (76)
*அதுவே*
*செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்* (77)

4. -----
5. *தனிப்பாடல்கள் பல சிலேடையாக அமைந்துள்ளன. காளமேகப் புலவரும், ஒட்டக்கூத்தரும் சிலேடையாக அமைத்துப் பாடிய தனிப்பாடல்கள் புகழ் பெற்றவை. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் தில்லைத் திருவாயிரத்தில் 'சிலேடைப் பத்து' எனும் இலக்கியம் காணப்படுகிறது.*
6. *முழுவதும் சிலேடையாக அமைந்த காப்பியம், இரவீச மரபினர் காதை (1964). இது இராமாயண, பாரதக் கதைகளை 220 விருத்தங்களால் சொல்கிறது.*

சிலேடையில் அமைந்த இலக்கிய வகைகள் பல உள்ளன.

சிலேடையந்தாதி : கந்தப்பையர்

சிலேடையுலா : தத்துவராயர் (601 கண்ணிகளால் அமைந்தது)

சிலேடை மாலை : திருவரங்கச் சிலேடை மாலை - அனந்தகிருஷ்ணயங்கார்

சிலேடை வெண்பா : திருக்குற்றாலச் சிலேடை வெண்பா - திரிகூடராசப்பக் கவிராயர், கலசைச் சிலேடை வெண்பா - தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர். சிங்கைச் சிலேடை வெண்பா-நமச்சிவாயக் கவிராயர்.

## 127. சின்னப்பூ

1. பூச்சின்னம் - சின்னமாகிய பூ.
2. மலை, ஆறு, நாடு, நகரம், குதிரை, யானை, கொடி, முரசு, தார், பெயர் ஆகிய அரசச் சின்னங்கள் பத்தையும் சிறப்பித்து 100, 90, 70, 50, 30 வெண்பாக்களால் பாடும் பிரபந்தம். முதல் இரு அடிகள் சின்னத்தைப் புகழ்ந்து சொல்லும். பின்னைய இரு அடிகள் தலைவனின் இயற்பெயரைச் சிறப்பித்துப் பாடும்.
3. ப.பா. (இ.55-57), வெ.பா.செ.20, ந.பா.(செ.15), பிர.9, சி.பா.(105:2, 3) இ.வி. (846), தொ.வி.(263), மு.வீ.(164).
4. 

    நேரிசை வெண்பா வாலே திருபன்
    சின்னமாம் ஐம்பது தொண்ணூறு எழுபது முப்பது
    நூறு என்னும் எண்பட எடுத்துரைப்பது
    சின்னப்பூ எனச் செப்பினர் புலவர் (மு.வீ)

5. 'சின்னப்பூ வெண்பா' - தத்துவராய சுவாமிகள்.

## 128. சீட்டுக்கவி

1. கடிதக்கவிதை.
2. முறையீட்டைக் கவிதையாக்கி அதைக் கடிதமாக எழுதி அனுப்புவது. முறையீடு, விண்ணப்பம் ஆகியவற்றோடு இணைவாகக் கருதக்கூடிய இலக்கிய வகை.
3. -----
4. -----

5. *திருமுகப்பாசுரம் - நக்கீரதேவநாயனார் (பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது)*
6. *சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய சீட்டுக்கவி. முத்தப்பச் செட்டியார் 'ஏழு நகரத்தார் பெயரிற் பாடிய திருமுக விலாசம்'. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வெங்கடேச ரெட்டப்பபூபதிக்கு எழுதி விடுத்த சீட்டுக்கவி', பாரதியாரின் வரலாற்றில் பெரிதும் பேசப்பட்ட ஒன்றாகும். காஞ்சிபுரத்திலிருந்த வள்ளல் நமச்சிவாய முதலியாருக்கு, வள்ளலார் ஒரு மாணவர்க்காக விடுத்த அறிமுகக் கடிதம் வருமாறு:*
7.

திருத்தகுசீர்த் தமிழ் மறையின் முதற்பொருளே
  தமதுதிருப் பெயராக் கொண்டு
பொருத்தமுறு மேகம்பப் புத்தமுதை
  உண்டுவக்கும் புனித னேநின்
வருத்தகுசே வழக்கடி யேன் ஒருகோடி
  தெண்ட னிட்டே உரைக்கின் றேன்நின்
கருத்தறியேன் கவிகொடுநின் பாலன்பால்
  வருபவரைக் காக்க வென்றே

*சீட்டுக்கவியைப் பாராட்டி விடுக்கப்பட்ட பதிற்பாடல்களும் உள:*

சீட்டுக் கவியென்று சொல்வர் சிலரந்தச் சீட்டுக்கவி
காட்டுக் கெறிந்த நிலவாகிப் போஞ்செங் கனகரதினச்
சூட்டுக் கிரீட முடிவேந்தர் உற்பத்தி சூறை கொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவன் நற்கவியே

-நிரஞ்சன நாதர்

## 129. சோபனம்

1. *வாழ்த்து.*
2. *பாடுபொருளின் சிறப்பைச் சொல்லி வாழ்த்துவதாக அமைந்த பிற்கால இலக்கிய வகை. பெரும்பாலும் திருமணத்தில் பாடப்படும் இலாலிப் பாட்டு போல இறைவனை, இறையருளை வாழ்த்துவதாக அமைகிறது.*
3. *-----*

4. -----
5. வேதாந்த தேசிகரின் பரமபத சோபனம் (13 - 14 நூற்).
6. ஞானசோபனம் - திருவேங்கட நாதையர் (17 நூற்).
   வேதாந்தவித்யா சோபனம் - ஆவுடையம்மாள்.
   சோபன மாலை - அம்மணி அம்மாள்.
   பனைமர சோபனம் (1951).
   நூதன கலியானப் பாட்டில் உள்ள சோபனப் பாடல் முலைப்பால் சுவாமிகள்.

## 130. சோடச மாலை

1. பதினாறு மாலை.
2. பதினாறு பாக்களால் ஆகிய மாலை இலக்கிய வகை.
3. -----
4. -----
5. துரோபதையம்மன் சந்நிதி விளக்கச் சோடச மாலை.

## 131. தசகம்

1. பத்து.
2. பத்துப் பாடல்களைக் கொண்ட இலக்கிய வகை. பதிக இலக்கிய வகையோடு இணைத்து எண்ணத்தக்கது.
3. -----
4. -----
5. மூத்த பிள்ளையார் சரண தசகம் - தொழுவூர் வேலாயுத முதலியார்.

## 132. தசாங்கம்

1. பத்து உறுப்புக்கள்.
2. பாட்டுடைத் தலைவரோடு தொடர்புடைய, அவர்க்கு அடையாளங்களாகக் கருதப்படும் பத்து உறுப்புக்களின்

சிறப்பைப் பாடும் இலக்கிய வகை. சின்னப்பூ எனும் இலக்கிய வகையோடு இணைத்து எண்ணத்தக்கது. உறுப்புக்குப் பத்துப் பாடல்களாக (நேரிசை வெண்பா) மொத்தம் நூறு பாடல்கள் பாடப்பெறுவது. தசாங்கப் பத்து என்று கூறப்படும்.

3. வெ.பா.செ.19, 20, ந.பா.செ. 15, பிர.9, சி.பா.5:1, 2, இ.வி. 840, மு.வீ.யா.ஒ.140, பி.தீ.25.

4.

புல்லும் மலையாறு நாடுவார் புனைதார்மா
கொல்லுங் களிறு கொடி முரசம் - வல்லகோல்
ஒன்றுஇவை நஞ்செழுத்தோடு ஏலா வகை உரைப்ப
நின்ற தசாங்கம் என நேர் -வெ.பா.செ.19

5. மாணிக்கவாசகர் பாடிய திருத்தசாங்கம் இவ்வகையின் முதல் நூலாகக் கருதத்தக்கது. இது கிளியினை விளித்து 'கோற்றேன் மொழிக் கிள்ளாய்' என்றும், 'இன்பால் மொழிக்கிள்ளாய்' என்றும் அமைந்திருப்பதால் இதனைக் 'கிளிப்பத்து' எனவே பொருந்தும் என்பர். ஆயினும், இறைவனை அரசனாகக் கருதி, அரசனுக்குரிய பத்துச் சின்னங்களை இறைவனுக்குரியதாகப் பாடப்பெறுதலின் இது 'திருத்தசாங்கம்' எனப்பட்டது. பெயர், மகாதேவன்; நாடு, தென்பாண்டிநாடு; ஊர் திருஉத்தரகோசமங்கை; ஆறு, ஆனந்தம்; மலை, அருள்; வாகனம், ஆகாசம் எனும் குதிரை; படை, திரிசூலம்; முரசு, ஓங்காரத்தத்துவம்; மாலை, தத்துவங்கள்; கொடி, ரிஷபக்கொடி.

பெயர்:

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர் பிரான் (1)

6. பிற சான்றுகள்

பெருக்கத் தசாங்கம் : வேதநாயகம் சாஸ்திரியார்.

பாரததேவியின் திருத்தசாங்கம் : பாரதியார்.

காந்தி திருத்தசாங்கம் : ராய.சொ.

(பெயர், மோகன்தாஸ் காந்தி; நாடு, இமயம் முதல் குமரி இடைப்பட்ட முனிவர் நாடு, ஊர், அனைத்து ஊரும்; ஆறு, கங்கை முதல் பொருநை வரை; மலை: இமயம் முதல் பொதிகை

வரை; ஊர்தி, மக்கள் மனம்; படை: வாய்மை; முரசு: இனிமை, கருணை, எளிமை; மாலை: புகழ்; கொடி : மூவண்ண இராட்டிணக் கொடி).

### 133. தரிசனம்

1. தோற்றம்.
2. சைவ சித்தாந்த சாத்திர இலக்கிய வகை. தரிசனப் பொருளின் புகழைப் பேசுவது.
3. -----
4. -----
5. மறைஞானசம்பந்தரின் 'பஞ்சாக்கர தரிசனம்' (ஐந்தெழுத்து மந்திரத்தின் புகழ் பேசுவது).
6. பிற சான்றுகள்:
   சிவஞான வள்ளலின் சித்தாந்த தரிசனம்.
   ஐந்து இயல்களால் ஆனது. 378 வெண்பாக்கள் கொண்டது.

### 134. தனி வெண்பா

1. தனித்தனியாகத் தொடர்பற்று அமைந்த வெண்பாக்கள்.
2. தம்மளவில் தனித்தனியாகப் பொருள் கொள்ளுமாறு அமைந்த வெண்பாக்களால் ஆகிய இலக்கிய வகை.
3. -----
4. -----
5. குகைநமச்சிவாயர் பாடிய திருவருணைத் தனிவெண்பா.

### 135. தாண்டகம்

1. யாப்பின் பெயர்.
2. எழுத்து எண்ணிக்கையின் அடிப்படையான இலக்கிய வகை. அடிதோறும் 27 எழுத்துக்கள் பெற்று வருவது. நான்கடியிலும் எழுத்தெண்ணிக்கை ஒத்திருப்பது அளவியல் தாண்டகம். நான்கடியிலும் எழுத்தெண்ணிக்கை 27க்கு மேல் வேறுபட்டு

வருவது அளவழித் தாண்டகம். ஒவ்வோர் அடியிலும் 6 சீர்கள் அமையப் பாடுவது குறுந்தாண்டகம்; எண்சீர்கள் அமையப் பாடுவது நெடுந்தாண்டகம்.

3. ப.பா. (இ.112); மு.வீ. (யா.ஒ. 154).

4.

*மூவிரண்டேனும் இருநான்கேனும்*
*சீர்வகைநாட்டிச் செய்யுளின் ஆடவர்*
*கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்*
*அறுசீர் குறியது நெடியது எண்சீராம்* - ப.பா.

5. தாண்டகப் பாடல்களில் ஆற்றலை நாட்டியவர் திருநாவுக்கரசர். இவரது 6 ஆம் திருமுறை முழுவதும் தாண்டக யாப்பில் அமைந்துள்ளது. 931 பாடல்கள் கொண்ட 99 பதிகங்கள், திருநெடுந்தாண்டகம் எனச் சிறப்பிக்கப்படுகின்றன (6 ஆம் நூற்.).

இறந்தார்க்கும் என்றும் இறவா தார்க்கும்
இமைய வர்க்கும் ஏகமாய் நின்று சென்று.
பிறந்தார்க்கு மென்றும் பிறவா தார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேசநின்று
மறந்தார் மனத்தென்றும் மருவார் போலும்
மறைக்காட் டுறையும் மருவாட் செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாயே (2:7)

6. திருமங்கையாழ்வாரின் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் (9 ஆம் நூற்).

## 136. தாலாட்டு

1. நாவை அசைத்துப் பாடும் பாட்டு (தால் + ஆட்டு).
2. பக்தி இலக்கியத்தில் இறைவனைப் பாடிப்பரவும் ஒரு கூறாக இருந்து, பிள்ளைத் தமிழில் ஒரு பருவமாக வளர்ந்து, பின்னர்த் தனியொரு இலக்கிய வகையாக நிலைபெற்றது.
3. -----
4. -----
5. பெரியாழ்வார் திருமொழியிலும் (1:4), குலசேகரரின் பெருமாள் திருமொழியிலும் (8) இராமனைக் குழந்தையாகக் கண்டு

தாலாட்டும் பாடல்கள் காணப்படுகின்றன. நம்மாழ்வாரின் திருத்தாலாட்டு இவ்வகையின் முதல் இலக்கியச் சான்று. ஈரடித் தாழிசையாகப் பாடப்படும் இது பெரும்பாலும் சமய இலக்கியமாகவே அமைகிறது. வளர்ச்சிப் போக்கில் ஞானம், தத்துவம், நீதி, தலைவர் ஆகிய பொருட்களிலும் தாலாட்டு இலக்கியங்கள் எழுந்தன. இந்து, இஸ்லாம், கிறித்தவம் ஆகிய முச்சமயத்தினரும் தாம் வணங்கும் தெய்வங்களைத் தாலாட்டுப் பாடலில் போற்றியுள்ளனர்.

6. திருத்தாலாட்டு - தத்துவராயர் (16)

ஞானத்தாலாட்டு - வேதநாயக சாஸ்திரியார்

மெய்ஞானத்தாலாட்டு - முகம்மது அப்துல் சலாம் (1911)

சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு - துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

சிற்றம்பல நாடியார் தாலாட்டு - சிற்றம்பல நாடியாரின் சீடர் சம்பந்த முனிவர் (15).

ஸ்ரீ சுப்பிரமணியர் தாலாட்டு - பாம்பன் சுவாமிகள்.

ஸ்ரீ ருக்மணி தாலாட்டு - பொ.மு.கேசவ சுப்பராய ரெட்டியார்.

ஸ்ரீ கண்ணபிரான் தாலாட்டு - பொ.மு.கேசவ சுப்பராய ரெட்டியார்.

பழமொழித் தாலாட்டு - சங்கரம்மாள்.

காமராசர் தாலாட்டு - கவிஞர் கண்ணதாசன்.

மு.பொ.ஈசுரமூர்த்தியா பிள்ளையின் நீதிநெறித் தாலாட்டு 133 குறள் அதிகாரங்களுக்கேற்ப, 133 தாழிசைகளில் குறட்பொருளை விளக்கியுரைக்கிறது.

ஸ்ரீ திருவேங்கடநாதரின் 'கீதாசாரத் தாலாட்டு', கீதையின் விளக்கமாக அமைந்துள்ளது.

தாலாட்டு இலக்கியங்கள் பல இயற்றித் தம் ஆற்றலை நாட்டிய புலவர்கள் உள்ளனர். காளை ஹசன் அலியார் எனும் இஸ்லாமியப் புலவர் 'பஞ்சரத்தினத் தாலாட்டு' என்ற பெயரில் பாத்திமா நாச்சியார் பேரில் சுகானந்தத் தாலாட்டு, முகையதீன் ஆண்டகை பேரில் மணிமந்திர தாலாட்டு, நாகூராண்டகை பேரில் மீரான் தாலாட்டு, உடற் கூற்றறியும் ஞானத்தாலாட்டு, பாலகர் தாலாட்டு எனும் ஐந்து தாலாட்டு இலக்கியங்கள் பாடியுள்ளார்.

உபகாரி அப்பா எனும் புலவர் 'நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு' பாடியுள்ளார்.

## 137. திக்குவிசயம்

1. திசைவெற்றி.
2. எட்டுத்திக்கும் பகையை வென்ற பெருமையைப் பாடும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. கடிகை முத்துப்புலவர் பாடிய சிவகிரி வரகுணராமபாண்டிய வன்னியனார் திக்குவிசயம்.

## 138. திரயம்

1. திரள்.
2. தத்துவநூல்.
3. -----
4. -----
5. தத்துவத்திரயம் - பிள்ளை லோகாசாரியார்.
   நம்பிள்ளை ரகசியத்திரயம் - நம்பிள்ளை.
   சதகத்திரயம் - துறையூர் சிவப்பிரகாசர்.

## 139. திருக்கைவழக்கம்

1. கொடைப்பண்பு.
2. கை செய்யும் கொடையைச்சிறப்பித்துப் பாடும் இலக்கிய வகை. சாதியஅடிப்படையிலானதாகத் தெரிகிறது.
3. -----
4. -----
5. திருக்கை வழக்கம் - கம்பர் (வேளாளர் சிறப்பைச் சொல்வது)
   திருக்கை வழக்கம் - புகழேந்தியார் (செங்குந்தர் சிறப்பைச் சொல்வது)

   திருக்கை வழக்கத்தை அந்தாதித் தொடையில் பாடியவர் ஆறுமுகப் பாவலர். நூல்: செங்குந்த வேலவர் திருக்கை வழக்கந்தாதி.

## 140. திருப்புகழ்

1. இறைவன் புகழ்.
2. சந்தப் பாடல்களால் கேட்போர் மயங்கும் வண்ணம் இறைப்புகழைப் பாடுவதற்கு உகந்த இலக்கிய வகை. வண்ணங்களால் அமைந்த இலக்கியத்திற்கு உகந்த சான்று. பல்வேறு தொடை நயங்கள் அமையப் பாடப்படுவது. பாடப்படுபவரின் புலமைக்குச் சான்றாக விளங்குவது.
3. -----
4. -----
5. அருணகிரிநாதரின் திருப்புகழ். திருப்புகழ் நூல்களுள் தலைமை தாங்குவது. சந்தக்குழிப்புகள் நிறைந்தது. தமிழின் சொல்லாற்றலுக்குச் சான்றாய் விளங்குவது. எல்லா சமயத்தாரும் நூல் செய்த இலக்கிய வகை.
6. தில்லைத் திருப்புகழ் - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

   ஞானத்திருப்புகழ் - அந்தோணிகுட்டி அண்ணாவியார்.

   நாயகத்திருப்புகழ் - பிச்சை இபுறாகீம் புலவர்.

   நவரத்தினத் திருப்புகழ் - அசனா லெப்பை புலவர்.

   வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 126 திருப்புகழ்கள் பாடியுள்ளார் என்பர்.

## 141. திருவாயிரம்

1. ஆயிரம் பாடல்களால் இறைவனைப் புகழ்வது.
2. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக அமையும். ஆயிரம் தொடர் பாடல்களை உடைய இலக்கிய வகை. 'சகத்திராங்கி' என்றும் இதற்கு இன்னொரு பெயர் உண்டு. கலம்பகத்தின் நீட்சியாகவும் இதனைக் கருத இடமுண்டு.
3. -----
4. -----
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருவரங்கம், தில்லை, பழனி ஆகிய மூன்று தலங்களைக் குறித்து முறையே திருவரங்கத் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், பழனித் திருவாயிரம் ஆகிய மூன்று திருவாயிரங்கள் பாடியுள்ளார்.

## 142. துதி

1. இறைவனைத் துதித்தல்.
2. இறைவன் புகழ்பாடி அவனைத் தொழும் நிலையில் அமைந்த பாடல்களின் தொகுப்பாக உருவான இலக்கிய வகை.
3. -----
4. -----
5. இராமாநுஜர் துதி - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் (17).

மகம்மது நபியாண்டவர் துதி - மஸ்தான் சாகிபு

சிவகாமி வல்லி துதி, சிற்சத்தி துதி - இராமலிங்க வள்ளலார்.

திலகவதி அம்மை துதி - ஞானியாரடிகள்.

மூவர் துதிப்பாடல் திரட்டு - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

முருகப் பெருமான் துதிப்பாமாலை - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

திருவேங்கடேசர் துதி - ஹா.கி.வாலம் அம்மையார்.

தில்லைநடராசர் துதி, திருத்தில்லை நடராசர் துதி, சிவகாமி சுந்தரி துதி - கவிஞர் குருசாமி.

## 143. தூது

1. செய்தியைச் சொல்லி விடுத்தல்.
2. தன்னுடைய குறையைச் சொல்லிப் பரிசைப் பெற்றுவரச் சொல்லுமாறு அமையும் இலக்கிய வகை.
3. தொல்காப்பியத்தில் தூதினைப் பற்றிய இலக்கணங்கள் காணப்படுகின்றன. (அகத்.25, 26). தூது செல்வதற்குரிய வாயில்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன (நற்.52). சொல்லா மரபின, செய்யா மரபின என்று தூது விடுப்பதற்குரிய அஃறிணை உயிர்கள் குறிப்பிடப்படுகின்றன. (பொருள் 2) இவை 'வாரா மரபின' என்றும் 'என்னா மரபின' (எச்ச.26) என்றும் அழைக்கப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் அன்னச் சேவல் (புற.67), நண்டு (அக.170) நாரை (நற். 10, 54), கிளி (நற்.102), வண்டு (நற்.277 குறுந். 106, 392, பரி. 8:36:32) ஆகியவற்றைத் தூது விடுத்துப் பாடும் பாடல்கள் உள்ளன. தேவாரப் பதிகங்களில்

(1:60; 4:12; 7:37) அன்னம், அன்றில், கிளி, குயில், குருகு, நாகணவாய்ப்புள், வண்டு, சேவல், தென்றல் ஆகியவற்றைத் தூது விடுத்துப் பாடியதாகப் பாடல்கள் உள்ளன. திருவாசகத்தில் திருக்கோத் தும்பியும், குயிற்பத்தும் தூதுப் பொருண்மையில் அமைந்துள்ளன. பெரியாழ்வார், காக்கை, குயில், கிளி, கோழி, செம்போத்து, பல்லி ஆகியவற்றைக் தூது விடுத்துப் பாடியுள்ளார். (பெரி.திரு.173, பெரிய திரு.10 ஆம் பத்து 1942-1947) திருமங்கையாழ்வார் நாரை, வண்டு ஆகியவற்றையும், நம்மாழ்வார் பூவையும், ஆண்டாள் மேகத்தையும் தூது விடுத்துப் பாடியுள்ளனர். இவ்வாறு பண்டை இலக்கியத்திலும், பக்தி இலக்கியத்திலும் தூதுப் பாடல்கள் உளவியல் பொருண்மையோடு மிகவும் செல்வாக்குப் பெற்றுச் திகழ்கின்றன. காப்பியங்களில் தூதுப்பாடல் இன்றியமையாத பகுதியாக அமைகிறது. சமஸ்கிருதத்திலும், மலையாளத்திலும் இது காப்பிய வடிவைப் பெற்றுள்ளது.

3. பரந்த பயிற்சியையும் விரிந்த சான்றுகளையும் கொண்டுள்ள தூது இலக்கியத்திற்கான இலக்கணத்தை பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், இரத்தினச் சுருக்கம் ஆகிய மூன்று பாட்டியல் நூல்கள் மட்டுமே குறிப்பிடுகின்றன. இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும் தூது இலக்கியத் திறனாய்வாளர்கள். "இது ஒரு விரிவான சிறப்பமைந்த பிரபந்த வகையாக வளர்ச்சி பெற்ற போதிலும் பண்டைய இலக்கணங்களான ப.பா, வெ.பா, ந.பா, சி.பா, போன்றன எதுவுமே தூதுக்கு இலக்கணம் கூறவில்லையென்பது வியப்பாயுள்ளது. 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியலும், 17 ஆம் நூற்றாண்டில் எழுந்த இலக்கண விளக்கப் பாட்டியலுமே தூதின் இலக்கணம் கூறுகின்றன" என்று சொல்கின்றனர்.

4. தூது நூல்கள் கலிவெண்பாவால் அமையும் என்று இலக்கண விளக்கம் சொல்கிறது. இது கண்ணிகளாக யாக்கப் பெறும். எந்தெந்தப் பொருட்கள் தூது விடுக்கப்படும் என்பதை,

> இயம்புகின்ற காலத் ஏதினமயில் கிள்ளை
> பயம் யெறுமே கம்பூவை பாங்கி - நயந்தகுயில்
> பேதை நெஞ்சம் தென்றல் பிரமமீ ரைந்துமே
> தூதுரைத்து ... ... (7)

என்று இரத்தினச் சுருக்க வெண்பா குறிப்பிடுகிறது.

இலக்கணங்களின்படி அன்னம், மயில், கிளி, மேகம், நாகணவாய்ப் புள், குயில், நெஞ்சு, தென்றல், வண்டு ஆகியவை

தூது விடுக்கப்படும் பொருட்களாகும். ஆனாலும் காலப்போக்கில் தமிழ், பணம், மான், சவ்வாது, நெல், புகைவண்டி, விறலி, துகில், காக்கை, கழுதை, பழையது, செருப்பு ஆகிய பொருட்களும் தூது விடுக்கப்பட்டுள்ளன.

தூது நூல்கள் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். முதற்பகுதியில் தூது விடுக்கப்படும் பொருளின் சிறப்பும், பிற இன்னின்ன காரணங்களால் தகுதியுடையன அல்ல என்பதும் பாடப்படும். இரண்டாம் பகுதியில் பாட்டுடைத் தலைவன் சிறப்பு மொழியப்படும். மூன்றாவது பகுதியில் தலைவனிடம் தலைவி மையல் கொள்ளுதலும், செய்தி உரைத்தலும் 'மாலை வாங்கி வா' எனலும் அமையும்.

(5) முதல் தூதுச் சிற்றிலக்கியம் கொற்றவன்குடி உமாபதி சிவம் பாடிய 'நெஞ்சு விடு தூது' என்பதாகும். தத்துவ நோக்கில் அமைந்த இந்நூல் தம் ஞானாசிரியர் மறைஞான சம்பந்தர் மீது நூலாசிரியர் நெஞ்சைத் தூது விட்டுப் பாடியதாக அமைகிறது. நூலின் காலம் கி.பி.14 ஆம் நூற்.

(6) பிற சான்றுகள்:

கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டு விடு தூது (18 நூற்)

திருநறையூர் நம்பி மேகவிடு தூது (18 நூற்)

மான் விடு தூது (18 நூற்)

திருப்போரூர் முருகன் கிள்ளை விடு தூது (19 நூற்)

அழகர் கிள்ளை விடு தூது

கிளி விடு தூது - அழகிய சிற்றம்பல அடிகள் (172)

தமிழ் விடு தூது

திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் மீது பொன்விடு தூது - திரிசிரபுரம் அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை.

பின்னாளில் இத்தூது இலக்கியங்கள் தனிப்பட்ட வள்ளல், ஆட்சியாளர் மீது பொருள் வேண்டியும், அருள் வேண்டியும், புகழ் பாடியும், அவர்களது சிற்றின்ப நாட்டத்தின் பெருமை பாடியும் சிற்றின்ப இலக்கியங்களாக மாற்றம் பெற்று விறலி விடு தூதில் வந்து முடிந்தது.

(எ.கா)

பெரியதம்பி பிள்ளை பேரில் மான் விடு தூது

முத்து வீரப்ப பிள்ளை பேரில் மான் விடு தூது

வெள்ளைய ராசேந்திரன் துகில் விடு தூது

மணவை திருவேங்கடமுடையான் மேக விடு தூது

சங்கரமூர்த்தி பேரில் விறலி விடு தூது

தஞ்சை மராட்டிய மன்னன் சாசுகியின் கிராமமணிய அட்டவணை அதிகாரியாக இருந்த செண்டலங்காரன் மீது 'செண்டலங்காரன் விறலி விடு தூது' (1800) பாடப்பட்டது.

சேதுபதி விறலி விடு தூது சரவண பெருமாள் கவிராயர் வெள்ளைய ராசேந்திரனின் சிறப்புக்களைப் பாடுவது. தலைவன், பவனி வரும் தோற்றத்தைக் காணும் பருவ மடந்தை ஒருத்தி மீது காதல் கொண்டு, அவள் மீது துகிலைத் தூது விடுவதாகப் பாடப்பட்டது. வெள்ளைய ராசேந்திரன் துகில் விடு தூது ஆகும்.

> . . . . . . . . . . . . . . . பேசுதமிழ்க்
> கென்னருமை வெள்ளையரா சேந்திரனு லாவந்ததுவும்
> மன்னவனை நான் புகழ்ந்து வாழ்த்தியதும் - என்னருகே
> வல்லிவந்து நின்ற தூவும் மாலெனக்குத் தந்த தூவும்
> சொல்லி வரக் கேட்பாய் துகிலரசே. . .

புலவர் தி.சு.ஆறுமுகம், தம் மனைவி சிவனம்மாள் மீது மஞ்சள் விடு தூது பாடியுள்ளார்.

நெல்லை ஆ.கணபதி அங்கயற்கண்ணி மீது ஆனை விடு தூது பாடியுள்ளனர்.

பி.என்.இராசமாணிக்கம் பிள்ளையின் அன்பு விடு தூது.

திருக்குறள் வேள் வரதராசர் தமிழ் விடு தூது - இலால்குடி புலவர் ப.அரங்கசாமி (1976)

திருக்குறள் விடு தூது - இரா.இளங்குமரன் (1972)

புலவர் விடு தூது - கி.அரங்கராசு (1983)

பொடி விடு தூது - சுமுகி (1974)

காக்கை விடு தூது - வெள்ளை வாரணர்

(சென்னை மாநில முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் அவர்களிடத்து வெண்கோழி யுய்த்த காக்கை விடுதூது - என்பது நூல் தலைப்பு).

காந்தியடிகள் நெஞ்சு விடு தூது - வேங்கடசாமி ரெட்டியார்.

தானப்பசாரியார் தச விடு தூது - மீனாட்சி சுந்தரம் பிள்ளை

திருப்பூவனம் வேங்கட கிருட்டிண பாரதி (1892) பாடிய திருமாலிருஞ்சோலைமலை அழகர் மீது கமல விடு தூது.

குருவி விடு தூது - சி.எம்.இராமச்சந்திரன்

புகையிலை விடு தூது - சீனிசக்கரைப் புலவர்

பழையது விடு தூது - பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்.

செருப்பு விடு தூது - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த மிதிலைப் பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர், தமக்கு இடையூறு விளைத்த சட்ட நாதன் மீது கழுதை விடு தூது, குக்கல் விடு தூது பாடியுள்ளார்.

பிற தூது இலக்கியங்கள்

குமாரதேவர் நெஞ்சுவிடு தூது - சிதம்பர சுவாமிகள்

புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளை மீது மயில்விடு தூது - முத்து வேலு கவிராயர்.

திருவாவடுதுறை ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் மீது நெஞ்சு விடு தூது - மீனாட்சி சுந்தரம்பிள்ளை

பொன் பாண்டாம் பாளையம், இராமசாமிக் கவுண்டர் மான் விடு தூது - வேங்கடரமண ஐயங்கார்.

போடிநாயக்கனூர் பெருநிலக்கிழார் மீது அன்னம் விடு தூது - முத்து சாமிக் கவிராயர்.

தமிழில் தூது இலக்கியங்கள் 90 உள்ளன என்ற பட்டியலை ந.வீ.செயராமன் தந்துள்ளார்.

7. கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞான குரு மீது பாடிய 'ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடு தூது', தூது இலக்கியத்திற்கான சிறந்த சான்றாகப் போற்றப்படுகிறது.

இந்நூலில் குருவின் சிறப்பு, திருநீறு, திருவைந்தெழுத்து, உத்திராக்கம் ஆகிய திருச்சின்னங்களின் சிறப்பு, முப்பொருள் இயல்பு, புராண வரலாறு, அடியவர் வரலாறு ஆகியன அழகொழுக எடுத்தியம்பப்படுகின்றன.

நினது திருப்பவனி நேர்ந்த நாள் தொட்டுக்
கனலில் மெழுகாய்க் கரையும் - புனல் பெருகு
கண்ணோடு நின்றேங்கும் கங்குல் பகலின்றி
உண்ண உடுக்க உவப்பொழியும் - பண்ணோடு
பாடும் நினை மெய் பதைக்கும் நினையெங்கும்
தேடும் உருகும் திகைத் தலறும் - வாடும் எனைப்
பாரானோ என்னும் பரம சிவஞானி
வாரானோ என்னும் வழி பார்க்கும் (236-239)

*கி.வேங்கடசாமி ரெட்டியார் பாடிய மகாத்மா காந்தியடிகள் மீது நெஞ்சு விடு தூது (1934) 20 ஆம் நூற்றாண்டுத் தூது இலக்கியங்களுள் சாலச் சிறந்தது எனப் போற்றப்படுவதாகும். (எ.கா)*

என்னை உமதடியார் கூட்டத் தொருவனாய்
மன்னிடவே செய்யும் வகையருள்வீர் - என்றுரைத்தால்
நம்முடைய எண்ணத்தை மாற்றாமே நல்குவார்
அம்மையாய் அத்தனாய் ஆர்ந்தவர் - செம்மையே
உன்னும் உயர்மனத்தர் உத்தமர் தம்மிடத்தே
என்னுடைய நெஞ்சே யியைந்து நீ - துன்னிடும் இப்
பூவுலகோர் துன்பொழிக்கப் பொங்கும் அருள்பெற்று
மேவுவாய் இன்பம் மிகுந்து (251-253)

*இந்தி கட்டாயப்பாடமாக்குவதை எதிர்த்து வெள்ளைவாரணர் பாடிய 'காக்கை விடு தூது' தமிழ்க் காப்புணர்வு மிக்கது என்பர்.*

உங்குலத்தார்ப் போற்றி ஒளிர்சென்னை மாநகரில்
தங்குமுத லமைச்ச ராய்அமர்ந் - தெங்கும்
வசைநீங்கி யாரும் வழுத்து மரபால்
இசை பரப்பி வாழுமின் இன்றேல் - நசையினால்
உள்ளத் துயர் தமிழர் உண்மை வழிப் போரியற்ற
ஒல்லையிற் கைதாரும் என்று ரைத்துச் - செல்லவே
வெண்கோழி யென்னை விடுத்தது காண் என்றுரைத்து
வண்போர்க்குக் கைவழங்கி வா

*எந்தப் பொருளையும் தூது விடுக்கும் பொருளாக்கிப் பாடலாம் என்பதற்குப் பொடிவிடு தூது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.*

. . .          . . .          . . .தாவரமாய்
மண்ணடியா னங்குரித்து மாமடியிற் றான்றவழ
விண்ணிழய மூக்கதெனும் வீதிவழி - வண்மையுடை
மூளைய திற் பாயவென முன்னுமறு சாயலொடுன்
தாளைதுக ளாக்கியெழிற் றரணமே - னாளைக்கும்
வாழுமொரு மூர்த்தியுனை வாஞ்சையுட னிவ்வுருவே
விழுவதாற் பேசுகிறேன் வெம்பொடியே (9-12)

*தூது இலக்கியங்களில் தூது செல்லும் பொருளின் சிறப்புரைத்தலும், பிற பொருள் சிறவாதெனலும் புலவரின் கற்பனையாற்றலுக்கும் பாடுந்திறனுக்கும் உண்மைச் சான்றுகளாம். இதில் உவமை, சிலேடை நயங்கள் நிறைந்திருக்கும். இவற்றிற்கு அழகர் கிள்ளை விடு தூது, தமிழ்*

*விடு தூதுப் பகுதிகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.*

*தூது செல்லும் பொருளின் சிறப்புரைத்தல்:*

கார் கொண்ட மேனிக் கடவுள் பெயர் கொண்டு
நீர் கொண்ட பாயல் நிறங் கொண்டு - சீர் கொண்ட
வையம் படைக்கு மதனையும் மேற்கொண்டின்பம்
செய்யுங் கிளியரசே செப்பக்கேள் - வைய மெலாம்
வேளாண்மை யென்னும் விளைவுக்கு நின்வார்த்தை
கேளாதவர் ஆர்கதூண் கிள்ளையே - நாளும்
மலைத்திடு மாரனொற்றை வண்டியும் இல்லாமற்
செலுத்தியகாற் றேரை முழுத் தேராய்ப் - பெலத்திழுத்துக்
கொண்டுதிரி பச்சைக் குதிராய் உனக்கெதிரோ
பண்டுதிரி வெய்யோன் பரியேழும் - கண்ட
செகமுழுதும் நீஞான தீபமும் நீ யென்று
சுக கிளியே சொல்லாரோ சொல்லாய் (1-6)

*பிறபொருள் பிறவா தெனல்:*

அன்னந் தனைவிடுப்பேன் அன்னந்தான் அங்கவரை
இன்னந் தான் கண்டறியா தென்பரே - மன்னெந்தாய்
அப்பா லோர்வண்டை யனுப்பின் அவர்காமம்
செப்பா தேயென்றால் திகைக்குமே - தப்பாது
மானைப் போய்த் தூது சொல்லி வாவென்பேன் வல்லயப்பூந்
தானைப் பரமர் பாற் சாராதே - ஏனைப்பூங்
கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும் காக்கை யினம்
ஆகி வலியனுக் கஞ்சுமே- ஆகையினால்
இந்த மனத் தைத்தூதா யேகென்பேன் இம்மனமும்
அந்த மனோ தீதர்பா லண்டாதே (107-111)

*தூது இலக்கியங்களில் தலைவன் சிறப்புரைத்தலும், தலைவியின் மையல் உரைத்தலும் மையப் பகுதிகளாக அமைகின்றன.*

*தலைவன் சிறப்புரைத்தல்:*

அரிவடிவு மாய்ப்பின் னரன் வடிவு மாகிப்
பெரியதொரு தூணிற் பிறந்து - கரிய
வரைத் தடந் தோள் அவுணன் வன்காயங் காட்டி
அழைத்திடும் சேனை அருந்தி - உருத்திரனாய்ப்
பண்ணுந் தொழிலைப் பகைத்து நிலக் காப்பு மணிந்து
உண்ணும் படியெல்லாம் உண்டருளி வெண்ணையுடன்
பூதனை தந்தபால் போதாம லேபசித்து

வேதனையும் பெற்று வெளிநின்று - பாசுவதிதைத்
தள்ளுநடை யிட்டுத் தவழ்ந்து விளையாடும்
பிள்ளைமை நீங்காத வெற்றியின் . . .

(அழகர்கிள்ளை விடு தூது 67-71)

*தலைவி மையல் உரைத்தல்:*

பின்னழகு முன்னழகாம் பேரழைக் காணுமுன்னே
முன்னழகைக் கண்டேநான் மோகித்தேன் - பின்னழகு
தானே கண் டாலுந் தனக்குத் துயர் விடுமென்று
ஏனோரை நோக்கி எழுந்தருள - ஆனேன்
விமலத் திருமுகமும் என் மார்பின் மேவும்
கமலத் திருமுகமும் கண்டோர் ..... (167-169)

## 144. தெளிவு

1. *தெளிந்து பெற்ற அறிவு.*
2. *இறையனுபவத்தில் மூழ்கியதால் பெற்ற தெளிவினை எடுத்துச் சொல்லும் இலக்கிய வகை.*
3. -----
4. -----
5. *உமாபதி சிவாச்சாரியாரின் 'சிவபுண்ணியத் தெளிவு' இவ்வகையின் முதல் நூல்.*
6. *பிற நூல்கள்:*
   *ராய. சொ. வின் 'சிவாக்கிரமத் தெளிவு' 'வேதாந்தத் தெளிவு'.*

## 145. தொள்ளாயிரம்

1. *தொள்ளாயிரம் பாடல்கள்.*
2. *எண்ணால் பெயர் பெற்ற இலக்கிய வகை. தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்படுவது.*
3. -----
4. -----
5. *இவ்வகையின் முதற்சான்று 'முத்தொள்ளாயிரம்'*
6. *பிற சான்று: அரும்பைத் தொள்ளாயிரம் - ஒட்டக்கூத்தர் (12 நூற்.)*

7. மூவேந்தர்கள் ஒவ்வொருவர் மீதும் 900 பாடல்கள் அமைய முத்தொள்ளாயிரத்தில் 2700 பாடல்கள் இருந்திருக்க வேண்டும் என்பர். ஆனால் இன்று 109 பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றைக் கடைச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் பாடியிருப்பர் என்பர். ஆனால் சங்க இலக்கிய மரபுகள் இதில் பின்பற்றப்படவில்லை. இதில் உள்ள அகச்செய்தி, கைக்கிளைப் பாடல்களாய் பாடப்பட்டிருப்பது (65 பாடல்கள்) இதை உறுதி செய்யும். புறச் செய்திகள் நாடு, நகரம், பகைப்புலம் பழித்தல், யானைமறம், குதிரைமறம் போன்ற பொருள்களில் பாடப்பட்டுள்ளன.

ஒருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாநகர்
உருமி னிடிமுர சார்ப்ப - அரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேற்று (எயில்கோடல்)

## 146. தோத்திரம்

1. புகழ்ச்சிப் பரவல்.
2. பலபாடல்களின் தொகுப்பாக இறைவனைப் போற்றிப் பரவுவதற்கு ஏற்றவாறு அமையும் இலக்கிய வகை. இது தோத்திரம், திரட்டு, மாலை என்று அழைக்கப்படுகிறது.
3. -----
4. -----
5. தட்சிணாமூர்த்தி தோத்திரம் - தாயுமான சுவாமிகள்.
6. பிறசான்றுகள்:

திருஞானசம்பந்தர் தோத்திரம் - இராமலிங்க அடிகள்

ஆளவந்தார் தோத்திரம் - பெரியவாச்சான் பிள்ளை

வள்ளி நாச்சியார் தோத்திரம் - புரசை சபாபதி முதலியார்

சனிபகவான் தோத்திரம் - சிவானந்தையர்.

இவைதவிர வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பலதோத்திர நூல்கள் இயற்றியுள்ளார். மதுரைவீரசுவாமி தோத்திரம், பரமசிவன் தோத்திரம், நவக்கிரக தோத்திரம் என்பன பிற தோத்திர நூல்கள். மாலை என்ற பெயரில் திருப்போரூர் ஸ்ரீ கந்தசாமிப் பெருமான் தோத்திர மாலையும், திரட்டு என்ற பெயரில் சீகாழி தோத்திரப் பாமாலைத் திரட்டும் பாடப்பட்டுள்ளன.

## 147. தேவபாணி

1. தேவர் பாடல்.
2. தெய்வங்களைப் போற்றிப் பாடும் ஓர் இலக்கிய வகை.
3.

ஏனை ஒன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே (தொல்.1395)

என்று செய்யுளியல் நூற்பா இதற்கான இலக்கணத்தைச் சொல்கிறது என்பர். கலிப்பாவின் இயல்பை விளக்குமிடத்து இருவகை ஒத்தாழிசையுள் கலிப்பாவும் ஒன்று என்று தொல்காப்பியர் கூறுகிறார். இது முன்னிலைக் கண் தேவரைப் புகழ்ந்து பாடப்படும் இசைப்பா வகையாகும். சிலப்பதிகார உரையில் தேவபாணிக்கான மேலும் விளக்கங்கள் காணப்படுகின்றன. 'தேவபாணி செந்துறை விகற்பகங்களுள் ஒன்று. மாயோனைப் பரவி வரும் தேவபாணி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் மூன்று வேறுபட்ட நிலைகளில் அமைவது. இவற்றுள் நாடகத் தமிழில் மூவடி முக்கால் வெண்பாவில் அமையும். பெருந்தேவபாணி பலதேவரையும், சிறுதேவபாணி வருணப் பூதரையும் துதித்து அமையும் என சிலப்பதிகார உரை சொல்கிறது. பாட்டியல் நூல்களுள் ப.பா.மட்டும் இதற்குரிய இலக்கணத்தைக் கொடுக்கிறது.

4. ப.பா.இ.38 - 44.

தன்மை முன்னிலை படர்க்கையுள் தன்மை
ஒழித்து இருவகையுள் ஒன்றாற் கடவுள்
பழிச்சும் ஒருபோகு இருமூன்று உறுப்பும்
அமைந்து ஒருங்கு இயலும் நயம் திகழ் கலியுள்
வண்ணகம் போதினும் எண்ணே போதினும்
ஓதிய உறுப்பால் பேர் புகன்றனரே -ப.பா.இ.38

5. பதினோராம் திருமுறையில் உள்ள நக்கீர தேவநாயனாரின் பெருந்தேவபாணி இவ்வகையின் முதற்சான்றாகும். சிறுதேவபாணியில் நூல் இல்லை.

## 148. தோணோக்கம்

1. ஒருவர் தோளை ஒருவர் தொட்டுக் கொண்டோ, பார்த்துக் கொண்டோ மகளிர் விளையாடும் விளையாட்டு.

2. இவ்விளையாட்டின்போது பாடப்படும் பாடல்களைக் கொண்டு அமையும் இலக்கியவகை இது. 'தோள் நோக்கம்' என்றும் 'தோள் நோக்கம் ஆடாமோ' என்றும் ஒவ்வொரு பாடலும் முடியும்.

3. -----

4. -----

5. மாணிக்கவாசகர் பாடிய திருத்தோள் நோக்கம் இவ்விலக்கிய வகையின் முதற்சான்றாகும்.

6.

*பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்*
*பேய்த்தேர் முகக்கலும் பேதைகுண மாகாமே*
*தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்*
*கூத்தா உன்சேவடி பாடும் வண்ணம் தோணோக்கம் (1)*

*என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டு கொண்டான்*
*கண்றால் விளவெறிந்தான் பிரமன் காண்பரிய*
*குன்றாதே சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்*
*துன்றார் குழலினீர் தோணோக்க மாட்டாமோ? (2)*

## 149. நயனப் பத்து

1. கண்களைப் பற்றிய பத்துப்பாடல்கள்.

2. உறுப்புக்களின்அழகைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகைகளுள் இது கண்களின் அழகையும் ஆற்றலையும் பாடுவது.

3. -----

4. -----

5. எஸ்.பொன்னுசாமி செட்டியார் பாடியதாக 'தரும சம்வர்த்தினி தாயார் நயனப் பத்து' என்ற நூல் கிடைக்கிறது.

## 150. நவகம்

1. புதுமை, ஒன்பது.

2. ஒன்பது பாடல்கள் அமையப் பாடப்படும் இலக்கியம்.

3. -----

4. -----

5. இராமலிங்க அடிகளார், 'அகராதி நவகம்' என்ற நூல் பாடியுள்ளார்.

## 151. நவகாரிகை மாலை

1. ஒன்பது பாடல்களால் அமைந்த பாமாலை.
2. இறைவன் மீது கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் ஒன்பது அமையப் பாடுவது.
3. -----
4. -----
5. திருவண்ணாமலை ஈசர் மீது 'திருவண்ணாமலை அருணாசலேசர் நவகாரிகை மாலை' ஒன்று பாடப்பட்டுள்ளது.

## 152. நவரச மஞ்சரி

1. ஒன்பது சுவைகளால் அமைந்த கொத்து.
2. ஒரு மெய்ப்பாட்டிற்கு விளக்கமாக ஒரு பாடல் வீதம் ஒன்பது மெய்ப்பாட்டிற்கும் 81 பாடல்கள் அமையப் பாடப்படும் இலக்கியம்.
3. -----
4. -----
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'திருச்செந்தில் நவமஞ்சரி'

## 153. நவமணி மாலை

1. ஒன்பது வகைப் பாக்களால் அமையும் பாமாலை.
2. வெண்பா முதலிலும் அதைத் தொடர்ந்து ஒன்பது பாவினமும் அந்தாதி அமையப் பாடப்படும் இலக்கிய வகை. ஒன்பது பாடல்களில் ஒன்பது மணிகளின் பெயர் அமைவது இதன் சிறப்பாகும்.
3. -----
4. -----
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'பழனி நவ மணிமாலை' இதன் முதற்சான்றாக அமைகிறது.
6. பிட்சாடன நவமணிமாலை - துறை மங்கலம் சிவப்பிரகாசர்.

பாரத மாதா நவரத்தின மாலை - சுப்பிரமணிய பாரதியார்.

கைலாச நாதர் நவமணி மாலை - எஸ்.பொன்னுசாமி செட்டியார்.

கலறத்து சாகுல் அமீதாண்டவர் நவமணி மாலை - அல்லி மரைக்காயர்.

## 154. நாடகம்

1. படிப்பதற்கும் நடிப்பதற்கும் உகந்தது.
2. காட்சியமைப்புகள், களம், பாத்திர உரையாடல்கள், பாடல்கள், இவையமைய, காவியப்போக்கில் நீண்டு அமையும் இலக்கியம். பண்டைக்காலந் தொட்டே நாடக இலக்கியம் கூத்து என்ற வடிவில் மக்கள் இலக்கிய வகையாக வழக்கில் இருந்தாலும் 'நாடகம்' என்ற பெயர் அவற்றிற்குத் தரப்படவில்லை. கீர்த்தனை இலக்கியம் செல்வாக்குப் பெற்ற பின் அதன் நீட்சியாக 'நாடகம்' என்ற பெயரில் இலக்கியங்கள் செய்யப்பட்டன. இவை 'விலாசம்' என்ற பெயரிலும் அழைக்கப்பட்டன. கடிகை முத்துப் புலவரின் சமுத்திர விலாச'த்திற்குப் பின் நாடகப் போக்கிலான 'விலாச' நூல்கள் இயற்றப்பட்டன.
3. -----
4. -----
5. அசோமுகி நாடகம் - அருணாசல கவிராயர்.

   கஜேந்திர மோட்ச நாடகம் - கண்ணப்ப நாயுடு.

   காராளர் கார்காத்த நாடகம் - கிருஷ்ணசாமி செட்டியார்.

   அப்பாசு நாடகம் - முகமது இபுறாகீம்

   அரிபாதுஷா நாடகம் - வண்ணக் களஞ்சியப் புலவர்.

   உலோப நாடகம் - வி.முனியப்பபிள்ளை (1890),

   19 ஆம் நூற்றாண்டில் 328 நாடக இலக்கியங்கள் இயற்றப்பட்டதாகக் கூறுவர் (19 ஆம் நூ.த.இ.).

   விநாயகர் திருமுக விலாசம் - சரவணக் கவிராயர்.

   மன்மத விலாசம் - தாண்டவராய முதலியார்.

   மதுரை வீரன் விலாசம் - வைரக்கண் வேலாயுதப் புலவர்.

   மகாபாரத விலாசம் - ராமச்சந்திர கவிராயர்.

   டம்பாச்சாரி விலாசம் - காசி விசுவநாத முதலியார்.

விலாசம் என்ற பெயரில் 96 நூல்கள் இருப்பதாகச் சொல்வர் (19 நூ.த.இ.)

நரசிம்ம ஐயர் (1899) பாடிய மார்க்கண்டேய நாடகம், விருத்தம், கட்டளைக் கலித்துறை, உரையாடல், இசைப்பாக்கள் நிரம்பியது.

இட்டதோ ஏாக்ஞை பெற்ற
எமதூதர் நாங்கள் வந்து
விட்டகன் றிடுவ துண்டோ
வெறிகொண்டு பிதற்றும் இந்தத்
துட்டனைக் குண்டுக் கட்டாய்த்
துரிகினிற் கட்டிக் கொண்டு
பொட்டெனப் போவோம் வாரீர்
பொற்புய தூதர் நாமே.

முத்துக்கிருஷ்ண உபாத்தியாயர் பாடியுள்ள அரிச்சந்திர நாடகம் சாதாரண மக்களும் பாடி ஆடும்படியான எளிய நடையில் அமைந்தது:

தஞ்சாவூருச் சந்தைக்குப் போனேன் சந்த மாமா - அங்கே
சாகிற கிழவியைக் குத்திப் போட்டேன் சந்தமாமா
கும்பகோணச் சந்தைக்குப் போனேன் சந்தமாமா - அங்கே
குமரியைக் கண்டு ஓடிப்போனேன் சந்தமாமா
இருட்டுவீட்டிலே ஈட்டியிருந்தது சந்தமாமா - நான்
எடுக்கப்போனேன் அடிக்கவந்தது சந்தமாமா
எட்டுநாள்முன் ஒத்தப்பாம்பைச் சந்தமாமா - நான்
எட்டிநின்னு குத்திப் போட்டேன் சந்தமாமா
இரண்டாட்டுக்கு எட்டுக்காலு சந்தமாமா - என்
பெண்டாட்டியைக் கேட்டுப்பாரு சந்தமாமா
என்னைப்போல் வீரனில்லை சந்தமாமா - இதோ
உன்னைப் போலே கோழையில்லை சந்தமாமா

## 152. நாமாவளி

1. பெயர் வரிசை.
2. பாடல் தலைவரின் பெயர்களை வரிசைப்படுத்திப் பாடும் இலக்கிய வகை. பெயரை வரிசைப்படுத்திப் பாடுவதென்பது சிலப்பதிகாரத்திலேயே காணப்படுகிறது. கவுந்தியடிகள் தம் இறைவனான அருகன் பெயர்களை வரிசைப் படுத்திப் பாடியுள்ளார்:

அளவன் அறவோன் அறிவு வரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரள் இத்தனி பகவகர்
தருமமுதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவழகன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன் (சிலப்.10:176-182)

3. *பாட்டியல் இலக்கணங்களில் 'நாமாவளி'க்கான இலக்கணம் இல்லை. அவை நாமமாலைக்கான இலக்கணத்தைச் சொல்கின்றன. ப.பா.(இ.92), வெ.பா.(செ.35), பிர.(13), சி.பா.(ம.9:3, 4), இ.வி.(866), தொ.வி.(269).*

4.

*மைந்தர்க்கு ஆயின் வஞ்சிப் பல்வகை*
*நேர்ந்த அடிமயக்கம் நாம மாலை* (ப.பா.இ)

5. *சிவநாமாவளி* — *பொ.மு.கேசவ சுப்பராய செட்டியார்*
*ஸ்ரீகண்ணபிரான் நாமாவளி*

6. *அடியார்க்கும், அருளாளர்க்கும், சான்றோர்க்கும் பாடப்பட்ட நாமாவளிகள் வருமாறு:*

*திருவருட் பிரகாச வள்ளலார் நாமாவளி - ச.மு.கந்தசாமிப் பிள்ளை*

*ஆளுடைய பிள்ளையார் நாமாவளி - ச.மு.கந்தசாமி பிள்ளை*

*திருவள்ளுவ நாயனார் நாமாவளி.*

*முனாஜத்து நாமா - அப்துல் வகாபு.*

## 156. நாமக்கோவை

1. *பெயர்க்கோவை.*
2. *இறைவன் அல்லது அடியார்களின் பெயர்களை வரிசையாகக் கோர்த்து கண்ணிகளால் ஆன வெண்பாவால் பாடும் இலக்கியம்.*
3. -----
4. -----
5. *சிவஞான சுவாமிகள் பாடிய 'திருத்தொண்டர் திருநாமக் கோவை'.*

## 157. நாற்பது

1. நாற்பது பாடல்கள்.
2. நாற்பது வெண்பாக்களால் ஆகிய இலக்கிய வகை. காலம், இடம், பொருள் ஆகியவற்றுள் ஒன்றைப் பாடுவதாக இலக்கணங்கள் சொல்கின்றன.
3. இ.வி. (877), மு.வீ. (யா.ஒ.152), பி.தீ.26.
4. 

   இடம் பொருள் காலம் இவற்றின் ஒன்றனை
   வெண்பா நாற்பதால் விளம்பல் நாற்பது (மு.வீ)

5. பதினெண்கீழ்க் கணக்குத் தொகுதியில் களவழி நாற்பது (மறம்), இன்னா நாற்பது, இனியவை நாற்பது (அறம்) ஆகியவை பாடப்பட்டுள்ளன.
6. பிற சான்றுகள்:

   கார் நாற்பது (காலம் பற்றியது)

   நல்லிசை நாற்பது - ச.பூபாலப் பிள்ளை

   நீதிவெண்பா நாற்பது - அநந்த கிருட்டிண ஐயங்கார்.

## 158. நிராகரணம்

1. 'நிராகரித்தல்' எனப் பொருள்படும் மறுப்பு.
2. பிற சமய உண்மைகளை மறுத்துத் தம் சமய உண்மைகளை நிறுவுவதற்குச் சமயத்தார் உருவாக்கிய இலக்கிய வகை.
3. -----
4. -----
5. உமாபதி சிவாசாரியாரின் 'சங்கற்ப நிராகரணம்', (14 நூற்) முதற்சான்றாக அமைகிறது. இந்நூலில் மாயாவாதம், ஐக்கிய வாதம், பாடாண வாதம், பேத வாதம், சிவசம வாதம், சங்கிராந்த வாதம், நிமித்தகாரண பரிணாமவாதம் ஆகிய சமயங்கள் மறுக்கப்பட்டுள்ளன என்பர். இது 20 அகவற்பாக்களால் ஆகியது.
6. கிறித்தவ சமய உண்மைகளை மறுத்து சிவப்பிரகாச சுவாமிகள் (17 நூற்) 'யேசுமத நிராகரணம்' எனும் நூல் இயற்றினார். இதே போன்று சபாபதி நாவலரும் 'ஏசுமத சங்கற்ப நிராகரணம்' எனும்

நூல் இயற்றியுள்ளார். மறைஞான சம்பந்தர் (16 நூற்) சங்கற்ப நிராகரணம் எனும் நூல் செய்துள்ளார். மறைமலையடிகளின் ‘முதற்குறள் வாத நிராகரணம்’ குறிப்பிடத்தக்கதாகும்.

## 159. நான்மணிமாலை

1. நால்வகை யாப்புகளால் அமையும் பாமாலை.
2. வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் எனும் நான்கு பாக்களால் அந்தாதியாக அமையும் இலக்கியம்.
3. ப.பா. (இ.69, 70), வெ.பா. (செ.16), ந.பா. (செ.11:2, 3), பிர.ம. (10), சி.பா.(ம.6), இ.வி.(821), தொ.வி.(272), மு.வீ.(யா.ஒ.391), பி.தீ.11 ஆகிய பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் சொல்கின்றன.
4.

அந்தாதித்து வெண்பாக் கலித்துறை
விருத்தமும் அகவலும் விரவி நாற்பது
நவில்வது நான்மணிமாலை யாகும் — மு.வீ

5. கோயில் நான்மணிமாலை - பட்டினத்துப் பிள்ளையார் (15 நூற்)
6. திருவாரூர் நான்மணிமாலை - குமர குருபரர்

நால்வர் நான்மணிமாலை - துறை மங்கலம் சிவப்பிரகாசர்

மஸ்தான் சாகிபு நான்மணிமாலை - சரவணப் பெருமாள் கவிராயர்.

விநாயகர் நான்மணிமாலை - சுப்பிரமணிய பாரதியார்.

குணங்குடி மஸ்தான் சாகிபு நான்மணிமாலை - திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர்.

## 160. நொண்டி நாடகம்

1. முடவன் ஒருவனைக் கதைத் தலைவனாகக் கொண்ட நாடக இலக்கியம்.
2. நொண்டி ஒருவன் தன் கடந்தகால வாழ்க்கையை இசைப் பாடலாகப் பாடி நடித்துக் காட்டும் நாடக இலக்கிய வகை. படைப்போர் இலக்கியங்கள் போல் நொண்டி நாடகங்கள் இஸ்லாமியர்களின் கொடையாகக் கருதப்படுகிறது.

3. நொண்டி நாடகப் பாஇனங்களைப் பிரபந்தத்திரட்டு குறிப்பிடுகிறது.

4.

> கலிப்பாவும் தாழிசையும் நான்மணி மேற்காட்டல்
> நலத்துறு சடானை நூற்பா - வலிக்காவிற்
> காவற்ற லேகாங்கிரி கலிவெண்பாச் சிந்தாய்க்
> கோலுற்றார் நொண்டி யென்று கொண்டு (பி.தீ.12:1)

5. நொண்டி நாடகங்களுள் புகழ் பெற்றது. சீதக்காதி நொண்டி நாடகமாகும். இது 224 நொண்டிச் சிந்துகள் அமையப் பாடப்பட்டது. நொண்டிச் சிந்துவால் பாடப்படுவதால் இது நொண்டி நாடகம் என அழைக்கப்பட்டது என்பர். இதிலுள்ள சிந்துக்களெல்லாம் பாடுவதற்காகவே ஏற்பட்டவை. சந்தத்தின் அமைப்பு முதலிலாயினும், ஈற்றிலாயினும் சொற்கட்டுகள் மூலமாக விளக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிந்திலும் நொண்டியான சீர் முதல் வரியிலாயினும், இரண்டாம் வரியிலாயினும், அல்லது ஈற்று வரியிலாயினும் காணப்படும். (தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், ப.172).

6. பிற நொண்டி நாடகங்கள்:

திருக்கச்சூர் நொண்டி நாடகம் - மதுரகவிராயர் (18 நூற்) இயற்றியது.

ஆதிமூலேசர் நொண்டி நாடகம், தில்லை விடங்கன் ஐயனார் நொண்டி நாடகம் ஆகியவற்றை மாரிமுத்தா பிள்ளை இயற்றியுள்ளார். திருச்செந்தூர் ஐயனார் நொண்டி நாடகத்தை முத்தாலங்குறிச்சி கந்தசாமிப்புலவர் எழுதியுள்ளார். இது திருச்செந்தூர் தேவஸ்தானப் பதிப்பாக 1948 இல் வெளிவந்துள்ளது.

> நதிமுழங்கி மதிச்சடிலற் குபதேசம் வரைந்தகுரு
> நாதன் விண்ணோர்
> பதிமுழங்க மங்கியசெஞ் சிறைச்சேவல் விருதுடைய
> பாக்ய சாலி
> கதிமுழங்கத் தொண்டர்தமக் கருள்புரியஞ் செய்வீரன்
> கட்டியம் கூறத்
> துதிமுழங்கும் சந்நிதியில் நொண்டி நொண்டி நொண்டி வந்து
> தோன்றி னானே - தொடக்கச் செய்யுள்

திருமலை நொண்டி நாடகம் எனும் நூலை மன்னர் பெருமான் என்பவர் எழுதியுள்ளார். இது மதுரை தமிழ்ச்சங்கப் பதிப்பாக 1916இல் வந்துள்ளது.

தஞ்சை வேதநாயக சாஸ்தியார் ஞான நொண்டி நாடகம் பாடியுள்ளார். வீரராகவையங்கார் என்பவர் திருப்புல்லாணி நொண்டி நாடகம் எழுதியுள்ளார். அனந்த பாரதியின் திருவிடை மருதூர் நொண்டி நாடகம் 1967இல் தேவஸ்தானப் பதிப்பாக வெளிவந்துள்ளது. இவ்வாறு சமயம் தொடர்பாகவும், தலம் தொடர்பாகவும், வள்ளல்களை நாடி வளம் பெற்றதாகவும் நொண்டி நாடகங்கள் அமைகின்றன.

பொதுவாக திருடர்கள் வாழ்க்கையில் திசை மாறிக் கெட்டுப்போய் வேசையர் வலையையில் சிக்கித் தவறாகச் சேர்த்த பொருள்களை எல்லாம் இழந்து, விபத்தினாலோ, தண்டனையாலோ கால் இழந்து, பின் தங்களின் தவற்றுக்கு வருந்தி இறைவனை வேண்டி மன்னிப்புப் பெற்று நற்கதி அடைவதையே நொண்டி நாடகங்கள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற இறையருட்தன்மையை இவை புலப்படுத்துகின்றன எனலாம். பாடலின் இடையிடையே சபையில் உள்ளோர் நொண்டியைப் பார்த்து பெயர், குலம், பொருளிழந்த காரணம், கால் கைகள் வெட்டப்பட்டதற்கான காரணம் ஆகியவற்றை வினவுவதாக அமையும் உரையாடற் பகுதிகளும் வருவதுண்டு.

7.

*புலி பாய்ச்சல் பாய்வது போல - சூதும்*
*பொய்யும் களவும் புரட்டுருட்டுங்*
*கபிகாய கற்பனையில் - எல்லாம்*
*கற்றிருந்தேன் பேரும் பெற்றிருந்தேன்*

என்று திருச்செந்தூர் நொண்டி நாடகத் தலைவன் தன்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறான். 'வேசையர் தொடர்பிருப்பதால் பொருள் வேண்டும். அதற்குத் திருடத் தொடங்கினேன்' என்பதாகக் காரணம் சொல்லப்படுகிறது.

*காயலின் மகராயன் - நெய்தக்*
*காதியைத் திசைநோக்கிக் கையெடுத்தேன்*
*தாயென உபசரித்த - மாமுநெயினார்*
*தன்னையும் நினைந்தே தாழ்ச்சி செய்தேன்*
*அழிக்கும் புலிவாழி - செருவில்*
*அரியதுரை - சேது பதிவாழி*
*கீழக்கரை வாழி - சிங்கக்*
*கேசச் சதக்கதுல்லா வாழி*

என்று சீதக்காதி நொண்டி நாடகம் முடிகிறது.

## 161. பஞ்சகம்

1. ஐவகைப் பாடு பொருள்கள்.
2. ஐவகைப் பொருள் குறித்து ஒவ்வொன்றையும் ஐந்து பாடல்களால் பாடும் இலக்கிய வகை.
3. அலங்கார பஞ்சகம் என்ற பெயரில் பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் சொல்கின்றன. வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், வண்ணம் எனும் ஐவகைப் பாவினங்களால் பாடப்படுவது என்று கூறப்படுகிறது. வெ.பா.(செ.22), ந.பா.(செ.17), சி.பா.(67), இ.வி.(844), தொ.வி.(282), மு.வீ.(யா.ஒ.147), பி.தீ.(24), சுவாமி (169).
4.

   வெண்பாக் கலித்துறை வேறு ஆசிரியம் விருத்தம் வண்ணம்
   பண்பால் வருவ அலங்கார பஞ்சகம் ஆம் - ந.பா.

5. 'அர்த்த பஞ்சகம்' என்ற பெயரில் வேதாந்த தேசிகர் இயற்றியதாக (13 நூற்) ஒரு நூல் காணப்படுகிறது. இதுவே இவ்வகையின் முதற்சான்றாகலாம். இது ஐந்து உறுதிப் பொருட்களை 11 பாடல்களில் பாடுகிறது.
6. சிவஞான பாலைய சுவாமிகள் (17 நூற்) துதிபஞ்சகம் பாடியுள்ளார். இராமலிங்க அடிகளார் 'உள்ளப் பஞ்சகம்' ஒன்று பாடியுள்ளார். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் 'வள்ளியம்மை பஞ்சகம்', ஆத்தம்மைபஞ்சகம், குஞ்சரி பஞ்சகம் ஆகியன இயற்றியுள்ளார். பாரதியார் மகாத்மா காந்தி பஞ்சகம், மகாசக்தி பஞ்சகம் பாடியுள்ளார். வேதாந்த தேசிகர் போன்றே பிள்ளை லோகாசாரியாரும் (15 நூற்) அர்த்த பஞ்சகம் என்ற பெயரில் நூல் இயற்றியுள்ளார். அட்டாவதானம் சபாபதிமுதலியார் 'திருப்போரூர் அலங்காரப் பஞ்சகம்' பாடியுள்ளார். பரிதி மாற்கலைஞர் 'மாலா பஞ்சகம்' என்ற பெயரில் நூல் செய்துள்ளார்.

   ஞானசாத்திர பஞ்சகம் என்ற விதி நூல்கள் ஐந்தன் தொகுதியை நமசிவாய தேசிகர் (1300) இயற்றியுள்ளார். இது ஞானபூசா விதி (18 பாடல்கள்), ஞான தீக்ஷா விதி (8 பாடல்கள்), போசன விதி (4 பாடல்கள்), ஞான பூசா காண்டம் (20 பாடல்கள்), ஞான அந்தியேட்டி (2 பாடல்கள்) முதலிய நூல்களின் தொகுப்பாகும். இது ஞான சமாதிக்கான கிரியைகளைச் சுருங்க உரைக்கிறது என்பர்.

## 163. பஞ்சரத்தினம்

1. ஐந்து மணிகள்.
2. ஐந்து செய்யுட்களால் ஆகிய இலக்கிய வகை. இதுவும் பஞ்சகம் போன்றது என்றாலும் இதில் ஆசிரியப்பாவால் மட்டும் செய்யுட்கள் அமைகின்றன.
3. ஐந்து ஆசிரிய விருத்தங்களால் இவ்விலக்கியம் பாடப்பெறும். சுவாமிநாதத்தின் நூற்பகுதியில் இலக்கிய வகைகளைத் தொகுத்துத் தரும் பகுதியில் இதற்கான இலக்கணம் சொல்லப்படுகிறது (சுவாமி 172).
4. -----
5. சவ்வாது புலவர் (17 நூற்.) பாடிய இராஜராஜேஸ்வரி பஞ்சரத்தினம் இதன் முதற்சான்றாக அமைகிறது.
6. பிற சான்றுகள்:

திருவாமாத்தூர் விநாயகர் பஞ்சரத்தினம் - தண்டபாணி சுவாமிகள்.

அல்லியங்கோதையம்மன் பஞ்சரத்தினம் - திரிசிரபுரம் க.பெரியண்ண பிள்ளை.

சரஸ்வதியம்மன் பஞ்சரத்தினம் - மாம்பழ கவிச்சிங்க நாவலர்.

திருவாமாத்தூர் அழகிய நாடார் பஞ்சரத்தினம் - மனோன்மணி அம்மையார்.

புதுவை மணக்குள விநாயகர் பஞ்சரத்தினம் - கனகசபை நாயகர்.

மகமது பஞ்சரத்தினம் - அப்துல் காதிர் ராவுத்தர்.

திருக்கச்சிநகர் வரதராஜப் பெருமாள் பஞ்சரத்தினம் - அந்தகக் கவி வீரராகவ முதலியார்.

மற்றும் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் பெருந்தேவியார் பஞ்சரத்தினம், ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் பேரில் பஞ்சரத்தினம், சண்முகக் கடவுள் பஞ்சரத்தினம், இராமானுஜ நாவலர் பாடிய ஸ்ரீ நம்மாழ்வார் பஞ்சரத்தினம் ஆகியவையும் இதற்கான சான்றுகள் ஆகும். 64 பஞ்சரத்தின நூல்கள் 19 ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டதாகப் பட்டியல் தந்துள்ளனர் (19 நூ.த.இ., ப,162). பகவந்த சுவாமிகள் பஞ்சரத்தினம் ஒன்றை பு.தெ.தெய்வசிகாமணி முதலியார் பாடியுள்ளார். திருவொற்றியூர் தியாகேசர் மீது மா.நமச்சிவாயம் பிள்ளை தியாகேசர் பஞ்சரத்தினம் பாடியுள்ளார். அ.நரசிம்மபாரதி என்பார் திருவொற்றியூர் மீனாட்சியம்மை பஞ்சரத்தினம் பாடியுள்ளார்.

## 163. படைப்போர்

1. படைகள் மோதும் போர்.
2. படைகள் தம்முள் சண்டையிடும் போரும் அது தொடர்பான நிகழ்வுகளும் குறித்த இஸ்லாமிய இலக்கியம். அறபு நாட்டு இலக்கிய வகையான இதைத் தமிழுக்கு அறிமுகம் செய்தோர் இஸ்லாமியப் புலவர்கள் ஆவர். பரணி இலக்கியத்திலுள்ள போர் பாடியது என்ற உறுப்பின் விரிவாக இவ்வகையைக் கருதலாம்.
3. -----
4. -----
5. அலியார் புலவர் (18 நூற்.) படைப்போர் இலக்கியங்கள் பல இயற்றிப் புகழ் பெற்றவராவார்.

   (எ-டு) இந்திராயன் படைப்போர், இபுனியாண்டவன் படைப்போர், வாட்போக்கி படைப்போர், உச்சி படைப்போர்.
6. முகமது இபுறாகீம் சாகிப் எழுதிய சுக்கூன் படைப்போர், அப்துல்லா சாயுபு இயற்றிய மலுக்கு முலுக்கின் படைப்போர், குஞ்சுமூசா புலவர் எழுதிய இறவு சுல்கூல் படைப்போர் ஆகியவையும் குறிப்பிடத்தக்க படைப்போர் இலக்கியங்களாகும்.
7. பொதுவாக அறபு நாட்டில் பல பகுதிகளை ஆண்ட சிற்றரசர்கள் அல்லது படைத்தலைவர்கள் நடத்திய போர்கள், படைப்போர் இலக்கியங்களில் பேசப்படுகின்றன என்பர். அக்கரைப் பற்று அசனார் லெப்பை புலவர் எழுதிய சறுசறு படைப்போர், சறுசறு நாட்டின் அரசனான் மகாத்தீல் என்பானுடன் ஹஸ்ரத் அலி சண்டையிட்டு வென்றதைப் பாடுகிறது.

   (எ-டு)

   அட்டதிசை யெட்டுமே கிடுகிடென் றசையவே அமருக்காம்
   ஓசையெழுப்பத்
   தட்டலர்க ளாய்வரு ஜின்பரிகள் பூதமும் சேரவே
   மொறுமொறுத்து
   வட்டவா ரிதிமீத வங்கமதி லேறியே வரிசையலியாரை நாடி
   இட்டமுட னேயிருவர் கப்பலும தொன்றாய் எதிர்த்தார்கள்
   சண்டையாக (132)

இது படைகள் மோதலைப் பற்றிய பாடலாகும். ஜின் என்பது பேய். படைக்களத்தில் பேய்களும் பூதங்களும் உலவிய

குறிப்பை இதில் காணலாம். படைப்போர் இலக்கியங்கள் பரணியுடன் ஒப்பிடத்தக்கவை. இதில்வரும் நிகழ்ச்சிகள் வரலாற்றில் இடம்பெற்றவைபோலப் பாடப்பட்டாலும் இவ்வகையில் வரும் 'பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே'. இஸ்லாமியக் கொள்கைகளை நிலை நாட்டுவதற்காக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் இடையில் போர் மூண்டு இஸ்லாத்தைத் தழுவியவர்களே இறுதியில் வென்றார்கள் எனப் பாடப்படுவதாகும்.

1686இல் மதுரை முகையதீன் புலவரால் இயற்றப்பட்ட சுக்கூன் படைப்போர் இஸ்லாத்தை ஏற்க மறுத்த சுக்கூன் எனும் அறபு நாட்டு மன்னனுக்கும் நபிகள் நாயகத்திற்கும் இடையில் எழுந்த போரைச் சொல்கிறது.

குஞ்சுமூசா லெப்பை ஆலிம் புலவர் எழுதிய இறவு சுல்கூல் படைப்போர் எனும் இலக்கியம் 45 படலங்களும் 2383 பாடல்களும் அடங்கிய அளவில் பெரிய நூலாகும். இந்நூலின் பாட்டுடைத் தலைவி சல்கா எனும் இளங்கன்னியாவாள். இவள் அழகை வருணிக்கும் பாடல் வருமாறு:

மலையினில் பயிலுமிளம்பிடி யானை
 வருகின்ற சாயலோ வல்வில்
இலங்கிய வருங்கண் தூவியின் தோகை
 இணையடி பெயர்த்ததோ கமலத்
துலவிய போதினிற்றிரி பனங்கள்
 உலவலோ சொல்வரு நடையாள்
மெலமெல நடந்து தந்தைதா யிருக்கும்
 விகசிதவிடத்தை நண்ணி னளால்

படைப்போர் இலக்கியத்தில் பெண்களும் பாட்டுடைத் தலைவராகிறார்கள் என்பது சிறப்புச் செய்தியாகும். இவ்வாறு அமைந்த முதல் இலக்கியம் 'சுல்கூல் படைப்போர்'. இறவு சுல்கூலுக்கு எதிராக நபிகள் நாயகமும், தோழர் அலியாரும் நடத்தியதாகக் கற்பனையாக அமைந்த போர்ச் செய்தி இதில் சொல்லப்படுகிறது. தனது தந்தையான கொடுங்கோலன் இறவு சுல்கூலுக்கு எதிராக போர்க்கெழுந்து வென்றவள் சல்கா ஆவாள், படைப்போர் அல்லாமல் 'படையை வெல்லுதல்' என்ற பொருளமைந்த 'படைவெட்டு' எனும் இலக்கியமும் இதனோடு பொருள் தொடர்புடையதாகும்.

(எ-டு) முகமது உசேனின் 'அந்திரயவனிப் படைவெட்டு'.

## 164. பத்து

1. பத்துப் பாடல்கள்.
2. பத்துப் பாடல்களால் அமையும் இலக்கிய வகை. பாட்டு எண்ணிக்கை வரையறை உண்டே தவிர, பா இன வரையறை இல்லை. சங்க காலந்தொட்டே செல்வாக்குப் பெற்ற பாடல் எண்ணிக்கையிலான இலக்கிய வகை. சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்து என்ற புறப்பாடல் நூலும், ஐங்குறுநூற்றில் அன்னாய் பத்து, அம்மவாழிப் பத்து என்று பத்துப் பத்தாக அமைந்த அக இலக்கியமும் இதற்கான பழஞ்சான்றுகளாகும்.
3. -----
4. -----
5. திருவாசகத்தில் அச்சோப்பத்து, அடைக்கலப் பத்து, அதிசயப் பத்து, அருட்பத்து, அற்புதப்பத்து, அன்னைப் பத்து என்று பத்துப் பத்தாக அமைந்த பாடல்கள் உள்ளன.
6. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய தில்லைத் திருவாயிரத்தில் பல்வேறு யாப்புகளில் அமைந்த பத்துக்கள் உள்ளன.

(எ-டு) சிலேடைப்பத்து (நேரிசை வெண்பா)
அம்மானைப் பத்து (கலித்தாழிசை)
உந்திப்பத்து (கலித்தாழிசை)
குரவைப்பத்து (குறுந்தாழிசை)

இவர் பாடிய திருவரங்கத் திருவாயிரத்தில் 38 பாடற்றொகுதிகள் உள்ளன. இவற்றுள் பத்துப்பத்தாக அமைந்த பாடல்கள் பத்து உள்ளன. அவை வருமாறு: காட்சிப்பத்து, புகழ்ப்பத்து, பொன்னாசைப் பத்து, பெண்ணாசைப் பத்து, புவியாசைப் பத்து, வயனதேயப் பத்து, அன்னப் பத்து, கிளிப்பத்து, மாங்குயிற் பத்து, மணிவண்டுப் பத்து.

வள்ளலார் குறையிரந்த பத்து, குறை நேர்ந்த பத்து ஆகியவை பாடியுள்ளார்.

இவ்வகையில் சிதம்பர சுவாமிகளின் குயிற்பத்து, ஔவையாரின் (பிற்கால) தரிசனப்பத்து, அந்தோணிக்குட்டி அண்ணாவியாரின் ஆசைப்பத்து, ஆறுமுக மெய்ஞான சிவாசாரியார் பாடிய ஒலப்பத்து, கரதலப்பத்து, மஸ்தான் சாகிபு பாடிய ஆனந்தப் பத்து ஆகியவை குறிப்பிடத்தக்கன.

'பத்து' எனும் பெயரிலான இலக்கிய வகை பொருள் அடிப்படையில் (அகம், புறம்) தோற்றம் பெற்று, பக்தி இலக்கியமாய் மலர்ந்து, மெய்ஞான இலக்கியமாய் வளர்ச்சி பெற்றதையே காலந்தோறும் தோன்றிய 'பத்து' நூல்கள் காட்டுகின்றன.

## 165. பதம்

1. இசைப்பாட்டு.
2. இசைப்பாடல் வகை. பொதுவாக இறைமையும் இன்பமும் விரவிய நாடகப் பாங்குடைய பாடல்களின் தொகுப்பாக அமைகிறது. தலைவி சுகம் தர வேண்டுதல், தோழியைத் தூது அனுப்புதல், அவள் மீண்டு வராததால் வருந்துதல், முன்பு இணைந்த இன்பம் கூறுதல், தலைவனுடன் ஊடல் கொள்ளுதல், தோழியை வினவல், தலைவன் வரல், இன்பம் நாடல் ஆகிய அகக்கூறுகளைக் கொண்டு பாடப்படுவது.

   கீர்த்தனையின் வளர்ச்சியாக இதைக் கருதலாம். நாயக-நாயகி பாவம் புலப்பட இசையரங்குகளின் இறுதியில் பாடவும், மேடையில் அபிநயத்துடன் ஆடவும் ஏற்ற பாடல்களாக உருப்பெற்றது.
3. -----
4. -----
5. முத்துத்தாண்டவர் பாடிய 'சபாநாதர்பேரில் பதம்' இவ்வகையின் முதல் நூலாக அமைகிறது.
6. பிற சான்றுகள்:

   திருமாலிருஞ்சோலையினின்று மதுரை வைகை நதிக்கு எழுந்தருளிய அழகர் பதம் - முத்துக்கருப்பப் புலவர்

   திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி பேரில் பதங்கள் - தாமோதர முதலியார்.

   ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பேரில் பதம் - சுப்பராம ஐயர்.

   இண்டியா சக்ரவர்த்தினி விக்டோரியா ஜுபிலித் திருநாள் அலங்கார பதம் - சி.அப்பாவுப்பிள்ளை.

   மனோரம்மிய சிங்காரப் பதம் - அண்ணாசாமி பிள்ளை.

   எள்ளற் பொருளில் அமைந்த பதங்கள்:

குடியர் ஆனந்தப் பதம்

மூக்குத்தூள் புகழ் பதம்

மூக்குத்தூள் இகழ் பதம்

கொசப்பதம்

வழிநடை இலக்கியமாகவும் கும்மி இலக்கியமாகவும் இவை பாடப்பெற்றன:

செய்யது பீர் கைபு அவுலியா பேரில் வழிநடைப் பதம் - அப்துல்லா சாயுபு.

திருச்செந்தூர் வழிநடைப்பதம் - சுப்பிரமணிய பண்டிதர்.

தென்னிந்திய புகைரத வழிநடைப்பதம் - சகந்நாத முதலியார்.

நபியுல்லா பேரில் காரணக்கும்மி பதம் - முகமது உசேன் புலவர்.

## 166. பதிகம்

1. பத்துப்பாடல்களின் தொகுதி.
2. பதிகம் என்பது பழைய இலக்கியவகை. 'பத்து' எனும் இலக்கிய வகையும் பத்துப்பாடல்களால் பாடப்படுவது என்றாலும், 'பதிகம்' என்பது ஒருபொருள் நுதலிய பத்துப்பாடல்கள் அமைய, தொடர்ந்து பல பதிகங்களாகப் பாடப்படும் இலக்கிய வகையாகும்.
3. ----
4. ----
5. தேவாரப் பாடல்கள் அனைத்தும் பதிகங்களாகவே தொகுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் பத்துக்கு மிக்கும் குறைந்தும் வருவதுண்டு. பதிக அமைப்பின் முதற்சான்றாக காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 11 பாடல்கள் உடையது. இதுபோன்றே தேவாரத் திருப்பதிகங்கள் 11 பாடல்கள் உடையன.
6. வள்ளலார், அடிமைப்பதிகம், அம்மை திருப்பதிகம் பாடியுள்ளார்

அருணாசலேசர் பதிகம் - வே.இ.நாராயணசாமிப்பிள்ளை

கச்சியானந்த ருத்ரேசர் பதிகம் - சிவஞானமுனிவர்

குதிரை மலைப்பதிகம் - மீனாட்சி சுந்தரக்கவிராயர்

| | | |
|---|---|---|
| குன்று தோராடல் பதிகம் | - | மணிவாசக சரணாலய அடிகள் |
| சங்கராச்சாரியார் பதிகம் | - | பிச்சுவையர் |
| சூரிய நமஸ்காரப் பதிகம் | - | ஆறுமுக சுவாமிகள் |
| சென்னை கந்தசாமி பதிகம் | - | மனோன்மணி அம்மையார் |
| அம்பிகை மருந்து கொடுத்த பதிகம் | - | தண்டபாணி சுவாமிகள் |
| அரிமழும் சிவன் பதிகம் | - | தண்டபாணி சுவாமிகள் |
| அணிற்காத்த பதிகம் | - | தண்டபாணி சுவாமிகள் |
| குழந்தை சுவாமிகள் பதிகம் | - | அசலாம்பிகை அம்மையார் |
| சலவாத்துப் பதிகம் | - | அப்துல் காதிர் புலவர் |
| சீதக்காதி பதிகம் | - | பிச்சை இபுறாகிம் புலவர் |
| காந்திமதியம்மைப் பதிகம் | | |
| திருக்குற்றாலநாதர் பதிகம் | - | பி. முத்துக்குமாரசாமியா பிள்ளை |
| குறுக்குத்துறைப் பதிகம் | | |
| ஆதிபுரீசுரர் பதிகம் | | |
| தியாகேசர் பதிகம் | - | ஆலந்தூர் பெ. முத்துசாமி |
| வடிவம்மை பதிகம் | | முதலியார் |

பதிகங்கள் பல நோக்கில் பாடப்பட்டுள்ளதை இதன்வழி அறியலாம். 19 ஆம் நூற்றாண்டில் 1237 பதிகங்கள் பாடப்பட்டுள்ளன என்று பட்டியல் தந்துள்ளனர் (19 நூற். த. இ. வ.)

தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளையின் மகன் தெய்வங்கள் பெருமாள்பிள்ளை பழனிச் சுப்பிரமணியர் பதிகம் பாடியுள்ளார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருச்செந்தூர் / திருப்புகழ்ப் பதிகம், திரியோக சுதந்தரப்பதிகம் ஆகியன பாடியுள்ளார்.

பதிகங்களுள் சந்தப் பதிகம், வண்ணப்பதிகம், வாரப்பதிகம், மாதப் பதிகம் ஆகிய வகைகள் உள்ளன.

*(எ.கா.)*

| | | |
|---|---|---|
| *சந்தப்பதிகம்* | : | *கந்தசாமி சுவாமிகள் பாடிய ஸ்ரீ மருதாசலக் கடவுள் மீது சந்தப்பதிகம்.* |
| *வண்ணப்பதிகம்* | : | *வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய வீரவாகு வண்ணப்பதிகம்.* |
| *வாரப்பதிகம்* | : | *இது 7 பாடல்கள் அடங்கியது. திருத்தணிகை சிவசுப்பிரமணியக் கடவுள் பேரில் முனிசாமி முதலியார் வாரப்பதிகம் பாடியுள்ளார்.* |
| *மாதப்பதிகம்* | : | *இது 12 பாடல்கள் கொண்டது. முனிசாமி முதலியார் திருத்தணிகை சிவசுப்பிரமணியக் கடவுள் பேரில் மாதப்பதிகம் ஒன்று பாடியுள்ளார்.* |

7. *தமிழ்த்துதிப் பதிகம்*

*பாலும் வாய்வழி மரிப்பவர் பலர்போல்*
*மாலும் சோகமும் மலியநான் வருந்திடத் தகுமோ*
*ஆலும் வாரியும் துயில்பவன் போய்வர அந்நாள்*
*ஓலும் மெய்ப்புக ழொடுமிகப் படருமீதென் தமிழே* *(3)*

*பழனிச்சுப்பிரமணியர் பதிகம்:*

*தார் கொண்ட பன்னிரெண்டு தோளும் வேல் கொண்டகர*
*தலமுமிரு தாள்மல ருமுன்*
*தன் சொரூப முங்காண மயில்மீதில் அன்பி னொடு*
*தமியேன்முன் வந்தருள்செய் வாய்*
*போர் கொண்ட சூரனைக் கொன் றமரர் குழுவைப்*
*புரந்தசுர வணப கவனே*
*பொற்புலவும் ஒருகேச வற்கினிய மருகேச*
*பொற் பழநி முருகே சனே*

## 167. பதிற்றுப்பத்து

1. பத்துப்பாடல்களின் பத்துத் தொகுதிகள்.
2. பத்துப் பத்தாக அமையும் நூறு பாடல்கள் கொண்ட இலக்கிய வகை.
3. ----
4. ----

5. சங்க இலக்கியத்திலேயே சேரமன்னர்களின் வரலாற்றைக் கூறும் இலக்கியமாக இதுகால் கொண்டது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் திருக்கோட்டியூர் நம்பி செய்த பதிற்றுப்பத்து அவர் பெயராலேயே திருக்கோட்டியூர் நம்பி பதிற்றுப்பத்து என்று அழைக்கப்படுகிறது.

6. பிற சான்றுகள்: 'தந்தையார் பதிற்றுப்பத்து' என்ற பெயரில் 100 நேரிசை ஆசிரிய விருத்தங்களால் க. சோமசுந்தரம்பிள்ளை (1933) இலக்கியம் செய்துள்ளார். பொ.மு. கேசவ சுப்பராய செட்டியார், 'ஸ்ரீ கண்ணபிரான் பதிற்றுப்பத்து' என்ற பெயரில் நூல் யாத்துள்ளார்.

### 168. பந்தடி

1. மகளிர் விளையாட்டு வகை.

2. மகளிர் பந்தடித்து ஆடும்போது பாடப்படும் பாடல்கள். மகளிர் விளையாட்டுகளின்போது பாடப்படும் பாடல்களைத் திருத்தோணோக்கம், ஊசல், உந்தியார் என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ளார். அதுபோன்று பந்தடி என்பதும் மகளிர் பந்தடித்து ஆடும்போது பாடப்படுவதாகும்.

3. ----

4. ----

5. மகளிர் பந்தடித்து விளையாடியதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. 'ஓரை ஆயமொடு பந்துசிறி தெறியினும்' (அக.219:2) என்று அகநானூற்றில் பெண்கள் ஒன்றுகூடிப் பந்தாடிய செய்தி காணப்படுகிறது. உலாவில் மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்றாகப் பந்தடித்தல் கூறப்படுகிறது. குறவஞ்சியில் தலைவி பந்தடித்து விளையாடும் காட்சி அற்புதமாகப் பாடப்படுகிறது. குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி பந்தடித்து ஆடும் காட்சி நினைவை விட்டு நீங்காதது.

6. 'மதுரை மீனாட்சியம்மன் பந்தடி' என்ற ஒருநூல் 1953இல் (இரத்தினநாயகர் சன்ஸ்) வெளிவந்துள்ளது. நாயக்கர் காலத்திய திருவிழாக்களில் பந்தடித்தல் என்பது முக்கிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கக்கூடும். மதுரையில் மகாலைச் சுற்றி சௌராஷ்டிர மக்கள் அதிகமாக வாழும் பகுதிக்குப் 'பந்தடி' என்று பெயர்.

## 169. பஃறொடை

1. பல்வேறு தொடைகள்.
2. பல்வேறு தொடைகளால் அமைந்த இலக்கிய வகை. தொடை என்பது தொல்காப்பியர் சுட்டும் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்று.
3. ----
4. ----
5. இதன் முதற்சான்று உமாபதிசிவாச்சாரியார் பாடிய 95 கண்ணிகளால் ஆகிய போற்றிப் பஃறொடை ஆகும். ஆன்மாக்கள் பாசத்தால் கட்டுண்ட நிலை, அவை துன்புறுதல், இறைவன் திருவருளால் கட்டு அகன்று வீடுபெறல் ஆகியவை இதில் கூறப்படுகின்றன.

## 170. பரணி

1. வெற்றி நட்சத்திரம்.
2. போர்க்களத்தில் பெற்ற வெற்றியைப்பாடும் இலக்கிய வகை.

   சிற்றிலக்கியங்களுள் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாகத் திகழ்கிறது.
3. தொல்காப்பியப் புறத்திணையியலின் மறக்களவழித்துறையும், மறக்கள வேள்வித்துறையும் இதற்கான மூலக்கூறுகளாகும். ப.பா. (இ.58-61), வெ.பா (செ.38,39), ந.பா. (செ.31-36), பிர.19, சி.பா(ம.14), இ.வி.(838-839), தொ.வி.259, மு.வீ(யா.ஒ.79), பி.தீ.6, சுவாமி 174 ஆகிய எல்லா பாட்டியல் நூல்களும் பரணிக்கு இலக்கணம் சொல்கின்றன.
4.

*ஆனை ஆயிரம் அமரிடை வென்ற*
*மான வனுக்கு வகுப்பது பரணி* — இ.வி.838

*கடவுள் வாழ்த்துக் கடைதிறப்பு உரைத்தல்*
*கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்*
*கடிகணம் உரைத்தல் காளிக்கது சொலல்*
*அடுபேய்க்கு அவள்சொலல் அதனால் தலைவன்*
*வண்புகழ் உரைத்தல் எண்புறத் திணையுற*
*வீட்டல் அடுகளம் வேட்டல் இவைமேல்*
*அளவடி முதலா அடி இரண்டாக*
*உளமகிழ் பரணி உரைக்கப் படுமே* — இ.வி.839

பரணியில் யானைப் போரே சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. ஆயிரம் யானைகளை வென்றவனுக்குப் பாடப்படுவது பரணி. பொதுவாக, தோற்றநாடு அல்லது மன்னவன் பெயராலேயே பரணி இலக்கியங்கள் அழைக்கப்படுகின்றன. பரணி நட்சத்திரத்தில் பிறந்தவனுக்காகப் பாடுவது பரணி என்றும் கூறுவர் (த.இ.வ. 12 நூற்.ப.49). 'பரணியில் பிறந்தவன் தரணி ஆளுவான்' என்ற பொன்மொழியை அடியொற்றி இந்த விளக்கம் எழுந்திருக்கலாம். பரணி, யானை பிறந்த நாளாதலானும், காளிக்கும் யமதருமனுக்கும் உரிய நாளாதலானும், தலைவனொருவன் பலயானைகளைக் கொன்று, காலன் பல உயிர்களைக் கொள்ளச் செய்து பெருவீரத்தைப் புலப்படுத்திய களவேள்வியில் காளிக்கு உவப்புண்டாகக் கூழ் சமைப்பதற்குரிய நாளாயிற்றென்று ஊகித்தறியப்படும்' என்று பாசவதைப் பரணிக்கு எழுதிய முகவுரையில் (1933) உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்.

5. இதற்கான முதற்சான்று செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி ஆகும். இதனுடைய பாட்டுடைத் தலைவன் முதலாம் குலோத்துங்கன் ஆவான் (1070-1120). இவன் கலிங்கநாட்டின் மீது (தற்போதுள்ளா ஒரிசா) படையெடுத்துச் சென்று அந்நாட்டை வென்று பெற்ற வெற்றியைப் பாராட்டும் முகத்தான் இந்நூல் பாடப்பட்டது. கலிங்கத்துப்பரணி முதற்பரணி என்றாலும் முழுவடிவமும் வேகமும் கொண்ட நூலாகத் தோற்றம் பெற்றது இதன் சிறப்பாகும். இதனாலேயே இந்நூல் இன்றுவரை பலராலும் போற்றப்படும் தகுதியைப் பெற்றுள்ளது.

ஓர் இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றி அறிவதற்குப் பரணி இலக்கிய வகை நல்ல சான்றாகத் திகழ்கிறது. தொல்காப்பியப் புறத்திணையியலில் ஏர்க்களத்தையும் போர்க்களத்தையும் ஒப்பிட்டுத் தொல்காப்பியர் நூற்பா செய்துள்ளார். அந்நூற்பாப் பகுதி வருமாறு:

> ஏரோர் களவழியன்றிக் களவழித்
> தேரோர் தோற்றிய வென்றியும் -புறத்.24

இதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார்:

"நெற்கதிரைக் கொன்று களத்திற்குவித்துப் போர்அடித்து அதரி திரித்துச் சுற்றத்தோடு நுகர்வதற்கு முன்னே கடவுட்பலி கொடுத்துப் பின்னர்ப் பரிசிலர் முகந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறு போல, அரசனும் நாற்படையும் கொன்று களத்திற்குவித்து, எருதுகளிறாக வாண் மடலோச்சி அதரி திரித்துப் பிணக்குவையை நிணச்சாற்றோடு

உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனாவேண்மாள் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக் கொடுத்து எஞ்சி நின்ற குதிரை, யானைகளையும் ஆண்டுப் பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்து கொள்ளக் கொ்டுத்தலாம்" இவ்வுரை விளக்கம் போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்துக் காட்டுவதற்கான களச்சூழலை விவரிக்கிறது.

புறநானூற்றில் 368 முதல் 371 ஆம் பாடல் வரையிலும் மற்றும் 373 ஆக ஐந்து பாடல்கள் மறக்கள வழித்துறையில் அமைந்துள்ளன. பத்துப்பாட்டுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில், 'உருகெழு திருவின் அஞ்சுவரு பேய்மகள்' பற்றிய வருணனை (47-54) விரிவாகக் காணப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மறம் பாடும் ஒரே நூலான களவழி நாற்பது, மறக்களவழியைச் சிறப்பித்துப்பாடும் தனி நூலாக வளர்ச்சி பெற்றுள்ளது. மறக்களவழியின் அடுத்தபருவம் கலிங்கத்துப் பரணியாகப் பூத்தது. புதுமைகள் நிறைந்த கலிங்கத்துப் பரணியின் மெய்ப்பாட்டு உணர்வுக்குத் துணை நின்றவை தகடூர் யாத்திரையும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களும் ஆகும். அமர்க்கள வருணனையைத் திறம்படக் காட்டத் தகடூர் யாத்திரை கை கொடுத்தது. பேய்க்களக் காட்சியை மெய்ப்பட உணர்த்தத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் துணை நின்றது. வளர்ச்சியில் திருப்புமுனைகள் கொண்ட இலக்கிய வகைக்குப் பரணியே சான்றாக அமைகிறது. மறத்திறம் காட்டும் வாய்ப்பும் போரைப் புகழ்ந்து பாடும் திறமும் கலிங்கத்துப் பரணிக்குப் பின்னர் குறைந்தது. சான்றாண்மைக்கு 'வீரம்' என்று பொருள் கண்ட மரபு மறைந்து, 'அறிவாளர்' என்ற பொருள் அறநெறிக் காலத்திலேயே உருவானது. பின் வந்த சமய-தத்துவ நெறிக் காலத்தில் போர்க்களிறுகள் மதக்களிறுகளாக உருமாறின. பரணிக்கு 'மன்னன்' தலைவனாக அமையும் நோக்கு மறைந்து 'தெய்வம்' தலைமை பெறும் சூழல் உருவானது. போர்க்களத்துக்கு வகுக்கப்பட்ட பரணி இலக்கணம் திசைமாறி, சமய, தத்துவ, ஆன்மிகப் பொருள்களுக்கு ஏற்புடையதாயிற்று. சமயப் பரணியாகத் தக்கயாகப் பரணியும் (1115-1163), இரணியவதைப் பரணியும் (1552), தத்துவப் பரணியாக மோகவதைப் பரணியும், பாசவதைப் பரணியும், அஞ்ஞவதைப் பரணியும் பாடப்பட்டன.

பரணி இலக்கியம் தற்காலத்திலும் போர் மூளும் சூழல்களில் பாடப்படுகிறது என்பதற்கு சீனத்துப் பரணியும், வங்கப் பரணியும் சான்றுகளாகும்.

*ஈனமுடன் பிறநாட்டைத் தாக்குகின்ற*
*இழிந்த குணம் படைத்தவரை அமரில் வென்ற*
*மானமுடை நாட்டிற்குத் தலைவன் ஆன*
*மறவனுக்கு வகுப்பதுதான் பரணி ஆகும் (சீனத்துப்பரணி)*

என்று இக்காலச்சூழலுக்கு ஏற்பப் பரணி இலக்கணம் வகுக்கப்படுகிறது.

6. பரணி இலக்கியம், மெய்ப்பாட்டின் எண்சுவைகளும் ஒரு சேரப் பாடப்பட்ட இலக்கியமாகும். அதனாற்றான் இன்றும் அது சுவைப்போரின் 'நெஞ்சைக் கவ்வும்' இலக்கியமாகத் திகழ்கிறது. பரணி இலக்கியம், அக உணர்வும், மற உணர்வும், அற உணர்வும், கலந்து மிடையப்பட்டு, மடக்கு, சிலேடை, உருவகம், உவமம் ஆகிய பல நயங்கள் அமையப்பெற்று இலக்கியச் சுவையை மிகுவிக்கும் இலக்கிய வகையாகும். காலந்தோறும் பரணி இலக்கியங்கள் பல பாடப்பட்டுள்ளன. சிலவற்றுக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. சில பெயரளவில் அறியப்படும் இலக்கியங்களாகவே உள்ளன.

கொப்பத்துப்பரணி என்பது இரண்டாம் இராசேந்திரன் (1051-63) ஆகவமல்லனைக் கொப்பத்தில் வென்றது பற்றிப் பாடுகிறது. கூடல் சங்கமத்துப் பரணி என்பது இராசேந்திரன் தம்பி வீர ராசேந்திரன் (1063-1070) ஆகவ மல்லனைக் கூடல் சங்கமத்தில் வென்ற செய்தியைப் பாடுகிறது. கலிங்கப்பரணி என்பது விக்கிரமசோழன் (1096) கலிங்கத்தில் பெற்ற வெற்றியைச் சிறப்பிக்கிறது. இம்மூன்று நூல்களும் தற்போது கிடைக்கவில்லை.

திருக்கலசைச்சிதம்பரேசப் பரணி என்ற பெயரில் சமயப்பரணி ஒன்றைத் தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார் பாடியுள்ளார். தமிழ்ப்பரணி என்ற பெயரிலும் இவர் ஒருநூல் பாடியுள்ளதாகத் தெரிகிறது. அருட்கவி அரங்க சீனிவாசன் வங்கப்பரணியையும், மு.பி.பாலசுப்ரமணியன் சீனத்துப் பரணியையும் பாடியுள்ளனர். தேவன் பூங்குன்றன் என்பார் 'ஒடுக்கப்பட்ட உலகத்துப் பரணி' என்ற பெயரில் பாலஸ்தீனம், ஈழம், அஜர்பைஜான் ஆகிய நாடுகளில் மக்களின் விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு நூல் செய்துள்ளார். "நவீன குலோத்துங்கனின் 'இரத்தக் கவிச்சி' வீசும் ஆயுதங்களின் கொடுமைகளைப் பாடுவதோடு உலகத்தின் நசுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலை எதிரொலிக்கிறது" என்று ஆசிரியர் தம்முடைய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

*வலியது வையத்து வாழ்க்கைப்போர்*
*உயிர்கள் நிலைத்திட நிகழ்த்திடும் போர்*

வலிமை உடையது வாழ்ந்திடுமே
வலிமை இலதனை வீழ்த்தியேதான்
இடார்வின் என்றொரு மாமேதை
என்றும் இயலும் நிலை சொன்னான்
விடார் பொய்த்தீமை வன்கண்மை
வென்றிட அறப்போர் தொடர்ந்திடுமே (26)

மோகவதைப் பரணியில் தத்துவராயர் குணங்களின் இயல்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

உடலெழு காணப் பண்ணி
ஒருகாணும் ஒழிப்பதற்கும்
கடலுலகின் உடலமெலாம்
காண்பானைக் காண்கிலமே

ஏவுகணைப் போரினை வங்கப்பரணி பின்வருமாறு சொல்கிறது:

ஆளில்லாது குறிதவ றாதுசென்று
அரக்கர் பாசறைக் கொத்தளம் யாவையும்
தூள்படுத்தி யழித்து வெடிப்பன
துரித ஏவு கணைய ஆயிரம்

இந்தி எதிர்ப்பினை, இளந்தேவன் எழுதிய இந்திப்பரணி பின்வருமாறு காட்டுகிறது:

ஆகாய கூச்சலிடு
அரசியல் வாதிகள் போலே!
நோகாதீர் நமதுபசி
நோய் தீரும் காலமிது!

7. போர்க்களக் காட்சி:

எடும் எடும் எடும்என எடுத்ததோர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே
விடு விடு விடுபரி கரிக்குழாம்
விழும் விழும் எனும் ஒலி மிகைக்கவே -கலிங்.பரணி

அகக்காட்சி:

செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழல் மடவீர்
உம் பொற் கபாடம் திறமினோ - கலிங்.பரணி

*அவலம்:*

*பொருதடக்கை வாள் எங்கே மணிமார்பு எங்கே*
*போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத*
*பருவயிரத் தோள் எங்கே எங்கே என்று*
*பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்*

*- கலிங்.பரணி*

*மடக்கு, சிலேடை:*

*காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த*
*கலவி மடவீர் கழற் சென்னி*
*காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த*
*களப் போர் பாடக் கடைதிறமின்*

*- கலிங்.பரணி*

## 171. பல்லாண்டு

1. பல்லாண்டு வாழ வாழ்த்துவது.
2. பாடல் தலைவர் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்திப்பாடும் இலக்கியம்.
3. புறநானூற்றில் இயன்மொழி வாழ்த்து போன்ற துறைகளில் அமைந்த பாடல்களில் பாடல் தலைவரை 'பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க' என்றும், 'மழைத்துளியினும் பல்லாண்டு வாழ்க' என்றும் வாழ்த்திப் பாடுவது மரபு.

*பாடுவார்பணி வார்ப் பல்வாண்டிசை கூறுபக்தர்கள்சித்துள்புக்கு*
*தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூ ரம்மானே (4:4:20)*

என்று அப்பர் பெருமானார் பல்லாண்டுக்கான தோற்றம் செய்துள்ளார். இதனை இலக்கிய வகையாக வளர்த்தவர்கள் பெரியாழ்வார் (வைணவம்), சேந்தனார், தத்துவராயர் ஆகியோராவர். இம்மரபே பின்னர், பக்தி இலக்கியத்தில் 'பல்லாண்டு' எனும் இலக்கிய வகையாக நிலைபெற்றது. பின்னர்த் தோன்றிய பன்னிரு பாட்டியல் இதனை அடியொற்றி இலக்கணம் செய்தது.

4.

*வையக மன்னவன் மன்னுக பல்லாண்டு*
*எய்துக என்பது யாண்டுநிலை ஆகும் -ப.பா.இ.125*

5. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ள பெரியாழ்வாரின் பல்லாண்டுப் பதிகங்கள் இவ்விலக்கியத்தின் முதற் சான்றாகக் கருதத்தக்கன, "திருமால், திருவுலாப்போதரக் கண்ட ஆழ்வார், திருமாலின் மேனி, பலரால் காணப்படுதலால் கண்ணேறு முதலிய தீங்கெய்துமென அஞ்சிப் பல்லாண்டு பாடினார்' என்பார், ஔவை துரைசாமிப் பிள்ளை (சை.இ.வ), அப்பரின் திருவாரூர்ப்பதிகமும், ஒன்பதாம் திருமுறையிலுள்ள சேந்தனார் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுப் பாடல்களாகக் கருதத்தக்கன.

6. திருப்போரூர் இன்னிசைப் பாவில் இடம்பெற்றுள்ள திருப்பல்லாண்டு, முருகைய பங்கஜாக்ஷியின் திருச்செந்தில் முருகன் சந்நிதி முறையில் இடம்பெற்ற திருப்பல்லாண்டுகள், கருப்பையா பாவலர் பாடிய திருப்போரூர் கந்தன் திருப்பல்லாண்டு ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். 1932இல் ராய.சொ.காந்தித் திருப்பல்லாண்டு ஒன்று பாடியுள்ளார்.

7.

*இமயத்து ஈண்ட இன்குரல் பயிற்றி*
*கொண்டல் மாமழை பொழிந்த*
*நுண்பல் துளியினும் வாழிய பலவே* (புற.34)

*.... சிறக்க நின் ஆயுள்*
*மிக்குவரும் இன்நீர்க் காவிரி*
*எக்கர்இட்ட மணலினும் பலவே* (புற.43)

*பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு*
*பலகோடி நூறாயிரம்*
*மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா*
*உன்சேவடி செவ்வி திருக்காப்பு*
*வாழாட் பட்டுநின் றீருள்ளீ ரேல்வந்து*
*மண்ணும் மணமும் கொண்மின்*
*கூழாட் பட்டுநின் றீர்களை யெங்கள்*
*குழுவினில் புகுதலொட்டோம்*
*ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்*
*இராக்கதர் வாழிலங்கை*
*பாழா ளாகப் படைபொரு தானுக்குப்*
*பல்லாண்டு கூறுதுமே!* -பெரியாழ்வார்

*குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி*
*எங்கும் குழாம் பெருகி*
*விழவொலி விண்ணளவுஞ்சென்று விம்மி*
*மிகுதிரு வாரூரின்*
*மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்*
*மணஞ்செய் குடிப்பிறந்த*
*பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே*
*பல்லாண்டு கூறுதுமே* -சேந்தனார்

*வாழிய உலகெலாம் பல்லாண்டு! வாழ்க*
*நின்னவும் பல்லாண்டு*
*வாழிய ஒருகதர் பல்லாண்டு! வாழ்க*
*நின்புகழ் பல்லாண்டு*
*வாழிய இராட்டிணம் பல்லாண்டு! வாழ்க*
*பெற்றதாய் பல்லாண்டு*
*வாழிய அடியவர் பல்லாண்டு! வாழ்க*
*காந்திநீ பல்லாண்டு* -ராய.சொ.

## 172. பள்ளியெழுச்சி

1. உறக்கத்திலிருந்து எழுவது
2. உறக்கத்திலிருந்து எழுமாறு பாடல் தலைவரை மங்கலமாகத் துயில் எழுப்பும் பாடல்கள்.
3. இதனைத் துயிலெடை நிலை என்று தொல்காப்பியப் புறத்திணையியல் குறிப்பிடுகிறது:

*தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
*சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்* (1037)

பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியலும் (122), பிரபந்த தீபிகையும் (22) இதற்கு இலக்கணம் சொல்கின்றன.

4. கடைநிலை விடையாகவும், பரிசில் விடையாகவும் அமையும் புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களில் தலைவனின் அரண்மனை வாயிலில் நின்று விடியற்காலத்தே தடாரிப் பறையை ஒலித்து அவனை விளித்துப்பாடும் பாடல் தொடக்கம், பள்ளியெழுச்சிப் பாடல்களை நினைவூட்டுகின்றன:

வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோன் றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன பைபயச்
சுடரும் சுருங்கின்று ஒளியே மாடெழுந்து
இரங்குகுரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப
இரவுப் புறங்கண்ட காலை... (புற.244.1-6)

பன்னிரு பாட்டியல் தரும் செய்தி

கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டு இனிது இயங்க
வேண்டினர் இத்துயில் எழுக என விளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே

5. இவ்வகையின் முதற்சான்று மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சியாகும். தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சியும் புகழ் பெற்றதாகும்.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளிஉதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்கு
தேவநல் செறிகழல் தாள்இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெரு மானே
யாவரும் அறிவு - அரியாய் எமக்கு எளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (3)

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்கரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புனல் அரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளிஉன் அடியார்க்
காட்படுத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே (10)

என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சியாகும்.

6. விடுதலைப் போராட்டக் காலத்தில் பாரதியார் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ளார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், இதனைக் 'காலைப் பத்து' எனப் பாடியுள்ளார். திருப்பள்ளி எழுச்சி என்ற பெயரில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞானாசிரியர் மீது, 'சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி' பாடியுள்ளார். வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் 'ஞானசம்பந்தர் திருப்பள்ளி எழுச்சி' இயற்றியுள்ளார். 'தணிகேசன் திருப்பள்ளியெழுச்சி'யை வ.சு.செங்கல்வராய பிள்ளை பாடியுள்ளார். சிவானந்த ஞானதேசிக சுவாமிகளும் தம் ஞானாசிரியர் மீது 'சற்குரு திருப்பள்ளியெழுச்சி' பாடியுள்ளார். சிதம்பர சுவாமிகளின் திருப்போரூர் சந்நிதி முறை தொகுப்பில் திருப்பள்ளியெழுச்சி இடம்பெற்றுள்ளது. இதேபோன்று 'கம்பை சந்நிதி திருப்பள்ளியெழுச்சி' ஒன்றை சோணாசல பாரதி பாடியுள்ளார். கு.பாலசுந்தர முதலியார் திருவேங்கடவன் திருப்பள்ளியெழுச்சியும், அ.கி.பரந்தாமனார் தமிழ்ப் பெருந்தேவி திருப்பள்ளியெழுச்சியும் பாடியுள்ளனர்.

7.

*பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்*
*புன்மை யிருட்கணம் போயின யாவும்*
*எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி*
*யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி*
*தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்*
*தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்*
*விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே*
*வியப்பிது காண் பள்ளியெழுந்தரு ளாயே*

*- பாரதமாதா திருப்பள்ளி. (1)*

*எழுந்தன புட்கள்; சிறகடித்துப் பண்ணே*
*முழங்கின! ஏருழவர் முன்செல் எருதை*
*அழிஞ்சிக் கோல் காட்டி அதட்டலும் கேட்பீர்*
*எழுந்திருப்பீர் வீட்டினரே இன்னும் துயிலோ?*
*பழந்தமிழர் செல்வம் கலையொழுக்கம் பண்பே*
*ஒழிந்துபட வடக்கர் ஓட்டாரம் செய்தார்*
*அழிந்தோமா வென்றோமா என்பதுணர்த்த*
*எழில் மடவீர் காளையரே இன்னேநீர் வாரீரோ*

*- காலைப்பத்து (2)*

## 173. பழமொழி

1. பழமையான அனுபவக்கூற்று
2. வாய்மொழி இலக்கியமான இது மக்களின் அனுபவத்தால் விளைந்த உண்மைகளைக் கூறும் இலக்கிய வகையாகத் தோற்றம் பெற்றது. 'எழுவகை யாப்பு' என்று தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகளுள் பழமொழியும் ஒன்றாகும். இதனை அவர் 'முதுசொல்' (தொல்.1336) என்றும், 'முதுமொழி' (1421) என்றும் சுட்டுகிறார். இதனால் பழமொழியின் தொன்மை நன்கு விளங்கும்.
3. பழமொழி என்பது பழைய இலக்கிய வகை எனினும் இதற்கான தொடர் வளர்ச்சியைக் காண முடியவில்லை. பாட்டியல் நூல்களிலும் இஃதோர் இலக்கிய வகையாகக் குறிப்பிடப் படவில்லை. பழமொழி என்னும் முதுமொழிக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியர்,

   நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
   மென்மையும் என்று இவை விளங்கித் தோன்றக்
   குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
   ஏதுநுதலிய முதுமொழி என்ப — தொல்.1433

என்று இதன் இயல்புகளைச் சுட்டுகிறார்.

4. ----
5. சங்கம் மருவிய காலத்தில் பழமொழி நானூறு என்ற நூலை முன்றுரை அரையனார் எனும் சமணப் புலவர் செய்துள்ளார். இது அறம் உரைக்கும் நூலாகும்.
6. அறம் உரைக்கும் இதன் போக்கைப் பின்பற்றிப் பிற்காலத்தில் எழுதப்பட்ட சதக நூல்கள் பலவும் பழமொழி விளக்கங்களாக அமைந்தன. தண்டலையார் சதகம் எனும் நூல் இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். இதற்குப் 'பழமொழி விளக்கம்' என்ற பெயரும் உண்டு. இதேபோன்று செயங்கொண்டார் சதகம், கோவிந்த சதகம் ஆகியவைகளும் பழமொழிச் சதகங்களாக அமைந்தன.

## 174. பள்ளு

1. பள்ளத்தில் இறங்கிப் பணியாற்றும் உழவுத் தொழிலாளர்கள் பாடும் பாடல்:

2. பள்ளமாகிய வயல்வெளியில் உழவுத்தொழில்களை மேற்கொள்ளும் உழவர்களும், உழத்தியர்களும் தங்கள் வாழ்க்கை, பணி, சமுதாயம் ஆகியவற்றைப் பாடுவதற்கேற்றவாறு வளர்ந்த பிற்கால மக்கள் இலக்கிய வகை.

3. தொல்காப்பியச் செய்யுளியலில் 'சேரி மொழியாற் செவ்விதிற்கிளந்து' என வரும் தொடர் நாட்டுப்புற வழக்காற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம். சிலப்பதிகாரத்தில் விருந்திற்பாணி, ஏர் மங்கலம், முகவைப்பாட்டு ஆகியன உழவர் பெருமக்களின் பாடல் வகைகளாகக் கருதத்தக்கன. சிலப்பதிகார நாடுகாண்காதைப் பகுதியில் ஆடும்பள்ளி, அழகுடைப் பள்ளி (131, 135, 137) ஆகியோர் பற்றிய குறிப்புக்களை அடியார்க்கு நல்லார் முதன் முதலாகத் தருகிறார். கலம்பகத்தில் பள்ளு ஓர் உறுப்பாக இடம் பெற்றுள்ளது. கச்சியப்ப முனிவரின் பேரூர்ப் புராணத்தில் 'பள்ளுப்படலம்' என்பது உழவுத் தொழில் பற்றிய விளக்கமாக அமைகிறது.

4. பன்னிரு பாட்டியலில் காணப்படும் உழத்திப்பாட்டுக்கான இலக்கணம் பள்ளு இலக்கியத்தோடு தொடர்புடையது என்பர். நவநீதப் பாட்டியலின் மிகைச் செய்யுட்களில் பள்ளு இலக்கியம் பற்றிய குறிப்பு உண்டு என்பர் (த.இ.வ.வ.ப.389). இந்நிலையில் பாட்டியல் நூல்களில் பள்ளு இலக்கியம் பற்றிய இலக்கணம் இடம்பெறவில்லை என்றே சொல்லலாம்.

5. முக்கூடற்பள்ளு எனும் நூலே பள்ளு இலக்கியத்தின் முதற்சான்றாக உள்ளது. பரணியில் கலிங்கத்துப்பரணி போன்றும், குறவஞ்சியில் குற்றாலக் குறவஞ்சி போன்றும் பள்ளு இலக்கிய வகையில் முன்னோடி இலக்கியமாக முக்கூடற்பள்ளு அமைகிறது. இதன் ஆசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை. ஆயினும் நவீன படைப்பிற்குரிய அனைத்து அம்சங்களையும் சேர்த்து உழவர் சமுதாயத்தின் நிலைகளை மக்கள் மனங் கொள்ளுமாறு அழகொழுகப் பாடுவதில் இப்புலவர் வெற்றி பெற்றுள்ளார் என்றே சொல்ல வேண்டும். மழை அறிகுறி, வெள்ளத்தின் வரவு, பள்ளியர் ஏசல், வித்துவகை, மீன் வகை, மாடு வகை இவற்றைப் பற்றிய செய்திகள் இப்புலவரின் கவித்திறனுக்குச் சான்றுகளாய் அமைகின்றன:

*ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி மலை*
*யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே!*
*நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே! - கேணி*
*நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடு குதே*

சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்றடிக்குதே - மழை
தேடியொரு கோடிவானம் பாடி யாடுதே
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணை - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே

6. பள்ளு இலக்கியங்களுள் முக்கூடற்பள்ளு, வையாபுரிப்பள்ளு ஆகியவை புகழ் பெற்றவையாகும். செண்பகராமன் பள்ளு கிறித்தவ சமயச் சார்புடையது. திருவாரூர்ப் பள்ளுவே முதற்பள்ளு என்கிறார் இதனைப் பதிப்பித்த எஸ்.வையாபுரிப்பிள்ளை. குருகூர்ப்பள்ளு என்பது ஆழ்வார் திருநகரி சடகோபப் புலவர் பாடியது. பள்ளு இலக்கியத்திற்கான பெயர்கள் அவர்கள் வணங்கும் கடவுள், நகரம், குறுநிலமன்னர், சமுதாய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்றன.

திருவாரூர்ப்பள்ளு - தியாகேசர் - கடவுள்

முக்கூடற்பள்ளு - நெல்லை மாவட்டத்திலுள்ள முக்கூடல் தலம்

வைசியப் பள்ளு - வைசியர் - சாதி

பிற சான்றுகள்:

தில்லைப்பள்ளு - தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை

வடகரைப்பள்ளு - கடிகைமுத்துப்புலவர்

இராசாநகர்ப்பள்ளு - கவிகுஞ்சரபாரதி

சேற்றூர் ஜமீன் பள்ளு - சங்கர மூர்த்திக் கவிராயர்

தென்காசிப் பள்ளு - புளியங்குடி இராமநாதக் கவிராயர்

திருக்கோட்டியூர்ப் பள்ளு - வென்றிமலைக் கவிராயர்

வேதாந்தப்பள்ளு - ஆவுடையம்மாள்

கொங்குநாட்டு சுஞ்சுவாடி சமீன் காரியக்காரர் முத்துசாமிக்கவுண்டர் மீது முக்கூட்டுப்பள்ளு - தென்பழனிப்பிள்ளை

ஞானப்பள்ளு - சிதம்பர நாதப் பிரகாசர்

மோகனப்பள்ளு - சின்னனன் நல்லனன்

கண்ணுடையம்மன் பள்ளு - முத்துக் குட்டிப் புலவர்

கொடுமளூர் முருகப் பெருமான் மீது பள்ளு - முதுகுளத்தூர் நல்ல வீரப்பபிள்ளை

செங்கோட்டுப் பள்ளு - பொன்னுசாமி செல்லையபாரதி

ஆத்திப்பட்டி சங்கிலி வீரபாண்டிய வன்னியப்பள்ளு முத்துசாமிக் கவிராயர்.

7.

*வச்சாரிப் பள்ளியாம் மாரியும் - அந்தக்*
*குச்சேரிப் பள்ளியாம் வீரியும்*
*சந்தன மென்றுளைச் சேற்றையும் வீசிக் - கோ*
*விந்தன் முதுகினில் பூசியே*
*சக்கரந்தங்களைப் பேசியே - வெகு*
*எக்காளங்களில் ஏசியே*

*செங்கோட்டுப்பள்ளு (807)*

## 175. பவனிவிலாசம்

1. உலாவரலும் காதல் கொள்ளலும்
2. உலாவும் அகப்பொருண்மையும் இணைந்த இலக்கியம்
3. -
4. -
5. தலைவன் உலா வருதல், அவன் பெண்களைக் காணுதல், தலைவியின் பாதாதிகேச வருணனை, அவள் மீது தலைவன் காதல் கொள்ளல், அவன் நகைக்குறிப்பு தருதல், தலைவன் இருக்குமிடம் தேடி தலைவி வருதல், தோழி உதவியால் அவனைக் கூடுதல், பரிசுப் பொருட்களுடன் மீண்டு வருதல், தலைவனிடம் தான் பெற்ற இன்பத்தைத் தோழியிடம் சொல்லி மகிழ்தல் ஆகியன இந்நூலில் பாடப்படுகின்றன. சரவண முத்துப்பிள்ளை என்பார் தம் தந்தை மீது பாடிய முத்துக்குமார சுவாமியா பிள்ளையவர்கள் பேரில் பவனி விலாசம் (1897) எனும் நூல் இதற்கான முதற்சான்றாக அமைகிறது. அகப் பொருண்மை பிற்காலத்தில் காதல், தூது, விலாசம் என்ற பெயர்களில் தரம் தாழ்ந்த நிலையில் இதுபோன்ற இலக்கியங்கள் இயற்றப்பட்டிருக்கக்கூடும். ஆனால் இவை தொடர் வாழ்வையோ, நிலைத்த வாழ்வையோ பெறவில்லை என்பதே இவ்விலக்கியங்களின் தாழ்ச்சிக்குச் சான்றுகளாகும்.

## 176. பாடாண்பாட்டு

1. தலைவன் ஒழுகலாற்றைச் சிறப்பித்துப்பாடும் பாட்டு.
2. சங்க இலக்கியமாகிய பதிற்றுப்பத்து பாடாண் வகைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். அந்நூல் முழுவதுமே

பாடாண்பாட்டால் இயன்றது. புறநானூற்றில் பெரும்பகுதி பாடாண்பாட்டே ஆகும். தொல்காப்பியத்தின் பாடாண்திணையே இவற்றிற்கான இலக்கணம் ஆகும். பாடாணுக்குப் பரந்துபட்ட இலக்கணத்தைத் (1026-1037) தொல்காப்பியர் வகுத்துள்ளார். மொத்தத்தில் 'பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாற்றைச் சிறப்பிப்பது' என்பர்.

3. -

4. -

5. பிற்காலத்தில் பாடாண்பாட்டு என்ற பெயரால் ஆத்திரேயன் ஸ்ரீனிவாசன் என்பார் இயற்றிய 'ஸ்ரீமத் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பாடாண் பாட்டு' என்ற ஒரு நூலை மட்டுமே குறித்துள்ளனர் (த.இ.வ.வ.ப.393).

Besant Nagar Chennai-90

### 177. பாசுரம்

1. இசைப்பாடல்.

2. பாசுரம் என்பது கீர்த்தனை போன்ற இசைப்பாடல் வகையாகும். பா+சுரம் என்பதே இது இசைப்பாடல் வகையைச் சேர்ந்தது என்பதற்கான சான்று.

3. -

4. -

5. பாசுரம் என்பதைப் பல்வகைப் பாடல்களின் தொகுதி என்பர். இதற்கு எடுத்துக்காட்டாக, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் வில்வநல்லூர்ப் பிரபந்தத் திரட்டில் உள்ள 'பலபாசுரப்பத்து' எனும் பகுதியைச் சொல்வர். இதில் வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, விருத்தம், அம்மானை, இரட்டை ஆசிரிய விருத்தம், தாழிசை, வண்ணவிருத்தம் ஆகிய பாவகைகளிலான செய்யுட்கள் உள்ளன.

6. பிற்காலத்தில் ஆங்கிலப் பாடல் வகையான 'சானட்' (Sonnet) என்பதைப் பின்பற்றி பரிதிமாற் கலைஞர் இயற்றிய 'தனிப்பாசுரத் தொகை'ப் பாடல்கள் இவ்வகையில் அடங்குவனவாகும்.

## 178. பாதாதிகேசம்/கேசாதிபாதம்

1. பாதம்முதல் கேசம் வரை அல்லது கேசம் முதல் பாதம் வரை வருணித்தல்.

2. பாடல் தலைவர்/தலைவியின் அடிமுதல் முடி வரையிலான அல்லது முடி முதல் அடிவரையிலான உறுப்புக்களின் அழகை வரிசையாக வருணித்துப்பாடும் இலக்கிய வகை.

3. சங்க இலக்கியத்தின் பத்துப்பாட்டுள் ஒன்றான சிறுபாணாற்றுப் படையில் பாடினி வருணனை அடிமுதல் முடிவரை அமைந்துள்ளது. தெய்வத்தைப் பாடும் போது அடிமுதல் முடிவரையும், மனிதர்களைப் பாடும் போது முடிமுதல் அடிவரையும் பாடுதல் மரபு. பாட்டியல் நூல்கள் உறுப்புக்களின் வருணனையை அங்கமாலை எனும் இலக்கியமும் சொல்வதாக இலக்கணம் வகுத்துள்ளன. ஆனால் அங்க மாலையில் உறுப்பு வருணனை மேலிருந்து கீழோ, கீழிருந்து மேலோ தொடர்ச்சியாக அமையாது.

   பாட்டியல் நூல்களில் இதற்கு விரிவான இலக்கணம் காணப்படுகிறது. ப.பா.(இ.130), வெ.பா.(செ.29), ந.பா.(செ.18:1-3), பிர.12, சி.பா.(ம.8:3,4), இ.வி.(871), மு.வீ.(யா.ஒ.145-146), பி.தீ.(24). 32 உறுப்புக்களை வருணிப்பது என்று இவை தொகைப்படுத்துகின்றன.

4.

> பாதாதிகேசம் கேசாதி பாதம்
> எண்ணான்கு உறுப்பும் ஏற்க வருணித்துக்
> கலிவெண்பாவால் கட்டுரை செய்வது — பிர

5. பெரியாழ்வார் திருமொழியில் (1.2.21) பாதகேசம் எனப்படும் 'திருப்பாதாதி கேச வண்ணம்' இவ்வகையில் அமைந்த தனிச் சான்றாகலாம். திருமாளிகைத் தேவர், தில்லைத் திருக்கோயில் குறித்துப் பாடிய இரண்டாவது பாசுரமும், திருவாலியமுதனார் பாடிய முதற்பாசுரமும் பாதாதிகேசமாக உள்ளன.

6. மணவாள மாமுனிகள் பாதாதி கேச வர்ணனை நூல் செய்துள்ளார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், புதுவை பாதாதிகேசம் பாடியுள்ளார். தருமசம்வர்த்தனியம்மன் பாதாதிகேச அந்தாதி மாலை எனும் நூலை எஸ்.பொன்னுசாமி செட்டியார் இயற்றியுள்ளார்.

## 179. பாவைப்பாடல்

1. பெண்கள் நோன்பு நோற்றுப் பாடுகின்ற பாடல்
2. பெண்கள் நோன்பு நோற்றுக் குழுவாக ஒருவரையொருவர் அழைத்துப் பாடுகின்ற இலக்கியம்.
3. சங்க காலத்திலேயே தைந்நீராடல் எனும் வழக்கம் இருந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனைப் 'பாவை நோன்பு' என்பர். இறைவழிபாட்டோடு இணைந்த சடங்காக இது விளங்கியது. இதன் தொடர்ச்சியாகப் பக்தி இலக்கியக் காலத்திலும் 'மார்கழி நீராடல்', 'அம்பாவாடல்' என்று இது வழங்கப்பட்டது.
4. யாப்பியல் நூல்களில் இது பிரபந்தமாகக் குறிக்கப்படவில்லை.
5. ஆண்டாள் பாடிய திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் பாவை இலக்கியத்தின் முதற்சான்றுகளாகக் குறிப்பிடத்தக்கவை. மார்கழி மாதத்தில் இன்றும் பாடப்படுகின்ற செல்வாக்குமிக்க இலக்கியமாக இது திகழ்கிறது.

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாய்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்த கோபாலன்*
*ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்*
*நாராயணனே நமக்கே பறை தருவான்*
*பாரோர் புகழப் படிந்தே லோர் எம்பாவாய்*

*திருப்பாவை (4)*

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்*
*சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்*
*மாதே வளருதியோ? வன்செவியோ நின் செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து*
*போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டு இங்ஙன்*
*ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே*
*ஈதே எம்தோழி பரிசு? ஏலோர் எம்பாவாய்*

*திருவெம்பாவை (1)*

6. திருவெம்பாவைக்கு விளக்கவுரை எழுதிய பண்டிதமணி கதிரேசன் செட்டியார், 'ஆன்ம மலஇருளில் பிணிப்புண்ட ஆன்மாக்களைத் துயிலெழுப்பப் பாடியது திருவெம்பாவை' என்று நுண்பொருள் கூறியுள்ளார்.

தத்துவராயர் தமது ஞானகுரு சொரூபானந்தர் மீது திருவெம்பாவை பாடியுள்ளார். இது தத்துவப் பாவையாகும். சிவானந்த ஞானதேசிக சுவாமிகளின் 'சற்குரு திருவெம்பாவை' முருகைய பங்கஜாக்ஷியின் திருச்செந்தில் முருகன் சந்நிதி முறையிலுள்ள 'திருவெம்பாவை' ஆகியவை பிற்காலத்தில் எழுந்த பாவைப் பாடல்களாகும். கண்ணதாசன் தை மகளை 'வருக' என வரவேற்று 'தைப்பாவை' பாடியுள்ளார். பெருஞ்சித்திரனார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது 1966இல் 'செந்தமிழ்ப் பாவை' எனும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடியுள்ளார். சிவகுமார மௌன குருசாமி என்பார் 'திருஞானப்பாவை' பாடியுள்ளார். வ.சு.செங்கல்வராயபிள்ளை 'தணிகேசன் திருவெம்பாவை' பாடியுள்ளார். சமய அடிப்படையிலான பாவை நூல்களுள் சமண சமயத்தைச் சார்ந்த அவிரோதநாதர் இயற்றிய திருவெம்பாவையும் குறிப்பிடத்தக்கதாகும். மனிதப் பிறவியின் இயல்பை உணர்ந்து ஆசை தணியுமாறு பொய்கையில் நீராட தன் தோழியர்களை அழைக்குமாறு இப்பாவை பாடப்பட்டுள்ளது. இந்நூல் அறத்தை வலியுறுத்துகிறது.

7.

*தையால் வருக! மணித்*
*தாமரைப்பூந் தேவியுனைக்*
*கையால் அணைத்து மலர்க்*
*கன்னத்தே கோல மிட்டு...*

...

*வையாய் கனிக்கொடியாய்*
*வந்தருள்வாய் தைப்பாவாய்* (தைப்பாவைVI:17)

## 180.பிள்ளைத்தமிழ்

1. பிள்ளைத்தன்மையைப் பாடுதல்.
2. பாடல் தலைவரைக் குழந்தையாகக் கருதி, பிள்ளைப் பருவநிலைகளில் அவரது பெருமை கூறுவதாக அமையும்

இலக்கிய வகை. நீண்ட நெடிய வாழ்வைப் பெற்று இன்றும் தொடர்ந்து வரும் இலக்கியம்.

3. தலைவனைக் குழந்தையாக உருவகித்துப் பாடும் மரபு பண்டைக்காலத்தில் இருந்ததென்பதற்குக் 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' (புறத்.24) எனும் தொல்காப்பிய நூற்பா சான்றாகிறது. ஆனால் பாடல்களின் இடையிடையே பிள்ளைத் தன்மையையும், பிள்ளைப் பருவங்களையும் சிறப்பித்துப் பாடும் பாங்கு உள்ளதேயன்றி, சங்க இலக்கியத்தில் முழுமையாகப் பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஒன்றேனும் இல்லை. பிள்ளைத்தமிழைக் குறிக்கும் தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதிய குறிப்பு இவ்வையத்தை மேலும் உறுதி செய்கிறது. அவர் இதற்கு 'குழவிப்பருவத்தினர் விளையாட்டு மகளிரொடு பொருந்திய போது இரு குழாத்தாரும் இணைந்து ஆடும் விளையாட்டு' என்று பொருள் செய்கிறார். ஆனால் நச்சினார்க்கினியர் உரையில், பிள்ளைத்தமிழ் இலக்கியம் வளம் பெற்ற நிலையைக் காண்கிறோம். அவர், 'தந்தையாரிடத்தன்றி ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க' என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையும் தாலும் சப்பாணியும் நித்தமும் வரவுரைத்தலும் அம்புலியும் சிற்றிலும் சிறுதேரும், சிறுபறையுமென... ' என்று பிள்ளைத்தமிழ்ப் பருவங்களையும் வரையறுத்து உரை செய்துள்ளார். இதை நோக்க, இளம் பூரணருக்கும், நச்சினார்க் கினியருக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிள்ளைத்தமிழ் இலக்கியவகை முழு உருப்பெற்றிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. பிள்ளைத் தமிழுக்கான இலக்கியக் கூறுகள் சங்க இலக்கியத்திலும், பக்தி இலக்கியத்திலும் விரவிக் கிடக்கின்றன. சங்க இலக்கியத்தில் சிறுபறை (நற்.58), சிறுதேர் (குறுந்.61, பட்டினப்.22.5, பெரும்.248.9), வருகை (ஐங்.66, கலி.81:7-8, 86:7-10), முத்தம் (புற.41:13-5) ஆகிய பருவங்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியத்தில் பெரியாழ்வார் பாடல்களிலும் (பெரிய திரு.29), குலசேகர ஆழ்வார், ஆண்டாள் பாடல்களிலும் பிள்ளைப் பருவத்துச் செய்திகள் காணக் கிடைக்கின்றன. இவ்வாறு வளமான களத்தினை நல்கிய பிள்ளைப் பருவத்துச் செய்திகளை உள்ளடக்கி பாட்டியல் நூல்கள் பிள்ளைத் தமிழுக்குப் பிள்ளைப்பாட்டு என்ற பெயரில் விரிவான இலக்கணத்தைச் செய்துள்ளன. வேறெந்த இலக்கிய வகைக்கும் இல்லாத அளவிற்கு 42 நூற்பாக்கள் பிள்ளைத் தமிழைப் பற்றிச் சொல்கின்றன. அவை வருமாறு

ப.பா(17-31), வெ.பா(6-8), ந.பா.(1-7), பி.தீ.(5), சுவாமி.(167). பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான வயது வரம்பு, காப்புக் கடவுளர், பருவங்கள் ஆகியவற்றைச் சுட்டுவதில் இவற்றுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

4.

*பிள்ளைப் பாட்டே தெள்ளிதன் கிளப்பின்*
*மூன்று முதலா மூவேழ் அளவும்*
*ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே* ப.பா.இ.17

*காப்பொடு செங்கீரை தால் சப்பாணி*
*யாப்புறு முத்தம் வருக என்றல் முதல்*
*அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்*
*நம்பிய மற்றவை சுற்றத்து அளவென*
*விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்* ப.பா.இ.18

5. பிள்ளைத் தமிழுக்கான முதற்சான்றிலக்கியம் ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழாகும். இதனைத் தொடர்ந்து காலந்தோறும் பல பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. இன்று சுமார் 105 பிள்ளைத் தமிழ் நூல்கள் உள்ளன என்பர் (த.இ.வ.வ.ப.400). சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவன். எனவே சிவனுக்குப் பிள்ளைத்தமிழ் இல்லை. காப்புக் கடவுளரில் முதல் இடம் உண்டு. இதே போல் வைணவப் பிள்ளைத்தமிழில் திருமால் காப்புக் கடவுளாகிறார். மற்ற பிரபந்தங்களுக்கும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்துக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. பிற பிரபந்தங்கள் பெரும்பாலும் ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் மாறுபடுவதில்லை. ஆனால் பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு நூலிலும் ஏதோவொரு வேறுபாடு காணப்படும். பருவங்களை வரையறுப்பதிலும், காப்புக் கடவுளரைச் சுட்டுவதிலும், பருவத்திற்கு இத்தனைப் பாடல்கள் எனக் கணக்கிடுவதிலும் ஒவ்வொரு பிள்ளைத் தமிழுக்கும் வேறுபாடு உண்டு. சொல்லப் போனால் படைப்பாளர்களுக்கு அதிக உரிமை தந்த பிரபந்தமாகப் பிள்ளைத்தமிழைச் சொல்லலாம். நரசிங்கம் பிள்ளை பாடிய வயிரவசாமி பிள்ளைத் தமிழ் பருவத்திற்கு 5 பாடல்கள் உடையது. ஆண்டாள் பிள்ளைத்தமிழில் 11 பருவங்கள் உள்ளன. கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் 5 பருவங்களும், பருவத்திற்கு ஐந்து

பாடல்களும் உள்ளன. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழில் 10 பருவங்கள் இடம் பெற்றிருந்தாலும், பருவத்திற்கு ஒரு பாடலே பாடப்பட்டுள்ளது. ஆக இந்நூலில் மொத்தம் 10 பாடல்களே உள்ளன.

6. பிள்ளைத்தமிழின் பாட்டுடைத் தலைவராகக் கடவுள், அரசன், வள்ளல், சமுதாயத் தலைவர், சமயத் தலைவர், மக்கள் தலைவர், அரசியல் தலைவர் ஆகியோர் அமைகின்றனர்.

இறைவன் : திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் - கவிராச பண்டாரத்தையா.

இறைவி : குளத்தூர் அமுதாம்பிகையம்மன் பிள்ளைத்தமிழ் - சிவஞான சுவாமிகள்.

வள்ளல் : குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் - ஒட்டக்கூத்தர். (அரசன்)

சமயக்குரவர் : திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ்

ஞானக்குரவர்: சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் - நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

தலம் : பழனி பிள்ளைத்தமிழ் - சின்னப்ப நாயக்கர்.

சமூகத் தலைவர் : பெரியார் பிள்ளைத்தமிழ் - மாவண்ணா தேவராசன்

அரசியல் தலைவர் : புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பிள்ளைத்தமிழ் - கவிஞர் முத்துலிங்கம்.

பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையில் பிற இலக்கிய வகைகளும் கலந்து வந்துள்ளன.(எ.கா) சுப்பிரமணியக் கடவுள் சேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ். இதில், முருகக்கடவுளின் நூறு தலங்கள் கோவைப்படுத்திப் பாடப்பட்டுள்ளன.

குழமகன் என்னும் இலக்கியவகை குழந்தையையே தலைவனாக வைத்துப் பாடப்படுவதாகும். ஒரு வகையில் இது பிள்ளைத் தமிழோடு ஒருபுடை ஒப்புமை உடையது.

அரசர் மீது மட்டுமின்றி அமைச்சர் மீதும் பிள்ளைத்தமிழ் பாடப்பட்டுள்ளது. இராமநாதபுர சமஸ்தான அமைச்சர் முத்திருளப்பப் பிள்ளை மீது நமச்சிவாயப் புலவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். கம்பர் பிள்ளைத் தமிழ்க்கோவை (பதிப்.நா.மீனாட்சி சுந்தரம்), நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்க்கோவை (பதிப்.நாச்சிகுளத்தார், 1978) ஆகியவை தொகுப்பு நூல்களாகும்.

பெரியார் பிள்ளைத்தமிழில் 14 பருவங்கள் உள்ளன. புதிய பருவங்கள் வாழ்த்துப் பருவம், கூர்ந்து உணர்பருவம், வினாவுறு

பருவம், கதைகேள் பருவம் ஆகியவை. இதில் காப்புக் கடவுளாக இடம் பெற்றுள்ளவர்கள், விஞ்ஞான கலைஞர், நடுநிலையறிஞர், சமதர்மவாதிகள், அறநெறி மறத்தமிழர், நீதிக்கட்சியினர், ஏழைத் தொழிலாளர்கள், பொதுவுடைமைச் சித்தர்கள் எனப்படுவர். புலமைப்பித்தன் இயற்றிய பாவேந்தர் பிள்ளைத்தமிழில் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக அண்ணா வாழ்த்து இடம் பெற்றுள்ளது. காப்புக் கடவுளாக தமிழ், ஞாயிறு, திங்கள், மழை ஆகியவை பாடப்பட்டுள்ளன. புலவர் அ.அருணகிரி தொகுத்துள்ள 'அண்ணா பிள்ளைத்தமிழில், 10 பருவங்களையும் 10 பேர் பாடியுள்ளனர். இதே போல அரு.சோமசுந்தரம் தொகுத்துள்ள திருவள்ளுவர் பிள்ளைத்தமிழிலும் 10 பருவங்களையும் 10 பேர் பாடியுள்ளனர்.

மார்க்கசகாயத் தேவர் பாடிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழில் திருவருள், திருநீறு, மார்க்கசகாய மரகதவல்லி, கங்கை, கணபதி, வைரவன், திருவேல், மயில், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், பலதேவர்கள் காப்புக் கடவுள்களாகப் பாடப்பட்டுள்ளன. இதில் காணப்படும் வருகைப் பருவப் பாடல் வருமாறு:

*கண்ணா லுனது திருவடியைக் கண்டா தரவு பெருகியிரு*
*கையால் தொழுதுன் திருக்கோயில் காலால் வலஞ்செய்*
*துனது புகழ்*
*பண்ணால் உருகிப் புகழ்ந்து கண்ணீர்*
*பாயா ஏனையுந் தாயாகப்*
*பரிந்து வளர்க்கும் பெருங்கருணை*
*படைத்து விரிஞ்சைப் பதிவாழும்*
*அண்ணால் வருக உலகமுழு*
*தாண்டாய் வருக கதிதரும் எம்*
*ஐயா வருக ஆறுமுக*
*அப்பா வருக விளங்குகதிர்*
*வண்ணா வருக மயிலேறு*
*மன்னா வருக அடியார்கள்*
*வாழ்வே வருக தெய்வசிகா*
*மணியே வருக வருகவே*

மேலும் சில பிள்ளைத்தமிழ் நூல்கள்:

அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ் - குலசேகரன் பட்டினத்து தெய்வசிகாமணி கவிராயர்.

வீரை நவநீத கிருட்டிணன் பிள்ளைத்தமிழ் - அண்ணாமலை செட்டியார்

சிவப்பிரகாசசுவாமிகள் 'பிள்ளைத் திருநாமம்' என்ற பெயரில் தம் குருவான சொரூபானந்தர் மீது பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இது 56 பாடல்களை உடையது.

ஆதிநாதர் பிள்ளைத்தமிழ் என்ற பெயரில் சமண சமய நூல் ஒன்று உள்ளது.

## 181. புகழ்ச்சி மாலை

1. புகழ்ப்பாக்களின் மாலை.
2. புகழ்ப்பாக்களை மாலையாகத் தொடுத்துப் பாடும் இலக்கிய வகை.
3. -
4. -
5. 16 ஆம் நூற்றாண்டில் தத்துவராயர் பாடிய புகழ்ச்சி மாலை இவ்வகையின் முதற்சான்றிலக்கியமாகும்.
6. அண்ணாமலை செட்டியார் 'மதுரை மீனாட்சியம்மன் புகழ் மாலை' என்ற பெயரிலும், மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை' என்ற பெயரிலும், பள்ளி கொண்டான் பிள்ளை 'அரங்கநகர் அப்பன் அடிப்புகழ்ச்சி மாலை' என்ற பெயரிலும் நூல்கள் செய்துள்ளனர்.

## 182. புலம்பல்

1. அரற்றுதல், தான் உறும் துயருக்குத் தானே வருந்துதல்.
2. வாழ்க்கைத் துன்பத்தை நினைந்து புலம்பி 'விரைவில் ஆட்கொள்ள வருவாய்' என இறைவனை வேண்டும் இலக்கிய வகை.
3. -
4. -
5. மாணிக்க வாசகரின் 'திருப்புலம்பல்' எனும் தலைப்பிலமைந்த மூன்று பாடல்களை இதற்கான முதற்சான்றிலக்கியம் எனலாம்.

   உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
   பேர்வேண்டேன்
   கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்

*குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன்குரை கழற்கே*
*கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே (3)*

6. பட்டினத்தாரின் அருட்புலம்பல், நெஞ்சொடு புலம்பல். பத்திரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல் ஆகிய புலம்பல் இலக்கியங்கள் உணர்வைப் பிழிந்து தரும் திறம்மிக்கவை.

பிற சான்றுகள்

ஆற்றுப்புலம்பல் - இராமலிங்க அடிகள்

தியானப் புலம்பல் - வேதநாயகம் சாஸ்திரியார்

இந்தியத் தாயின் புலம்பல் - நாமக்கல் வெ.ராமலிங்கம் பிள்ளை

## 183. புராணம்

1. பழங்கதை, தொன்மம் (Myth)
2. புராணம் என்பது இலக்கிய வகையாகவும் (Genre), நாடகம், தொடர்நிலைச் செய்யுள் என்பன போன்று இலக்கியப் பிரிவாகவும் (Kind) கருதப்படுகிறது. புராணங்கள், காப்பியங்கள் போன்று இவை பேரிலக்கியங்களாகவும் போற்றப்படுகின்றன. புராண பிரபந்தகாலம் என்று ஒன்றை (கி.பி.1500-1830) எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது அறியத்தக்கது (காவிய காலம்). பழைய கதையை அடியொற்றிப் புராணம் அமையும் எனும் பொதுமைக்கருத்து, புராணத்தையும், காப்பியத்தையும் ஓரளவு நெருக்கமுடையதாகக் காட்டுகிறது என்பர் (த.இ.வ.வ.ப.284). பெரிய புராணம், அரிச்சந்திர புராணம், சீறாப்புராணம் என்பவை புராணம் என்று பெயர் பெறினும், காப்பியங்களாகவே விளங்குகின்றன.
3. -----
4. -----
5. புராணம் எனும் இலக்கியவகையைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர்கள் சமணர்களே என்பார் மு.அருணாசலம் (த.இ.வ. 13 நூற்.ப.234). அவர்களது சாந்தி புராணம், புராண சாகரம் ஆகியவை இதற்குச் சான்றுகளாகும். மாணிக்கவாசகரின் சிவபுராணம் சிவபெருமானின் பழைமையைச் சொல்வதாகும். திருநாவுக்கரசரின் இலிங்கபுராணம், தசபுராணம் என்பவை குறுகிய பதிக வடிவப் புராணங்களாகும்.

புராணங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டும், மொழிபெயர்க்கப்பட்டும் உருவாகியுள்ளன. வடமொழியில் வியாசர் பதினெண் புராணங்கள் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது. (கலைக்களஞ்சியம் தொ.7, பக்.436-441). புராணங்கள் பொதுவாக மகாபுராணங்கள், உபபுராணங்கள் என்று பகுக்கப்படுகின்றன. புராணங்களின் நுவல் பொருட்கள் உலகத்தோற்றம், உலக ஒடுக்கம், தேவர், அசுரர், முனிவர், அரசர் ஆகியோரது மரபு உரைத்தல், யுகங்கள், அவற்றின் கால அளவு, சூரிய குல அரசர் வரலாறு, சந்திரகுல அரசர் வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும்.

மகாபுராணங்கள் 18 ஆகும். அவை பிராமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பவிஷ்யம், பிரம்மவைவர்த்தம், இலிங்க புராணம், வராக புராணம், ஸ்காந்த புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், மத்சய புராணம், கருட புராணம், பிரமாண்ட புராணம் என்பனவாகும். இவையே பதினெண் புராணங்கள் என அழைக்கப்பட்டன.

இவற்றை அடியொற்றியே உபபுராணங்கள் எழுதப்பட்டன. இவையும் பதினெட்டுப் புராணங்களாக உள்ளன. இவற்றை எழுதிய முனிவர்களின் பெயரால் இவை அழைக்கப்படுகின்றன. தமிழில் பதினெண் புராணங்களைப் பற்றிய முதற்குறிப்பு சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகிறது.

தமிழில் எழுதப்பட்ட புராணங்கள் பலவும் தலத்தை அடியொற்றியே அமைந்துள்ளன. இவை தல புராணங்கள் என்றழைக்கப்படுகின்றன. தலபுராணம் எழுந்த சூழல், தோற்றக் காரணங்களை மு.வ.தம்முடைய தமிழ் இலக்கிய வரலாறு நூலில் விரிவாக விளக்கியுள்ளார். (சாகித்ய அகாதெமி வெளியீடு). தமிழில் தலபுராணங்கள் கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்டன என்பர். அட்டாதச புராணமும், கன்னிவன புராணமும் (திருப்பாதிரிப்புலியூர்த் தலபுராணங்கள்) முதல் தலபுராணங்கள் எனக் கருதப்படுகின்றன.

அடுத்துத் தோன்றிய தலபுராணங்களுள் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் (13 நூற்) திருவிளையாடற் புராணம் (மதுரைத்தலம்) புகழ் பெற்றதாகும். மதுரைத் தலத்தின் மான்மியத்தை விளக்கும்

வகையில் மற்றொரு தலபுராணத்தை (17 ஆம் நூற்) அதே பெயரில் (திருவிளையாடற் புராணம்) பரஞ்சோதி முனிவர் இயற்றினார். கடம்பவன புராணம் என்ற பெயரில் மதுரைத் தல புராணம் ஒன்று பாடப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே தலத்திற்குப் பல புராணங்கள் பாடப்பட்டு, தலபுராண இலக்கியம் பயிரும் களையுமாய்ச் செழித்தது. எல்லாப் புராணங்களும் நைமிசாரணியத்தில் (நைமிசாரண்யச் சருக்கம், நைமிசப்படலம்), சௌனகாதி முனிவர் கேட்க சூதபுராணிகர் சொன்னார் எனத் தொடங்கி, ஒரு குறிப்பிட்ட அமைப்பைக் கொண்டு விளங்குகின்றன என்பர் (த.இ.வ.வ.ப.286).

6. சில புராண நூல்கள்

மேருமந்தரபுராணம் - வாமன முனிவர் (14 நூற்)

கோயிற் புராணம் - உமாபதி சிவாசாரியார் (14 நூற்)

கமலாலய புராணம் - மறைஞான சம்பந்தர் (16 நூற்)

காஞ்சி புராணம் - சிவஞான முனிவர் (18 நூற்)

குற்றாலத் தல புராணம் - திரிகூடராசப்பக் கவிராயர்

கந்த புராணம் - கச்சியப்ப முனிவர்

திருமயிலைத் தல புராணம் - 'புராண ரத்தினாகரம்' மயிலை நாதமுனி முதலியார்

அருணகிரிப்புராணம் - திருமலை மறைஞான தேசிகர்

திருக்கண்ணபுரப் புராணம் - தஞ்சை முத்தம்மாள் புரம் நாராயணசாமி நாயகர் (1867)

ஒற்றியூர்ப் புராணம் - திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்

நெட்டூர்ப் புராணம் - திருநெல்வேலி தச்சநல்லூர் காவல் ஆய்வாளர் பா.நாராயணசாமி நாயுடு.

சுசீந்திரத்தல புராணம் - முத்தமிழ்க் கவிராயர்

திருமுல்லைவாயிற் புராணம் - திருவாரூர் வடுகநாத தேசிகர்

திருமலைத் தலபுராணம் - குலசேகரபுரம் முருகதாச கவிராயர்

சேறைத் தல புராணம் - சேற்றூர் பொன்னாயிரங் கவிராய மூர்த்திகள்

உத்தரகோச மங்கைப் புராணம் - மாசிலாமணிச் சம்பந்தர்

சேது புராணம், திருப்பரங்கிரிப் புராணம் - கமலை ஞானப்பிரகாசரின் மாணவர் நிரம்பிய அழகிய தேசிகர்

செப்பேச புராணம் என்னும் திருவையாற்றுப் புராணம் - ஞானக் கூத்தர்

திருப்பைஞ்ஞீலி புராணம் - மதுரை மெய்ப்பாத புராணிகர்

தல புராணங்கள் தவிர, வழிபடு நாட்களின் மகிமையைப் போற்றியும் (சிவராத்திரி புராணம் - நெல்லைநாதர்) இனப் பெருமையை எடுத்துச் சொல்வதாகவும் (வன்னிய புராணம்-கி.சைவ வீரப்பிள்ளை) புராணங்கள் பாடப்பட்டுள்ளன.

உமாபதி சிவாசாரியார் பாடிய கோயிற் புராணம், சிதம்பரம் கோயிலின் சிறப்பைச் சொல்கிறது.

மேருமந்தர புராணம் 13 சருக்கங்களும் 1400 பாடல்களும் உடையது.

ஆக்குவ தேதெனில் அறத்தை யாக்குக
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக
நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக
காக்குவ தேதெனில் விரதம் காக்கவே நிறைவுப்பாடல்

கடவுள் மாமுனிவர் பாடிய திருவாமாத்தூர் புராணம் சந்தப் பாடல்கள் நிரம்பியது என்பர். சமண சமய நூலான ஸ்ரீ புராணம், மகாபுராண சங்கிரகத்தின் மொழி பெயர்ப்பாகக் கருதப்படுகிறது. மணிப்பிரவாள நடையில் அமைந்த இது, பூர்வபுராணம் (ஆதிநாதர் புராணம்), உத்தம புராணம் (23 தீர்த்தங்கர்களின் வரலாறு) ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

அரிச்சந்திர புராணம் என்பது மக்களிடையே பரவலான செல்வாக்கைப் பெற்றது. இதனை நல்லூர் வீரகவிராயர் (கி.பி.1524), 1215 விருத்தப்பாக்களால் யாத்துள்ளார். இப்புராணம் விவாகம், இந்திரகாண்டம், வஞ்சனை, வேட்டஞ்செய் காண்டம், சூழ்வினை, நகர் நீங்கியது, காசிக் காண்டம், மயானக் காண்டம், மீட்சி, உத்தரகாண்டம் ஆகிய பத்துக் காண்டங்களை உடையது. இக்கதை மக்கள் நெஞ்சம் நெக்குருகும் வகையில் அமைந்தது. இப்புராணத்தின் தலைமைக் கதைமாந்தர் அடைந்த துன்பத்தை வாழ்வில் வேறு எவரும் அடையக் கூடாது எனும் மக்களின் கழிவிரக்கம் இப்புராணத்தின் செல்வாக்கை வளர்த்தது.

7. நகர்நீங்கிய காண்டத்தில் அரிச்சந்திரன் எல்லாவற்றையும் இழந்து நின்ற நிலையைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

கொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து துடிமுரசந்துறந்து தாமர்
குடை துறந்து வெண்கவரிக் குழாந்துறந்து கரிபரிதேர்க் குலந்துறந்து

கடைதுறந்து மறுகணைந்த காவலன்தன் திருமுகத்தைக்
கண்டோரெல்லாம்
அடையமன மழிந்துருகி யவரவரே முகத்திலறைந் தழுவா
ரானார்

மயானக் காண்டத்தில் தன்நிலைக்கு இரங்கி அரிச்சந்திரன் பாடுவதாக அமைந்த பாடல் வருமாறு:

பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலோம் என்றார்
மதியிழந்துதன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்

இவ்வாறு எளிய பதங்களால் அமையப்பெற்ற இவ் அரிச்சந்திர புராணம் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டதில் வியப்பேது?

## 184. பெருமகிழ்ச்சி மாலை

1. மிகவும் மகிழ்ந்து பாடும் பாக்களால் ஆகிய மாலை
2. பெண்டிரின் அழகையும் ஆக்கத்தையும் மகிழ்ந்து மாலைபோல் தொடுத்துப்பாடும் பாக்களால் ஆகிய இலக்கியம். இது புகழ்ச்சி மாலை என்னும் இலக்கிய வகையோடு ஒப்பு நோக்கத்தக்கது.
3. பிர.(13), மு.வீ. (யா.ஒ.97), பி.தீ.(12).
4.

தெரிவை எழில்குணம் ஆக்கம் சிறப்பை உரைப்பது
பெருமகிழ்ச்சி மாலை எனப்பெயர் பெறுமே மு.வீ.

5. -----

## 185. போதம்

1. விளக்கம்.
2. சமய சாத்திரங்களை விளக்கி உரைக்கும் இலக்கியம்.
3. -----
4. -----

5. 13 ஆம் நூற்றாண்டில் மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞான போதம் இதன் முதற்சான்றாகும். சைவ சமயத்தின் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை இந்நூல் விளக்கிச் சொல்கிறது.

6. பிற சான்றுகள்:

சிற்றம்பல நாடிகளின் சித்தாந்த ஞானபோதம், துகளறு போதம்.

தத்துவராயரின் சசிவன்ன போதம், அடுக்குநிலை போதம், ஆத்ம போதம், உத்தர போதம், சித்தாந்த ஞான போதம்.

நீலகண்டதாச சுவாமிகளின் திருநீல கண்ட போதம்.

குமரகுருதாச சுவாமிகளின் பரிபூரணானந்த போதம்.

## 186. மகாத்மியம்

1. புகழ், பெருமை
2. பாடுபொருள் பற்றிய பெருமையைப் பலபடப் பரந்துரைக்கும் இலக்கியம். 'மான்மியம்' என்பதோடு பொருள் தொடர்புடையது. வடமொழிச் சார்புடையது.
3. -----.
4. -----
5. கூவிள தீப மகாத்மியம் - ஆவிநன்குடி பாலசுப்பிரமணிய கவிராயர்

கமலாம்பிகா மகாத்மியம் - ந.சுப்பிரமணிய ஐயர்

சேது மகாத்மியம் - சாமிநாத சாஸ்திரி

திருக்கண்ணாங்குடி மகாத்மியம் - சீனிவாச ஐயங்கார்

## 187. மகிமை

1. சிறப்பு, தனித்தன்மை.
2. பாடுகின்ற பொருளின் சிறப்பு விளங்குமாறு இயற்றப்படும் இலக்கியம்.
3. -----
4. -----

5. சிவநாம மகிமை - துறைமங்கலம் சிவப்பிரகாசர். இது 10 கலி விருத்தங்களாலும் ஒரு அறுசீர் விருத்தத்தாலும் அமைந்த இலக்கியம்.

*நாக்கி னானு நயனஅங்க ளானுமிவ்*
*வாக்கை யானு மருஞ்செவி யானுநம்*
*மூக்கி னானு முயங்கிய தீவினை*
*தீர்க்க லாகுஞ் சிவசிவ வென்மினே* (3)

6. பிற நூல்கள்

கோமதி மகிமை - பாரதியார்
விபூதி பிரசாத மகிமை - ச.மு.கந்தசாமி பிள்ளை
உருத்திராக்க மகிமை - மு.சாமிநாத மாதவராயர்
விபூதி மகிமை - மு.சாமிநாத மாதவராயர்
பஞ்சாக்கர மகிமை - மு.சாமிநாத மாதவராயர்

## 188. மங்களம்

1. நலம் விளைவதற்குச் சொல்லப்படும் வாழ்த்துச் சொல்.
2. 'நலம் விளைக' என வாழ்த்தும் வகையில் அமைந்த இலக்கியம்.
3. ---
4. ---
5. பெரும்பாலும் 'செயமங்களம்', 'நித்திய சுபமங்களம்' என்று தொடங்கி, சரணம் தோறும் அவ்வடி மீண்டும் பாடப்பட்டு முடியும் அமைப்பு கொண்டது என்பர். கீர்த்தனை போன்ற அமைப்புடைய இசைப்பாடல் வகை.
6. செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் உள்ள மயிலைநாதரின் 'மங்களம்', கு.பாலசுந்தர முதலியாரின் 'திருவேங்கடவன் மங்களம்', பொ.மு.கேசவ சுப்பராய செட்டியாரின் 'ஸ்ரீ கண்ணபிரான் மங்களம்', சௌந்தர ராஜஉடையாரின் 'துரோபதையம்மன் மங்களம்'.

## 189. மஞ்சரி

1. தொகுப்பு.
2. இன்ன பாடுபொருளுக்குரியது என்றில்லாது, எவ்வகைப் பாடுபொருளையும் பலவிதப்பாக்களால் ஒருசேரப் பாடும் இலக்கியவகை.

3. -----

4. -----

5. உலாச்சென்ற அரசன் அங்கு தான் கண்டு காமுற்ற பெண்ணை எண்ணி வருந்தியிருக்க, அவ்வருத்தத்தினைப் போக்க, அமைச்சர் அப்பெண்ணைக் கொண்டு வந்து மணமுடித்து அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்தலும், அவர்கள் இன்பமாக வாழ்வதும் பற்றிய அகப்பொருள் இலக்கியம் காமரசமஞ்சரி. இப்பொருளையே மையமாகக் கொண்டு, சிருங்கார ரசமஞ்சரி, சிங்கார மஞ்சரி ஆகிய இலக்கியங்கள் இயற்றப்பட்டன. இறைவன் உறையும் தலத்தைப் பற்றியும், அவனது அருட்டிறம் குறித்தும், நூலாசிரியர்கள் மேலும், நூற்கள் மேலும் இறைவன் மீதும் தொகுப்பாகப் பாடப்பட்ட இலக்கியங்கள் மஞ்சரி எனப்பட்டன.

6. அகப்பொருள் :

காமரச மஞ்சரி - கடிகை முத்துப் புலவர்

சிங்கார கவிதா மஞ்சரி - அழகிய சொக்கநாத புலவர்

சிங்கார ரச மஞ்சரி - மாம்பழச் சிங்கக் கவிராயர்

தலம் : சிவத்தல மஞ்சரி - த.சுப்பிரமணிய பிள்ளை

திருச்செந்தூர் நவரச மஞ்சரி - தண்டபாணி சுவாமிகள்

அருட்டிறம் : ஆனந்த மஞ்சரி - அந்தோணிக்குட்டி அண்ணாவியார்

பிற : கம்பர் கருணாரச மஞ்சரி - கனகசபை நாயகர்

சிவபுராண தோத்திர மஞ்சரி - திருவேங்கட நாயுடு (1898)

துதி மஞ்சரி, சைவ மஞ்சரி - பாண்டித்துரைத் தேவர்

திருத்தணிகை தியான மஞ்சரி - ப.மாசிலாமணி முதலியார்

நீதி விவாத மஞ்சரி - எஸ்.வேங்கட ராமையர்

நீதி மஞ்சரி - தெய்வசிகாமணி முதலியார் (1877)

1919இல் திருச்சி ஹிந்தி பிரசார சபை வெளியிட்ட தி.குப்புசாமி ஐயரின் மருதூர் ஸ்ரீ மாரியம்மன் தோத்திர மஞ்சரி நூலில் ஸ்ரீ மாரியம்மன் திருவிருத்தம் (10 விருத்தப் பாடல்கள்), ஸ்ரீ மாரியம்மன் இரட்டை மணிமாலை (10 வெண்பாக்கள், 10 கலி விருத்தங்கள்) ஸ்ரீ மாரியம்மன் வாகன விருத்தம் (10 விருத்தப்பாக்கள்), ஸ்ரீ மாரியம்மன் காவடிச்சிந்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## 190. மஞ்சரிப்பா

1. தொகுப்புப் பா.
2. தோரண மஞ்சரி, வாதோரண மஞ்சரி என்று பாட்டியல் நூல்கள் இதைக் குறிப்பிடுகின்றன. வஞ்சிப்பாவால் அமைந்த இவ் இலக்கிய வகை, யானையோடு போரிட்டு வென்றவனைப் பாடுகிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் யானைமறம் என்று குறிப்பிடப்பட்ட புறத்துறையின் வளர்ச்சியே இது எனக் கருதுவர். ஏனெனில் கொல்யானையை வெல்லுதல், பொரும்யானையை அடக்குதல், மதம் கொண்டோடும் யானையை அடக்குதல் போன்றவை இதன் பாடுபொருள்களாக அமைகின்றன. ஆனாலும் பிற்காலத்தில் ஒருபொருள் நுதலிய தொகுப்புப்பா என்ற அமைப்பு நோக்கிலான இலக்கிய வகையாக இது பாடப்பெற்றது. இதனால் பாட்டியல் இலக்கணத்திற்கும், இப்பெயர் குறித்த இலக்கிய வகைக்கும் நுவல் பொருள் வேறுபாடுகள் உள.
3. மு.வீ.(யா.ஒ.118), பி.தீ.(17)
4.

யானை வயப்படுத்தி அடக்கின வருக்கும்
எதிர்பொரும் யானையை ஈரவெட்டி
அடக்கின வருக்கும் அதட்டிப் பிடித்துச்
சேர்த்த வருக்கும் வீரச்சிறப்பை
வஞ்சியாற் பாடுவது வாதோரண
மஞ்சரி எனப்பெயர் வைக்கப் படுமே மு.வீ.(யா.ஒ.)

5. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் கச்சி ஞானப்பிரகாசர் கிருஷ்ண தேவராயர் மீது அகத்திணை, புறத்திணை விரவ மஞ்சரிப்பா பாடியுள்ளார்.

உதார சோதனை மஞ்சரி என்ற இலக்கியத்தை மீனாட்சி சுந்தரக் கவிராயர் பாடியுள்ளார்.

## 191. திரிபு மஞ்சரி

1. பாடல் பொருள் மாறி (திரிந்து) வரும் தொகுப்பு.
2. பாடலின் முதல் எழுத்து தவிர்த்து இரண்டு முதலான எழுத்துக்கள் அடிதோறும் ஒத்திருக்க, பொருள் வேறுபடுமாறு பாடப்படும் இலக்கிய வகை.

3. கட்டளைக் கலித்துறையில் அமைவது.
4. -----
5. தில்லைத் திருவாயிரம், திருச்செந்தில் பிரபந்தங்கள் எனும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய இலக்கியங்களில் திரிபு மஞ்சரி வகைகள் உள்ளன. தில்லைத் திருவாயிரத்தில் 25 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அமைந்துள்ளன. திருச்செந்தில் பிரபந்தத்தில் 51 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன.

## 192. யமக மஞ்சரி

1. திரும்பத் திரும்பப் பயின்று வரும் சொற்களால் ஆன பாடல் தொகை.
2. வந்த எழுத்துக்களே பொருள் வேறுபடுமாறு செய்யுளின் சீர் அல்லது அடிகளில் மீண்டும் வரும் யமகம் அல்லது மடக்கு எனும் இலக்கிய வகைகளில் ஒன்று. இது அந்தாதி இல்லாமல் தொடர்ந்து வரும் பல யமகச் செய்யுட்களின் தொகுதி. அந்தாதியோடு தொடருமானால் அது யமக வந்தாதி எனப்படும். கட்டளைக் கலித்துறையில் அமையும் இலக்கியம்.
3. -----
4. -----
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய திருவரங்கத் திருவாயிரத்தில் 32 கட்டளைக் கலித் துறைகளால் ஆன யமக மஞ்சரியும், தில்லைத் திருவாயிரத்தில் 25 கட்டளைக் கலித்துறைகளால் அமைந்த யமக மஞ்சரியும் இடம் பெற்றுள்ளன.

## 193. ரசமஞ்சரி

1. ஒன்பது சுவைகளின் தொகுப்பு
2. ஒவ்வொரு சுவையைப் பற்றியும் 9 பாடல்கள் வீதம் நவரசங்களுக்கும் 81 பாடல்கள் அமையப்பாடப்படும் இலக்கிய வகை. தொல்காப்பியர் நகை, அழுகை, அச்சம், இளிவரல், மருட்கை, பெருமிதம், வெகுளி, உவகை முதலிய எண்வகை மெய்ப்பாடு கூறினார். வடநூலார் இதனோடு சாந்தம்

என்பதையும் சேர்த்து சுவைகள் மொத்தம் ஒன்பது (நவரஸம்) என்றனர்.

3. -----

4. -----

5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய நவரச மஞ்சரி, மாம்பழச்சிங்க நாவலர் பாடிய - சிங்கார ரசமஞ்சரி, நித்தியானந்த சுவாமிகள் பாடிய அத்துவித ரசமஞ்சரி .

## 194. மடல்

1. பனைமடல்

2. பனைமடலால் ஆன குதிரை மீது ஏறி, தன் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண்ணின் ஓவியத்தை ஏந்தி, பனங்கருக்கு மாலையை அணிந்து தன்னை வருத்திக் கொள்வேன் என்று தலைவியை அடைய எண்ணிப் பாடும் இலக்கிய வகை.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தன் குறிப்பை உணராத தலைவியை மணக்கவேண்டி அவளை அச்சுறுத்துமாறு ‘மடல் ஏறுவேன்’ எனச் சொல்லித் தலைவன் பாடும் பாடல்கள் உண்டு. இவை ஒரு தலைக் காதலாகிய கைக்கிளையின் பாற்படும். ஒருபாற் காதலானாலும் அது பெண்ணை வெளிப்படையாக பாதிக்காத வரை அதில் தவறில்லை. எனவே இது கைக்கிளை உணர்வால் விளைந்த காதல் என்றாலும் சொல்லளவில் நிற்பதால் ஐந்திணையின் பாற்படும் எனக் கருதுவர். மடல் ஏறிவிட்டால், அது தலைவியின் உள்ளத்தை உணராமல் தான் அவள் மீது கொண்ட காதலை வெளிப்படுத்துவதால் அது தலைவியைப் பாதிக்கிறது. எனவே அது பெருந்திணையின் பாற்படும் என்பர்.

இதன் அடிப்படையிலேயே வள்ளுவரும், ‘கடலன்ன காமம் உழந்தாலும் பெண்டிர் மடலேறார்’ எனும் பொருள்பட திருக்குறள் (1137) செய்தார். இதற்குப் பின் பக்தி இலக்கியக் காலத்தில் திருமங்கை யாழ்வார் வடமொழி மரபைப் பின்பற்றித் தலைவியின் நிலையில் தன்னை வைத்து, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரு மடற்பிரபந்தங்கள் பாடினார்.

பிற்காலப்பாட்டியல் நூல்கள் மடல் இலக்கியத்திற்கு விரிவான இலக்கணம் செய்ததோடு, இதனை உலாமடல் என்றும், இன்பமடல் என்றும் குறித்தன.

3. ப.பா.(இ-62, 63), வெ.பா.(செ.28), ந.பா. (செ.22), பி.ம.(16), இ.பா.(ப.10), இ.வி.(856), தொ.வி.(261), மு.வீ.(யா.3.126), பி.தீ,(20), சுவாமி (168).

4.

*அறம் பொருள் இன்பம் ஆகிய பயனை*
*எள்ளி, மகடூஉக் காம இன்பத்தைப்*
*பயன் எனக் கொண்டு, பாட்டுடைத் தலைமகன்*
*இயற்பெயர்க்கு எதுகை இயல்பு நாடிப்*
*பகர்ந்து அவ்வெதுகைப் படத் தனிக்கிளவி*
*யின்றி, இன்னிசை கலி வெண்பாவால்*
*தலைமகள் இரந்து குறை பெறாது*
*மடலேறுவதாய் ஈரடி எதுகை*
*வரப் பாடுவது வளமடல் ஆகும்* *மு.வீ.*

5. பிற்கால மடல் இலக்கியங்கள்

1. காளமேகப் புலவர் பாடிய சித்திரமடல்
2. தத்துவராயர் இயற்றிய கலிமடல்
3. தாசிகாளிமுத்து என்பாள் நாகப்பட்டினத்தில் வாழ்ந்து வந்த வள்ளல் காத்தான் குலாதித்தன் என்பவன் மீது பாடிய வருணகுலாதித்தன் மடல்.
4. பலபட்டடைச் சொக்க நாதப்புலவர் பாடிய நரசிங்கன் வளமடல்.

## 195. மந்திரம்

1. ஆற்றல் மிகுந்த, எண்ணியது விளைவிக்கும் சொல்.
2. ஆற்றல் மிகுந்த சொற்களால் ஆன இலக்கியம். தொல்காப்பியர் இதனை 'வாய்மொழி' என்கிறார். அவர் குறிப்பிடும் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் எனும் ஏழுவகை இலக்கியங்களுள் ஒன்று. இதற்கு அவர் தரும் இலக்கணம்:

*நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப* (செய்யு.176)

3. -
4. -
5. மந்திரம் என்ற பெயருடன் 'திரு' எனும் அடைமொழி சேர்த்து திருமூலர் இயற்றிய இலக்கியம் 'திருமந்திரம்' என

அழைக்கப்படுகிறது. இது ஆற்றல்மிகு சொற்களால் யாக்கப் பெற்றது. குறியீட்டுப் பொருளுடையது. சித்தர் இலக்கியத்தில் தலையாயது.

6. பச்சை முனி எனும் சித்தர் இயற்றியது பச்சமுனி திருமந்திரம். சிறுமணவூர் முனிசாமி முதலியார் இயற்றியது சிவமகா மந்திரம்.

### 196. மறம்

1. வீரம், கொள்கை, உறுதி
2. வீரத்தைச் சிறப்பித்துப் பாடும் இலக்கியம். கொள்கை உறுதியைச் சிறப்பித்துப் பாடுவதாக வளர்ச்சி கண்டது.
3. -----
4. -----
5. கலம்பக உறுப்புகளுள் ஒன்றாக இருந்த இது, தாம் பின்பற்றும் நெறியில் வழுவாது நிற்கும் கொள்கை உறுதியைச் சிறப்பித்துப் பாடுவதாகப் பிற்காலத்தில் வளர்ச்சி கண்டது. மறம் என்பதற்கு உடல் உறுதி என்ற கருத்துரு மறைந்து, பக்தி இலக்கிய நெறிநின்ற சான்றோரின் உள்ள உறுதியைப் போற்றும் வண்ணம் பொருள் விரிவு கண்டது.
6. கல்லாடதேவ நாயனாரும், நக்கீரதேவ நாயனரும், தன் இரு கண்களையும் இறைவனுக்கு வழங்கிய கண்ணப்பரின் மன உறுதியைச் சிறப்பிக்கும் வண்ணம் கண்ணப்ப தேவர் திருமறம் என்ற நூலைத் தனித் தனியாகச் செய்தனர்.

**மாலை**

மாலை என்பது கோவை போல பல இலக்கிய வகைகளுக்குள்ள பொதுப்பெயராகக் கருதத்தக்கது. கோவை, மஞ்சரி போல இஃதோர் தொகுப்பு இலக்கியவகை எனலாம். எழுத்துக்களின் வரிசையால் அமைந்தது அகராதி மாலை; பாக்களின் வகை எண்ணிக்கையால் பெயர் பெற்றவை இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணிமாலை, பஞ்சரத்தின மாலை, நவமணிமாலை போன்றவை. பாக்களின் பெயராய் அமைந்தவை. ஆசிரியப்பா மாலை, கலித்துறை மாலை போன்றவை. பாடல் உத்தியால் பெயர் பெற்றவை யமக மாலை, சிலேடை மாலை, வருக்கமாலை என்பவை. இவ்வாறு பாடுபொருள் நோக்கிலும், பா அமைப்பு நோக்கிலும், பாடல் எண்ணிக்கை நோக்கிலும், உத்தி நோக்கிலும் அமைந்த மாலை இலக்கிய வகைகள் தமிழில் பல உள்ளன.

## 197. அகராதிமாலை

1. சொற்களின் அகர வரிசைத் தொகுதி.
2. சொற்களை அகர முதலாக வரிசைப்படுத்திப் பொருள்விளக்கும் இலக்கிய வகை. கட்டளைக் கலித்துறையால் பாடப்படுவது.
3. -----
4. -----
5. 1935இல் மு.பொ.ஈசுர மூர்த்தியா பிள்ளை அகராதி மாலை என்ற பெயரில் நூல் இயற்றியுள்ளார்.

## 198. அங்கமாலை

1. உடலுறுப்புக்களின் தொகுப்பு
2. உடலுறுப்புக்களை வருணித்து வெண்பா அல்லது வெளிவிருத்தத்தில் மாலையாகத் தொகுத்துப் பாடும் இலக்கிய வகை.
3. வெ.பா.செ.(29), ந.பா.செ. (18:4, 19), ப.பா.(12), சி.பா.ம. (8.4), இ.வி. (835), தொ.வி.(262), மு.வீ.யா.ஒ. (85), பி.தீ.(9).
4.

*மடிதல்இல் வெண்பா விருத்தம்பல அங்கமாலை என்னே*

ந.பா.செ.18.4

*அகங்கால் உகிர்விரல் மீகால் பரடுகணை முழந்தாள்*
*மிகுங்கால் நிதம்பமும் உந்தி உதரம் அரை முலையும்*
*நகம்சார் விரல் அங்கை முன்கை தோள் கண்டம் முகம் நகைவாய்*
*நகும் காது இதழ் மூக்குக் கண் புருவம் நெற்றி தாழ் குழலே*

ந.பா.செ.19

5. பாதாதி கேசம், கேசாதி பாதம் என்பவை உடலுறுப்புக்களை முறையே அடி முதல் முடி வரையும், முடி முதல் அடி வரையும் பாடும் இலக்கிய வகைகள். இது போல பயோதரப்பத்து என்பது பெண்களின் மார்பைப் பாடும் இலக்கிய வகையாகும். நயனப்பத்து என்பது பெண்களின் கண்களைப் பாடுவது. இவற்றின் வளர்ச்சியாக 'அங்கமாலை' எனும் இவ்விலக்கிய வகையைக் கருதலாம்.

சிறுபாணாற்றுப்படையில் விறலி வருணனையில் இவ்வகையின் தோற்றத்தைக் காணலாம். திருநாவுக்கரசரின் 'திருஅங்க மாலை'ப் பகுதி இவ்விலக்கிய வகையின் முதற் சான்றாகக் கருதத்தக்கது. 'தலையே நீ வணங்காய்', 'நெஞ்சே நீ நினையாய்' என்பது போல (உடலுறுப்புக்கள் இறைவனை வணங்கவே உள்ளன எனும் பொருளில்) இது அமைந்துள்ளது.

6. முருகைய பங்கஜாக்ஷியின் திருச்செந்தில் முருகன் சந்நிதி முறையில் உள்ள 'திருவங்கமாலை' (1963).

   சிங்காரவேலு முதலியாரின் திருப்போரூர் இன்னிசைப்பாத் தொகுதியில் உள்ள 'அங்கப் பத்து'.

   ஜி.சே.வேதநாயகம் ஐயர் பாடிய கிறித்தவ 'அங்கமாலை'.

## 199. அந்தாதிமலை

1. அந்தாதியாக அமைந்த பாடல்தொகுப்பு.
2. அந்தாதியும் மாலை வகையும் இணைந்த இலக்கிய வகை.

   அடிதோறும் இறுதியில் நின்ற சீரும், அசையும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுக்கும் அந்தாதித் தொடையும் பாடல்தோறும் தொடர்ந்து மாலையாகத் தொடுக்கப்படுவது.
3. -----
4. -----
5. ஸ்ரீமத் ஞான சித்த சுவாமிகள் பாடிய கன்னியா குமரி பகவதி அந்தாதி மாலை (1936).

## 200. அபிடேக மாலை

1. இறைவழிபாட்டின் ஓர் அங்கமான அபிசேகம் பற்றிய முறைகளின் தொகுப்பு.
2. அபிசேக முறைகள் பற்றிய தொகுப்பு இலக்கிய வகை. 10 பாடல்களால் பாடப்படுவது.
3. -----
4. -----
5. சிவப்பிரகாச சுவாமிகளின் இட்டலிங்க அபிடேக மாலை

6.

*நல்லதில நெய்யாடி யானிடத் தைந்தாடி*
*நவையிலை யமுதமாடி*
*நல்குகா ரணகாரி யம்முறையி னன்னியே*
*நறுநெய்யால் தயிராடியே*
*மெல்லமலர் மதுவாடி யின்கழைச் சாறாடி*
*மென்பழச் சாறாடியே*
*விழையுமிள நீராடி*
*. . .*

### 201. உற்பவமாலை

1. உற்பத்தி எனும் பிறப்பு பற்றிய தொகுப்பு நூல்.
2. திருமாலின் பத்து அவதாரங்களை ஆசிரிய விருத்தத்தால் பாடி பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டும் இலக்கிய வகை. இவ்வகையின் வேறு பெயர்கள் ஆழியோன் பிறப்பு, தசப்பிராதுற்பவம்.
3. ப.பா. (104), வெ.பா.செ. (24:2-4), ந.பா.செ. (27:3-4), பிர.(18), சி.பா.6 (13:1), இ.வி.(868), மு.வீ. (யா.ஒ.104), பி.தீ.(13).
4.

*அரிபிறப்பு ஈரைந்தினையும் ஆசிரிய*
*விருத்தத்தால் விளம்புவது உற்பவ மாலை* — *மு.வீ.*

### 202. உயிர்வருக்க மாலை

1. உயிரெழுத்துக்களால் அமையப் பெற்றது.
2. உயிர் எழுத்துக்கள் அடிக்கொன்றாய் அமையப் பாடப்படும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. கந்தசாமி முதலியார் பாடிய 'மருதாசலபதி உயிர் வருக்க மாலை' அருணாசலம் பாடிய 'திருத்தணிகை ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமான் சுகுண சிவரத்ன மணி உயிர்வருக்கப் பாமாலை'

பூ.செங்கல்வராய முதலியார் பாடிய 'பூவை நகர் தையல் நாயகியம்மை உயிர் வருக்க மாலை'

மதுரை மீனாட்சியம்மன் உயிர் வருக்க மாலை

### 203. ஏகாதச மாலை

1. 11 பாடல்களால் பாடப்படுவது.
2. ஏகம்:1; தசம் : 10. எனவே 11 பாடல்களால் தொடுக்கப்பெறும் இலக்கிய வகை.
3. -----
4. -----
5. நம்பியாண்டார் நம்பி பாடிய திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை.

### 204. மந்திரமாலை

1. மந்திரச்சொற்களால் பாடப்படுவது
2. இறைவி அல்லது இறைவனின் அருட்டிறம் வேண்டி சொன்ன சொல் பலிக்குமாறு ஆற்றல்மிகு சொற்களால் பாடப்படும் பாமாலை வகை.
3. -----
4. -----
5. தேவாரத் தொகுப்பில் உள்ள கோளறு பதிகம், நமச்சிவாயப்பதிகம், திருமாகறல் பதிகம் போன்று நோயும் தீமையும் அகலுமாறு பாடப்படும் இலக்கிய வகையாக இவை அமைந்தன.
6. வீரை கவிராச பிள்ளை (16 நூற்) பாடிய திரிபுரை மாலை, திரிபுரையின் அருள்பெற 33 பாக்களால் ஆகியது. மனோன்மணி மாலை, மனோன்மணியின் அருள்பெற 31 பாக்களால் ஆகியது. இவற்றில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பயன்கருதிப் பாடப்படுவதாகும். இந்தச் சுவடிகளை ஆராய்ந்தோர், "பாடலின் குறிப்பை நோக்குமிடத்து கவிராசர் சௌந்தர்யலகரி பாடிய பின்பே செந்தமிழில் திரிபுரைமாலை, மனோன்மணி மாலை பாடினார் என்று அறிய முடிகிறது" எனக்

குறிப்பிடப்பட்டுள்ளனர். சுவடியில் ஒவ்வொரு பாடலுக்கும் உரிய மந்திர எழுத்துக்கள் கொண்ட சக்கரங்கள் வரையப்பட்டுள்ளதும் இது மந்திரநூல் என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

இவரது மகன் வீரை அம்பிகாபதி, பராபரை மாலை பாடியுள்ளார்.

7. பூதம் பிசாசு விலக, திரிபுரைமாலையில் உள்ள ஒரு பாடல் வருமாறு:

> வேத வேதாந்த விமலி திரிசூலி வீரரண
> பூத பிரேத பிசாசுகள் நெஞ்சைப் பொடிபடவே
> வேத மெனும் மந்திர வாளாலே வெட்டி விரட்டி எனக்கு
> ஆத ரவாக வருவாள் அன்னை திரிபுரைநாயகியே

## 205. சித்திரகவிமாலை

1. சித்திர கவிகளின் தொகுப்பு
2. ரதம், நாகம், முரசம், கோமூத்திரி, மாலை மாற்று போன்ற வடிவங்களை அடியொற்றிச் செய்யப்படும் இலக்கிய வகை. இவ்வகையில் பல்வேறு சித்திரகவிகள் ஒன்று சேர்ந்து மாலையாகப் பாடப்படும்.
3. சித்திரகவி வகைகளைச் சேந்தன் திவாகரம், யாப்பருங்கலம் ஆகியவை கூறுகின்றன.
4.

> மாலை மாற்று சக்கரம் சுழிகுளம் ஏகபாதம் எழுகூற்றிருக்கை
> காதைகரப்பு கரந்துறைப்பாட்டு பாத மயக்கு பாவின் புணர்ப்பு
> கூட சக்கரம் கோமூர்த்திரியே ஓரினத் தெழுத்தில் உய்த்த
> பாட்டு
> ஒற்றுப் பெயர்த்தல் ஒருபொருட் பாட்டே சித்திரப்பாவே
> விசித்திரப்பாவே
> விகற்ப நடையே வினா உத்தரமே சே.தி.2595

நாகபந்தம், ரதபந்தம், முரசபந்தம் என்பவை பிற்கால வளர்ச்சி.

5. -----

## 206. நவமணிமாலை

1. ஒன்பது வகைப் பாக்களால் ஆகிய மாலை.
2. அறுசீர் விருத்தம், ஆசிரியப்பா, எண்சீர் விருத்தம், எழுசீர் விருத்தம், கட்டளைக் கலித்துறை, கட்டளைக்கலிப்பா, தரவு, கொச்சகம், வஞ்சி விருத்தம், வெண்பா ஆகிய ஒன்பது வகைப்பாக்களால் அந்தாதியாகப் பாடப்படுவது. இது 'நவரத்தின மாலை' என்றும் பெயர் பெறும்.
3. -
4. -
5. இதன் முதல் சான்றிலக்கியம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய பழமலை நாதர் பிச்சாடன நவமணிமாலை ஆகும்.
6. ஸ்ரீகுருஞான சம்பந்தர் பாடிய 'நவரத்தின மாலை' கட்டளைக் கலித்துறையில் அமைந்த ஒன்பது பாடல்கள் கொண்டது, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய பழனித் திருவாயிரத்திலும், திருவரங்கத் திருவாயிரத்திலும் நவமணி மாலைப் பிரபந்தங்கள் பல உள்ளன. ஒவ்வொரு பாவகையிலும் 9 பாடல்கள் வீதம் 81 பாடல்கள் அமைந்துள்ளன. பாரதியார் பாடிய 'பாரத மாதா நவரத்தின மாலை' இவ்வகைக்கு நல்லதொரு சான்றாகும்.

## 207. நான்மணிமாலை

1. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் ஆகிய நால்வகை மணிகள் போன்ற பாக்களால் தொடுக்கப்பட்ட இலக்கியம்.
2. மேற்சுட்டிய நால்வகை மணிகள் போன்ற வெண்பா, கலித்துறை, ஆசிரியம், விருத்தம் என்பவை தொடர்ந்து மாறி வர, அந்தாதித் தொடையில் பாடப்படும் 40 பாடல்களால் யாக்கப்படும் இலக்கியம்.
3. ப.பா. (இ.69), 70, வெ.பா.(செ.16), ந.பா.(செ.11:2, 3), பிர (10), சி.பா.(ம.6), இ.வி.(821), தொ.வி.(272), மு.வீ.(யா.ஒ.91).
4. 

   அந்தாதித்து வெண்பாக் கலித்துறை
   விருத்தமும் அகவலும் விரவி நாற்பது
   நவில்வது நான்மணி மாலை யாகும் — மு.வீ.

5. பட்டினத்துப் பிள்ளையார் பாடிய 'கோயில் நான்மணிமாலை' என்பது திருவிடை மருதூர் மகாலிங்கசுவாமி கோயிலின் சிறப்பைப் பாடியதாகும். இராமலிங்க சுவாமிகள் பாடிய 'நால்வர் நான்மணிமாலை' சமயக் குரவர்கள் நால்வரின் சிறப்பைச் சொல்கிறது. மேலும் தேவார, திருவாசகச் சிறப்புக்களும், சமயக் குரவர்கள் நால்வரையும் இறைவன் ஆட்கொண்ட திறத்தையும், இந்நூல் சிறப்பிக்கிறது. தண்டபாணி சுவாமிகள் பாடிய 'திருவரங்கத் திருவாயிரத்தில்' நான்மணிமாலை பிரபந்தம் இடம் பெற்றுள்ளது. புதுவையிலுள்ள மணக்குள விநாயகர் மீது பாரதியார், 'விநாயகர் நான்மணிமாலை' பாடியுள்ளார்.

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை (1951) மெய்கண்டார், அருள் நந்தி சிவாச்சாரியார், மறை ஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர் மீது 'சந்தான குரவர் நான்மணிமாலை' பாடியுள்ளார். திருமுல்லைவாயில் நான்மணிமாலை என்ற நூலை குடந்தை சு.முத்துசாமி ஐயர் (1889) இயற்றியுள்ளார். முல்லை வனநாதர் நான்மணி மாலையை தஞ்சாவூர் வீரபத்திர சுவாமிகள் பாடியுள்ளார்.

## 208. புகழ்ச்சி மாலை

1. புகழ்ச்சிப் பாக்களின் தொகுப்பு.
2. அகவல் அடியும், கலி அடியும் மயங்கிய வஞ்சிப் பாடலால் மகளிரைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை.
3. வெ.பா.(செ.35), ந.ப்ா.(செ.23), சி.பா.(ம.9), தொ.வி.(269), மு.வீயா.ஒ. (96), பி.தீ.(12).
4.

   அகவல்அடி கலியடியும் மயங்கிய
   வஞ்சியின் அரிவையர் மாண்பை உரைப்பது
   புகழ்ச்சி மாலையின் பொருள் ஆகும்மே. — மு.வீ.

5. 'பெண்டிரின் புகழ்பாடுவது' என்று இலக்கணங்கள் சொன்னாலும் 'இறைவியரின் புகழ் பாடுவதாக' இவ்விலக்கியங்கள் செய்யப்பட்டுள்ளன.
6. தியாகராஜர் பாடிய 'வைத்தீஸ்வரன் கோயில் தையல்நாயகி அம்மன் புகழ்மாலை', சிங்காரவேலு முதலியார் பாடிய திருப்போரூர் இன்னிசைப் பாத் தொகுதி புகழ்ச்சி மாலை.

## 209. மதனவித்தார மாலை

1. இன்பச்சுவையை விரித்துப் பாடும் தொகுப்பு.
2. அகலக்கவி (வித்தாரகவி) வகைகளுள் ஒன்று. மன்மதன் செயலை அகலத் தொகுத்துப் பாடும் இலக்கியம் என்பர். பாட்டுடைத் தலைவனை உலாவில் கண்டு, அவன் மீது மையல் கொண்டு, காமன் தன்னை வருத்தும் நிலையை விரித்துச் சொல்லி, உலாவந்த தலைவனின் மாலையை விரும்புவதாகப் பாடற்பொருள் அமைகிறது. இவ்வகையில் இது உலாவின் விரிவு எனலாம். பிற்காலத்தில் வலிமை குன்றிய ஆட்சியாளர்கள் மீது வட்டார மணம் கமழ, அப்பகுதியைச் சேர்ந்த புலவர்களால் ஆட்சியாளர்களின் மனம் குளிர, அவர்கள் இன்பக்கலை வல்லவர்கள் என்ற பொருள் தொனிக்குமாறு பாடப்பட்ட இலக்கிய வகைகளுள் முக்கியமானது. புலவர் தம் திறமை புலப்படுமாறு சிலேடை, யமகம், மடக்கு, திரிபு முதலிய அணிகள் பெய்து பாடப்பட்ட இலக்கியம். இதில் மன்மதன் சிறப்பும், தலைவியின் கைக்கிளைக் கூற்றும் முக்கியமானவை. அகப் பொருட்கோவை, ஒரு துறைக் கோவையாகி, மதன வித்தார மாலையாகவும், காதல் இலக்கியமாகவும், விறலி விடுதூதாகவும், திசை திரும்பி வளர்ந்த இலக்கியப் போக்கிற்கான சான்றிலக்கியங்கள் இவை.
3. -----
4. -----
5. ஊற்று மலை சமீன் மருதப்ப தேவர் மீது கடிகை முத்துப்புலவர் பாடிய மதன வித்தார மாலை, இவ் வகையின் எல்லை கண்ட இலக்கியம் எனலாம்.
6. மன்மதன் சிறப்பு

*மாராவுன் கைக்கணையான் மாபோகம் கொண்டவரை*
*யாராலுஞ் சொல்லி யடக்குவதோ - போராலே*
*தைவரு னம்பாலே தம்பி தமையனெனு*
*மைவருமுன் போர் மாதை அனுபவித்தார் - மெய் வரம்பு*
*காமியருக் குண்டோநின் கைக்கணையால் ராதையெனு*
*மாமிதனக் காசை கொண்டான் மாயோனும் - ஆடகப்*
*பிரமன் திலோத்தமையைப் பிள்ளையென்று பார்த்தோ*

சுரத வகை செய்யத் தொடர்ந்தான்-குருவான
பொன் மனைவி தன்னைப் புணர்ந்தான் மதிக்கடவுள்
மன்மதனே உன்மகிமை மட்டுண்டோ... (31-35)

தலைவன் உலாவரக் கண்ட தலைவியின் கைக்கிளைக் கூற்று

ஒன்றா வுலக முலாவருவான் மேற்கடலில்
சென்றான் மடவாருஞ் சென்றார்கள் - நின்றேன்
மனது பரதவித்து - மையலினாற் சோர்ந்தேன்
கனதனத்தில் மேற்பசப்புக் கண்டேன் - வினவியே
பாங்கியர்க ளோடிவந்து பார்த்தாரி தேதெனவே
ஏங்கியெடுத் தார்மனையி லேகினேன் (303-305)

## 210. மும்மணிமாலை

1. மூன்று மணிகள் போன்ற பாவகைகளால் ஆன தொகுப்பு.
2. வெண்பா, கலித்துறை, அகவல் ஆகிய பா இனங்கள் முறையே மாறி வந்து, அந்தாதித் தொடையால் 30 பாடல்களாக அமையும் இலக்கிய வகை.
3. ப.பா. (இ.63), வெ.பா.(செ.16), ந.பா.(செ.11:2, 3), பிர.(10), சி.பா.(ம: 2, 3), இ.வி.(820), தொ.வி.(281:3, 4), மு.வீ. (யா.ஒ.106), பி.தீ.14.
4.

வெண்பாக் கலித்துறை அகவற்பா மூன்று
அந்தாதித்து முப்பஃது இயம்பின்
மும்மணி மாலை (பிர)

5. வி.எம்.மெய்யப்ப முதலியார் பாடிய மதுரைப் பிள்ளை மீது மும்மணிமாலை (1888)

மகாவித்துவான் வீ.சு.பழனிக்குமருப் பண்டாரம் இயற்றிய 'திருச்சுசிந்தை மும்மணி மாலை' (1912)

வித்துவான் சுப்பிரமணிய ஐயர் பாடிய 'சுந்தரேசன் மும்மணிமாலை' (1940)

## 211. வருக்க மாலை

1. எழுத்துக்களின் வரிசையால் ஆகிய மாலை.
2. தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்துக்களைக் கொண்டு தொடங்கும் பாடல்களால் அமைந்த இலக்கிய வகை. உயிரெழுத்தும், க, ச, த, ந, ப, ம, வ ஆகிய எழுத்துக்களும் அடிக்கொரு எழுத்தாக அகவற்பாவில் வைத்துப் பாடப்படும்.
3. ப.பா.இ. (411), வெ.பா.செ.(36), பிர.(10), சி.பா.ம. (6.2), இ.வி. (826), தொ.வி.(267), மு.வீ. (யா.ஒ.98), பி.தீ.(12).
4.

   வருக்க மாலையாம் வருக்க எழுத்து என
   உயிரோடு கசதஙபமவ என எண்
   வரிமுதல் வந்து வரும் எண் அகவலே — தொ.வி.

5. திருவேங்கட வருக்கமாலை

   பழனிமலைநாதர் வருக்கமாலை

மாலை இலக்கிய வகை மிக விரிந்து பரந்ததென்றும், இவ்வகையில் பல்வேறு இலக்கியங்கள் பல்வேறு நோக்கில் 'அழகுத்தொகுதி' எனப் பொருள்படும் வகையில் செய்யப்பட்டன என்றும் ஏற்கனவே குறிப்பிட்டோம். இவற்றுள் சிலவற்றை இனி காண்போம்:

### முத்தமிழ்ப்பாமாலை

இப்பெயரில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போற்றிப் பாமாலை ஒன்று செய்துள்ளார். இது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்ச் சுவை நல்கும் புதுமைப் படைப்பு. இயற்றமிழாக அகவற்பாவில் 10 பாடல்களும், இசைத் தமிழாக விருத்தப்பாவில் 10 பாடல்களும், நாடகத் தமிழாகக் கீர்த்தனை வடிவத்தில் 10 பாடல்களும் அமைந்துள்ளன. இந்நூலை 1970இல் திருவாமாத்தூர் கௌமார சபையினர் வெளியிட்டுள்ளனர்.

### மேகமாலை

மேகமே தன் வரலாற்றைக் கூறுவதாகப் பல்வேறு பாக்களால் ஆகிய 'மேகமாலை' என்ற இலக்கியத்தைத் தமிழறிஞர்

கே.என்.சிவராஜபிள்ளை இயற்றியுள்ளார். 'நமது தாய்மொழிக்கு இயற்கை வருணனைக் கவிதைகள் இல்லாக் குறைபாட்டைச் சிறிது நீக்கக் கருதி' இந்நூலை இயற்றியதாக முன்னுரையில் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். ஓசைநயம் மிகுந்த பல பாடல்களால் அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும்.

வெள்ளம்

தாக்கவோ பிடிகோக்கவோ அடித்
தூக்கவோ இடித்தாக்கவோ

மேகத்தின் தன் வரலாறு

தூவி போல் உருத்
தாவியே தளர் ஆவிக் கெழுமோர்
விலவி எழுநீர் அணுவாகி

இப்பாடல்கள் பள்ளு இலக்கியத்தின் மழை, வெள்ளக் காட்சிகளை நினைவூட்டுகின்றன.

### கைத்தல மாலை

பத்துக் கலித்துறைகள் அமையப் பெற்ற கைத்தல மாலையென்ற நூலை சிவப்பிரகாசர் செய்துள்ளார். இந்நூலின் ஒவ்வொரு பாடலும் 'என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே' என்று முடிகிறது. எனவே இது கைத்தலமாலை என்று பெயர் பெற்றுள்ளது.

பின்னும் வார்திரைக் கடலின் வீழ்த் தமிழ் கையிற் பிடிப்ப
முன்ன மோர்புனை யகப்படு முறைமை போற்பிறப்பின்
இன்னல் கூர்பொரு தெம்பிரான் வந்துவீற் றிருப்ப
என்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே (9)

### சோணாசல மாலை

திருவண்ணாமலைத் திருத்தலத்தின் புகழைப் பாடுவதாக 'சோணாசல மாலை' என்ற பெயரில் சிவப் பிரகாசர் 100 பாடல்கள் கொண்ட நூலொன்று செய்துள்ளார். இந்நூலில் ஒவ்வொரு பாடலின் முதலிரண்டு அடிகள் சிவப்பிரகாசர் தம் குறையைச் சொல்வது போலவும், பின்னிரண்டடிகள் அண்ணாமலையாரின் பெருமையை உரைப்பதாகவும் அமைந்துள்ளன. இயற்கை வருணனையும், கற்பனைத் திறமும் இந்நூலின் சிறப்பு என்பர்.

(எ.டு)

*இத்தனை கலங்கி இணைவிழி யிருண்டு*
*செவிகளும் செவிபட் டைம்மேல்*
*வந்திட உயிர்போம் பொழுதுநின் வடிவ*
*முளங் கொளும் பரிசெனக் கருளாய்* (78)

**திருமணிமாலை**

புலவர் நாயகம் சேகனாப் புலவர் இஸ்லாமியக் காப்பியங்கள் பாடிப் புகழ் பெற்றவர். புதூகுஷ்ஷாம், குத்பு நாயகம், திருக்காரணப் புராணம் ஆகிய காப்பியங்களோடு திருமணிமாலை என்ற பெயரிலும் வரலாற்றை செய்துள்ளார். இறைத்தூதர் நபிகள் நாயகம் வரலாற்றை இது கூறுகிறது. இயற்கையங்காண்டம், செயற்கையங் காண்டம் எனும் பெரும் பிரிவுகளோடு 31 படலங்களும் 1908 பாடல்களும் உடையது.

இறந்தவரை உயிர்ப்பித்தல்

*பட்டு நின்றவச் சிரங்களினுடல் படப் பொருந்தி*
*விட்டு நின்றதஞ் சிறைகளை விழிகொள விரித்து*
*இட்டு நின்றபல் வினையொடு முறைமுறை யெழுத்துக்*
*கிட்டி னின்றுயர் பறந்தன பறவைகள் கெழுமி*

பிற மாலை இலக்கியங்கள்:

<u>காப்புமாலை</u> என்பது ‘கவசம்’ போலப் பாடப்படுவது. ஆசிரிய விருத்தத்தால் ஆனது. <u>பல்சந்த மாலை</u> என்பது ஒவ்வொரு சந்தத்திற்கும் பத்து வண்ணச் செய்யுட்கள் அமைய ஆசிரிய விருத்தத்தால் பாடுவது.

1. வெண்பாவால் 50 பாடல்களும், அகவலில் 50 பாடல்களும் அமையப் பாடுவது <u>இணை மணிமாலை</u>.
2. கலம்பகத்தில் இடம் பெறும் அம்மானை, ஒரு போகு, ஊசல் முதலியவை நீங்க, பிற உறுப்புக்கள் அமையப் பாடுவது <u>பன்மணிமாலை</u>.
3. தானையின் சிறப்பை ஆசிரியப்பாவால் பாடுவது <u>தானைமாலை</u>
4. படையெடுத்துச் செல்லும் அணி வரிசையைச் (வஞ்சித்திணை) சிறப்பித்துப் பாடுவது <u>வஞ்சி மாலை</u>.
6. போர்க்கள வெற்றியைச் சிறப்பிப்பது <u>வாகை மாலை</u>.
7. முன் செல்லும் படையைப் புகழ்ந்து 9 பாக்களால் பாடுவது <u>தாரகை மாலை</u>.

முற்சொன்ன தானைமாலை, வஞ்சி மாலை, வாகை மாலை, தாரகை மாலை என்பவற்றிற்கு இலக்கணம் இருப்பினும் இலக்கியச் சான்றுகள் இல்லை.

இவை தவிர அடைக்கல மாலை, பன்னிரு பாமாலை, திருப்புகழ் மாலை, தோத்திர மாலை, தோத்திரப் பாமாலை, விண்ணப்ப மாலை, கீர்த்தி மால்லை, இன்னிசை மாலை, போற்றி மாலை, யமக மாலை, இரட்டைச் சொல் யமக மாலை, ஆசிரியப்பா மாலை, கலித்துறை மாலை, தாழிசை மாலை, வெண்பா மாலை, சிலேடை மாலை என்ற பெயரில் அமைந்த மாலை இலக்கியங்கள் உள்ளன. இவற்றுக்குப் பாட்டியல் நூல்களில் இலக்கணம் இல்லையெனினும், இலக்கிய வளர்ச்சியில் இத்தகுப் புதுவகை இலக்கியங்களைப் படைப்பாளிகள் தம்முடைய உரிமையாலும் கடமையாலும் உருவாக்கினர்.

மாலைமாற்று எனும் மாலை இலக்கியம் ஒன்றை அரசஞ் சண்முகனார் இயற்றியுள்ளார். செல்வக் கீர்த்தி மாலையை இராமலிங்க வள்ளலார் பாடியுள்ளார். 'நிட்டூர மாலை' என்ற பெயரில் ஓர் இலக்கியத்தை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். அப்துல் காதிர் புலவர் 'சூரிய மாலை' யும், பிச்சை இபுறாகீம் புலவர் 'வெள்ளாங் குளத்தூர் அவுலியா மாலை' யும் பாடியுள்ளனர். 'டிஸ்கவுண்ட் மாலை' என்ற பெயரில் கதிர்வேல் கவிராயர் ஒரு நூல் செய்துள்ளார். இது இக்கால வணிகப் போக்கினைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

வைணவப் பெரியோர்களும் பல மாலை நூல்கள் செய்துள்ளனர். தொண்டரடிரப் பொடியாழ்வார் பாடிய 'திருமாலை' குறிப்பிடத்தக்கது. மணவாள மாமுனிகள் 'உபதேச ரத்தின மாலை' பாடியுள்ளார். பின்பழகிய பெருமாள் ஜீயர் 'வார்த்தாமாலை' இயற்றியுள்ளார்.

'மஹிபரித்து மாலை' என்ற நூலை தக்கலை பீர் முகமது சாகிப் இயற்றியுள்ளார். இது பொருட்பால், அருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பிரிவுகளோடு 613 பாடல்களால் ஆகியது.

பூசாரி சொல்லுவதாக அமைந்த 'கோடாங்கி மாலை' என்ற நூலை மதுரை உத்தங்குடி தி.பொன்னுசாமிப்பிள்ளை செய்துள்ளார்.

'பரத்தையர் மாலை என்னும் மறைக்காட்டம்மாள் மாலை' யை மதன சிகாமணி என்பார் பாடியுள்ளார். அதிலுள்ள ஒரு பாடல் வருமாறு:

*பூமிமாலை மணிமாலை முத்துமாலை*
*பொன்மாலை மலர்மாலை புனிதமாலை*
*பாமாலை சர்க்கரைகள் கண்டுசீனி*
*பதுமரா கம்பவளம் சாந்துமோகக்*
*கரமேவும் கத்தூரி எனும்பேர் கொண்டு*
*காமுகரைப் பணம் பறிக்கக் கற்ற மாய*
*மாமாய வேசையரை மறந்து நீங்கி*
*மறைக் காட்டில் அம்மாளை வணங்கு வீரே*

பெண்டிரை இறைவணக்கத்தின் பால் ஈடுபடுத்தும் பொருட்டு மேலப்பாளையம் முகமது புலவர் 'பெண்புத்தி மாலை' பாடியுள்ளார்:

*அல்லா ஒருவனை அஞ்சி வணங்கிக்கோ மயிலே*
*எல்லா மவனென் றிருதயத் தெண்ணிக்கோ குயிலே*
*மூமினோர் முத்து முகமதைப் போற்றிக்கோ மயிலே*
*ஆமினோர் பெற்ற அருமதென் றெண்ணிக்கோ குயிலே*

'அருமைக் காரண மாலை'யை காயற்பட்டினம் முத்து லெப்பை ஆலிம் சாகிபு பாடியுள்ளார் (1874). இது மெய்ஞ்ஞானக் கும்மிப் பாடல்களின் அமைப்புடையதாகும்.

சிவசயிலேச விண்ணப்பமாலை என்ற நூலைக் கடையம் முத்தையா பிள்ளை இயற்றியுள்ளார். அனுபவ விண்ணப்ப மாலையைப் புதுவை பு. வேங்கடசாமி பிள்ளை இயற்றியுள்ளார்.

'பழமொழி மாலை' ஒன்றை ஈரோட்டுக்கு அருகில் உள்ள விசயமங்கலம் குருத்தான மடாதிபதி கூனம்பட்டி இராசலிங்க மாணிக்கவாசக அடிகள் மீது வாசுதேவக் கவிஞர் பாடியுள்ளார். பழமொழி மாலை போன்று சிலேடையால் அமைந்த 'திருவரங்கச் சிலேடை மாலை' எனும் நூலை அநந்த கிருட்டிண ஐயங்கார் இயற்றியுள்ளார்.

## 212. மான்மியம்

1. பெருமை.
2. ஊர், தலைவன், இறை, பொருள் ஆகியவற்றின் மகத்துவத்தைப் பாடும் இலக்கியம்.
3. -----

4. -----

5. சீகாளத்தி மான்மியம் - இராமலிங்க வள்ளலார்

அருணாசல மான்மியம் - அம்பல வாண நாவலர்

கருவூர் மான்மியம் - கதிரை வேற்பிள்ளை

திருவரங்க மான்மியம் - கிருட்டிண பாரதி

தேவி மான்மியம் - சோமநாத பாரதி

உருத்திராக்க மான்மியம் - குமாரசுவாமி ஐயர்

திருவொற்றியூர்த் தல மான்மியம் - சிவானந்த யதீந்திர சுவாமிகள்

மருமக்கள் வழி மான்மியம் - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

மைக்கேல் சித்தர் மான்மியம் - ஏ.டி.இராமலிங்கம்.

பாஞ்சாலி கலைவளர் மான்மியம் - காட்டுப் புத்தூர் நாராயணப் பெருமாள்.

## 213. மும்மணிக்கோவை

1. மூன்று மணிபோன்ற பா வகைகளால் கோர்க்கப்பட்டது.

2. அகவல், வெண்பா, கலித்துறை ஆகியவற்றால் ஆகிய பாடல்கள் முறையே மாறிவந்து அந்தாதித் தொடையாகப் பாடப்பெறும் இலக்கியம். பாவகைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் முப்பது பாடல்களால் யாக்கப்படுவது. இதன் தனித்தன்மை என்னவெனில், கோவை இலக்கியம் போன்றே தலைவியின் அக உணர்வுகளையும், அகப்பொருண்மையையும் விளக்குவதாக அமைவது.

3. -----

4. -----

5. இதன் முதற்சான்று சேரமான் பெருமாள் நாயனாரின் திருவாரூர் மும்மணிக்கோவை. இதனை அகப்பொருட் பிரபந்தம் என்றே குறிப்பர். ‘இக்கோவைப் பாடல்கள் சங்க இலக்கியக் கருத்துக்களையும் காட்சிகளையும் கொண்டுள்ளது’ எனும் ஔவை சு.துரைசாமி பிள்ளை அவர்களின் குறிப்பு இதனை உறுதி செய்கிறது.

6. பதினோராம் திருமுறையில் உள்ள மும்மணிக் கோவைகள்:

சிவபெருமான் திருமும்மணிக் கோவை - இளம்பெருமானடிகள் (10 நூற்.)

மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை -- அதிராவடிகள் (9 நூற்.)

திருக்கழுமல மும்மணிக்கோவை - பட்டினத்தார்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - குமரகுருபரர்

சிதம்பர மும்மணிக்கோவை - குமரகுருபரர்

பிறசான்றுகள்:

திருவொற்றியூர் மும்மணிக்கோவை - மறைமலையடிகள்

தில்லைத் திருவாயிரத்தில் மும்மணிக்கோவை - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

புதுவை ஆவணவீதி சித்தி விநாயகர் மும்மணிக்கோவை - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

குமரகுருபரர் மும்மணிக்கோவை - மு.பு.இராமலிங்கனார்

7.

*கண்ணார் நுதல்எந்தை காமருகண்டம் என இருண்ட*
*விண்ணார் உருமொடு மேலது கீழது கொண்டல் விண்ட*
*மண்ணார் மலைமேல் இளமயில் மடமான் அனைய*
*பெண்ணாம் இவள்இனி என்னாய்க் கழியும் பிரிந்துரையே*

*- திருவாரூர் மும்மணிக்கோவை (பருவங் கண்டுரைத்தல்)*

## 214. வண்ணம்[1]

1. வருணிப்பு.
2. வருணித்து அமைவதால் வண்ணம் எனப் பெயர் பெற்ற இலக்கிய வகை (வருணனை, வர்ணனை, வண்ணனை, வண்ணம்). இது அகப்பொருள் நுவலும் இலக்கியமாகும். சந்தப் பாடல்களாகிய வண்ணப் பாடல்கள் இவற்றின் வேறானவை.
3. -----
4. -----
5. அகத்துறை இலக்கியமாக இருந்த இது, பிற்காலத்தில் கலவியின்பம் பாடும் இலக்கியமாக உருப்பெற்றது என்பர் (த.இ.வ.வ.ப.313).

   இரட்டைப்புலவர்(கள்) இயற்றிய ஏகாம்பரநாதர் வண்ணம் உடன்போக்கைப் பற்றிப் பாடுகிறது.
6. சேறைக்கவிராச பிள்ளையின் அண்ணாமலையார் வண்ணம் தலைவியின் காதலை ஏற்றுக் கொள்ளத் தலைவனை முறையிடுவதாக அமைந்துள்ளது.

தண்டபாணி சுவாமிகளின் பழனித் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம் ஆகியவற்றில் இறைச் சார்போடு கூடிய 'கலவி மகிழ்தல்' வண்ணங்கள் உள்ளன.

அண்ணாமலையார் வண்ணம், தியாகராசர் வண்ணம், திருப்பூவனம் புஷ்பநாதர் வண்ணம் போன்றவை இவ்வகைக்கான ஏனைய எடுத்துக்காட்டுக்களாகும்.

## 215. வண்ணம்[2]

1. சந்தப்பாட்டு.
2. பல்வகைச் சந்தங்களால் அமையும் பாட்டு வகை.
3. வண்ணங்களுக்கான இலக்கணத்தைத் தொல்காப்பியர் தம் நூலுள் விரிவாகச் சொல்கிறார். அவர் இருபது வகையான வண்ணங்களைக் குறிப்பிடுகிறார். குறுஞ்சீர் வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், உருட்டு வண்ணம், அகைப்பு வண்ணம், ஏந்தல் வண்ணம் போன்றவை அவற்றுள் சில.

தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் வேறு; பிற்கால சந்தப் பாட்டுக்களின் வண்ணம் வேறு என்கிறார் மு.அருணாசலம் (த.இ.வ. 16 நூற். பா.III, ப.314).

விருத்தப்பாவில் அமைந்து வருகிற தாளத்திற்கேற்ற ஓசை, பிற்கால வண்ணம் என்றும், இன்னும் பிற்காலத்தில் வண்ணம் என்பது தனித்த ஒரே அமைப்புடைய சீர்களைக் கொண்ட பாடலுக்குப் பெயராகி விட்டது என்றும் கூறுவர்.

வண்ணம் என்பதற்கான வரையறையை ஆய்வாளர்கள் பின்வருமாறு குறிப்பிடுவர்: சந்தம் எட்டு வகைப்படும். அவை:

தத்த தாத்த தந்த தாந்த
தன தான தன்ன தய்ய

இவற்றுடன் ன, னா, த், ம் என்பவை கூடினால் அவை அரை சந்தக் குறியீடுகள் என அழைக்கப்படுகின்றன. இதன்படி,

தத்த + ன : தத்தன என்பது ஒன்றரை சந்தம்.

சந்தங்கள் மூன்று சேர்ந்தால் ஒரு துள்ளல்.

துள்ளல்கள் மூன்று சேர்ந்தால் ஒரு குழிப்பு.

ஒரு துள்ளல் + ஒரு குழிப்பு : ஒரு கலை.

எட்டு கலைகள் = ஒரு வண்ணம்.

இவ்வாறு பல சந்தங்களோடு செய்திகளை வருணித்துப் பாடுதலால் இத்தகைய பாடல்கள் வண்ணப் பாடல்கள் எனப் பெயர் பெற்றன. இதற்கெனத் தனி யாப்பு வகைகள் இல்லை என்று சொல்லும் வண்ணப்பாடல் ஆய்வாளர்கள், பாடுபவரின் நா வண்ணமே இவ்வண்ணங்களுக்கான வரையறை என்பர் (சௌந்தர பாண்டியன், வண்ணப் பாடல்கள், ஸ்டார் பிரசுரம், சென்னை).

3. -----

4. -----

5. இவ்வகையில் முதல் தனி இலக்கியம் பாடியவர் பட்டினத்தடிகள் ஆவார் (14 நூற்.). இவர் பாடிய 'உடற்கூற்று வண்ணம்', பிற்கால வண்ணப் பாடல்களுக்கு வாயிலாக அமைந்தது என்பர்.

6. இதனைத் தொடர்ந்து அருணகிரிநாதரின் வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவகுப்பு என்பன வண்ணப் பாடல்களாக அமைந்தன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் குன்றக்குடி வண்ணம், சென்னை வண்ணம் பாடியுள்ளார். சிதம்பர பாரதியார் மயூரகிரிநாதர் வண்ணம் பாடியுள்ளார்.

   வண்ணப் பாடல்களில் தம் திறத்தைக் காட்டிப் பல வண்ணங்கள் (சந்தங்கள்) பாடிய சிறப்பால், தண்டபாணி சுவாமிகள் (1839-1898) 'வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்' எனச் சிறப்பிக்கப்பட்டார்.

   கவிக்களஞ்சியப் புலவர் எனும் இஸ்லாமியப் புலவர் சீறாப்புராண வண்ணம் என்ற பெயரில் நூல் இயற்றியுள்ளார்.

   வீரமாமுனிவர் 103 அடிகள் கொண்ட வண்ணப்பாட்டுப் பாடியுள்ளமை சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இதனை அவர் 'ஞானோபதேசத்துக்குரிய பாட்டுக்கள்' என்கிறார்.

   சரசுவதி மகால் நூல் நிலைய வெளியீடான 'வண்ணத்திரட்டு' (1960) எனும் நூலில் பல வண்ண நூல்கள் இடம்பெற்றுள்ளன. சந்திரமதி வண்ணம், சடையப்பன் வண்ணம், வேங்கடேசுவரன் வண்ணம், வெள்ளைச் செட்டியார் வண்ணம், விட்டலராயச் சோழகன் வண்ணம், செம்பை இளையான் வண்ணம், வீரப்பநாயக்கன் வண்ணம், தஞ்சை நாயக்கன் வண்ணம், செண்டலங்கார வண்ணம் ஆகியவை அவற்றுள் சில. செண்டலங்காரன் வண்ணத்தில் விண்ணப்பமும் அம்மானையும் ஒரு பகுதியாக உள்ளன.

இந்த உலகினில் செண்டலங் காரன்
சுந்த ரஞ்சேர் ஐந்துருவாய்த் தோன்றினான் காண் அம்மானை
சுந்த ரஞ்சேர் ஐந்துருவாய்த் தோன்றினான் என்றா லிவ்வண்
செந்த மிழோர் தியாகிஎனச் செப்புவரோ அம்மானை
தியாகன் மகனென்றால் செப்பாரோ அம்மானை?

## 216. விருத்தம்

1. விருத்தப்பா.
2. அகவல் (ஆசிரியம்) போல விருத்தப் பாவால் அமைந்த இலக்கிய வகை.
3. -----
4. -----
5. இதன் முதற்சான்றாக நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ள திருச்சந்த விருத்தம், திருவிருத்தம் (திருமழிசையாழ்வார்: 8 நூற்.) ஆகியவை அமைகின்றன.

   திருத்தக்க தேவர் பாடிய 'நரி விருத்தம்' சுவையான வரலாற்றை உடையது. பதினோராம் திருமுறையில் கோயில் திருப்பண்ணியார் விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

   அருணகிரிநாதர் பாடிய 'வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆகியவை இறைவனின் சின்னங்களைப் போற்றிப் பாடும் வகையில் அமைந்துள்ளன.

   தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், திருக்குற்றாலச் சித்திரசபை திருவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம், ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தம் பாடியுள்ளார்.
6. பிற விருத்த இலக்கியங்கள்:

   சற்குரு சங்கார விருத்தம், ஒரு பொருள் விருத்தம் - தண்டபாணி சுவாமிகள்.

   அர்ச் அலசம்மாள் விருத்தம் - சாந்த குரூஸ் புலவர்

   பஞ்சதந்திர விருத்தம் - வீரமார்த்தாண்ட தேவர்

   பகவத்கீதை விருத்தம் - ஸ்ரீ பட்டர்

   இவை தவிர இரட்டை விருத்தம், சந்த விருத்தம் எனும் பெயரிலும் விருத்த இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன.

(எ.டு)

திருப்போரூர் சுப்பிரமணியர் பேரில் இரட்டை விருத்தம் - இராமலிங்க கவிராயர்

திருச்செந்தில் சந்த விருத்தம் - ஆறுமுக நாவலர்

நெல்லை காந்தியம்மாள் சந்தவிருத்தம் - வே.அருணாசலம் பிள்ளை.

இட்டலிங்கக் குறுங்கலி நெடில் விருத்தம், இட்டலிங்கப் பெருங்கலி நெடில் விருத்தம் - துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

## 217. ஆசிரிய விருத்தம்

1. *ஆசிரியப்பாவும் விருத்தப்பாவும் இணைந்தது.*
2. *மேற்சுட்டிய இரு பா இனங்களின் கூட்டிணைவால் உருவான இலக்கிய வகை. ஆசிரிய விருத்தம் மேலும் கிளை பரப்பி, அடிமடக்கு ஆசிரிய விருத்தம், அலங்கார ஆசிரிய விருத்தம், அறுசீரடி ஆசிரிய விருத்தம், கழிநெடில் ஆசிரிய விருத்தம் என வளர்ந்தது.*
3. -----
4. -----
5. *கணபதி ஆசிரிய விருத்தம், காமாட்சியம்மாள் ஆசிரிய விருத்தம் இரண்டும் (பிற்கால) ஔவையார் பாடியதாகக் குறிப்புக்கள் உள்ளன.*

   *மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆசிரிய விருத்தத்தை சுப்பிரமணிய ஐயர் பாடியுள்ளார். முகையதீன் ஆண்டகை பேரில் ஆசிரிய விருத்தத்தை அசனா லெப்பைப் புலவர் பாடியுள்ளார்.*

   *மதுரை மீனாட்சியம்மன் சோமசுந்தரக் கடவுள் பேரில் அடிமடக்காசிரிய விருத்தமும், திருப்போரூர் ஆறுமுகசாமி பேரில் அலங்கார ஆசிரிய விருத்தமும் பாடப்பட்டுள்ளன.*

   *அளவடி, நெடிலடி, கழிநெடிலடி இவற்றின் மேற்பட்டு 14 சீர் கொண்டு அமைந்த 'பெரிய நாயகியம்மன் நெடுங்கழி நெடில் ஆசிரிய விருத்தம்' ஒன்றை சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார்.*

## 218. விலாசம்

1. விரிவாக உரைப்பது.

2. பொதுவாக அகப்பொருள் நிகழ்ச்சியை விரிவாக உரைப்பது என்று தோற்றம் பெற்ற இது, பிற்காலத்தில் உரையாடல் விரவிய நாடக இலக்கியங்களைக் குறிப்பதாக வளர்ச்சி பெற்றது. சமுத்திர விலாசம் என்பது அகப்பொருட் பிரபந்தத்திற்குச் சான்றாகவும், டம்பாச்சாரி விலாசம் போன்றவை நாடக இலக்கியத்திற்குச் சான்றாகவும் அமைகின்றன. தூது, கோவை, ஒரு துறைக்கோவை, காதல் என்று கிளைவிட்ட அகப்பொருள் இலக்கிய வகைகளின் பிற்காலத் தோற்றமே விலாசம் எனல் சாலும். அகப்பொருள் அமையாத விலாசங்களும் பின்னர் இயற்றப்பட்டன என்பதை அறிதல் வேண்டும். புலவர் தம் சமத்காரத்தைக் காட்டுவதற்குரிய சிலேடை, மடக்கு, திரிபு போன்ற அணிகள் நிறைந்த இலக்கிய வகையாகும் இது.

3. -----

4. -----

5. பல்லவர் காலத்திலேயே மத்தவிலாசப் பிரகசனம் எனும் எள்ளல் நாடக இலக்கியம் இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. விலாசம் என்ற பெயரில் இலக்கிய வகை 18 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெறுகிறது.

6. மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் சந்திரவிலாசம், கடிகைமுத்துப் புலவரின் சமுத்திர விலாசத்தோடு இணைத்துப் பார்க்கத்தக்கது.

தஞ்சையை ஆண்ட சிவாஜி மன்னரின் காலத்தவராகிய நாராயண கவி, பாண்டிச்சேரி விலாச நாடகம் பாடியுள்ளார்.

பிற்காலத்தில் இயற்றப்பட்ட மங்கலவல்லி விலாசம் என்ற நாடக நூல், மாமியார்-மருமகள் போராட்டங்களைச் சொல்கிறது.

(எ.டு)

*இருகையால் மாறிமாறி இயன் றமட் டுக்குமாமி*
*வரிதடி யாலே மாட்ட மங்கள வல்லி மாது*
*தரியாமற் கீழே வீழ்ந்து சரீரத்தில் உதிரம் சிந்தப்*
*புரள்மயில் போலச் சோர்ந்து புலம்பிடத் தொடங்கி னாளே.*

தலைவி தன் காதலை நிறைவிக்கும்படி தன் நிலையைக் கடலுக்குக் கூறுவதாக அமைந்த இலக்கியம், சமுத்திர விலாசம். இது கைக்கிளை இலக்கியமாகக் கருதப்படுகிறது.

உலா வந்த வெங்கடேச ரெட்டப்ப பூபதியைக் கண்ட பெண்ணொருத்தி அவன்மீது காதல் கொண்டு, அவனே நினைவாய்த் தன்னை மறக்கிறாள். இல்லம் திரும்பியவள் படுக்கையில் வீழ்கிறாள்; கடலைக் காண்கிறாள். இவள் உள்ளம் போலவே கடல் கொந்தளிக்கிறது. தன் உள்ளத்தைக் கடலிடம் விரித்துக் காட்டுகிறாள். தூக்கம் வருகிறது; கனவு எழுகிறது. கனவில் வந்த தோழியிடம் தன் குறை உரைத்து, மன்னனிடம் தூது செல்ல வேண்டுகிறாள். அவளும் தூது செல்கிறாள். மன்னரிடம் மங்கை நிலையை எடுத்துச் சொல்கிறாள். மன்னன் மகிழ்ந்து பரிசுப் பொருட்கள் கொடுத்தனுப்புகிறான். மங்கை மகிழ்கிறாள். இந்நிலையில் கனவு கலைகிறது. விழிந்தெழுந்த மங்கை மறுநாள் மன்னனை அரண்மனையில் கண்டு வாழ்த்துகிறாள். இப்படி முடிகிறது இக்கற்பனை இலக்கியம். இது சிலேடைகளும் மடக்கும் நிரம்பியது. இதன் ஆசிரியர் உமறுப்புலவருக்கு ஆசிரியராகத் திகழ்ந்த கடிகைமுத்துப் புலவர்.

கடலுக்கும் தலைவிக்கும் சிலேடை:

*தங்க மலைக்கு[1] மிசை பாயத்*
*தங்க மலைக்கு[2] நாலிருமா[3]*
*தங்க மலைக்குள் ஒளிக்கையிற்பா*
*தங்க மலைக்குந்[4] தொனி கேட்டு* (38:1)

1. மேருமலை; 2. தம் + கம் + அலை : தம் தலையை ஆட்டுகிற;
3. நால் + இரு + மா + தங்கம் : எட்டு யானைகள்
4. பாத + அங்கம் + அலைக்கும் : கால் உறுப்பு அசைக்கின்ற

மடக்கு :

*அல்விரும் மதிநா டகத்தின்[1] மயில்*
*அமரும் மதிநா டகங்[2] காட்டும்*
*மணி சேர்த் தண்டத்[3] தடுக்கும் கயல்*
*அதுபோய்த் தண்டத்[4] தடுக்கும் முகில்* (27)

1. அதி + நாடு + அகத்தின்; 2. மதி + நாடகம்;

3. அண்டம் + தடுக்கும் + எயில் 4. தண்ட + தடுக்கும் + முகில்

சிறுத்தொண்டர் வரலாற்றை புரசைவாக்கம் பரசிராமக் கவிராயர் 'சிறுத்தொண்டர் விலாசம்' என்ற பெயரில் பாடியுள்ளார். சேலம் பாலுச்சாமி வாத்தியார், 'இலிங்கமாம்பதி விலாசம்' எனும் நூலை இயற்றியுள்ளார். அருணாசலக் கவிராயர் 'மதன சுந்தரப் பிரசாத சந்தன விலாசம்' எனும் நூலைச் செய்துள்ளார். இது சிவபெருமான் திருவருள் பெற்ற மக்களின் ஆற்றலைச் சொல்வது.

திருஞானசம்பந்தர் பூம்பாவை எனும் பெண்ணின் எலும்புக்கு உயிரூட்டி, மீண்டும் அவளை வரவழைத்த வரலாற்றை வரகவி ஆறுமுக முதலியார் (1827) பூம்பாவை விலாசம் எனும் பெயரில் பாடலும் உரையாடலும் கலந்த இலக்கியமாக ஆக்கியுள்ளார்:

(எ.டு)

முத்திக்கு வித்தாய் வந்த முதறி வுடையாய் போற்றி
உத்தம குணத்தான் மிக்க உயர்சிவ நேசரேநீர்
சித்தமே மகிழ்ந்து பெற்ற செல்விபூம் பாவையார்தங்
கைத்தலத் திணிலோர் பாம்பு கடித்துயிர் துடித்து வீழ்ந்தார்.

வசனம்:

ஐயா, சைவ சிகாமணியாகிய சிவநேசரே! நீங்கள் தவஞ்செய் தருமையாகப் பெற்ற செல்வப் பூம்பாவையாரை யொரு கொடும் பாம்பு கடிக்கவே உயிர் துடித்து விழுந்தாரென்று சொல்லுவே னையா சுவாமி.

அகப்பொருட் சுவை ஏதுமின்றி, 1826 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின் கொடூரத்தை 'பஞ்ச லட்சண திருமுக விலாசம்' என்ற நூலில் எள்ளற் சுவை ததும்ப வில்லியப்ப பிள்ளை எழுதியுள்ளார்.

பிற விலாசங்கள்:

இராம விலாசம் : யாழ்ப்பாணத்து கந்த பிள்ளை

விநாயக திருமுக விலாசம்: சரவண பெருமாள் கவிராயர்

மார்க்கண்டேய விலாசம் : வேங்கடராம உபாத்தியாயர்.

பாரதத்தில் இடம்பெறும் சூது, துகிலுரிதல் இவற்றை மட்டுமே பாடற்பொருளாகக் கொண்டு பலர்முன் விரிவாகப் பாடுவதற்கேற்றபடி இயற்றப்பட்டது ஸ்ரீ மகாபாரத விலாசம் (1894) என்பதாகும்.

## 219. வெண்பா

1. பா வகை.
2. பா வகையில் அமைந்த இலக்கியங்களுள் வெண்பா இலக்கிய வகை தலைமையிடம் பெறுகிறது. வெண்பா இலக்கியங்கள் பெரும்பாலும் சமய இலக்கியங்களாகவே அமைகின்றன.
3. -----

4. -----

5. மாணிக்கவாசகரின் திருவெண்பா இவ்இலக்கிய வகைக்கான அடித்தளம் அமைத்துள்ளது. பதினோராம் திருமுறையில் ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பா இவ்வகையின் முதல் முழுச் சான்றிலக்கியமாக அமைகிறது. இதில் அடி வெண்பாக்களால் 22 தலங்களைத் தொகுத்துப் பாடியுள்ளதைக் காணலாம்.

(எ.டு)

படிமுழுதும் வெண்குடைக் கீழ்ப் பாரெல்லாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மை - கடியிலங்கு
தேரேந்து கொன்றையந் தார்ச் சோதிக்குத் தொண்டுபட்டு
ஓடுஏந்தி உண்பது உறும் (10)

வெண்பா யாப்பிலமைந்த காப்பியம், பாவின் பெயராலேயே நளவெண்பா என்றழைக்கப்படுதல் அறியத்தக்கது.

6. 18 ஆம் நூற்றாண்டில் பக்தி நோக்கில் பல வெண்பா இலக்கியங்கள் பாடப்பட்டன. இவற்றுள் சோமேசர் முதுமொழி வெண்பா, கலசைச் சிலேடை வெண்பா, இரங்கேச வெண்பா, காலகங்காள மூர்த்தி வெண்பா, புலியூர் வெண்பா ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

பழமொழிகள், சிலேடைகள், திருக்குறட்பாக்கள் ஆகியவற்றை அடியொற்றியும் வெண்பா இலக்கியங்கள் இயற்றப்பட்டன என்பதற்கு இவை சான்றாகும். சாந்த கவிராயர் இயற்றியது இரங்கேச வெண்பாவாகும். இது திருவரங்கப் பெருமாள் மீது பாடப்பட்டது. இதனைச் 'சூடாமணி' என்றும் அழைப்பர். ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு குறள் வெண்பாவும் அக்குறள் வெண்பாவுக்கு ஏற்ற கதையும் காணப்படுவது இந்நூலின் சிறப்பாகும்.

பிற வெண்பா இலக்கியங்கள்:

திருவிளையாடற்புராணசார வெண்பா - தெய்வநாயக முதலியார்

திருப்பனந்தாள் சிலேடை வெண்பா - மாயூரம் முத்துசாமி பிள்ளை (1893)

பகவத்கீதை வெண்பா - வாதிகேசலி அழகிய மணவாள ஐயர்

சொக்கநாத வெண்பா - தருமபுரம் குருஞானசம்பந்தர்

சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா - குருநமச்சிவாயர்

திருமுருகன் வெண்பா - நாச்சிகுளத்தார்

வேலாயுத வெண்பா - ந.வீரபத்திரபிள்ளை

திருமயிலை உவமை வெண்பா - முத்துராமலிங்க் சேதுபதி

மேலும் சில வெண்பா நூற்கள்:

நிகாந்தர் என்பார் தம்முடைய ஆசிரியர் புதுக்கோட்டை சுயம்பிரகாச சுவாமிகள் மீது அவதூத வெண்பா பாடியுள்ளார்.

*நீயேநான் நானேநீ என்றே நிலைக்க வைத்த*
*தாயே பராபரையே சற்குருவே - நாயேனை*
*என்றென்றும் நின்வடிவில் ஏற்றும் அவதூத*
*குன்றாத நின்னருளிற் கூட்டு*

1911 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்முடிசூட்டு விழா டில்லியில் நடந்த போது 'மகுட தாரண வைபவ வெண்பா' என்ற நூல் ஒன்று செய்யப்பட்டது.

சம்பந்த முனிவர், தம்முடைய ஆசிரியர் சிற்றம்பல நாடிகள் மீது 'சிற்றம்பல நாடி வெண்பா' என்ற பெயரில் 66 வெண்பாக்களால் ஆகிய நூலைப் பாடியுள்ளார்.

நூறு பாடல்களால் ஆகிய சிவஞானப்பிரகாச வெண்பா, ஆகமச் சிறப்பும், அடியார் சிறப்பும், அற்புதங்களும் கூறுகிறது.

இவை தவிர பிற யாப்புகள் கலந்த வெண்பா இலக்கியங்களும் உள்ளன.

(எ.டு)

திருக்கருவை வெண்பா அந்தாதி - வதுரங்கராம பாண்டியன்.

சின்னப்பூ வெண்பா (சொரூபானந்தரின் தசாங்கம்) - தத்துவராய சுவாமிகள்

அத்துவிதக் கலிவெண்பா (குரு உபதேசச் சிறப்பு)

போற்றித் திருக்கலிவெண்பா - நக்கீரதேவ நாயனார்.

*கண்டங் கரியமலை கண்மூன் றுடையமலை*
*அண்டர் களும் காண்டற் கரியமலை - தொண்டர்க்குத்*
*தோற்றுமலை நாளும் தொழுவார் எழுபிறப்பை*
*மாற்றுமலை அண்ணா மலை*

- *திருஅண்ணாமலை வெண்பா*

*சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்*
*தவநிலையாம் சைவநெறி சாரார் - அவனிதனில்*
*கான்பரந்த பச்சைக்களா நிழலைக் கைதொழார்*
*ஏன்பிறந்தார் மானிடராய் இன்று*

- *திருக்கருவை வெண்பா அந்தாதி*

*தக்கனார் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்தும்*
*தொக்கவற மாயிற் றோ சோமேசா - மிக்க*
*அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொல் நான்கும்*
*இழுக்கா வியன்ற தறம்*

*- (அதி.4.அறன் வலியுறுத்தல்)*
*-சோமேசர் முதுமொழி வெண்பா*

*நாச்சிகுளத்தார் இயற்றிய முதுமொழி வெண்பா, தற்காலச் சூழலைச்சுட்டும் நோக்கில் கற்றோர் நிலை, இதுவா நீதி? இவரா தலைவர்? போன்ற 90 தலைப்புக்களில் தலைப்புக்கு ஏழு பாடல்களாக மொத்தம் 630 பாடல்களைக் கொண்டுள்ளது. மக்களுக்காக அரசு ஆற்றும் பொதுப்பணியில் கையூட்டுத் தலைதூக்கினால் என்னவாகும் என்பதைப் பின்வரும் பாடல் காட்டுகிறது:*

*காலத்துக் கேற்பக் கடனாம் பொதுப்பணியை*
*ஞாலத்தில் செய்தல் நமதுகடன் - சீலமுளாய்*
*கைக்கூலிக் காகக் கடிந்துபணி செய்குவையேல்*
*வைக்கோலாய் மாறும் வளம்.*

## 220. விளக்கம்

1. *விரிவு.*
2. *சொல்ல வந்த பொருளை விரிவாகக் கூறும் இலக்கிய வகை.*
3. *-----*
4. *-----*
5. *மணவாசகங்கடந்தாரின் 'உண்மை விளக்கம்' (13 நூற்.) எனும் நூல் இதற்கான முதற்சான்றாக அமைகிறது. இந்நூல் 53 வெண்பாக்களால் ஆனது. இதில் ஐந்தெழுத்தின் சிறப்பு, குரு, லிங்க, சங்கம வழிபாடு ஆகியன பற்றி விரிவாகச் சொல்லப்படுகின்றது.*
6. *பிற சான்றுகள்:*

*உமாபதி சிவாசாரியாரின் 'உண்மை நெறி விளக்கம்'*
*கணபதி தாசரின் 'நெஞ்சறி விளக்கம்'*
*சிதம்பர சுவாமிகள் 'பஞ்சாதிகார விளக்கம்'*
*ஸ்ரீ குமார தேவரின் 'பிரமானுபூதி விளக்கம்'*
*திருவேங்கட சுவாமிகளின் 'மெய்ஞ்ஞான விளக்கம்'.*

## இலக்கிய வகை அகராதியை உருவாக்கப் பயன்பட்ட சில தொகுப்பு நூல்களும் இலக்கியத் திறனாய்வு மற்றும் வரலாற்று நூல்களும்

### பிரபந்தத்திரட்டு நூல்கள்


1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு உ.வே.சாமிநாதையர் (பதிப்.) ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1952 (8 ஆம் பதிப்பு)
2. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு த.வை.இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடு, பாகனேரி, 1941 (முதற்பதிப்பு)
3. சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், சிவப்பிரகாசர், மயிலம் வீரசைவ மடம் வெளியீடு.
4. திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு. உ.வே.சாமிநாதையர் (பதிப்.), வைஜயந்தி அச்சுக் கூடம், சென்னை, 1910.
5. திருமயிலைப் பிரபந்தங்கள், தி.சந்திரசேகரன் (பதிப்.) சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், 1953.
6. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், காசிமடம், திருப்பனந்தாள், 1932.
7. வில்வநல்லூர் பிரபந்தத் திரட்டு, தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர் கௌமார சபை வெளியீடு, 117, 1971.
8. தேசிகப் பிரபந்தம், வேதாந்த தேசிகர், அரங்கசாமி ஐயங்கார் வெளியீடு, தஞ்சாவூர்.1958.
9. தூதுத்திரட்டு, இ.சந்திரசேகரன் (பதிப்.) தஞ்சை சரஸ்வதி மகால், 1957.
10. வண்ணத்திரட்டு, தி.வே.கோபாலையர் (பதிப்.), சரஸ்வதி மகால், 1969.
11. கீர்த்தனைப் பாடல்திரட்டு, தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர் கௌமார சபை, 1971.


### கொத்து


1. அந்தாதிக் கொத்து I, சந்திர சேகரன் (பதிப்.) சரஸ்வதி மகால், 1956.
2. அந்தாதிக் கொத்து II, தி.சந்திரசேகரன் (பதிப்.) சரஸ்வதி மகால், 1958.

3. *கலம்பகக் கொத்து, தி.சந்திரசேகரன் (பதிப்.), சென்னைக் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம், 1970.*

4. *காதல் கொத்து, புலவர் பு.இராசேந்திரன், (பதிப்.), தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு.*

5. *பிள்ளைத் தமிழ்க் கொத்து, பாகம் II, தி.சந்திரசேகரன் (பதிப்), சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை.*

**மஞ்சரி நூல்கள்**

1. *தமிழ்பா மஞ்சரி, உ.வே.சாமி நாதையார், கி.வா.ஜகந்நாதன் (பதிப்.), உ.வே.சா.நூலகம், சென்னை 1961.*

2. *மருதூர் ஸ்ரீ மாரியம்மன் தோத்திர மஞ்சரி, கி.குப்புசாமி ஐயர் (பதிப்.), ஹிந்தி பிரசார சபா பிரஸ், திருச்சி 17, 1982.*

**திறனாய்வு நூல்கள்**

1. *இலக்கணத் தொகை, யாப்பு-பாட்டியல், ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம், சென்னை 1978.*

2. *இருபதாம் நூற்றாண்டு சிற்றிலக்கியங்கள், சிலம்பு நா.செல்வராசு, மணிவாசகர் நூலகம், சென்னை 1995.*

3. *தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம், சென்னை 1994.*

4. *பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்கள், ச.சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1994.*

5. *பாட்டியல் நூல்கள், மருதூர் அரங்கராசன், பாலமுருகன் பதிப்பகம், திருச்சி, 1983.*

6. *தமிழ் இலக்கிய வகைமையியல் (3 தொகுதிகள்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.*

7. *சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முத்துச் சண்முகன் & நிர்மலா மோகன், முத்துப் பதிப்பகம், மதுரை 1979.*

8. *சிற்றிலக்கியத் திறனாய்வு, ந.வீ.செயராமன், இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.*

9. *பாட்டியலும் இலக்கிய வகையும், ந.வீ.செயராமன், இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1081.*

**இலக்கிய வரலாற்று நூல்கள்**

1. தமிழ் இலக்கிய வரலாறு, (11 ஆம் நூற்.), மு.அருணாசலம், காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், முதற்பதிப்பு 1971.
2. தமிழ் இலக்கிய வரலாறு, (12 நூற்.) I., மு.அருணாசலம்-மு.ப.1973.
3. தமிழ் இலக்கிய வரலாறு, (12 நூற்.) II., மு.அருணாசலம்-மு.ப.1973.
4. தமிழ் இலக்கிய வரலாறு, (13 நூற்,) மு.அருணாசலம், மு.ப.1970.
5. தமிழ் இலக்கிய வரலாறு, (14 நூற்.) மு.அருணாசலம், மு.ப.1969.
6. தமிழ் இலக்கிய வரலாறு, (16 நூற்) மு.அருணாசலம், மு.ப 1975.
7. தமிழ் இலக்கிய வரலாறு, (13, 14, 15 நூற்.) தி.வை.சதாசிவப்பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1977.
8. தமிழ் இலக்கிய வரலாறு, (16, 17 நூற்.) சோமசுந்தர தேசிகர், 1936-37.

**அகராதிகள்**

1. இலக்கிய வகை அகராதி, புலவர் இளங்குமரனார்.
2. சிற்றிலக்கிய அகராதி, ந.வீ.செயராமன், பாரி நிலையம், சென்னை 1983.
3. சிற்றிலக்கியப் புலவர் அகராதி, ந.வீ.செயராமன், பாரி நிலையம், சென்னை 1983.
4. தமிழ்ப்புலவர் அகராதி, ந.சி.கந்தையாபிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை 1952.
5. தமிழ்நூல் விவர அட்டவணை, மு.சண்முகம் (பதிப்.), அ.ச. ஞானசம்பந்தன் (பொதுப்பதிப்), 2 ஆம் தொகுதி, முதற்பதி., தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழ்நாடு அரசு, 1965.


இவையன்றியும் அந்தந்த இலக்கிய வகையைச் சார்ந்த பல நூல்களும் இந்த அகராதியை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளன.

# இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

- தொல்காப்பியமும் இலக்கியவகை வளர்ச்சியும்
  (முனைவர் பட்ட ஆய்வு நூல்) — ரூ.100/-
- இலக்கிய வகைத் திறனாய்வு — ரூ.35/-
- இலக்கிய வகைமை ஒப்பாய்வு
  (கிரேக்க-சங்க இலக்கிய ஒப்பீடு) — ரூ.50/-
- ஒப்பிலக்கிய நோக்கு
  (ஒப்பிலக்கியக் கட்டுரைகள்) — ரூ.20/-
- அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி — ரூ.25/-
- ஆய்வு நெறிமுறைக் குறிப்புகள் — ரூ.20/-
- இதழியல் — ரூ.50/-
- மக்கள் தகவல் தொடர்பியல் அறிமுகம்
  (தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்றது) — ரூ.60/-
- புறநானூறு
  (திணை-துறைப் பதி[redacted]) — ரூ.150/-
- வேர்ப்பலா
  (இலக்கியக் கட்டுரைகள்) — ரூ.30/-
- The Burning Urn - Studies in Tamil Poetry — ரூ.65/-
- தமிழர் இலக்கிய வரலாறு — ரூ.60/-
- இந்தியப் பெண்ணியம் — ரூ.60/-
- ஒப்பிலக்கியம் — ரூ.60/-
- தினம் ஒரு திருக்குறள் — ரூ.90/-
- தொல்காப்பியம் - பொருளுரை (எழுத்ததிகாரம்) — ரூ.60/-
- தொல்காப்பியம் - பொருளுரை (சொல்லதிகாரம்) — ரூ.65/-
- தொல்காப்பியம் - பொருளுரை (பொருளதிகாரம் I) — ரூ.60/-
- தொல்காப்பியம் - பொருளுரை (பொருளதிகாரம் II) — ரூ.60/-

இந்நூலாசிரியர் கி.இராசா, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். 'தொல்காப்பியமும் இலக்கிய வகை வளர்ச்சியும்' என்ற தலைப்பில் இவர் செய்த முனைவர் பட்ட ஆய்வு தமிழ் இலக்கிய வகை ஆய்வுகளுக்குப் புதிய பாதையைக் காட்டியது எனலாம். அது முதல் இலக்கியவகை ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் இவர், தமிழ்-கிரேக்க இலக்கிய வகைகளை ஒப்பிட்டு 'இலக்கிய வகைமை ஒப்பாய்வு' என்ற நூலையும், இலக்கிய வகைகளுக்கான திறனாய்வு நெறிகளை அறிமுகம் செய்யும் வகையில் 'இலக்கிய வகைத் திறனாய்வு' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இவ்வரிசையில் தற்போது 'இலக்கிய வகை விளக்க அகராதி' எனும் இந்நூல் வெளி வருகிறது.



'மக்கள் தகவல் தொடர்பியல் அறிமுகம்' எனும் இவரது நூல் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றுள்ளது. 'தமிழர் இலக்கிய வரலாறு' எனும் இவரது நூல் பல கல்லூரிகளில் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. புறநானூற்றுப் பாடல்களைத் திணை-துறை நோக்கில் பதிப்பித்துள்ளார். 'ஒப்பிலக்கியம்' என்றொரு நூலை இவர் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

# இலக்கிய வகை விளக்க அகராதி

(A DICTIONARY OF TAMIL GENRES)

40